1838

1222

...o. M. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 6 | செந்தமிழ் மாதசஞ்சிகை | இதழ் 3

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரீ 1353 துல்கஃதாமீ, 1935 மார்ச்சுமீ

1. திருக்குர்ஆன் ... 81
2. நாயக வாக்கியம் ... 84
3. மஸ்ஜித்களின் சீர்திருத்தம் ... 85
4. தாத்தாரிகளிடம் இஸ்லாம் பரவிய வரலாறு 88
5. பெண்கல்வியின் போக்கு ... 92
6. ஷஹீது அன்வர் பாஷாவின் அரியதொண்டுகள் 94
7. கிழக்காப்பிரிக்காவில் காதியானிகள் தோல்வி 98
8. காதியானீ கலீபாவின் கூற்று ... 101
9. ஹஸ்ரத் இமாம் அஹ்மத்பின் ஹம்பல் (றஹ்.) 104
10. இஸ்லாம், இதர மதங்களைவிட சிறப்புற்றிருப்பதேன்? ... 107
11. செய்தித்திரள் ... 109
12. ஈதுல் அல்ஹா ... 111
13. இஸ்லாமும் தேசியமும் ... 113
14. காதியானியத்தை ஒழிக்க காஜீ முஸ்தபா கமால்பாஷா ஜிஹாது செய்வாராம் 116
15. முஸ்லிம்களும் வீண்செலவும் ... 117

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3	0	0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு...	”	4	0	0
தனிப் பிரதி ...	”	0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியற்கு உரிமையுண்டு.

மானேஜர்,

“ஹிபாஜத்துல் இஸ்லாம்” ஆபீஸ்,

43-A, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

208341

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 6	ஹிஜ்ரி 1353 துல்கஃதா மீ 1935 ளூ மார்ச்சு மீ	இதழ் 3

திருக் குர்ஆன்

நிச்சயமாக அல்லாஹ் :—அவனிடத்தில்தான் (நியாயத் தீர்ப்பின்) வேலையைப் பற்றிய அறவிருக்கிறது; இன்னும், அவன் மழைபொழியச் செய்கிறன்; இன்னும், அவன் கற்பங்களிலிருப்பதை அறிகிறன்; இன்னும், நாளைக்கு எதைச் சம்பாதிப்போம் என்பதை எவரும் அறியார். இன்னும் எந்த இடத்தில் மரிம்போம் என்பதை எவரும் அறியார். நிச்சயமாக அல்லாஹ் மிக அறிந்தவன், உணர்ந்தவன், (லுக்மான்)

மேலே கூறப்பட்டுள்ள இவ்வசனங்களில் இறைவன் ஐந்துவிஷயங்களைப்பற்றிக் கூறி, இவ்வைந்து விஷயங்களும் தனக்குத்தான் தெரியுமென்றும், மற்றெவருக்கும் தெரியாது என்றும் விளக்கியுள்ளான். அதாவது, 1 நியாயத் தீர்ப்பின் நாள் எப்பொழுது வரும்? 2 எப்பொழுது மழை பொழியும்? 3 கற்பத்திலிருக்கும் சிசுவென்ன? 4 நாளைக்குச் சம்பாத்தியம் செய்வது என்ன? 5 எந்த இடத்தில் மரிப்பார்கள்? என்ற விஷயங்களாகும். ஆகவே, இவ்வைந்து விஷயங்களும் இறைவனுக்குத்தான் தெரியுமென்பது திருகுர்ஆனின் தாவா. உண்மையில் இவ்வைந்து விஷயங்களையும் எவரும் அறியமுடியாது என்பது முக்காலும் சத்தியம். தற்போதேற்பட்டுள்ள நவீன விஞ்ஞான சாஸ்திரம், வான சாஸ்திரம் முதலியவைகள் இவ்வுலகிலுள்ள அநேக மதச்சட்டங்களையும், கொள்கைகளையும் மூடத்தனமானவைகள் என்றுருஜூப்பிக்கமுற்பட்டு, அவை புத்திக்கும் யுக்திக்கும் பொருந்தாதவைகளென்று முடிவு கூறிவிட்டன; அந்தந்த மதத்தையுணர்ந்த அறிஞர்கள் தங்கள் மார்க்கத்தின் சட்டங்களும் கொள்கைகளும் யுக்திக்குப் பொருத்தமானவைகள் தாம் என்று ருஜூப்பிக்க முடியாமல் தங்களது மதத்தில் சீர்திருத்தம் செய்வதாகக் கூறிக்கொண்டு, நாளடைவில் கொஞ்சங் கொஞ்சமாக அம்மதங்களைக் கைவிட்டு வருகிறார்கள்.

ஆனால், இஸ்லாம் மதம் இந்த யுக்தி சாஸ்திரங்களும் வானசாஸ்திரங்களும் சரியானதல்லவென்று எண்பித்து, யுக்திக்கும் இயற்கைக்கும் ஒத்தமதம் இஸ்லாம்தான் என்பதை

உலகுக்கு விளக்கிக் காண்பித்து, விஞ்ஞான சாஸ்திரிகளையும், வான சாஸ்திரிகளையும் தன்பால் இழுத்துக்கொண்டு, தனக்கு அடிமைகளாக்கிக் கொண்டிருக்கிறது.

இனி, மேலே கூறப்பட்ட ஐந்து விஷயங்களைக் கவனிப்போம்: இவ்வுலகம் அழிந்து, மக்கள் யாவரும் நியாயந்தீர்க்கப்பட்டு பாவ புண்யப் பயன்களை அனுபவிப்பதற்காக உயிர்த்தெழும்புவதற்கு நியாயத்திர்ப்பு நாள் என்று பெயர். இந்த நாள் எப்பொழுது உண்டாகும் என்பதைப்பற்றி உலகிற்றோன்றிய எவ்வளவு பெரிய சாஸ்திரியாலும் கூறமுடியாது. ஆனல் நவீன விஞ்ஞான சாஸ்திரிகள் சூரியனுடைய பிரகாசம் நாளுக்குநாள் குறைந்து வருவதாகவும், இனி ஒரு காலத்தில் பிரகாசமே இல்லாமல் மங்கிப்போகும் என்றும் கூறுகிருர்கள். மேலும், அவ்வாறு மங்கிப்போகுங் காலத்துஅதனல் பூமிக்குப்பெருத்த சேதமேற்பட இடமுண்டு என்றும், உயிர்வாழும் பிராணிகள், தாவர வர்க்கங்கள் யாவும் வாழ்வதற்கும், வளர்வதற்குமான சத்துக்கள் பூமியிலில்லாமற்போவதால் அவைகளெல்லாம் அழிந்துபோம் என்றும், பூமியில், குளிரையும், பனியையும் தாங்கும்படியான சக்தி இல்லாமற்போவதால், பூகம்பம் பிரளயம் உண்டாகி நாசமேற்படுமென்றும், இதுதான் பூமியின் முடிவுக்கான காலமாக இருக்கலாம் என்றும் கூறுகிருர்கள்.

திருகுர் ஆனிலும், ஹதீதுகளிலும் இவ்வுலகத்தின் அந்தியநாள் வரும்போது சந்திரனுக்கும் சூரியனுக்குமுள்ள பிரகாசம் மங்கிப்போகுமென்றும், பூமியதிர்ச்சியேற்படு மென்றும், மலைகளெல்லாம் நொருக்கப்பட்டுச் சமதளமாக்கப்படுமென்றும் பலவிதமான அடையாளங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. வான சாஸ்திரிகளும், விஞ்ஞான சாஸ்திரிகளும் கூறுகிற இக்கூற்றும், திருமறையும் ஹதீது ஷரீபும் கூறும் அடையாளங்களும் ஒரே கருத்துள்ளனவாகவே இருக்கின்றன. ஆயினும், அது எக்காலத்தில் நிகழும், எத்தனை வருஷமாகும்? என்பன வாகிய விஷயங்களை இச்சாஸ்திரிகள் நிச்சயமாக வகுத்துக்கூறமுடியாதவர்களாகவே இருக்கிருர்கள். இப்படிக் குறிப்பாகத் தெரியும்படியான அந்த அறிவு இறைவனுக்குத்தானுண்டு, வேறு யாருக்குமில்லை என்பது நிச்சயம்.

அல்லாஹ் மழையை இறக்குகிருன். என்பதைக் கவனிப்போம்: இக்காலத்திலுள்ள சாஸ்திரவாதிகள் மழையுண்டாகும் விதத்தைப்பற்றிக் கூறமுற்பட்டு, இன்னின்னமாதத்தில் இத்தனைநாள் மழை பொழியும், இந்த வருஷத்தில் இத்தனை குருணிமழை பொழியும் என்றெல்லாம் பஞ்சாங்கங்களில் எழுதிவைத்திருக்கிருர்கள். ஆனல், இன்ன இடத்தில், இந்த நேரத்தில் எத்தனை இஞ்சி மழை பொழியும்? இம்மழையினல் வெள்ளாண்மைகளுக்கும், மரஞ்செடி முதலிய தாவரவர்க்கங்களுக்கும் நன்மையேற்படுமா? தீமை ஏற்படுமா? இந்த மழையினல் எத்தனை குளம் உடையும்? எத்தனை நதிகளில் பிரவாகம் உண்டாகும்? இதனல் எத்தனை ஊர்கள் நாசமாகும்? இதனல் மனிதரிலும் ஆடுமாடுகளிலும் எத்தனை பேருக்குச் சேதமுண்டாகும்? இந்த மழை பொழிந்தபின் இதன்பலனக காலரா, அம்மை, பிளேக், ஜுரம் முதலிய தொத்து நோய்கள் உண்டாகும், எவ்விதமான சேதத்தையுண்டாக்கும் என்பனவாகிய விஷயங்களையோ, அல்லது இம்மழையினல் மக்களுக்கும், விவசாயத்துக்கும் ஏற்படும் நன்மைகளையோபற்றிஇந்த சாஸ்திரங்கள் திட்டமாக எதையும் வகுத்துக்கூற முடியாமலிருக்கின்றன. ஆதலால், அவ்விஷயத்தைப்பற்றியும் சாஸ்திரங்கள் சரியான தகவல்களை அறிவிக்கச் சக்தியற்றனவாயிருக்கின்றன.

இன்னும், அல்லாஹுதஆலாதான் கர்ப்பக்கோளறையிலுள்ளதை அறிகிருன். உலகில் உண்டான விஞ்ஞான சாஸ்திரத்தின் பலனக கர்ப்பத்தில் இருக்கும் சிசு ஆணு பெண்ணு என்பதைத் தெரிந்துகொள்ள முடியும் என்றும், ஆண்குழந்தை வேண்டுமாயின் ஆண்குழந்தையும், பெண்குழந்தை வேண்டுமாயின் பெண்குழந்தையும் பெறலாம் என்றும், இன்னின்ன நக்ஷத்திரத்தில் ஸ்திரி புருஷக்கலப்பு ஏற்படுவதால், இன்னின்ன தன்மையுள்ளவன் பிறப்பான் என்றும்கூட சாஸ்திர வாதிகள் கூறுகின்றனர். ஆனல் இவர்கள் கூறும் இச்சாஸ்திரவிதிகளுக்கு மாருகக் குழந்தைகளுண்டாகுவது சகஜமாக இருக்கிறது. ஆயினும், கொஞ்ச நேரத்துக்காகச் அச்சாஸ்திர விதிகள் சரியாக இருப்பதாய் ஒப்புக்கொள்வோம். அவ்வாறு ஒப்புக்கொண்டு பார்த்தாலும் அது பரிபூரணமான தகவலை அறிவிப்பதாக இல்லை. எவ்வாறெனில், இக்காலத்திலுதித்த முஸ்தபா கமால், ரிஜாஷாஹ் பஹ்லவீ, ஹிட்லர், முசோலினி ஆகியவர்களின் பிறப்புகளையும் ஜீவியசரித்திரங்களையும் பார்த்தால்

அவர்களின் மாதாபிதாக்கள், தங்கள் புதல்வர்கள் உலகத்தைக் கட்டியாளும் வேந்தர்களாகவும், தலைவர்களாகவும், சர்வாதிகளாகவும் ஆகுவார்கள் என்று கனவினும் கருதி இருப்பார்களா? அமானுல்லாகான் காஜீ ஹபிபுல்லா அவர்களுக்கு இரண்டாவது புதல்வராகப் பிறந்தார்; இவர்தான் அப்கானிஸ்தானுக்கு மன்னராகுவாரென்றும், ஐரோப்பிய வல்லரசுகளெல்லாம் இவருக்கு மரியாதை செய்து கண்ணியப்படுத்துவார்களென்றும், பின்னர் இவர் பட்டத்தைத் துறந்து தமது மனைவியை அழைத்துக்கொண்டு தேசத்தைவிட்டு உயிர்தப்பி ஓடி சாதாரண பிரஜையாக ஐரோப்பாவில் வாழ்வாரென்றும், அவரது ஆட்சிக்குப்பிறகு அப்கானிஸ்தானம் தண்ணீர் தூக்கியின் புதல்வனை பச்சாசக்காவின் கையிலகப்பட்டுக்கொண்டு சீரழியுமென்றும் எவரேனும் கருதி இருப்பார்களா? நெப்போலியன் சாமான்யமான ஒரு ஸ்கூல் உபாத்தியாயரின் புதல்வன். அவன் சாதாரணச் சிப்பாயாக அமர்ந்து பின்னர் பிரான்சு தேசத்துக்குச் சக்கிரவர்த்தியாயினன்; ஐரோப்பிய அரசர்கள் யாவரும் நெப்போலியனிடம் உதைபட்டனர்; ஐரோப்பா முழுவதும் நெப்போலியன் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் நடுங்கிக்கொண்டிருந்தது; அம்மன்னன் கைதுசெய்யப்பட்டு இன்றைக்கு 132 வருஷங்களாகியும் அவனுடைய கீர்த்தி குறைந்தபாடில்லை, அவனுக்கிணையான வீரர் இன்றளவும் உதிக்கவுமில்லை. இவ்விபரங்களைக் கர்பத்திலிருக்கும்போதே உணர்ந்துகொள்ள எந்த சாஸ்திரமும் வழி கண்டுபிடித்திருக்கின்றதா?

இருஜஹானுக்கும் ஸர்தாரான நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் கர்பத்திலிருக்கும்போதே தந்தையை இழந்தார்கள்; பிறந்தபின் சிசுவாக இருக்கும் காலத்தில் அன்னையையும் இழந்தார்கள்; பெற்றோரின்றி பிறரிடம் வளர்ந்தார்கள். உலகில் எவரிடமும் கால் மடித்து உட்கார்ந்து பாடங் கேட்டுக்கொள்ளவில்லை. இவ்வளவு கஷ்ட நிலைமையில் ஆரம்பவாழ்க்கையைக் கழித்த நாயகமவர்கள், பிற்காலத்தில் உலகவழிகாட்டியாகவும், கோடிக்கணக்கான மக்களுக்கு ஞானியராகவும், உலகம் போற்றும் உத்தமராகவும், பிறமதத்தாரும்கூட அவர்களின் நற்குண நன்னடக்கைகளையும், நீதிமொழிகளையும் பின்பற்றி நடக்கத்தக்கவர்களாகவும் ஆகுவார்கள் என்பதை ஹஜ்றத் ஆமினு அவர்களோ, அல்லது அப்துல் முத்தலிபோ முற்கூட்டித் தெரிந்திருக்க முடியுமா? எனவே, இவ்விஷயத்திலும் சாஸ்திரங்கள் மௌனம் சாதிப்பவைகளாகவே இருக்கின்றன.

மேலும், நாளைக்கு எதைச் சம்பாதிப்போம் என்பதை எவரும் அறியார். இவ்விஷயம் யாவருக்கும் சுலபமானது. எதிர்காலத்தில் நாம் என்ன செய்வோம்: யோக்கியராகுவமோ? அயோக்கியராகுவமோ? சீமான்களாகுவமோ? வறிஞராகுவமோ? அமைச்சராகுவமோ? அந்தணராகுவமோ? ஆயிரம் பதினுயிரம் சம்பாதிப்போமோ? அரைக்காசும் சம்பாதிக்க முடியாமல் திண்டாடுவமோ? என்பனவாகிய விஷயங்களைப்பற்றி எவரும் வரையறுத்துக் கூறுவது இக்குவலயத்தில் இதுவரை இயலாத காரியமாகவன்றோ இருந்து வருகிறது.

இன்னும், எந்த இடத்தில் மரிப்போம் என்பதை எவரும் அறியார். மக்களாகப் பிறந்த எவரும் தங்களுடைய அந்தியகாலம் எப்பொழுது என்பதையும்? எந்த இடத்தில் மரிப்பர் என்பதையும் அறிந்துகொள்ள முடியாது என்பது உலகத்திலுதித்த யாவரும் ஏகமனதாகக்கூறும் அபிப்பிராயமாகும்.

இறைவன் தனது திருமறையிற்கூறியுள்ள இவ்வசனத்தின் பொருட்டு பொலிவும், ஆழ்ந்த கருத்தும் யாவராலும் கவனிக்கத்தகுந்ததாகும். இதனாலேயேயாம், சத்திய சன்மார்க்கமும் திருமறையும் ஹதீது ஷரீபும் இயற்கைக்கும் பகுத்தறிவுக்கும் ஒத்தவாறு அமைந்திருக்கிறது என்று தொண்டு தொட்டுக் கூறிவருகிறோம். ஆனால், இக்காலத்திலுள்ளவர்கள் தங்களைப் பகுத்தறிவுக்காரர்கள் என்றும், தங்களுடைய அறிவுதான் சரியான பகுத்தறிவுள்ளதென்றும் கூறிக்கொண்டு, தங்கள் யுக்திப்படி திருமறையின் கருத்துக்களைத் திரித்துக்கூறுவதைத்தான் நாம் ஆக்ஷேபித்து வருகிறோம் என்பதை அறிவித்துக் கொள்கிறோம். எல்லாம் வல்ல இறைவன் நம்மவருக்கு நேரான புத்தியையும், பக்தியையும் தந்தருளி, திருக்குர்ஆனின் ஆழிய கருத்துகளை உள்ளது உள்ளபடி உணரச்செய்து, அதன் பிரகாரம் நடப்பதற்கு நல்லுதவி புரிவானாக. ஆமீன்.

நாயகவாக்கியம்

எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் ஒருநாளன்று, இன் மொழிகள் பேசுவது, தாழ்மைகொள்வது ஆகியவைகளின் மேன்மைகளை எடுத்து விளக்கிவருவதினிடையே, மானிடர்களை நோக்கி, அல்லாஹ்வின் அடியார்களே! பொருமைச் சுபாவ முடையவர்களாயும், சற்குணசீலர்களாயும் விளங்குங்கள் ; இக்குணங்கள் அல்லாஹ் தஆலாவுக்கு மிகமிக பொருத்த முடையவனாக இருக்கின்றன; எவன் பொருமை குணமுடையவனாக இருக்கின்றானோ அவன் சற்குண சீலனாகவும் சகோதிர வாஞ்சை யுடையவனாகவும் திகழ்கின்றான்; அவனுக்கு ஏழைகள் மீது அனுதாப மேற்படுகிறது; அதனால் அவர்களுக்குத் தொண்டு செய்ய முற்பட்டு விடுகின்றான்; உலகம் அவன் முன் அற்பமாகத் தோன்றுவதால் அவன் ஏழை பணக்காரன் என்னும் பாகுபாடின்றி யாவருடனும் சமமாக நடந்து, அவனால் எவருக்கும் யாதொரு கஷ்டமும் ஏற்படாது செய்து கொள்கின்றான் எனக்கூறி, "சகிப்புத் தன்மை, தாழ்மைத்தனம் ஆகிய இவ்விரண்டு குணங்களும் அல்லாஹ் தஆலாவுக்கு மிக மிகப் பொருத்தமுடையதாக இருக்கிறது" என அறிவித்ததாக, ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச்செய்யப்பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் இமாம் அஹ்மத் சாலிஹ் ஜஸாயிரீ (ரஹ்.) அவர்கள், இந்த ஹதீதுக்கு விரித்துரை கூறுங்கால், பொருமை, தாழ்மை ஆகிய இரு குணங்களும் மகிமை பொருந்திய இரு வாட்கள் போன்று இருப்பதால், அவைகளின் உதவிகொண்டு ஹிருதயம் என்னும் உலகத்தை ஜயிக்க முடியுமென்றும், எவர்கள் இவ்விரு குணங்களென்னும் வாளாயுதத்தைக் கைகொண்டிருந்தனரோ அன்னோர் தாங்கள் கோரிய காரியத்தில் ஜெயம் பெறுவதுடன் அன்னோரது இந் நன்முயற்சியின் பயனாக அநீதி அதிக்கிரமம் இவைகளின் வியாபார ஸ்தலங்கள் ஒய்ந்து ஒழிந்து, நீதி ஒழுங்கு முதலியவைகளின் கடைவிதி பிரகாசச் சுடர் விட்டெறிய ஆரம்பிக்கிறதென்னும் செய்தியை உலக சரித்திரவாயிலாய் நாம் தெரிந்து கொள்கிறோம் எனக் கூறியதுடன், முற்காலத்தில் பொருமை தாழ்மையோடு ஆக்ஷிபுரிந்து வந்த அரசர்களின் பெயர்நாமங்கள் இதுகாலை உலகில் விளங்கிக்கொண்டிருக்கிற தென்பதையும் தக்க முறையில் விளக்கிக் காண்பித்திருக்கின்றார்கள். ஆகவே, ஞாயம் ஒழுங்கு முதலியவைகளின் முந்தாணியை நாம் ஒருக்காலும் நழுவவிடாமலும், ஏழைகட்கு உதவி உபகாரம் புரிவதை நமது பிரதானக் கடமையாகக்கொண்டும் அகிலத்தவருக்கு அருஞ்சேவைபுரிந்து வருவோமாக.

சத்தியத்தூதர் சற்குண நாதர் (ஸல்.) அவர்கள் ஒரு நாளன்று உபதேசம் புரிந்து கொண்டிருப்பதற் கிடையே, ஏழைகள் மீது அனுதாபங்கொள்வது, சக்தியற்றோருக்கு உதவியளிப்பது ஆகியவைகளைக் கூறியவர்களாய், "ஏழைகள் மீது அனுதாபங்கொண்டு அவர்களுக்கு உதவிபுரிபவன் பகற்காலங்களில் நோன்பு நோற்று இராக்காலங்களில் வணக்கம் புரிபவனைப் போலிருக்கிறான்" என அறிவித்ததாக ஹஸ்ரத் ஸைதிப்னு அர்கம் (ரலி.) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்படுகிறது.

ஹஸ்ரத் அல்லாமா அப்துல் அஜீஜ் சாவீஷ் அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், ஏழைகள்மீது அனுதாபங் கொள்வது, சக்தியற்றோருக்கு உதவி புரிவது ஆகிய இவ்விரண்டு காரியங்களும் மானிடன் ஆற்ற வேண்டிய பிரதான கடமைகளிலுள்ள தெனக் கூறி, இதற்கு உதாரணமாக முஸ்லிம்கள் முற்காலத்தில் இச்சேவைகளைச் சிரமேற்கொண்டு சிறப்புற்றிருந்த காலை, அன்னோர் கியாதிமகிமையோடு விளங்கியதையும், இதுகாலை நாம் அச்சேவைகளைக் கை இழந்ததின் காரணமாக நம் ஸ்திதி கவலைக்கிடமான நிலைமையை அடைந்து விட்டதையும் தக்க முறையில் எடுத்து விளக்கி இருக்கின்றார்கள்.

ஒருநாளன்று நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் தாய் தந்தையர்களுக்கு வழிப்பட்டு நடப்பதன் மேன்மைகளை எடுத்துக்கூறிக்கொண்டிருக்குங்கால், "எவன் விர்த்தாபிய திசையையுடைய தன் தாய்தந்தையர்களுக்கு பணிவிடை செய்யவில்லையோ அவன் ஒருக்காலும் சுவனபதியடையமாட்டான்" எனத்தெரிவித்ததாக ஹஸ்ரத் காலிதிப்னுவலீத் (ரலி.) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.



மஸ்ஜித்களின் சீர்திருத்தம்

அல்லாஹு ஜல்லஷானுஹு வத ஆலா ஒருவன்தான் தேவையற்றவன்; விருப்பு வெறுப்பற்றவன்; இம்மை மறுமைப் பேறுகளை யளித்து மக்களை ஈடேற்றமடையச் செய்பவன் என்பதாக, முஸ்லிம்களாகி நாம் விசுவாசங் கொண்டிருக்கிறோம். ஆகவே, நாம் அடையவேண்டிய சகலமும் அவனிடமிருந்தே அடையவேண்டிய திருக்கிறது. இவ்வித நிலைமையில், அவனுடைய ஆலயமென்று அழைக்கப்படுகிற நம்முடைய மஸ்ஜிதுகளின் நிலைமையைப்பற்றி நாம் சிந்தித்துப் பார்ப்போமாயின், நம்முடைய மேற்கண்ட கொள்கையை நாம் சரிவர நிறைவேற்றிவருகின்றோமா என்பதைச் சந்தேகமின்றித் தெரிந்து கொள்ளலாம். ஒரு சமூகத்தாரின் தெய்வபக்தி, முன்னேற்றம், விவேகம், அறிவு ஆகியவைகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமாயின், அச்சமூகத்தாரின் தேவாலயங்களைப்பற்றி மாத்திரம் கவனித்தால், அவர்களுடைய நிலைமையை நன்கு தெரிந்து கொள்ளலாம் என்று பெரியோர்கள் கூறியதை ஆதாரமாகக் கொண்டு, நம்சமூகத்தாரின் மஸ்ஜிதுகளைப்பற்றிக் கவனித்துப் பாருங்கள்! சிற்சில இடங்களில் மஸ்ஜிதுகளிருந்தாலும், அவைகளில் ஒருவர் இருவர்கூட தொழுகவருவது கஷ்டமாக இருக்கிறது. அம் மஸ்ஜிதுக்கு ஏற்பட்ட கத்தீப் அல்லது பேஷ் இமாம் அம்மஸ்ஜிதை எட்டிப் பார்ப்பதுமில்லை. அதற்கேற்பட்ட முஅத்தின், பாங்கு சொல்ல வேண்டும் மஸ்ஜிதில் விளக்கேற்றி வைக்கவேண்டும் என்றசிரத்தை கொள்வதுமில்லை. அம்மஸ்ஜிதில் தொழவருகிற ஓரிரு முஸ்லிம்கள் தாம் கத்தீப் வேலை, முஅத்தின் வேலை, ஜமாஅத்து வேலை ஆகிய சகலவற்றையும் கவனித்துக் கொள்ள வேண்டியதிருக்கிறது. வேறு சில இடங்களில் முஅத்தின், பேஷ் இமாம், ஆடுகோழி அறுப்பவர் ஆகிய இம்மூன்றுவேலைக்காரர்களுக்கும் பதிலாக ஒரே ஒரு மனிதர் இவ்வேலைகளனைத்தையும் செய்ய வேண்டியதாக இருக்கிறது. மற்றுஞ் சில இடங்களில் நியமிக்கப்பட்டிருக்கும் பேஷ் இமாம்களிற் சிலருக்கு திருகுர்ஆனில் இரண்டு மூன்று ஸூரத்துகளும், குத்பாவும் ஓதத் தெரியும். அதற்கப்புறம் சுப்ஹானல்லா தான். மேலும் பற்பல இடங்களிலுள்ள பேஷ் இமாம்கள் தங்களது வயிற்றுப் பிழைப்புக்குத் தக்கவழி பிறக்காத காரணத்தால் அநேக பிதுஅத்துகளையும், அனுச்சாரமான சடங்குகளையும் ஏற்படுத்திக்கொண்டு, அவைகளின் பெயரால் ஜமாஅத்தார்களிடம் பணம் வசூல் செய்ய வேண்டியதிருக்கிறது. சில இடங்களில், மஸ்ஜிதில் இமாமத்துச் செய்யும் பேஷ் இமாம்களே நிக்காஹ் முதலிய ஊர் காரியாதிகளையும் பார்க்கவேண்டியிருப்பதால், அன்னோர் ஊரிலுள்ள கக்ஷி பிரதிகக்ஷிகளுக்குள் அகப்பட்டுத் திண்டாட வேண்டியதிருக்கிறது. இவ்வாறு நமது நாட்டிலுள்ள கிராமங்களிலும், மார்க்கக் கல்வியில்லாத ஊர்களிலும் மஸ்ஜிதுகளினுடையவும், பேஷ்

இமாம்களினுடையவும், கத்தீப் களினுடையவும் நிலைமையிருப்பதைப் பார்த்து முஸ்லிம்களாகிய நாம் கண்ணீர் வடிக்காமலிருக்க முடியாது.

இதற்கெல்லாம், ஊர் ஜமாஅத்தார்களிடம் போதியளவு மார்க்கக் கல்வியும், தெய்வபக்தியும் இல்லாமலிருப்பதே பிரதான காரணமாகும். இரண்டாவதாக, வறுமையையும் மற்றொரு காரணமாகக் கூறலாம். முற்காலத்திலுள்ள "குலபாயெராஷிதீன்"கள், இமாம்கள், தாபியீன்கள், "தபஉத்தாபியீன்"கள் காலங்களில், மஸ்ஜிதுகள்தான் கல்விக் கூடங்களாகவும், ஊர் பஞ்சாயத்துகள் முடிவு பெறுமிடங்களாகவும், சீர்திருத்தச் சபைகளாகவும், பார்லிமெண்டு சபைகளாகவுமிருந்து வந்தன. கலீபா தாம் பேஷ் இமாமாக நின்று தொழுவைப்பவராகவும், அவர்தான் பார்லிமெண்டு சபையின் தலைவராகவும், அரசராகவும் இருந்துவந்தார். அவரில்லாத இடங்களில் அவரது பிரதிநிதிகள் இந்தக் காரியங்களைச் செய்துவந்தனர். ஆனால், இக்காலத்தில் மார்க்கப் படிப்புக் குறைவாக இருப்பதால், இமாம்களுக்கும் கத்தீப்களுக்கும் மதிப்புக்குன்றி, கேவலம் அற்ப ஊழியர்களாக மதிக்கப்படுகின்றனர். இஃதென்ன? சிற்சில இடங்களில் அன்னோர் மிகவும் கேவலமான முறையில் நடத்தவும் படுகின்றனர்.

ஆகவே, சமூகச் சீர்திருத்தம் செய்வதில் ஆர்வமுள்ளவர்களும், சமூகம்,லௌகிகம் வைதீகம் ஆகிய இவ்விரு துறையிலும் முன்னேற்றமடைந்திருப்பதைப் பார்க்க விருப்பமுள்ளவர்களும் மஸ்ஜிதுகளைச் சீர்திருத்தம் செய்வதில் சிரத்தை கொள்ளல் வேண்டும். ஏற்கனவே நம்மவர் முன்னேற்ற மடைந்திருந்த காலத்தில் மஸ்ஜிதுகள் நல்ல ஸ்திதியிலிருந்தன; அவைகளின் பரிபாலனம் ஒழுங்கான முறையிலிருந்தது. எனவே, அப்படிப்பட்ட நிலைமைக்கு இக்காலத்திலுள்ள மஸ்ஜிதுகளைக் கொண்டுவருவதில் நம்மவர் ஈடுபடவேண்டும். இறைவனின் ஆலயமாகிய மஸ்ஜிதுகள் சீர்படுமாயின் குடிகளின் நிலைமையும் சீர்படும். ஆதலின், இதற்காக ஆங்காங்கு தனித் தனிச் சபைகள் நிறுவப்படவேண்டும்; அல்லது சங்கங்களுள்ள ஊர்களில் அந்தந்தச் சங்கங்களே இவ்வேலையைத் தங்களுடைய வேலைத்திட்டங்களிலொன்றாகச் சேர்த்துக்கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட சங்கம் ஊருக்கே பொதுவான ஸ்தாபனமாக இருப்பதால், இதில் ஏழை பணக்காரர், வாலிபர்,வயோதிகர் என்ற வித்தியாசமின்றி யாவரும் சுலபமாகச் சேர்ந்துகொள்வதற்கு த் தக்கவாறு சந்தாத் தொகையை குறைத்துவைத்துக் கொள்ளவேண்டும். அதிலும் வருஷச் சந்தாவாக எற்பாடு செய்துவிடுவது நல்லது. இச்சங்கம் முஸ்லிம்களைச் சீர்திருத்தம் செய்தல், மஸ்ஜிதுகளைப் பரிபாலனஞ் செய்தல் ஆகியவைகளைத் தவிர வேறுவிதமான நோக்கங்கொண்டதாக இருக்கக் கூடாது. இவைகள், மஸ்ஜிதுகளுக்குள்ள இமாம்களுக்கும், மஸ்ஜிதுகளுக்கும் தேவையாகவுள்ள காரியங்களிலும், இவைகளின் பொருளாதாரத்தை சீர்திருத்தம் செய்வது, விர்த்திசெய்வது ஆகியவைகளிலும் கவனம் செலுத்தல்வேண்டும். தன் குடும்பச் செலவுக்குக் கஷ்டப்பட்டுக்கொண்டு குறைந்த சம்பளம் அல்லது வருவாயில் இருப்பவர்கள் முழு கவனத்துடனும் உற்சாகத்துடனும் வேலை செய்ய இயலாது. ஆதலின், குறைந்தபக்ஷம் இமாம்கள் அல்லது கத்தீபுகளின் குடும்ப பரிபாலனத்துக்குத் தக்க வசதிகளைச் செய்து கொடுப்பது அவசியமாகும். அத்துடன் தற்போதிருக்கிற கத்தீப் அல்லது பேஷ் இமாம்களில் போதியளவு கல்வி இருக்கிறதா என்பதையும் கவனித்து,அன்னோர் மார்க்கக்கல்வியிலும் உலக நிகழ்ச்சியிலும் போதியளவு திறமையுள்ளவர்களாக இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு மஸ்ஜிதின் அண்

டையிலும் மார்க்கக் கல்வி போதிப்பதற்குத்தகுந்த மத்ரஸாவை ஏற்படுத்தி, அங்கு ஏழை பணக்காரர் என்ற வித்தியாசமில்லாமல் யாவரும் கல்வி பயிலுவதற்குத் தக்கவாறு பகற் பள்ளிக்கூடங்களும் இராப்பாடசாலைகளும் ஏற்படுத்த வேண்டும்.

மேலும், வேலையில்லாமலிருக்கிற முஸ்லிம்களை வேலையிலமர்த்துவது கொண்டு முஸ்லிம் பொது ஜனங்களிடம் ஏற்பட்டிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கி, அவர்களின் பொருளாதார நிலைமையை உயர்த்த முயல வேண்டும். மஸ்ஜிதுகளிலுள்ள வக்புச் சொத்துக்கள் சரிவர நிர்வகிக்கப்பட்டு வருவதுடன் வக்புச் செய்தவர்களின் நோக்கப்படி அவைகள் ஒழுங்காகச் செலவு செய்யப்படுகின்றனவா என்பதையும் கவனிக்கவேண்டும். இம் மஸ்ஜிதுகளின் பரிபாலனம் மார்க்க பக்தி நிறைந்தவர்களைக் கொண்ட ஓர் கமிட்டியின் வசம் ஒப்புவிக்கப்படல் வேண்டும். "இஷாஅத்தே இஸ்லாம்" (சன்மார்க்கப் பிரசாரம்)செய்வதற்கான வசதிகளையும் சௌகரியங்களையும் கவனித்து, இடமிருந்தால், அதற்காவன செய்யவும் வேண்டும். இம் மஸ்ஜிதுகள் சரிவரத் தம்தம் வேலைகளைச் செய்துவருகின்றனவா என்பதை ஒரு கமிட்டியார் மேல் விசாரணை செய்யவேண்டும். இவ்வாறு செய்வதால் அந்தந்த மஹல்லா, அந்தந்த ஊர்களிலுள்ள மஸ்ஜிதுகள் ஒருவாறு சீர்திருத்தமடையலாம்; ஆங்காங்குள்ள முஸ்லிம்களுக்குள் மார்க்கக் கல்வி அபிவிருத்தி யடையலாம். ஆனால், அவ்வக்காலத்திலுள்ள மாறுதல்களையும் முன்னேற்றங்களையும் உணர்ந்து தக்கன செய்வதற்கான எற்பாடுகளைச் செய்வதற்காக தாலுக்கா பரிபாலன சபை, ஜில்லா பரிபாலன சபை, மாகாணப் பரிபாலன சபைகளை ஏற்படுத்தி யாவரும் ஒரே நோக்கத்தில் ஒத்துழைத்தால், முஸ்லிம்களுக்குள் ஒற்றுமை ஐக்கியம் ஏற்படவும் கல்வியபிவிருத்தியுண்டாகவும், பொருளாதார நிலைமை அபிவிருத்தியடையவும் ஹேது உண்டாகும். "அருளில்லார்க் கவ்வுலகில்லை, பொருளில்லார்க் கிவ்வுலகில்லை" என்றபடி, முஸ்லிம்களின் பொருளாதார நிலைமை சீர்படுவதால் மட்டும் முஸ்லிம்களுக்குள்ள சில கெட்டகுணங்கள் தானுக நிவர்த்தியாகிவிடும். இதுபோல் அவர்களுக்கு மார்க்கக் கல்வியுமிருக்குமாயின், மார்க்கத்துக்கு முரண்படாத முறையில் ஒவ்வொருவரும் தத்தம் பொருளாதார அபிவிருத்தி செய்துகொள்ளச்சந்தர்ப்பமேற்பட்டுவிடும்.பணத்தட்டும்,வறுமையுமில்லாத சமூகத்தார்கள் தங்கள் ஆலயங்களையோ, பொது ஸ்தாபனங்களையோ சரிவர நிர்வகித்து வருவர் என்பது உலகறிந்த உண்மையாகும். ஆதலின், ஜீவாதாரமாகவுள்ள கல்வி, செல்வம் ஆகிய இருதுறைகளிலும் அபிவிருத்தி செய்வதன்மூலம் சமூகச் சீர்திருத்தத்தை ஆரம்பிப்போமாயின், நாம் கோரும் சீர்திருத்தம் விரைவில் சித்தியடைவதைக் காணமுடியும். இம்முக்கிய வேலையைச் செய்வதற்கு இப்பொழுதுள்ள நமது சங்கங்கள் முன்வருமாயின், இக்காரியத்தை ஆரம்பிப்பது அதிகக் கஷ்டமுடையதாகாது. ஆனால், ஒருவிஷயம் மாத்திரம் ஈண்டு குறிப்பிடுவது அவசியமாகும்.எந்தச் சமூகத்திலும் தாராளமனப்பான்மையுள்ளவர்களுமுண்டு, குருகியமனப்பான்மையும் சந்தேக எண்ணமுமுள்ளவர்களுமுண்டு. இவ்விதப் புண்ய கைங்கரியத்தில் குருகிய மனப்பான்மையும், சந்தேக எண்ணமுள்ள கனவான்கள் முட்டுக்கட்டையாக இருப்பது ஆச்சரியப்படத்தக்க விஷயமன்று. இவர்கள் ஊர்நாட்டாண்மைக்காரர்களையும், சில கத்திபுகளையும் தங்களுடன் சேர்த்துக் கொண்டு இதற்கு எதிர்ப்புவேலை செய்வதும் எதிர்பார்க்கக் கூடாத காரியமன்று. இப்படிப்பட்ட எதிர்ப்பும் முட்டுக்கட்டையுமுண்டாகுமாயின், இதைப்

பிரமாதமாக மதித்துக்கொண்டு மன தைரியமிழந்து, உற்சாகங்குன்றி, இவ் வேலையைக் கைவிட்டு விடலாகாது. இப் படிப்பட்ட முட்டுக்கட்டையாளரும் பின்னர் பச்சாதாபப்பட்டு நம்முடன் வந்து சேர்ந்துகொள்வதற்குத் தக்கவாறு நாம் கண்ணியமாக நடந்து கொள்ளவேண்டும். "முயற்சி திருவினையாக்கும்" என்றபடி, நாம் கண்ணியமானமுறையில் அல்லாஹு தஆலாவுக்காக, அந்தரங்க சத்தியாய் இப்புண்ணிய வேலையைச் செய்வோமாயின், இறுதியில் இறைவன் கிருபை நம்முடன் இருக்கும் என்பதை அறிவித்துக் கொள்கிறோம்.

தாத்தாரிகளிடம் இஸ்லாம் பரவிய வரலாறு

(மௌலானா ஜப்பர் அலீகான்)

கிறிஸ்துவ மதம் பைத்துல் முகத்தஸில் ஜன்மமெடுத்து அலக்ஸாண்டரியாவிலும் கார்த்தேஜிலும் வளர்ந்து கான்ஸ்தாந்திநோபிளில் உலகை ஆட்சிபுரிந்தது. எனவே இந்த இடங்களிலெல்லாம் இஸ்லாம் மதம் பரவி ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா ஆகிய கண்டங்களில்கிறிஸ்துவ மதத்துக்குப் பெரிய நஷ்டம் விளைவித்தது. இதற்குத் தக்கபரிகாரம் இவ்வுலகம் உள்ளளவும் செய்யமுடியாது. தவிரவும்,இஸ்லாத்தின் கையினால் கிறிஸ்துவமதம் இதைப் பார்க்கினும் மிகப் பயங்கரமான நஷ்டமடைய நேர்ந்தது.அதாவது, தூரான் நாட்டில் கிறிஸ்துவர்கள் பல்லாயிரக் கணக்கான முயற்சிகள் செய்தும் அங்குள்ளவர்கள் திரித்துவக் கொள்கையை ஒப்புக்கொள்ளாது தௌஹீதுக்கு அடிமைப்பட்டு, கிறிஸ்துவர்களுக்குக் கணக்கற்ற தொந்தரைகளுண்டாக்குபவர்களாகி விட்டனர். இன்றும் கூட தூரானியர்களிடம் அவர்களுடைய மூதாதையரின் நிகரற்ற சக்தியும் பராக்கிரமும் இருந்து வருகிறது.

கி. பி. எட்டாவது நூற்றாண்டில் அறபியர்களின் வெற்றிப் பிரவாகம் கிழக்குத் துருக்கிஸ்தான்வரை சென்றது. மத்திய ஏஷியாவில் அறபிகளின் இம்முன்னேற்றமானது லக்ஷக் கணக்கான தூரானியர்களைத் தலைவணங்கச் செய்து இஸ்லாத்தின் வட்டத்துக்குள் வரும்படிச் செய்திருந்தபோதிலும், இன்னும் பிற்காலத்தில் தோன்றிய கஜ்னவீ, ஸல்ஜோக்கியின் ஏகாதிபத்தியங்களின் அஸ்திபாரங்கள் இவர்களின் துணிகரச் செய்கைகள் மீது ஏற்படுத்தப்பட்டிருந்த போதினும் பன்னிரண்டாவது நூற்றாண்டின் இறுதிவரை தூரானியர்களின் நாடோடிக் கூட்டத்தார் துருக்கிஸ்தானிலிருந்து சீனாவரை பரவியே இருந்தனர். இவர்களின் படையெடுப்புகளால் ஐரோப்பாவும் ஆசியாவும் நடுங்கிக்கொண்டிருந்தன. இக்கூட்டத்தார் அனைவரும் வழக்கம்போல் விக்கிரக ஆராதனைக்காரர்களாகவே இருந்தனர். அப்பாஸிய்யா வம்சத்து கிலாபத் ஆட்சியை நாம தேயங்கூட இல்லாமல் உலகத்தைவிட்டு அழித்து, இஸ்லாத்துக்குப் பெரும் விரோதிகளாக இருந்த இக்கூட்டத்தார், இனி ஒரு காலத்தில் இஸ்லாத்தின் தொண்டருக்கு தொண்டூழியம் புரிபவர்களாக இருக்கவேண்டும் என்பதும், இவர்களது கைகளால் யமுனைநதிக்கரையில் தக்பீர் முழக்கம் தோன்றி இந்தியா முழுவதும் ஏக தெய்வக் கொள்கை என்றமேகம் மூடிக்கொள்ள வேண்டும் என்பதும், ஐரோப்பாவையும் ஆசியவையும் பிரிக்கிற பாஸ்பரஸ் ஜலசந்தியின் ஓரத்தில் தங்களுடைய பராக்கிரமச் செயல்களைக் காட்டி வெற்றிக்கொடி நாட்டி, மூன்று கண்டங்களின் தலைமைப் பதவியை வகிக்க வேண்டும் என்பதும் இறைவனின் நாட்டத்திலிருந்தது போலும்.

இந்தத் தூரானிக் கூட்டத்தாரைச் சேர்ந்த சஃதாயிப்பிரிவினர் இஸ்லாம் மதத்தைத்தழுவிய விபரத்தைக் கூறவேண்டுமென்பதுதான் நம்முடைய இவ்வியாசத்தின் முக்கிய நோக்கமாகும். இப்பிரிவார் பிறந்த நாட்டுக்கு மொகூலிஸ்தான் என்று பெயர். மனத்தைக் கவரத் தக்க இவ்விருத்தாந்தம் இந்தியாவின் சக்கிரவர்த்தியாக இருந்த பேபர் என்பாரது சிற்றன்னையின் புதல்வரான மிர்ஜா முஹம்மது ஹைதர் என்பவர் எழுதிய 'ரஷீதி' என்ற

சரித்திரத்திலிருந்து எடுக்கப்பட்டது. இச் சரித்திரம் கி. பி. 1544-ல் எழுதப்பட்டது. இச்சரித்திரம் காக்கான்களின் வரலாற்றுக்கு மிகவும் முக்கிய ஆதாரமான நூல் என்பதாகக் கருதப்பட்டுவருகிறது.

சீனதேசத்துச் சுவரிலிருந்து வால்கா நதி வரை சங்கீஸ்கானின் பிரமாண்டமான அரசாங்கம் பரவி இருந்தது. இப்பெரிய அரசாங்கம் கி. பி. 1227-ல் அவருடைய நான்கு புதல்வர்களாலும் பாகம்செய்து கொள்ளப்பட்டது. ஜீஹூன் நதியிலிருந்து கோபீபாலம் வரையிலும், இன்னும் திபேத்திலிருந்து பேக்கால் ஏரி வரையிலுமுள்ள பிரதேசம் சஃதாயி என்பவரின் பாகத்துக்கு வந்தது. இப்பிரதேசம் 1500 மைல் நீளமும், 700 மைல் அகலமுள்ளதாக இருந்தது. இவ்வரசாங்கம் கிட்டத்தட்ட 100 வருஷ காலம்வரை சஃதாயி வம்சத்தைச் சேர்ந்த காக்கான்களால் அரசாட்சி புரியப்பட்டு வந்தது.

கி. பி. 1321-ம் வருஷத்தில் சங்கீஸ்கானின் இன்னொரு புதல்வரான சஃதாயி என்பவரின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது சிறிய தகப்பனுன கஸ்தாயி என்பவரின் வம்சத்தினருக்கு உட்பட்ட பிரதேசத்தின்மீது படையெடுத்து அதைக் கைப்பற்றி இரண்டு பாகமாகப் பிரித்துவிட்டார்கள். இதனுடைய மேற்குப் பாகத்திற்கு "மாவரா உன்னஹ்ரு" என்று பெயர். இதற்குத் தலைமை ஸ்தலம் "ஸமர்கந்து" இதனுடைய கிழக்குப் பாகத்துக்கு எல்லையை நிர்ணயித்துக் கூறுவதில் தற்கால முள்ள நிபுணர்களுக்குச் சிறிது சிரமமேற்படுகிறது. ஆனால், இந்த பாகத்துக்கு "முஹூலிஸ்தான்", என்று கூறுகிறார்கள். துருக்கிஸ்தான், பர்கானு, அல்டிஷஹர் ஆகிய வளம்பொருந்திய பிராந்தியங்களைத் தவிர்த்து பாக்கியுள்ள பிரதேசத்தில் சரித்திரப் பூர்வமான சின்னங்களெவையுமின்று. மேற்கண்ட இம்மூன்று பிராந்தியங்களில்தான் தாஷ்கந்து, கஜ்னத், அந்திஜான், காஷ்கர், கத்தன் ஆகிய அழகிய நகரங்களிருக்கின்றன. மொகலாயர்களின் பூர்வீக தேசம் சரித்திர சம்பந்தமான சின்னங்களில்லாத பாழும் பிரதேசத்திலிருந்தது. இப்பிராந்தியங்களில் அவர்கள் தலைவர்களாக இருந்து வாழ்ந்து வந்தனர். இவர்களிலுள்ளகான்களும், காக்கான்களும் தங்களுடைய பெரும்பாலான காலத்தை நகரங்களில் வாசஞ் செய்து கழிக்காமல், நாடோடிகளாகவுள்ள தங்களது பிரஜைகளுடன் நாளுக்கொரு இடத்தில் மாறிமாறி இருந்து வாசஞ்செய்து அவர்களது மேய்ச்சற் பிரதேசங்களில் வாழ்வதையே பிரியமாகக் கொண்டிருந்னர்.

சஃதாயின் ஐந்தாவது தலைமுறையில தோன்றிய காக்கான் அஸான்புகா என்பவர் கி. பி. 1309-ம் வருஷத்தில் பட்டத்துக்குவந்தார். இவர் பட்டத்துக்கு வந்த காலத்தில் மாவராஉன்னஹ்ரும், முகூலிஸ்தானும் இவரது ஆளுகைக்குட்பட்டிருந்தது. பின்னர், கி. பி. 1331-ம் வருஷத்தில் சஃதாயி வம்சத்தாரின் அக்கிரமக்கரங்கள் மாவராஉன்னஹ்ரிலுள்ள பிராந்தியங்களை இவரை விட்டுப் பிடுங்கிக்கொண்டன. ஆதலால், இவர் முகூலிஸ்தானின் காடுகளிலிருந்து உயிர்தப்பி ஓடி வந்துவிட்டார். இவருக்கு (அஸான்புகாவுக்கு) இரண்டு மனைவிகளிருந்தனர். இவ்விருவரில் எவரும் குழந்தைகளைப் பெறவில்லை. முதல் மனைவியான ஸாத்தல்மஷ்காத்தூன் என்பவருக்குத்தமது கணவரான அஸான்புகாவினிடத்தில் அதிகச் செல்வாக்கிருந்தது. இவள் மலடியாக இருந்தனள். இளைய மனைவியான மாத்திலக் என்பவளும் வெகுகாலம் வரை மக்கட்பேறு இல்லாதவளாகவே இருந்தனள்.

அஸான்புகா என்ற இவ்வரசர் ஒருமுறை தன்னுடைய சைனியங்களுடன் ஒரு யுத்தத்துக்குச் சென்றிருந்தார். அதுசமயம்தான் தன்னுடைய சக்களத்தியான இளையராணி கற்பவதியாக இருக்கிற விபரம் மூத்த ராணியான ஸாத்தல் மஷ்காத்தூனுக்குத் தெரியவந்தது. பொறாமைக்குணம் மேலிட்டால் மாத்திலக் என்ற அவ்விளைய ராணியை ஒரு பெரிய அமீருக்கு அவள் விவாகம் செய்து கொடுத்தனுப்பிவிட்டனள். காக்கான் போர்முனையிலிருந்து வாகைமாலைசூட்டித் திரும்பவந்தகாலை. இந்தச் சம்பவத்தை அறிந்து ஆத்திரங்கொண்டனன். ஆயினும், விஷயத்தைப்பற்றிப் பெரும் கண்டன முறைகள் செய்வதற்கில்லை. ஏனெனில், இராணியானவள் தன் கணவனின் இதர மனைவிமார்களைத் தனது அடிமைப் பெண்களைப் போல் பாவித்துப் பிறருக்கு அளித்துவிடுவது மொகலாயருக்குள் பூர்வீக காலந்தொடுத்து இருந்து வரும் வழக்கமாக இருந்தது. இதற்குச் சில நாட்களுக்குப் பிறகு அஸான்புகா என்ற அவ்வரசன் கி. பி. 1339-ல் உயிர்துறந்தனன். பின்னர் சஃதாயி அரசாங்கம் 17 வருஷ காலம் வரை அரசனின்றி இருந்துவந்தது.

இது இவ்வாறிருக்க, இனி அஸான்புகாவின் இரண்டாவது மனைவியின் நிலைமையைப்பற்றிக் கவனிப்போம்: இவளை இராணியானவள், துக்தவிஷராவல் எனும் அமீருக்கு விவாகம் செய்து கொடுத்துவிட்டனள். இந்த அமீரின் வீட்டுக்கு வந்த சில காலத்துக்குப் பின் அவள் ஒரு ஆண்மகவைப் பெற்றனள். ரஷீதீ என்ற நூலின் ஆசிரியரான மிர்ஜா முஹம்மது ஹைதர் என்பவரின் மூலப்பாட்டனார் அமீர் புலாஜீ என்பவருக்கு சஃதாயி தேசத்திலுள்ள பிரபுக்களிடம் அதிகச் செல்வாக்கிருந்ததால் இவருடைய ஆலோசனையை யாவரும் மறுத்துத் தள்ளமாட்டார்கள். இந்நிலைமையில்,சஃதாயி தேசத்துக்குப் பட்டத்தரசர் இல்லாமல் நாட்டில் அராஜகமும், கொள்ளையும், கொலையும் உண்டாகுவதை அவர் பார்த்துவிசனமுற்று, இதை ஒழிப்பதற்காக ஆலோசனைபுரிந்து, கடைசியாக துக்தவிஷராவல் எனும் அமீருக்கு ஸாதல்ராணியால் கொடுக்கப்பட்ட மாத்திலக் என்பவள் (அஸான்புகாவின் இரண்டாவது மனைவி) எங்கிருக்கின்றனள்? அவள் அஸான்புகாவுக்காக அடைந்திருந்த கற்பத்தில் பிறந்த குழந்தை ஆணா? அல்லது பெண்ணா? அக்குழந்தை இன்னமும் ஜீவித்திருக்கிறதா? ஜீவித்திருந்தால் அதைத் திருட்டுத்தனமாகவேனும் அழைத்து வருவதற்கு ஏதேனும் வகை செய்யவேண்டும் என்று முடிவுசெய்து, இக்காரியங்களைக் கவனிப்பதற்காகத் தமது நம்பிக்கையுள்ள ஊழியரான தாஷ்தைமூர் என்பவரைத் திட்டம் செய்தார்.

தாஷ்தைமூர் பல காடுகளையும் மலைகளையும் கடந்து துக்தவிஷராவல் இருக்கும் இடம் வந்து மாதிலக் என்ற ஸ்திரீயைப்பற்றித் துப்பறிந்தார். அந்த ஸ்திரீ காக்கான் அஸான்புகாவினிடமிருந்து வந்த சில மாதங்களுக்குள் ஒரு ஆண்மகவைப் பெற்றதாகவும், அவ்வாண்மகவு இதுவரை ஜீவித்திருப்பதாகவும், தற்போது அப்பையனுக்கு 12 வருஷமாகுவதாகவும் தெரியவந்தது. துக்தவிஷரால் நித்திரை செய்துகொண்டிருக்கும்போது பையனைக் களவாடிக் கொண்டுவருவது சுலபமான காரியமுமன்று. இது மிகவும் சிரமமாக இருந்தபோதிலும் தாஷ்தைமூர் மிகவும் தந்திரமும் சுறுசுறுப்புமுள்ளவராதலால், இந்த காரியத்தைத் துணிந்து அதி ஜாக்கிரதையாகச் செய்து, துக்லக்தைமூர் என்ற 12 வயதுப் பையனை அமீர்புலாஜீயிடம் கொண்டுவந்து சேர்ப்பிப்பதில் வெற்றியடைந்துவிட்டார். எனவே, இப்பையன் அரச சிம்மாஸனத்தில் அமருவதற்குத் தகுந்த பிராயத்தை அடையும்வரை பட்டத்து இளவரசர் என்ற முறையில் அமீர் பிலாஜீயின் வீட்டில் வைத்து பரிபாலிக்கப் பட்டுவந்தார்.

இவ்விஷயம் இம்மட்டுடனிருக்க, இனி இஸ்லாமிய தேசங்களின் நிலைமையைப்பற்றிக் கவனிப்போம்: ஜங்கீஸ்கான்,கார்ஜர்ஷாஹ்வின் அரசாங்கத்தைத் துண்டு துண்டாக்கிவிட்டு குராஸான், மாவராஉன்னஹ்ரு ஆகிய நாடுகளை ஜெயித்தபின், முஸ்லிம்களின் ஒற்றுமைக்கு அவர்களுடைய மதத்தலைவர்கள் தான் காரணம் என்று கண்டு இமாம்களை வேரறுக்கும் விஷயத்தில் இடுப்புக்கட்டிக்கொண்டான். புகாரா நகரம் அக்காலத்தில் மார்க்கக் கல்விக்குப் பெயர் பெற்று விளங்கிக்கொண்டிருந்தது. ஆகவே, ஒரேநாளில் அங்குள்ள உலமாக்களனைவரையும் பிடித்துக் கொன்று அவ்வூரைக் காலிசெய்துவிட்டான். அக்காலத்தில் இமாம் அஃலம் என்று மதிக்கப்பட்டுவந்த மௌலானா ஹாபிஜூத்தீன் றஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ஜங்கீஸ்கானின் உத்தரவுப்படி கொலை செய்யப்பட்டார்கள். பிரக்கியாதிபெற்ற பேரறிஞரான மௌலானா ஷூஜாஉத்தீன் முஹம்மது (றஹ்.) என்பவர் முஹத்திதுகள், புகஹாக்கள், ஸூலஹாக்கள் ஆகியவர்களைக்கொண்ட ஒரு பெருந்திரளான கூட்டத்துடன் தேசப்பிரஷ்டஞ் செய்யப்பட்டு "கராகரம்" என்ற இடத்துக்கு அனுப்பப்பட்டார்கள். உலமாக்களைக் கொண்ட இப்பெரியார்களுடன்தான் ரஷீதீயின் ஆசிரியரான மிர்ஜா முஹம்மது ஹைதருடைய முர்ஷிதும் ஞானாசிரியருமான மௌலானா காஜா அஹ்மது என்ற பெரியாரும் சேர்ந்திருந்தார். இப்பெரியாரின் சந்ததியினர் வெகுகாலம்வரை கராகரம் என்ற அவ்வூரிலேயே வாழ்ந்து வந்தனர். இறுதியாக அங்கு ஏற்பட்ட ராஜிய புரட்சியின் காரணமாக ஜங்கீஸ்கானின் தலைநகரான கராகரமை விட்டு வெளியேறி தங்களுடைய ஜீவியகாலத்தை கட்டாக்கில் கழிக்க வேண்டியதேற்பட்டது. இப்பட்டணம் அக்காலத்தில் சஃதாயி மொகலயரின் எல்லைக்குள் உள்ள பிரபல நகரமாக இருந்தது. இவர்கள் அங்கு ஒரு மஸ்ஜிதையும் கட்டி ஐந்து நேரமும் இறைவனைத் தொழுது வணங்கி வந்தனர். இந்த முபாரக்கான குடும்பத்தில் ஒரு பெரியார் தோன்றினர். அவருக்கு ஷெய்கு ஜமாலுத்

தீன் (றஹ்.) என்பது பெயர். இவர் ஆத்மஞானியாக் இருந்தார். இவரை அக்காலத்தில் இருந்த அக்கம்பக்கத்து மோகலாயர்கள் மிகவும் கண்ணியப்படுத்தி மரியாதை செய்து வந்தனர். இவருக்கு நாம் கூறுகிற இவ்வரலாற்றுடன் நெருங்கிய சம்பந்தமுண்டு.

ஒரு நாள் ஷெய்கு ஜமாலுத்தீன் (றஹ்.) அவர்கள் ஜும்ஆத் தொழுகைக்குப்பின் மனத்தை நடுங்கச் செய்யும்படியான அவ்வளவு உருக்கமான பிரசங்க உபதேசம் புரிந்தார்கள். அவருடைய உபதேசத்தின் கடைசி வாக்கியத்தில் "ஜனங்களே! நீங்கள் நேரான வழியில் நடக்கவேண்டுமென உங்களுக்குப் பலநாளும் உபதேசம் புரிந்தனன்; ஆனுல், அற்பர்களான உங்களிடம் என்னுடைய உபதேசங்கள் ஏறவில்லை; நான் அழுது புலம்பி உங்களுக்கு இறைவனின் வேதனைகளை எடுத்துக்கூறி உபதேசித்தேன்; நீங்கள் அல்லாஹுத ஆலாவிற்கு அஞ்சினீர்களல்லீர்; உங்களுடைய வழிகேட்டை விட்டு விலகினீர்களல்லீர்; இப்பொழுது அல்லாஹு தஆலாவின் கோபாக்கினி கிளம்பி விட்டது; இவ்வூரின்மீது கூடிய சீக்கிரத்தில் இறைவனின் வேதனை இறங்கும் என்று எனக்கு அறிவிக்கப்பட்டுவிட்டது; இறைவனின் கட்டளை எனக்குத் தவணை கொடுத்திருக்கிறது; நான் இந்த ஊரைவிட்டு ஹிஜ்ரத்துச்செய்துவிட வேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருக்கிறேன்; வரப்போகிற இவ்வேதனையை விட்டு நான் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று எச்சரிக்கப்பட்டிருக்கிறது; உங்களுடைய பகிரங்கக் கூட்டத்தில் இதுதான் எனது கடைசி உபதேசம்; இப்பொழுதே நான் உங்களைவிட்டுப் பிரயாணமாகி விடுகிறேன்; இனி நாம் ஒருவரை ஒருவர் கியாமத்து நாளில் சந்தித்துக் கொள்ளலாம் என்று உங்களுக்கு அறிவித்து விட்டுச் செல்கிறேன்" என்பது காணப்பட்டது.

இவ்வாக்கியங்களைக் கூறிவிட்டு, ஷெய்கு அவர்கள் மின்பரிலிருந்து இறங்கி நேராகத் தங்களது இல்லஞ்சென்று பிரயாணத்துக்கான ஆயத்தஞ் செய்தார்கள். ஷெய்கு அவர்களின் உபதேசம் அந்த மஸ்ஜிதிலுள்ள முஅத்தினுக்குப் பசுமரத்தாணிபோல் பதிந்து விட்டதால், இவர் ஷெய்கு அவர்களிடம் வந்து ஹிஜ்றத்துச் செய்வதற்குத் தமக்கும் அனுமதி தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஷெய்கு அவர்களும் அனுமதி கொடுத்தார்கள். அதன் பேரில், அவரும் ஹிஜ்றத்துச் செய்வதற்கு ஆயத்தமாகி, இருவருமாக ஊரைவிட்டு வெளியேறி விட்டனர். மூன்று மைல் தூரத்துக்கு அப்பால் வந்தபோது அசர் தொழுகைக்கு நேரமாகி விட்டது. ஆதலால், அன்றிரவை அவ்விடத்திலேயே கழிக்கவேண்டுமெனமுடிவுசெய்து அங்கு தங்கி விட்டார்கள். ஆனுல், அந்த முஅத்தினுக்கு அவ்விடம் வந்த பின் ஒரு அலுவல் ஞாபகத்துக்கு வந்ததால், ஷெய்கு அவர்களிடம் அனுமதி பெற்று ஊருக்குத் திரும்பவந்தார். அப்பொழுது மஃரிபுத் தொழுகைக்கு நேரமாகி விட்டதால், கடைசி முறையாக 'அதான்' சொல்லிவிட்டு அவ்வூரைத் துறந்து விடலாம் என்று அவருடைய மனத்தில் திடீரென்று ஒரு விருப்பம் உண்டாயிற்று. உடனே அவர், அவசரம் அவசரமாக மஸ்ஜிதுக்குள்சென்று உலுச்செய்து மினாரவின் மீதேறி மஃரிபுத் தொழுகைக்காக அதான் சொல்ல ஆரம்பித்தார். உடனே, வானத்தில் மாறுதல் தோன்றி மேகக்கூட்டங்கள் வந்து கவிய ஆரம்பித்தன. பனிபோல் வெள்ளை நிறமாக மழை பெய்வதுபோல் தோன்றிற்று. மினாரவை விட்டுக் கீழிறங்கி வெளியில் வருவதற்காகக் கதவைத் திறந்தால் கதவு திறக்கமுடியவில்லை. ஆதலால், அவர் மறுபடியும் மினாரவின் மீதேறிப் பார்க்கும்போது அவ்வூரில் மண்மாறி பெய்வது தெரிய வந்தது.

ஊர்முழுவதும் மண்மாரியால் மூடப்பட்டுக் கொண்டிருக்கிறதும், தரைமட்டம் சீக்கிரமாக உயர்ந்துகொண்டு வருவதும் அவருக்குத் தோன்றிற்று. பின்னர், கொஞ்சநேரத்துக்குள் தரைமட்டமானது மினாரவின் உச்சிவரை உயர்ந்தது. அதனுல் இவருக்கு நடுக்கமும் பீதியுமுண்டாயிற்று. என்ருலும், உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு இனி இங்கிருப்பது அபாயம் என்று நினைத்து அதைவிட்டு வெளியேறி மணல்மேட்டைக்கடந்து தப்பினேன், பிழைத்தேனென்று விழுந்தடித்து ஷெய்கு அவர்களிடம் ஓடிவந்து தாம் கண்ட விபரத்தைக் கூறினர்.

உடனே ஷெய்கு அவர்கள் இனி இங்கிருப்பது தகாது; அல்லாஹு தஆலாவின் கோபத்தை விட்டுத் தூரவிலகி இருப்பதே மேல் என்று கூறி அவ்விரவிலேயே அதை விட்டுப் புறப்பட்டு அநேக கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு இறுதியாக பாய்க்கல் என்ற விடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். இந்த

இடம் காஷ்கருக்கு 300 மைல்களுக்கு அப்பால் வடகிழக்குத் திசையில் மலைப்பிரதேசத்தின் அடிவாரத்தில், ஆக்ஸா என்ற இடத்துக்குப் பக்கத்தில் இருக்கிறது. (தொடரும்.)

பெண் கல்வியின் போக்கு

(கரம் இலாஹி.)

ராஜீய விஷயங்களுக்கு அடுத்தபடியாக பெண் கல்விதான் மக்களின் கவனத்தைத் தன் பக்கல் அதிகமாக இழுத்துக் கொண்டிருக்கிறது. இந்திய ஸ்திரீகளும் மேனாட்டு ஸ்திரீகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றி உயர்தரக் கல்வி பயின்றவர்களாகவும் சுயேச்சையுள்ளவர்களாகவுமிருக்கவேண்டும்; இல்லையேல் மனித நாகரீக முன்னேற்றம் அறைகுறையாகவும், இந்தியரின் வாழ்க்கை முறை பூர்த்தியில்லாமலுமாகிவிடும் என்று இக்காட்டிலுள்ள பிற பல ராஜியவாதிகள் ஒருமுகமாகக் கூறுகிறார்கள். நமது தேசச் சகோதரிகளின் முக்கிய நோக்கமும் இதுவாகத்தானிருக்கிறது. எனவே, மேனாட்டு மக்களுடன் தோளோடு தோள் சேர்த்து நடப்பதற்கு இவர்களும் தயாராகவே இருக்கிறார்கள். ஆளும் ஜாதியாரும், அயலகத்தாரும் இம்முறையைக் கையாண்டிருப்பதானது முஸ்லிம்களையும் தட்டி எழுப்பி, இவ்விரு ஜாதியாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்கவேண்டுமென்ற கவலையை இவர்களுக்குமுண்டாக்கிவிட்டது. ஆகவே, இதன் முடிவாக விளையுங்காரியம் என்னவென்பதைக் கவனியாமல், என்ன நேர்ந்தாலும் பெண் கல்வியைப் பரவச் செய்யவேண்டுமென்று இன்னோர் முடிவுசெய்து கொண்டனர்.

சுமார் நாலைந்தாண்டுகட்டு முன்னர் ஜலந்தரில் பஞ்சாப் மாகாணக்கல்விகான்பரன்சு நடைபெற்றது. அக்கான்பரன்ஸுக்கு ஆனரபிள் ஸர் பைரோஸ் கான் நூன் (பஞ்சாப் கல்வி இலாக்கா மந்திரி) அக்கிராசனம் வகித்தார். அவர் செய்த பிரசங்கத்தில் "காற்று எப்பக்கம் வீசுகிறதோ அந்தப்பக்கம் நடங்கள்" என்றுகூறியதுடன் "நம்மவரில் பெண்கல்விக்கு பர்தா ஒருபெரும் தடையாக இருக்கிறது" என்றும் கூறினார். டில்லி ஜாமியே மில்லியா இஸ்லாமியாவுக்குப் பிரசங்கம் செய்வதற்காக இப்பொழுது துருக்கியி லிருந்து வந்திருக்கிற காலிதா அதீப் கானம் என்ற ஸ்திரீயும் பர்தாவின் காரணமாக இந்திய முஸ்லிம்களைக் கண்டித்துப் பேசுகிறார். இந்திய அரசாங்கம் சென்ற 1931-ம் வருஷத்தில் எடுத்த ஜனசங்கியையில், இந்திய முஸ்லிம்களில் சிசுமரணம் ஏற்படுவதற்கு பர்தா வழக்கம்தான் காரணம் என்று கூறி இருக்கிறது. எனவே, இந்தப் பர்தா வழக்கம் ஸ்திரீகளின் சுகாதாரத்துக்கு விரோதமானது என்றும் கருதிக்கொண்டிருக்கிறது.

ஆனால், கல்வியின் மேன்மையையும், அதனாலேற்படும் நன்மையையும் பற்றி எவருக்கும் எவ்வித ஆக்ஷேபனையும் கிடையாது. ஒவ்வொரு சமூகத்தின் மனப்பான்மை வெவ்வேறாக இருக்கிறது; ஒவ்வொரு தேசத்திலும் அமல் நடத்தப்படும் சட்டதிட்டங்களும் வெவ்வேறாகவே இருக்கின்றன. இந்திய அரசாங்கம் மத சுதந்திரம் அளித்திருக்கிறது. ஆனால், இந்தியர்கள் இம்மத சுதந்திரத்தைச் சரியாக உணர்ந்துகொள்ளாமல் தவறான முறையில் நடந்துகொண்டிருக்கின்றனர். எவரையும் கட்டாயப்படுத்தி நிர்ப்பந்தப்படுத்தப்படாது என்பதும், அவரவருக்கு இஷ்டமான மதத்தைத்தழுவிக்கொள்ளலாமென்பதும்தான் மதசுதந்திரம் என்பதன் கருத்து. ஆனால் இந்தக்காலத்தில் ஒருவர் இன்னொருவரைப் பார்த்து "தம்பி, தொழுகவேண்டும் அப்பா" என்றால் உடனே "தொழுகையாவது கிழுகையாவது, தொழுகையைக் கண்டது யார்? கிழுகையைக் கண்டது யார்?" என்று அந்தப் பொடியன் பதில் கூறிவிடுகிறான். இதுதான் இக்காலத்தில் மத சுதந்திரத்துக்குப் பொருள் கொள்ளப்படுகிறது. இதுபோற்றான் கல்வி என்பதற்குத் தவறான விதத்தில் அர்த்தம் செய்து கொள்கின்றனர். நாம் கூறுகிற இவ்விஷயம் உங்களுக்கு நம்பிக்கை இல்லாவிட்டால், லாகூரில் பிரசுரமாகும் "மிலாப்" என்ற

பத்திரிகையின் சென்ற ஜனவரிமீ 17வ பிரசுரமான இதழின் 16-வது பக்கத்திலிருந்து ஒரு சமாச்சாரத்தை எடுத்து இங்கு எழுதுகிறேன். அதையேனும் படித்து இந்தியாவின் துர்அதிர்ஷ்டத்துக்காக அழுது தவியுங்கள். அவ்விஷயம் வருமாறு:—

"கராச்சியில் இப்பொழுதுதான் அகில இந்திய மாதர் கான்பரன்சு நடைப்பெற்றது. அதில் கர்ப்பத்தடையைப்பற்றி விவாதம் நடைபெற்று தீர்மானமும் நிறைவேறி விட்டது. இக்கான்பரன்ஸைப்பற்றி ஒரு லேடி டாக்டர் அடியிற்கண்டபரபரப்பான செய்தியை எழுதி இருக்கிறாள். அவள் கூறுவதாவது:—

தற்காலத்தைய வாழ்க்கை முறையில் பெண் குழந்தைகளை அறிந்துகொள்வது கஷ்டமாக இருக்கிறது. விவாகத்துக்குமுன்னர் அவர்கள் கர்ப்பவதியாகி விடுவதாலேற்படும் கேவலத்தையும் அவமானத்தையும் பயந்து கர்ப்பத்தை விழுகடித்துவிடுவதைத்தவிரவேறுவழியில்லைஎன்று என்னிடம் அநேகம்பெண்கள் மிகவும் பரிதபிக்கத்தக்கதொனியில் கூறினர்கள். தவிரவும், நூற்றுக்குத் தொண்ணூறு கன்னிப்பெண்கள் கர்ப்பவதியாகிவிடுகிறார்கள்; இன்னும் இவர்களில் கிட்டத்தட்டப் பாதிப்பேர் கர்ப்பத்தைவிழ்த்திவிடுவதற்காகச்செய்யும் முயற்சியில் மரணத்தையடைந்து விடுகிறார்கள் என்று பம்பாயிலுள்ள கண்ணியம் வாய்ந்த ஸ்திரீ என்னிடம் கூறினாள். இதுபோன்ற இரகசியச் செய்திகள் அரசாங்கத்துக்குத் தெரிவதில்லை. இச்செய்திகள் தெரிந்து, அதற்காகத் தண்டனையும் விதிக்க அரசாங்கத்துக்குத் தக்க சாக்ஷியமிருந்தாலும், இது கேவலமானதும் அவமானமான காரியமாகவுமிருப்பதால் இதைப்பற்றிக் கவனம் செலுத்தக் கூடாது என்றிருந்துவிடுகிறது. ஆகவே, இவ்வித நிலைமையில் உயிருக்குச் சேதம் விளைவிக்கக்கூடிய பயங்கரமான இக்காரியத்தை விட்டுத் தவிர்ந்துக்கொள்வதற்காக ஸ்கூல்களில் கர்ப்பத்தை வீழ்த்தும் முறைகளையும், கர்ப்பத்தடைமுறைகளையும் கற்றுக்கொடுக்கவேண்டும்; முஸ்லிம் ஸ்திரிகளில் பர்தாவிலிருக்கும் ஸ்திரீகளும்கூட இதை ஆதரிப்பதுபற்றி எனக்கு பெரும் ஆச்சரியமுண்டாயிற்று. ஆகவே, இதை ஆதரிப்பதற்கு என்ன காரணம் என்பதை சொற்ப அறிவுள்ள எவரும் நன்கு அறிவர்." என்பதே.

மேலேகண்ட இவ்வியாசத்தில் விளக்கிக் கூறவேண்டிய விஷயங்களெதுவுமில்லை. சொற்ப அறிவுள்ளவர் ஒவ்வொருவரும், இன்னும் சுயமதிப்புள்ள சகல முஸ்லிம்களும் இதனை அறிவார்கள். இதுதான் இக்கால பெண் கல்வியின் பலனோமோ? காற்று எப்பக்கம் வீசுகிறதோ அப்பக்கம் செல்லுங்கள்'' என்று இதற்காகத்தான் கல்வி மந்திரி கூறினாரோ?

ஆனல், "உண்மையில் பிரயோஜனகரமானதும், விலைமதிக்க முடியாததுமான சட்டதிட்டங்கள் எப்பக்கம் இருக்கிறதோ அப்பக்கம் செல்லுங்கள்'' என்றே உண்மையும் சுயமதிப்புமுள்ளவர்கள் கூறவேண்டிய வாக்கியமாகும். நமது றஸூலே அக்ரம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் திருநாமத்தைக்கூறும் நம்மவர் இந்த மூலச்சட்ட முறைகளின்படி நடந்திருப்பார்களாயின், இன்று அங்கநாதர் (ஸல்.) அவர்களைப் பின்பற்றியவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் இவ்வுலகில் பெயருக்கு மாத்திரம் முஸ்லிம்களாகக் காணப்பட மாட்டார்கள்.

மேலேகண்ட லேடி டாக்டர் கூறிய வாக்கியங்களில் ஒருபாதியையாவது முஸ்லிம்கள் உண்மை என்று நம்பலாம். ஆகவே, மனித நாகரீகமும், இந்தியாவின் வாழ்க்கை முறையும் இந்தியாவில் எந்த விலைக்கு விற்கப்படுகிறது என்பதை முஸ்லிம்கள் கவனிக்கவேண்டும். இந்தியாவின் எதிர்காலத்திலுண்டாகும் சந்ததியினர் அவர்கள் உண்மையில் மனிதவர்க்கத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பார்களா? அல்லது மிருகங்களாக இருப்பார்களா? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்! ஆனும் ஜாதியாரும் அயலகத்து மக்களும் முஸ்லிம்களை ஒரு சச்சரவுக்குள் வைத்து இருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. முஸ்லிம்களும் இவர்களுடைய இழுவையிலிருந்து தப்பித்துக்கொண்டவர்களாகக்காணேம். ஆகவே,நாம் இந்துஸ்தானி வாழ்க்கைமுறையை நடத்துவதற்குப் பதிலாக இஸ்லாமிய வாழ்க்கை முறையை நடத்தவேண்டும். இதைப்பற்றிய எண்ணம்தான் நமக்கு எப்பொழுது மிருக்கவேண்டும். இல்லையேல், லேடி டாக்டர் கூறியது போல, இனிச் சொற்ப காலத்துக்குள் நடைபெற்றுவிடும் என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாகும். அயலகத்துச் சமூகத்தார் கலப்புப் போதனையையுங்கூட ஆதரிக்கிறவர்களாக இருக்கிறார்கள். ஆனல், இந்திய முஸ்லிம்கள் இவ்விதநிலைமை யேற்படுவதற்கு முன் இதைச் சமாளிப்பதற்குத் தயாராகி விடவேண்டியது அவசியமாகும்.

இஸ்லாத்தின் கண்ணியத்தைக் காப்பதற்கு நமது சமூகத்தார் கல்வியின் மேன்மைகளையும் அதனுலேற்படும் பலன்களைப்ம் கட்டாயம் அடைய முயற்சிக்க வேண்டியதுதான். ஆனுல், நம் சமூகத் தலைவர்கள் பெண் கல்விபோன்ற சிக்கலான பிரசினைகளை மேனுட்டு வாழ்க்கை முறைக்கு அடிமைப்படுத்தி, ஸ்திரீகளின் சுதந்திரம் என்ற வெளிப்பகட்டானவைகளைக் கண்டு இருமாந்து, இஸ்லாத்தின் பர்தா முறைக்கு முற்றிலும் எதிராகவுள்ள முஸ்லிம் விரோதியர்கள் கையில் ஒப்புவித்து விடக்கூடாது.

பெண் கல்வியின் மூலமாகப் பெண் குழந்தைகளின் நிலைமை எவ்வாருகி விட்டது என்பதை லேடி டாக்டரின் வாசகத்திலிருந்து நீங்களறிந்து கொண்டிருப்பீர்கள். பஞ்சாப் சர்வ கலாசாலையின் விசாரணைக் கமிஷன் ரிபோர்ட்டில், மாணவர்களின் ஒழுக்க விஷயங்களைப்பற்றிய குறிப்பையும் கவனித்துக்கொள்ளுங்கள்! லாகூர் காலேஜிலுள்ள மாணவர்கள் வீண் செலவுக்காரர்களாகவும், சிற்றின்பப்பிரியர்களாகவும், ஊதாரியானவர்களாகவும் இருக்கிருர்கள் என்று எழுதி வைத்திருக்கிருர்கள். என்னே! மேனுட்டுக் கல்வியின் போதனை இருந்தவாறு. அவைகளைக் கற்கும் மாணவ மாணவிகளின் நிலைமை இருந்தவாறு. இறைவா! இந்தியாவை இவ்விஷத்தைவிட்டுக் காத்து இங்குள்ளவர்களை நேர்வழியிற் சேர்ப்பாயாக.

—ஆமீன்.

ஷஹீது அன்வர் பாஷாவின் அரியதொண்டுகள்

(ஜெனரல் ஜமால் பாஷாவின் ஞாபகக் குறிப்பு)

முஸ்லிம்கள் எவ்வாறிருப்பர்? முஸ்லிம்களின் தன்மை என்ன? என்ற இந்த வினைக்களுக்குச் சரியான விடை இன்னதெனத் தெரிந்துகொள்ள வேண்டுமாயின், நீங்கள் துருக்கியின் நெப்போலியனுக இருந்த காஜீ அன்வர் பாஷா ஷஹீது அவர்களின் ஜீவிய சரித்திரத்தைப் படித்துப் பார்த்தால் இவைகளின் விபரம் நன்கு தெரியவரும். காஜீ அன்வர் பாஷாவின் நடவடிக்கைகளை, அவருடன் கூட இருந்த பீல்டுமார்ஷல்காஜீ ஜமால் பாஷாஷதீது அவர்கள் தம்முடைய குறிப்புகளில் எழுதி வைத்திருந்தாராதலின் அதிலிருந்து இவைகள் எடுத்தெழுதப்படுகின்றன.

ஜேர்மன் கைஸருடன் பேட்டி

அன்வர்பாஷா, ஜெர்மனியிலுள்ள துருக்கி ஸ்தானிகரின் காரியலாயத்தில் ராணுவ உத்தியோகஸ்தராக நியமிக்கப்பட்டு முதல் முதலாக பர்லின் நகருக்கு விஜயம் செய்தார். இவரை ஜெர்மன்கைஸருடன் அறிமுகம்செய்துவைக்கப்பட்டது. ஜெர்மன் கைஸர் ஒரு ஆளைப் பார்த்தவுடன் அவரவரின் தன்மைகளை முகக்குறியால் அறிந்துகொள்ளும் ஆற்றல் படைத்தவராதலின், அன்வர்பாஷாவினிடத்தில் அநேக நற்குணங்கள் இருப்பதைத்தான் காண்பதாகக்கூறி அவருக்குக் கண்ணியம் கொடுத்தார். அதன் பின்னர், அரண்மனையில் நடக்கும் விருந்து முதலிய வைபவங்களுக்கெல்லாம் அன்வர்பாஷா தவருமல் அழைக்கப்படுவது வழக்கம்.

ஒருமுறை ஜெர்மன் கைஸர் ஒரு பெரும் விருந்தளித்தார். இவ்விருந்துக்கு அந்நிய அரசாங்கங்களின் ஸ்தானிகர்கள், ஜெர்மன் இளவரசர்கள், அரசாங்க நிர்வாகிகள் முதலானோர் அழைக்கப்பட்டிருந்தனர். காஜீ அன்வர் பாஷாவுக்கும் இவ்விருந்தழைப்புக் கிடைத்தது. இப்படிப்பட்ட விருந்துகளில் ஜெர்மன் சக்கிரவர்த்தி அளிக்கும் மதுவை யாவரும் அருந்தவேண்டும் என்பது அனுஷ்டான சட்டமாக இருந்தது. அதுபொழுது வழக்கப்படி கோப்பைகளில் மது நிறப்பப்பட்டது. ஏனைய பதார்த்தங்களை அருந்தியபின் மதுவை யாவரும் நின்றுகொண்டு அருந்த ஆரம்பித்தனர். அன்வர்பாஷாவும் அவ்விருந்துக்குச் சென்றிருந்தாராதலின், மதுவை அருந்துவதற்காக யாவரு எழுந்துநின்றபோது இவரும் எழுந்து நின்று கொண்டார். ஆயினும், மது வைக்கப்பட்டுருந்த கோப்பையைக்கூட கையினுல் தீண்டினுரில்லை. சக்கிரவர்த்தியின் மரியாதைக்காக அவர் நின்றுகொண்டாராயினும் கடைசிவரை மதுபானம் அருந்தவே இல்லை. இவர் இவ்

விதம் செய்தது, ஜெர்மன் சக்கிரவர்த்தியைப் பகிரங்கமாக அவமதித்ததாக அங்குள்ளவர்கள் கருதினுர்கள். அக்காலத்தில் காஜீஅன்வர் பாஷா சாமான்ய உத்தியோகஸ்தராகவே இருந்தாராதலால், பெர்லினுள்ள துருக்கி ஸ்தானிகர் அன்வர்பாஷாவின் இச் செய்கைக்காக அவரைக் கண்டித்ததுடன் "நீர் இன்று பெருந் தவறிழைத்துவிட்டீர்; நீர் கைஸரைப் பகிரங்கமாக அவமதித்துவிட்டீர்; கைஸர் உம்மீது அதிருப்தியாக இருக்கிறுர்" என்றுகூறினுர்.

அதற்கு அன்வர் பாஷா அவர்கள்:—ஆம்! நான் கைசரை அதிருப்தி செய்துவிட்டேன்; ஆனுல், இறைவனைத் திருப்திசெய்தேன்; அவ்விறைவன் கைஸருக்கும் அரசனுயிருக்கின்றனன்" என்று பதில் கூறினர்.

பின்னர், சிலநாள் கழிந்தது. கைஸரை அன்வர் பேட்டிகண்டு பேச சந்தர்ப்பமேற்பட்டது. அப்பொழுது கைஸர் கொஞ்சமும் சங்கோஷமில்லாமல் அன்வர் பாஷா அவர்களது தோளின்மீதுகையை வைத்துக்கொண்டு "அன்பரே! உமக்கு நான் வாழ்த்துக் கூறுகிறேன்; நீர் உமது மதத்தின் கண்ணியத்தை நிலைநிறுத்திவிட்டீர்; நீர் இனி ஒரு காலத்தில் உமது தேசத்தில் யாவரினும் பெரிய மனிதராக இருப்பீர் என்று நான் உறுதியாக நம்புகிறேன்" என்று கூறினுர்.

(குறிப்பு:—சோதரீர்! இக்காலத்திலுள்ள நம்மவரிற் சிலர், ஐரோப்பியர்களுடனே அல்லது இதர மதத்தாருடனே கலந்துறவாடும்போது, நம்முடைய சத்திய இஸ்லாம் மதக் கடமைகளை நாம் பக்தியுடன் நிறைவேற்றினுல் அவர்கள் நம்மைக் கேவலமாக மதிப்பார்கள்; நாகரீகத்தை உணராதவராக எண்ணுவார்கள்; நமது மார்க்கப்படி நாம் நடப்பதால் பிறமதத்தாராகிய அவர்கள் மனவருத்தமடைவர் என்று, நம்முடைய மதத்தை விட்டுக் கொடுக்கத் துணிந்து விடுகின்றனர். ஆனுல், நாம் இதுகாலை அனுபவித்துவரும் கண்ணியமும் மரியாதையும் நம்முடைய சொந்த மரியாதையன்று. ஏனெனில், நம்மைப் பார்க்கினும் இவ்வுலகப் படிப்பில் அதிக அனுபவமும், அறிவும், ஆற்றலும் உள்ளவர்கள் பிறமதத்தில் அபரிமிதமாக இருக்கிறுர்கள். ஆதலின், நம்முடைய கூட்டுறவு இவ்விஷயத்தில் அவர்களுக்குத் தேவையில்லை. ஆயினும், நாம் எந்த நபியவர்களுக்குத் தாஸர்களாக இருக்கிறுேமோ அந்த நபியவர்கள்பால் அவர்களுக்கிருக்கும் கண்ணியத்தை மதித்தே அவர்கள் நமக்குக் கண்ணியம் கொடுக்கிறுர்கள். ஆதலின், நமது கண்ணியத்தை நாம் நிலைநிறுத்த வேண்டுமாயின், எந்தச் சமயத்தும், எந்த இடத்திலும் நாம் நமது மதத்தின் கண்ணியத்தை நிலைநிறுத்தி மதக்கடமைகளை இனிது நிறைவேற்றுவதில்தான் நமது கண்ணியம் இருக்கிறது என்பதற்கு மேற்கூறப்பட்ட சம்பவம் தக்க உதாரணமாகும். —ப. ர.)

திருப்போலி யுத்தம்

திருப்போலியின்மீது இத்தாலி படையெடுத்து யுத்தம் செய்த காலத்தில், மஹ்மூது ஷௌக்கத் பாஷா துருக்கியின் முதன் மந்திரியாக இருந்தார். துருக்கியின் நிலைமை சரியாகுவதற்கு முன்னமே திருப்போலியின்மீது இத்தாலியர் படையெடுத்து விட்டதால், முதல் மந்திரி மனவருத்தமுற்று அதிகக் கவலைகொண்டிருந்தார். அதுபொழுது துருக்கிச் சைனியங்களைத்திருப்போலிக்கு அனுப்பி, இத்தாலியர்களை எதிர்த்து யுத்தம்செய்து திருப்போலியைக்காப்பது அவர்களது சக்திக்கு மீறியதாக இருந்தது. ஆயினும், தற்காப்புக்காக எவ்வித நடவடிக்கையையும் எடுத்துக் கொள்ளாமல், அத்தேசத்தை இத்தாலியரின் வசம் விட்டு விடுவதும் முடியாத காரியமாக இருந்தது. ஏனெனில், ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொரு அரசாங்கமும் துருக்கிக்குச் சொந்தமான தேசங்களின்மீது யுத்தம் தொடுக்க ஆரம்பித்து விடும். ஆதலால், எவ்விதத்திலேனும் தற்காப்பு யுத்தம் செய்வது அவசியமாக இருந்தது. ஆனுல், அதைக் கிரியாம்சையில் செய்வதற்கு எவ்விதச் சாதனமும் கிடைக்கவில்லை.

இவ்வித நிலைமையில் காஜீ அன்வர் பாஷா "நான் திருப்போலி செல்கிறேன்; அங்கு பகைவர்களை எதிர்த்து யுத்தம் செய்வேன்" என்ற செய்தியை முதல் மந்திரிக்கு அறிவித்தார். துருக்கி அரசாங்கத்துக்கு அன்வர் பாஷாவின் ராணுவத் திறமையிலும் யுத்த நிபுணத்துவத்திலும் பூரணமான நம்பிக்கை இருந்தது. ஆதலால், திருப்போலிக்கு அன்வர்பாஷாவை அரசப் பிரதிநிதியாகவும், கமாண்டர் இன்சீபாகவும் துருக்கி அரசாங்கம் நியமித்திருப்பதாக அறிவித்தது. உடனே காஜீ அன்வர் பாஷா மாறுவேடம் பூண்டு திருப்போலி

போய்ச்சேர்ந்தார். அதுபோழ்து திருப்போலியில் துருக்கிப் போர்வீரர்கள் 3000 பேர்களே இருந்தனர். இவர்களை வைத்துக்கொண்டு இத்தாலியரின் தாக்குதலைத் தடைசெய்து விடுவது முடியாத காரியமாக இருந்ததால், அறபியர்கள் மிகப் பீதியடைந்திருந்தனர். ஆகவே, இத்தாலியர்களை எதிர்க்க அவர்களுக்குக் கொஞ்சமும் தைரியமிருக்கவில்லை. எனவே, அன்வர் பாஷா அறபியர்களை ஒன்றுகூட்டி ஜிஹாது செய்வதைப்பற்றிய பிரசங்கம் புரிந்தார்; யாவரையும் சேனையில் வந்து சேருமாறு அழைத்தார். அதற்கு, அங்கிருந்த அறபித் தலைவர்களில் ஒருவர் :—“நாங்கள் பாலைவனத்தில் வசிக்கும் பதவிக்கூட்டத்தார்; எங்களிடம் ஆயுதமுமில்லை; இதர யுத்தக் கருவிகளுமில்லை; இவைகளைச் சித்தஞ்செய்யப் பணமுமில்லை; இவ்வளவு பெரிய அரசாங்கத்தை இந்த நிலைமையில் நாங்கள் எங்ஙனம் எதிர்த்து யுத்தம் செய்ய முடியும்” என்று கூறினர்.

அறபித் தலைவரின் இவ்வார்த்தைகளைக் கேட்டதும் அன்வர் பாஷாவுக்கு ஆத்திரம் வந்துவிட்டது. உடனே அவருக்கு மறுமொழியாக:—

“முஸ்லிம்காள்! ஜிஹாது செய்வது பர்லாகும்; இன்னும் அது வணக்கமுமாகும்; இது உங்களது தேசமாகும்; இத்தேசத்தைக் காப்பது துருக்கியர்களாகிய எங்களைப் பார்க்கினும் உங்கள் மீதே அதிகக் கடமையாகும்; நாங்கள் சுலபமாக இத்தாலியருடன் சமாதானஞ் செய்துகொள்ளமுடியும்; உங்களுடைய இந்தத் தேசத்தை நாங்கள் சுலபமாக இத்தாலியரிடம் ஒப்புவித்து விட்டு, நாங்கள் யுத்தம் செய்யும்சிரமத்தைவிட்டுத்தப்பித்துக்கொள்ள முடியும்; ஆனல் அவர்கள் உங்களைத் தங்களது அடிமைகளாக ஆக்கிக்கொள்வார்கள்; கணக்கற்ற துன்பங்களைச் செய்வர்; இஸ்லாமிய சகோதரத்துவ வாஞ்சையால் உங்களுக்கு உதவி செய்யவேண்டுமென்ற நோக்கங்கொண்டு இப்பொழுது உங்களிடம் வந்திருக்கிறோம்; உங்களுடன் தோளோடு தோள் சேர்ந்துநின்று ஜிஹாது பீ ஸபீலில்லாஹ்வுக்காக வந்திருக்கிறோம்; ஆயுதமில்லை என்பதை நீங்கள் லக்ஷியம் செய்யக்கூடாது; நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களிடம் ஆயுதங்கள் போதியன இருக்கவில்லை; சொத்தும் செல்வமுமிருக்கவில்லை; ஆள்களின் எண்ணிக்கையும் குறைவாகவே இருந்தது; அவ்வாறிருந்தும், ஈமானின் பலத்தினல் முஸ்லிம்கள் இஸ்லாத்தின் பகைவர்களை ஜெயித்தார்கள். “எத்தனையோ குறைந்த கூட்டத்தார் பெரிய கூட்டத்தாரை அல்லாஹ்வின் கட்டளைப்படி ஜெயித்திருக்கின்றனர்” என்று இறைவன் திருமறையில் கூறியிருப்பதைக் கவனியுங்கள்! நீங்கள் உண்மை முஸ்லிம்களாகவும் விசுவாசிகளாகவுமிருப்பின், றப்புல் ஆலமீனகிய அல்லாஹு சுப்ஹானஹு வதஆலா உங்களுக்கு ஆதரவாக இருக்கிறன் என்பதையும் வெற்றி உங்களுக்குத்தான் என்பதையும் உறுதியாக நம்புங்கள்” என்று கூறினர்.

மரணத்தைத் திரணமாக மதித்தல்

அன்வர் பாஷா அவர்கள் தமது பிரசங்கத்தை முடிப்பதற்குள் துப்பாக்கி வேட்டுச் சப்தம் காதைப் பிளந்தது. சப்தம் சமீபத்தில் இருந்துவருவதாகத் தெரியவே, பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்த அறபிகள் பீதிபடைந்தனர்; அழுதுகொண்டும் பிரலாபித்துக்கொண்டும் ஒடத்தலைப்பட்டனர்.

பகைவர்கள் ஒரு சைனியத்தைக் கரையில் இறக்கிவிட்டிருக்கிறர்கள் என்பது எங்களுக்கு உடனே தெரியவந்தது. கடற்கரை நாங்கள் கூடியிருந்த இடத்துக்கு இரண்டுமைல் தூரத்துக்கப்பாலிருந்தது. நாங்கள் கூடியிருந்த இடம் சன்னூஸியர்களின் தலைமை ஸ்தலமாகும். ஆதலால், இந்தத் தலைமை ஸ்தலத்தை கைப்பற்றிவிட வேண்டுமென இத்தாலியர் விரும்பினர். உடனே, அன்வர் பாஷா யுத்தத்துக்குச் செல்லத் துரிதமானர். அவருடன் 13 துருக்கி ஆபீஸர்களும் 70 சிப்பாய்களும், 50 திருப்போலி அறபி பத்துக்களுமிருந்தனர். இச்சிறு கூட்டம் கடற்கரை யோரமாகச் சென்றவுடன் விரோதிகள் கடலிலிருந்தும் கரையிலிருந்தும் குண்டுபோட்டனர்.

அன்வருடைய வீரப்பிரதாபத்தைப்பற்றிக் கூற முடியுமா? அவர் பிஸ்தோலை எடுத்தார். புலியைப் போல் பாய்ந்து பகைவர்களின் கூட்டத்தைப் பிளந்துகொண்டு சென்றர். அவர் தான் யாவருக்கும் முதன்மையில் சென்றர். நாங்கள் யாவரும் அவருக்குப் பின்னல்தான் சென்றேம். “அல்லாஹு அக்பர்” “அல்லாஹு அக்பர்” என்ற தக்பீரை அவர் முழக்கிக் கொண்டே சென்றர். கண்மூடி முழிக்கு முன் நாங்களும் இத்தாலியர்களும் கைகலந்து

விட்டோம். குண்டுகள் போடுவது நின்று விட்டன. இத்தாலிய வீரர்கள் 3 ஆயிரம் பேர்களுக்குக் குறைவிருக்காது. ஆனல், அல்லாஹு தஆலாவின் அனுக்கிரகத்தால் நாங்கள் அவர்களைத் தோற்கடித்துவிட்டோம். சாயங்கால நேரம் வந்தவுடன் அவர்கள் தங்கள் கப்பல்களிலேறிக்கொண்டு ஓடிவிட்டனர். பின்னர் கணக்குப் பார்த்தபோது, அவர்களில் 1500 பேர் வெட்டுண்டு மாண்டுகிடந்தனர், நாங்கள் வாகைமாலைசூடி சன்னூஸிக் காரியாலயம் வந்துசேர்ந்தோம். எங்களுக்கு 2 ஆயிரம் துப்பாக்கிகளும், ஒரு ஆயிரம் தோட்டாப் பெட்டிகளும், 6 மெஷின் பீரங்கிகளும், 18 ரிவால்வர்களும் கிடைத்தன.

முஜாஹிதுகளுக்கு நிம்மதி இல்லை

எங்களுடைய இவ்வெற்றியை தேசமெங்கும் அளவுக்குமீறி மிகைப்படுத்திப் புகழ்ந்து கூறப்பட்டது. பின்னர் அன்வர் பாஷா உள்நாட்டில் சுற்றுப் பிரயாணம்செய்ய ஆரம்பித்துவிட்டார். ஒவ்வொரு இடத்திலுமுள்ள அறபிகள் "பெரிய பாதுஷா"வை வரவேற்பதுபோல் அவரை வரவேற்றனர். அவர் எல்லாரிடத்திலும் அன்பாகவும் பிரியமாகவும் பேசி ஜிஹாது செய்வதைப் பற்றிப் பிரசங்கம் புரிந்துவந்தார். மூன்று நாட்களுக்குப் பிறகு நாங்கள் "மாரா" என்ற இடத்தை அடைந்தோம். அங்கு 500 துருக்கி சிப்பாய்கள்சகலவிதமான யுத்தக்கருவிகளுடன் மிகச் சுகமாக இருந்து காலங்கடத்திக்கொண்டிருந்தனர். அச்சிப்பாய்களுக்கு ஷாம் தேசத்துக்காரர் ஒருவர் காப்டனுக இருந்தார். அன்வர் பாஷா அவர்கள், அவரை அழைத்து "நீங்கள் இங்கு வேலையில்லாமல் ஏன் இருக்கிறீர்கள்?" என்று விசாரித்தார். அதற்கவர், "பகைவர்கள் அதிகமாக இருக்கிறுர்கள்; அவர்களை நாங்கள் எதிர்த்து யுத்தம் செய்யமுடியாது" என்று கூறினர். அன்வர் பாஷா அவர்களுக்கு இந்தப்பதில் கிடைத்தவுடன் பெருங்கோபம் வந்துவிட்டது. உடனே, அவரை உத்தியோகத்திலிருந்து நீக்கிவிட்டு, இந்தச் சைனியங்களுக்குக் கமாண்டராக இருக்கும்படி எனக்கு (காஜி ஜமால் பாஷா)க் கட்டளையிட்டார்கள். அக்காலத்தில் என்னுடைய அந்தஸ்து மிகவும் தாழ்ந்ததாக இருந்தது.

முதலில் யுத்தம், அப்புறம் உணவு

நாங்கள் மாராவைவிட்டுப் புறப்படுவதற்குள் அந்தப் பழைய அரபித்தலைவர் வந்தார். அவர் வந்ததும் அன்வர் பாஷா அவர்களின் கால்களில் விழுந்து "அல்லாஹுதஆலாவின் பாதையில் நான் உயிர்விட சித்தமாக இருக்கிறேன்" என்று கூறினர். "நீங்கள் வரத்தா என்ற இடத்துக்குச் சென்று பட்டாளத்தில் சேர்ந்து கொள்ளுங்கள்; கூடிய சீக்கிரம் அங்கு யுத்தம் நடைபெறும்" என்று அன்வர்கூறி, அவருக்கு அநேக யுத்தத் தளவாடங்களும் சிப்பாய்களும் உதவிக்காகக் கொடுத்தனுப்பினர். அவரது பெயர்ஷெய்கு அப்துல்லாஹ். பின்னர் நாங்கள் சாப்பாட்டிற்காக உட்கார்ந்தோம். சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போதே துப்பாக்கிச் சத்தம் கேட்டது. இந்தச் சத்தம் வர்த்தாவின் குன்றிலிருந்தே வந்தது. இத்தாலியர்கள் ஷெய்கு அப்துல்லாவை நன்குபுடைத்து விடுவரோ என்று அன்வர் பயந்தார். இதனல் ஷெய்கு அப்துல்லா தோல்வியடைந்து அறபிகள் உற்சாகங் குன்றிவிடுவரோ என ஐயங்கொண்டார். ஆகவே, அன்வர் பாஷா என்னை வயிறு நிரம்ப சாப்பிட விடவில்லை. "உடனேபடையை அழைத்துக்கொண்டு புறப்படு" என்றுகட்டளையிட்டார். வர்த்தாஓடையிலிருந்து நாங்கள் தங்கி இருந்த இடம் இரண்டுமணி நேரத்துத்தூரம். நான் பட்டாளங்களை அழைத்துக்கொண்டோடினேன். அங்கு சென்று பார்க்கும்போது இத்தாலியரின் பெரும்படை ஷெய்கு அப்துல்லாவின் புதுப்படையின்மீதும், அரபிக்குடிகள் மீதும் பாய்ந்து பலமாகத் தாக்கி யுத்தம்செய்து கொண்டிருந்தது. பெண்களும் பிள்ளைகளும் கூச்சலிட்டுப் பிரலாபித்துக்கொண்டிருந்தனர். அறபியர்கள் பின் வாங்கிக்கொண்டிருந்தனர். ஆனல், நாங்கள் "தக்பீர்" முழக்கிக் கொண்டே சென்றதால், எங்களது சப்தத்தைக் கேட்டும், எங்களது பிறைக்கொடியைப் பார்த்தும் கான்ஸ்தாந்திநோபிளிலிருந்து பெரும் படை தங்கள் உதவிக்காக வந்துவிட்டன என்று அறபிகள் நினைத்தனர். அதனல் அவர்களுக்கு உற்சாகமேலிட்டது. உடனே சிங்கங்களைப்போல் பகைவர்மீது பாய்ந்துவெட்டினர். நாங்களும் அவர்களுடன் சேர்ந்து கொண்டோம். பயங்கரமான யுத்தம் நிகழ்ந்தது. சனியன்களைக்கொண்டு யுத்தம் புரியும்படி என்னுடைய சைனியங்களுக்கு கட்டளையிட்டேன். நெருங்கிய கோரமான யுத்தம் நடந்தது. எங்களது விரோதிகள் கோழையர்களாகி விட்டதால் போர்க்களத்தை விட்டுப் புறங்காட்டினர். அந்த யுத்தத்தில் 3 ஆயி

ரம் துப்பாக்கிகளும், 2 மெஷின் பீரங்கிகளும், இதர யுத்தக் கருவிகளும் எங்களுக்குக் கிடைத்தன. அதே இரவில் அன்வர் பாஷாவும் வரத்தா வந்து சேர்ந்து வெற்றிச் செய்தியை அறிந்து இறைவனுக்கு நன்றி செலுத்தினர்.

குறிப்பு:—இந்த யுத்தச் செய்திகள் 25 வருஷங்களுக்கு முன் நடைபெற்றன வென்றாலும், அவர்கள் செய்த யுத்தத்தில் அவர்களுக்கு வெற்றியளித்தது, அவர்களுடைய ஈமானின் உறுதிதான் என்பது நன்கு வெளியாகிறது. இக்காலத்திலும் முஸ்லிம்கள் இறைவனுக்கடிபணிந்து நேர்மையான ஈமானுடன் நடந்து கொள்ள முற்படுவரேல், நமக்கு இந்நாட்டிலும் எவ்விதக் கஷ்டமும் உண்டாக இடமில்லை என்பதை இச்சம்பவங்களிலிருந்து நாம் தெரிந்து கொள்கிறோம். இறைவன் நம்மவருக்கு நேரானவழியைக் காட்டி ஈமானின் உறுதியை அளிப்பானாக—ஆமீன்.

கிழக்காப்பிரிக்காவில் காதியானிகள் தோல்வி

மௌலானா லால்ஹுஸைன் சாகிப் அக்தர் அவர்களின் விஜயத்தால் காதியானி மிர்ஜாயீமாளிகைக்கு ஆட்டங் கண்டு கொண்டே இருக்கிறது. என்றாலும் சமீப காலத்தில் அவர் காதியானீ மிர்ஜாயிகளுடன் மததர்க்கம் புரிந்ததானது காதியானியத்துக்கு இடிவிழுந்தது போலாகி விட்டது. இவ்விபரத்தை ஸவிஸ்தாரமாக அறிந்து கொள்ள விரும்புவோர், நைரோபியிலுள்ள முஸ்லிம், முஸ்லிமல்லாதார் ஆகியவர்களிடம் கேட்டு நன்கு தெரிந்து கொள்ளலாம். இவர்கள், மிர்ஜாயிய்யத் காதியானியத் என்பவைகள் தன்னுடைய மரணப் படுக்கையில் கிடந்துகொண்டு ஆவிதுறப்பதை நேரில் பார்த்திருக்கிறார்கள்.

இத்தர்க்க சபையில் மூன்று விஷயங்களைப் பற்றிய விவாதம் நடைபெற்றது. 1. ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள். 2. நபித்துவம் முற்றுப்பெறவில்லை. 3. மிர்ஜாகுலாம் அஹ்மது காதியானியின் தாவாக்கள் உண்மையானவைகளா? என்ற இம்மூன்று விஷயங்களைப் பற்றித்தான் விவாதம் நடைபெற்றது. இவ்விவாத சம்பந்தமான சகலநடவடிக்கை விபரங்களும் அச்சிடப்பட்டு அது பெரிய புத்தகமாக இருக்கிறது. ஆயினும், வெளியிடங்களிலுள்ள கனவான்கள் இவ்விவாதத்தைப்பற்றி அறிந்துகொள்ள மிகவும் ஆவலுள்ளவர்களாக இருப்பதால், அவர்களுக்குத் தற்கால சாந்தியாக அப்புத்தகத்திலுள்ள சாரத்தை மட்டிலும் சுருக்கமாக ஈண்டு பிரசுரிக்கப்படுகிறது. இன்ஷாஅல்லாஹ் நடவடிக்கையின் முழுவிபரமும் புத்தக ரூபமாகக் கூடிய சீக்கிரத்தில் நம்மைக்குக்கிடைக்கும்.

இத்தர்க்கவிவாதம் செய்வதற்காக இருககூஷியாரும் பல நாட்களாக ஒருவருக்கொருவர் கடிதப்போக்கு வரத்து நடத்தினர். இக்கடிதப்போக்கு வரத்தின் விபரமும் ஷை புத்தகத்தில் சேர்த்துப் பிரசுரிக்கவேண்டும் என்ற அபிப்பிராயமிருந்து வருகிறது. ஏனெனில், தர்க்கவாதம் செய்ததை "மலக்கல்மௌத்து"க்குச் சமமாகக் காதியானிகள் கருதுகிறார்கள் என்பதும், எவ்விதத்திலேனும் புகல் கூறிக்கொண்டு தர்க்கவாதஞ்செய்யாமல் தப்பிக்கொள்வதையே அவர்கள் விரும்புகிறார்கள் என்பதும், பொதுஜனங்களுக்குத் தெரிந்துவிட வேண்டுமென்பதுதான் இக்கடிதங்களைப் பிரசுரிப்பதன் நோக்கமாகும்.

இவ்விவாதம்செய்வதற்கு அதிர்ஷ்டவசமாக ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. ஒருநாள் மௌலானா லால்ஹுஸைன் சாகிப் அக்தர் "மிர்ஜாயீ இயக்கக்கண்டனம்" என்ற பொருள் பற்றி ஒரு பிரசங்கம் செய்தார். அந்தப்பிரசங்கத்துக்குச் சில காதியானிகளும் வந்திருந்தனராதலின் இவர்கள் அந்தச் சபையிலேயே சில ஆக்ஷேபனைகளைக் கிளப்பினர். மௌலானா அவர்கள், "இவ்வாக்ஷேபனைகளுக்குப் பதில் சொல்லிவிட்டால் என்ன வெகுமதி தருகிறீர்கள், இதற்குப் பதில் கூறமுடியாவிட்டால் என்னிடமிருந்து என்ன வெகுமதி வாங்க விரும்புகிறீர்கள்; இந்தப் பதிலைச் சரியா தப்பா என்று முடிவு செய்வதற்கு என்ன ஏற்பாடு செய்கிறீர்கள்?" என்பன வாகிய கேள்விகளைக் கேட்டு அங்கு வந்து ஆக்ஷேபனை செய்த காதியானிகளை மடக்கிக் கொண்டார். அவர்கள் இதில் புகல் கூறித் தப்பித்துப்போக முடி

யாமல் அதற்கான ஷாத்துகளையும் நிபந்தனைகளையும் கூறி, மதத்தர்க்கம் செய்வதற்குச் சம்மதிக்க வேண்டியதாயிற்று. முஸ்லிம் அல்லாத மூன்று கனவான்கள் விவாதம் செய்யவேண்டிய முறைகளையும் விதிகளையும் நிர்ணயிக்க வேண்டும்; எந்தக் கக்ஷியார் முன்சிபுகளின் தீர்மானப்படி விவாதம் செய்யாமல் பின்வாங்குகிறார்களோ அவர்கள் தோல்வியடைந்தவர்களாகக் கருதப்படும் என்று முடிவுசெய்யப்பட்டது. தர்க்கவாத முறைக்காக ஏற்படுத்திய ஷரத்துகளும் விதிகளும் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டு விளம்பரம் செய்யப்பட்டன. சென்ற ஜனவரிமீ 19, 20 தேதிகளில், முஸ்லிம் ஸ்போர்ட் கிரௌண்டில் இவ்விவாத சபை நடைபெற்றது. போலீஸ் உத்தியோகஸ்தர்களும் போதியளவு தருவிக்கப்பட்டிருந்தனர். விவாத சபைக்கொட்டகை முதலியவைகளைத் தயார் செய்யும்வேலை "அஞ்சுமனே ஹிமாயத்துல் இஸ்லாம்" சங்கத்தாரிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. நீதிபதிகளில் ஆரியசமாஜ மந்தரத்தைச் சேர்ந்த பண்டிட் தௌலத்ராம் சர்மாவும், பண்டித ஆரியமணி ஜி. எம். ஏ. ஆகிய இருவரும் டைம்கீப்பராக நியமிக்கப்பட்டனர். இவ்விருவர்களும் மிகவும் சாந்தமாகவும் அன்பாகவும் நடந்துகொண்டதுடன் குறித்த காலத்தில் விஷயத்தை முடிவுசெய்வதற்காக இருகக்ஷியாருக்கும் வேண்டிய உதவியும் புரிந்தனர். போலீசார் சமாதானத்தை ஏற்படுத்தும் விஷயமாகப் பாராட்டத்தக்க உதவி புரிந்தனர்.

முதல் விவாதம்

முஸ்லிம் தலைவர் :—ஜனாப் காரீ நஸீர் அஹ்மது சாகிப்.

முஸ்லிம் கக்ஷி தர்க்கவாதி :—மௌலானா லால்ஹுஸைன் சாகிப் அக்தர்—(இஸ்லாம் மதப்பிரசாரகர்).

காதியானித் தலைவர்:—ஷெய்கு குலாம் பரீத்.

காதியானித் தர்க்கவாதி :—ஷெய்கு முபாரக் அஹ்மது (காதியானி பிரசாரகர்.)

(1) ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்களுடைய பூதவுடலுடன் வானத்துக்குச் சென்றார்கள்; இப்பொழுதும் அங்கு ஜீவித்திருக்கிறார்கள்; அவர்கள் திரும்ப இவ்வுலகுக்கு வருவது முக்காலும்சத்தியம் என்பது மௌலானா லால்ஹுஸைன் சாகிப் அக்தர் அவர்களின் தாவா. இந்த தாவாவுக்கு மிர்ஜா குலாம் அஹ்மது காதியானியின் சொற்களிலிருந்து 10 மற்கோள்களும், திருகுர்ஆனிலிருந்து 10 மேற்கோள்களும், ஸஹீஹான ஹதீதுகளிலிருந்து 6 மேற்கோள்களும் 20 நிமிஷத்துக்குள் எடுத்துக் காட்டப்பட்டது.

மிர்ஜாயீ காதியானி மதப்பிரசாரகர் இவைகளுக்குக் கடைசிவரை பதில் கூறமுடியவில்லை. அவர் தமது டைரியையும், தமது வீட்டிலிருந்து குறித்தெழுதிக்கொண்டு வந்திருந்த சில குறிப்புகளையும் தவிர வேறு தக்க மறுப்புகள் கூறவுமில்லை; முஸ்லிம் பிரசாரகர் காட்டிய ஆதாரங்களை உடைக்கவுமில்லை. ஆனால் மிர்ஜாகுலாம் அஹ்மது காதியானி கூறியதாக எடுத்துக்காட்டிய 10 ஆதாரங்களையும், மிர்ஜா காதியானி தமக்கு இல்ஹாம் மூலமாக இறைவன் அறிவித்ததாக எழுதிவைத்திருக்கிறார்என்பதையும் காட்டவேண்டுமென்றும், அவ்வாறு காண்பித்துவிட்டால் 20 ஷிலிங் இனாமாகக் கொடுக்கப்படும் என்றும் கூறி டைம்கீப்பர்களிடம் 20 ஷில்லிங்குகளை காதியானிப் பிரசாரகர் கொடுத்தார்.

அதற்கு முஸ்லிம் பிரசாரகர், ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் உயிருடனிருக்கிறார்கள்; அவர்கள் மறுமுறை வானத்திலிருந்து இறங்கி வருவார்கள் என்று, தமக்கு இல்ஹாம் வந்திருப்பதாக மிர்ஜா குலாம் அஹ்மது எழுதி இருக்கிறார் என்பதை நான் உமது விருப்பப்படி ருஜூப்பிக்கத் தயாராக இருக்கிறேன்; என்னுடைய ஆதாரங்களை நீதிபதிகள் கேட்டுத் திருப்தியடைந்து விட்டால் அந்த 20 ஷில்லிங்குகளையும் என்னிடம் கொடுத்துவிடும்படி நீர் அவர்களுக்குக் கூறிவிடவேண்டும். அவ்வாறு கூறிவிட்டால் இப்பொழுதே ருஜூப்பிக்கத் தயார் என்று கூறினார். இவ்வாறு பலமுறை கூறியும் மிர்ஜாயீ மதப்பிரசாரகர் அதைரியமடைந்து, தலைவர்களிடம் அவ்வாறு செய்யும்படி கூறாமல் மௌனம் சாதித்துவிட்டார். இறுதியாக நீதிபதிகள் காதியானிப் பிரசாரகரிடம் தக்க பதில் இல்லை, நீங்கள் அவருடைய ஆதாரங்களுக்கு பதில் கூறுங்கள் என்று கூறினர். பின்னர், முஸ்லிம் பிரசாரகரான மௌலானா லால் ஹுஸைன் சாகிப் அக்தர் பிரசங்கம் செய்கையில், ஜனாப் ஸெய்யிது அப்துல் லாஷாஹ் சாகிப் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் மரித்து இப்பூமியிலடக்கம் செய்யப்பட்

டார்கள் என்று திருகுர்ஆனிலிருந்தாவது அல்லது ஸஹீஹான ஹதீதிலிருந்தாவது அல்லது ஸஹாபிகள், முஜ்தஹிதுக்களான இமாம்களின் சொற்களிலிருந்தாவது ருஜுப்படுத்துவீர்களாயின் 100 ஷில்லிங் இனும் தருவதாகக் கூறி, அதே சபையில் 100 ஷில்லிங்குகளை முஸ்லிம் அல்லாத நீதிபதிகளிடம் கொடுத்து, உங்களுக்கு காதியானிகள், இவ்விஷயத்தில் திருப்தியளிக்கும்படியான பதில் கூறிவிடுவார்களானால், நீங்கள் அவைகளை அவர்களிடம் கொடுத்துவிடலாம் என்று கூறி, காதியானி பிரசாரகரிடம் சாலனஞ் செய்தார். இதற்கு அப்பிரசாரகர் தைரியங்கொண்டு முன்வரவில்லை. இத்துடன் ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களைப்பற்றிய விவாதம் முடிந்தது.

இரண்டாவது விவாதம்

காதியானிக் கக்ஷித் தலைவர் :—அஹ்மது ஹுஸைன்.

காதியானித் தர்க்கவாதி :—ஷெய்கு முபாரக் அஹ்மது. (காதியானி பிரசாரகர்.)

முஸ்லிம் தர்க்கவாதி :—மௌலானா லால் ஹுஸைன் அக்தர் (முஸ்லிம் பிரசாரகர்.)

நபித்துவம் எப்பொழுதும் முற்றுப்பெறவே இல்லை; இப்பொழுதும் இருந்துதான் வருகிறது; நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்குப் பின்னரும் நபிமார்கள் உண்டாகலாம் என்று காதியானிப் பிரசாரகர் தாவாச்செய்து தம்முடைய தாவாவுக்கு ஆதாரமாக திருகுர்ஆன் ஆயத்துகளிற் சிலவற்றையும் எடுத்துக் கூறினார்.

பின்னர், முஸ்லிம் பிரசாரகரான மௌலானா லால்ஹுஸைன் அக்தர் காதியானிப் பிரசாரகர் எடுத்துக் காட்டிய திரு குர்ஆன் வேதவசனத்தின் உண்மைக் கருத்துக்களை விளக்கிக் கூறி, நபித்துவம் முடிவுபெற்று விட்டதா இல்லையா என்ற பிரசினைக்கும் அந்த ஆயத்துகளுக்கும் எவ்விதச் சம்பந்தமுமில்லை என்று ருஜுப்பித்ததுடன், நபித்துவம் முடிவுபெற்றுவிட்டது என்பதற்கு ஆதாரமாக திருகுர்ஆனிலிருந்து 8 ஆயத்துகளையும், 10 ஸஹீஹான ஹதீதுகளையும், மிர்ஜா குலாம் அஹ்மது காதியானியின் நூல்களிலிருந்து 15 மேற்கோள்களையும் எடுத்துக்காட்டி நபித்துவம் முற்றுப்பெற்றுவிட்டது, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்குப் பின் எவரும் நபியாக வரமுடியாது என்று ருஜுப்பித்தார்.

இதற்கு பதில் கூறுவதற்காக முன்வந்த காதியானிப் பிரசாரகர், இந்த ஆயத்துகளின் தார்ப்பரியம் இன்னது என்று விளக்கி, மௌலானுலால்ஹுஸைன் அக்தர் கூறிய ஆதாரங்களை உடைக்காமல் வேறுபல தவறான ஆதாரங்களை எடுத்துக் கூறினர். அதில் "இப்ராஹீம் ஜீவித்திருந்தால் அவர் ஸித்தீக்கன் நபியாக ஆகி இருப்பார்" என்று ஹதீதில் வந்திருப்பதாகக் கூறினர். உடனே முஸ்லிம் பிரசாரகர் இம்மாதிரியான வாக்கியம் ஹதீதில்வந்திருப்பதாக ஸஹீஹான கிரந்தங்களிலிருந்து ருஜுப்பித்தால் 50 ஷில்லிங் இனும் தருவதாகக் கூறி, 50 ஷில்லிங்குகளை பண்டிட் தௌலத்ராமிடம் சமர்ப்பித்தார். காதியானிப் பிரசாரகர் இப்னுமாஜா என்ற ஸஹீஹான கிரந்தத்திலிருப்பதாகக் கூறினர். அக் கிதாபை எடுத்துக்கொண்டுவந்து பார்த்ததில் இப்ராஹீம் என்ற பதம் இல்லை என்பதுதெரிய வந்தது. இதன்பேரில் சபையினர் கரகோஷம் செய்து சிரித்தனர். காதியானிகளின், முகம் வெட்கத்தால் கருத்து இருளடைந்தது. இதனையல்லாமல் முஸ்லிம் பிரசாரகர் கேட்ட எந்தக் கேள்விக்கும் காதியானிப் பிரசாரகர் கடைசிவரை பதில் கூறவே இல்லை. இத்துடன் இவ்விரண்டாவது வாதமும் முற்றுப்பெற்றது.

மூன்றாவது வாதம்

காதியானி கக்ஷித்தலைவர்: —அஹ்மதுஹுஸைன்.

காதியானி விவாதக்காரர்.—ஷெய்கு முபாரக் அஹ்மது.

முஸ்லிம் கக்ஷித்தலைவர்—அப்துர் ரஹ்மான் சாகிப், அட்வகேட்.

முஸ்லிம் விவாதக்காரர்:—மௌலானா லால் ஹுஸைன் அக்தர்.

காதியானி மதப்பிரசாரகரான ஷெய்குமுபாரக் அஹ்மதுசாகிப் விவாதத்தை ஆரம்பித்து, மிர்ஜா குலாம் அஹ்மது காதியானீ உண்மையாளர், அவரது தாவாக்களும் உண்மையானவைகளே என்று ருஜுப்படுத்துவதற்காக 20 நிமிஷங்கள்வரை பிரசங்கம் புரிந்தார். முஸ்லிம் பிரசாரகரான மௌலானா லால்ஹுஸைன் அக்தர், காதியானி பிரசாரகர் எடுத்துக் கூறிய ஆதாரங்களை மறுத்து, மிர்ஜா குலாம் அஹ்மது காதியானியின் பொய்யான முன்னறிக்கைகளையும், பொய் இல்ஹாம்களையும், மிர்ஜா குலாம் அஹ்மது தமக்கு வைஹு வருவதாகக்

கூறியதையும், தன்னைக் கடவுள் என்று தாவாச் செய்ததையும் விளக்கிக்காட்டி, அவர் முஷ்ரிக்காக இருந்தார்; அவருக்கு குர்ஆனும் தெரியாது; ஹதீதும் தெரியாது; அவருக்கு அரை மதியுண்டு என்பதை ருஜூப்பித்தார். பின்னர் ஹஜ்ரத் மூஸா, ஈஸா, நபிகள் நாயகம் (ஸல்.) ஆகியவர்களை குலாம் அஹ்மது செய்த தூஷணை, இமாம் ஹுஸைன் (றலி.) அவர்களைத் திட்டியது, நபித்துவத்தை தாவாச்செய்பவன் முர்த்தத்தாகி விடுவான், காபிராகி விடுவான் என்பதைப்பற்றியும் குலாம் அஹ்மதுவின் கிரந்தங்களிலிருந்தே 40 ஆதாரங்களையும் காட்டினர். தவிர, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு 11 புத்திரர்கள் இருந்தகாக குலாம் அஹ்மது கூறியதை அவருடைய நூலிலிருந்தே எடுத்துக்காட்டி, இதற்கு உலகில் வேறெந்த கிரந்தத்திலிருந்தும் காதியானிகள் ஆதாரம் காண்பிப்பார்களாயின், 500 ஷில்லிங் இனம் தருவதாகச் சாலஞ்சு செய்தார். இதன் பேரில் காதியானிப் பிரசாரகர், அபாண்டங் கூறுபவர், அப்புறம் 23 வருஷகாலம் வரை ஜீவித்திருக்க மாட்டார் என்று கூறினர். அதற்கு முஸ்லிம் பிரசாரகர், இதற்கு திரு குர்ஆன் ஹதீதிலிருந்து ஆதாரம் காட்டுவதாயின் 1000 ஷில்லிங் இனம் தருவதாகக் கூறினர். பின்னர், மிர்ஜா குலாம் அஹ்மது எழுதிவைத்திருந்தபடி ''இவர்அல்லாஹ்வின் கலீபா மஹ்தியாக இருக்கிறார்'' என்று புகாரியில் எடுத்துக் காண்பித்துவிட்டு, 500 ஷில்லிங் இனம் வாங்கிக் கொள்ளுங்கள் என்று காதியானிகளிடம் சாலஞ்செய்தார். காதியானிப் பிரசாரகர் இவ் வாக்ஷேபனைக்குப் பதில்கூற வேண்டும் என்று பலமுறை வற்புறுத்தியும் பதில் கூற முடியவில்லை.

விவாதம் மிகவும் ஒழுங்காக நிகழ்பெற்று அமைதியாக முற்றுப்பெற்றது. பிறகு ''அல்லாஹு அக்பர், இஸ்லாம் ஓங்குக, மௌலானா லால்ஹுஸைன் அக்தர் வாழ்க'' என்ற முழக்கத்துடன் மௌலானா ஸெய்யித் அப்துல்லா ஷாஹ்சாகிப், மௌலானா லால்ஹுஸைன் அக்தர், சபைத்தலைவர், முஸ்லிமல்லாத இரு டைம்கீப்பர்கள் ஆகியவர்களுக்கு மாலையிடப்பட்டு மகாநாடு முடிவுபெற்றது.

குறிப்பு:—மிர்ஜாயீ காதியானிப் பிரசாரகர் அத்தர்க்க சபையில் திருகுர்ஆன், ஹதீது ஆகியவைகளைச் சரியாகக்கூடப் படிக்கத் தெரியாமல் உளரிய தொருபக்கல் இருக்க, மிர்ஜா குலாம் அஹ்மது காதியானியின் பாடல்களைக் கூடசரியாகப் படிக்கத் தெரியாமல் திண்டாடியது குறிப்பிடத்தக்கதாகும்.

காதியானீ கலீபாவின் கூற்று

காதியானி கலீபா மிர்ஜா பஷீருத்தீன் மஹ்மூது சென்ற ஜனவரிமீ 18உ செய்த பிரசங்கத்தில், அக்கோஷ்டியார் அரசாங்கத்துக்குச் செய்துள்ள விசுவாசமான ஊழியங்களைப்பற்றிப் பிரஸ்தாபித்து, இவ்வூழியங்களுக்குப் பிரதிபலனாக மிர்ஜாயீ காதியானி மதத்தைப் பற்றி முஸ்லிம்கள் ஆக்ஷேபனை செய்வதை அரசாங்கம் தடுக்க வேண்டுமென்றும், அவ்வாறு தடுக்காவிடில் அரசாங்கத் திட்டத்தில் தங்களுக்குள்ள பழைய சம்பந்தத்தை முறித்துக் கொண்டு காங்கிரஸுடன் சேர்ந்து கொள்ள நேரிடுமென்றும் கூறியுள்ளார். அவர் செய்த பிரசங்கத்தின் சுருக்கம் வருமாறு:—

கி. பி. 1913-ம் ஆண்டிலிருந்து இன்றுவரை எனது ஜீவியத்தின் ஒருநல்ல பாகத்தை ஆங்கிலேயரிடம் நான் நல்ல பெயரை வாங்குவதற்காகவும், கண்ணியம் பெறுவதற்காகவும் செலவு செய்திருக்கிறேன்; நானும் அஹமதீ ஜமாஅத்தும் அரசாங்கத்தைப் பலப்படுத்துவதற்காகச் சிறந்த ஊழியங்களைச் செய்திருக்கிறோம் என்று இப்பொழுது உயிருடனிருக்கிற பெரிய உத்தியோகஸ்தர்கள் சாக்ஷியஞ் சொல்ல முடியும்.

கான்பூர் மஸ்ஜிது சம்பந்தமாகத் தகராறு ஏற்பட்டபோது அரசாங்கம், மதவிஷயத்தில் தலையிடுகிறது என்று முஸ்லிம்கள் அதிக ஆத்திரங்கொண்டிருந்தனர். மஸ்ஜிது இடிக்கப்படவில்லை; குளிக்குமிடம்தா னிடிக்கப்பட்டது என்பதுதான் அப்பொழுது என்னுடைய அபிப்பிராயமாக இருந்தது. பைத்துல்லாவைப்போல் மதசம்பந்தமான ஞாபகார்த்தமாக உள்ள மஸ்ஜிதுகளையும், முஸ்லிம் அரசர்கள்,

...ஆவணக் காப்பக நூலகம் ...-600 008

இஸ்லாத்தின் கண்ணியத்தையும் பெருமையையும் நிலைநாட்டுவதற்காகக் கட்டிய சரித்திரப் பூர்வமான மஸ்ஜிதுகளையும் தவிர்த்து பாக்கியுள்ள மஸ்ஜிதுகளை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு மாற்றிக்கொள்ளலாம் என்பதே என்னுடைய அபிப்பிராயமாகும். அதிலும் தேசத்துக்கும் நகர நிர்மாணங்களுக்கும் இடைஞ்சலாக ரஸ்தாக்களின்மீது தடையாக இருக்குமாயின், அவைகளை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு மாற்றிக்கொள்வதில் எவ்விதக் கெடுதியுமில்லை என்று நான் அபிப்பிராயப்பட்டேன். என்னுடைய இவ்வபிப்பிராயத்தின் காரணமாக என்னைச் சேர்ந்தவர்களும் அந்நியர்களும் என்னை எதிர்த்தனர். எனக்குப் பலமான எதிர்ப்புகள் ஏற்பட்டன. என்னைக் கொலை செய்வதாகவும் பயமுறுத்தப்பட்டது.

பின்னர், ஜெர்மனியர்களின் யுத்த மேற்பட்டது. இச்சமயத்தில் யாங்கள் பல்லாயிரக்கணக்கான வாலண்டியர்களைக் கொடுத்துதவினோம். ஸ்கூல்களில் வாசிக்கும் மாணவர்களின் படிப்பை நிறுத்திவிடும்படி செய்தோம். இப்பொழுது அவர்களிற் பலர் டிரைவர்களாக இருக்கிறார்கள். என்னுடைய சொல்லுக்காக அவர்கள் படிப்பைவிட்டு யுத்தத்துக்குச் சென்றனர். அவ்வாறில்லையாயின், அவர்கள் தற்போது உயர்தரப் பட்டதாரிகளாக இருப்பார்கள். பிரான்சு, எகிப்து, ஷாம், பலஸ்தீன், இராக், ஈரான் ஆகிய யுத்த களங்கள் அஹ்மதியர்களின் உதிரத்தால் கரைபுரண்டிருக்கின்றன. இவர்கள் என்னுடைய சொல்லுக்காக அங்குசென்று தங்களது இன்னுயிர்களைக் கொடுத்தனர். இச்சம்பவங்களைக் கூறும்போது சில முஸ்லிம்கள் எங்களை ஆக்ஷேபிக்கிறார்கள். யாங்கள் ஆங்கிலேயருக்கு உதவி செய்தோம்; அவர்களுக்காக உயிர்களைக்கொடுத்தோம் என்று கண்டிக்கப்படுகிறது. ஆனால், இவ்வாக்ஷேபனைக்காரர்களுக்கு ஒரு விஷயம் ஞாபகமிருக்கட்டும். அவர்களுடைய மதக்காரர்களும் உயிர்களைக் கொடுத்தார்கள்; கிட்டத்தட்ட மூன்று லக்ஷம் முஸ்லிம்கள் யுத்த களத்துக்குச் சென்றார்கள்; இதில் அஹ்மதியர்கள் 3 ஆயிரம் பேர்கள்தான். ஆனால், இவர்களுக்குத் தங்கள் மனுஷாள் சென்ற விஷயம் ஞாபகமிருப்பதில்லை. நம்மைப்பற்றி மாத்திரம் தான் ஞாபகம் செய்துகொள்கின்றனர். மேலும், எந்த அரசாங்கத்துடன் ஒத்துழைப்பிருக்கிறதோ அதற்கு உதவிபுரிய வேண்டும் என்பதை நாங்கள் "ஜாயிஸ்" என்று கருதுகிறோம். ஆனால், நம்மை ஆக்ஷேபிப்பவர்கள் இதைக் "குப்ரு" என்று கருதுகிறார்கள். அவ்வாறிருந்தும் அவர்கள் லக்ஷக்கணக்கானவர்களை அனுப்பினார்கள். ஆகவே, அவர்கள் தாம் குறைகூறப்படத் தகுந்தவர்களேயன்றி நாங்களல்ல.

பின்னர், ரௌலட் சட்டத்தின் காலம் வந்தது. இந்த இலாக்காவில் குழப்பம் உண்டாகாமற் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்று நான் அக்கம் பக்கத்திலுள்ள சீக்கியர்களை ஒன்று கூட்டினேன். நான் ஒருதனி அரசாங்கத்தை ஏற்படுத்த விரும்புகிறேன் என்று சிலர் என்னுடைய இவ்வழைப்பிலிருந்து நினைத்துக்கொண்டு, உங்களுடைய குடும்பம் இந்த இலாக்காவில் ஆட்சிபுரிந்தது என்பதை நாங்கள் அறிவோம்; இப்பொழுது நாங்கள் உங்களுக்காக உயிர்களைத் தத்தம்செய்யத் தயாராக இருக்கிறோம் என்னும் செய்தி அனுப்பினர். பத்துமைல்தூரம் வரையுள்ள ஜனங்களை எல்லாம் நான் ஒன்றுகூட்டி, "குழப்பம் செய்யும் முறைகளைக் கையாளுவதை விட்டுத் தப்பித்துக் கொள்ளுங்கள்" என்று ஆலோசனை கூறினேன். என்னுடைய இவ்வாலோசனையின்பேரில் சிலர் என்னைப் பலமாக வாதித்தனர். சிலர் சண்டைபோட்டுச் சாகவும் துணிந்துவிட்டனர். சிலர், நமது தேசத்தை விடுவிப்பதற்கான காலம் வந்திருக்கும்போது, நீங்கள் எங்களைத் தடுக்கிறீர்களோ என்று என்னிடம் வாதுசெய்தனர். ஆனால், நான் அவர்களைக் கெஞ்சி, பணிந்து இன்னும் பலவிதமான உபாயங்களைக்கொண்டு அவர்களிடம் வாக்குறுதி வாங்கினேன்; நாங்கள் சமாதானத்தை நிலவச் செய்வோம் என்று அவர்களிடம் வாக்குறுதி வாங்கினேன்; நாங்கள் சமாதானத்தை நிலவச்செய்வோம் என்று அவர்களிடம் பெருவிரல் ரேகை அடையாளம் வாங்கினேன். ஆனால், இந்த இலாக்காவிலுள்ள கிராமங்களில் அரசாங்கத்துக்கு விரோதமாக வெறுப்புக் கொண்டுள்ள கிராமங்களுமிருந்தன. அவைகளிலிருந்து கைத்துப்பாக்கிகளும் கண்டெடுக்கப்பட்டன. அப்படியிருந்தும் அவர்களிடமும் நான் ராஜவிசுவாசத்துடனிருப்பதற்காக வாக்குறுதி வாங்கினேன். அஹ்மதீ ஜமாஅத்தானது கலகத்தைத்தடுத்து, அரசாங்கத்துக்கு உதவிபுரிந்தது என்று இந்தியா அர

சாங்கம் ஒரு விசேஷ அறிக்கையின் மூலம் ஒப்புக்கொண்டது. ஹுஷ்யார்பூரிலுள்ள கமிஷனரும், இதர பல இடங்களிலுள்ள அதிகாரிகளும் "அஹ்மதீயர்களின் முயற்சியால் தங்களுடைய இலாக்காக்களில் குழப்பமேற்படாமற் காப்பாற்றப்பட்டது" என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

இந்திய அரசாங்கத்தின் அறிக்கை சாமான்ய விஷயமன்று. நற்சாக்ஷி பத்திரம் அளிப்பது வேறு. அறிக்கையிடுவது வேறு. இது பொது அறிக்கையை போன்றதன்று. லார்டு செம்ஸ்போர்டு (இந்தியா வைசராய்) எனக்கு எழுதிய ஒரு கடிதத்தில் "உங்களுடைய ஜமாஅத்து அதிக உதவிபுரிந்தது என்று அரசாங்கம் ஒரு சுற்றறிக்கை விடுத்திருக்கிறது" எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

காபுல் யுத்தமேற்பட்டது. அது சமயம் உடனே நான் அரசாங்கத்துக்கு உதவிபுரிய முன்வந்து, என்னுடைய இளைய சகோதரரைப் பட்டாளத்துக்கு அனுப்பினேன். அங்கு அவர் சம்பளமில்லாமல் 6 மாதம் வேலை பார்த்தார். இவர் திறமையாக வேலை பார்த்ததால் ஆபீஸர்கள் இவரை வீட்டுக்கனுப்ப இஷ்டப்படாது, சட்டப்படி சம்பளம் பெறும் உத்தியோகஸ்தராக்கிவிட வேண்டுமென்று முயற்சி செய்தார்கள். பின்னர், என் சகோதரரை விடுவிப்பதற்காக நான் ஜெனரலுக்குக் கடிதம் எழுத வேண்டியதாயிற்று. பிறகு ஜெனரலுடைய உத்தரவின் பேரில் அவர் ராணுவ ஊழியத்திலிருந்து விடுபட்டார்.

இதற்குப்பின் ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பமாயிற்று. இதை எதிர்ப்பதற்காக நான் ஒரு புத்தகம் எழுதினேன். அப்புத்தகத்தில் நான் பலமான ஆதாரங்கள் கூறி இருந்தேன். ஆதலால், அரசாங்கம் நூற்றுக்கணக்கான பிரதிகளை வாங்கி விநியோகம் செய்தது. நானும் ஆயிரக்கணக்கான பிரதிகளை இனாமாக விநியோகம் செய்தேன். இம்மாதிரியான தக்க ஆதாரங்கள் எந்தப் புத்தகங்களிலும் எழுதப் படவில்லை என்று அநேகம் உத்தியோகஸ்தர்கள் எனக்கு எழுதினார்கள்.

பின்னர், இந்தியாவைவிட்டு முஸ்லிம்கள் ஹிஜ்ரத்துச் செய்யுங்காலம் வந்தது. இது முஸ்லிம்களுக்குப் பயித்தியம் பிடித்திருந்த காலம். அவர்கள் வியாபாரம், சொத்துச் சுகம், தொழில் சகலத்தையும் விட்டுவிட்டு இந்தியாவினின்று வெளியேறிக் கொண்டிருந்தார்கள். அதுசமயம் நான் முஸ்லிம்களுக்கு அறிவுறுத்தி அரசாங்கத்துக்கு உதவி புரிந்தேன்.

சென்ற காந்தி இயக்கக் காலத்திலும் நான் 50 ஆயிரம் ரூபாய் செலவு செய்து பல பிரசுரங்களையும் விளம்பரங்களையும் வெளியிட்டேன். இவ்வியக்கத்துக்கு விரோதமாக நூற்றுக்கணக்கான பிரசங்கங்கள் நம்மனிதர்களால் வெளியிடப்பட்டிருக்கிறதென்பதை நான் தக்க ஆதாரத்துடன் காட்டமுடியும். இதை அடக்குவதற்குத் தக்க சிறந்த ஆலோசனைகளை நான் கூறினேன். உயர்தர உத்தியோகஸ்தர்கள் இதைப்பாராட்டினர். எனவே, காங்கிரஸ் கலாட்டாவிலும் அரசாங்கத்துக்கு உதவிபுரிந்தேன்.

இவ்வாறெல்லாம் நாம் ஊழியம் செய்ததற்குக் கிடைத்த பலன் என்ன? அரசாங்கத்தின் வேரை அசைக்கக்கூடிய செய்கைகளைச் செய்துகொண்டிருப்பவர்களுடன் நாம் சண்டை போட்டுக்கொண்டிருந்தோம்; அதற்காக அவர்கள் நம்மீது போர்தொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது அரசாங்கம் என்னசெய்துகொண்டிருக்கிறது என்பதைப்பற்றி நமக்கு எவ்விதத் தகவலுமில்லை. அரசாங்கத்தின் சார்பாக ஏதேனும் செய்யப்பட்டிருக்கலாம். ஆனால், அது எனக்குத் தெரியாது. ஆதலால் ஷரீஅத் இடங் கொடுக்கிற அளவுக்கு ராஜீய விஷயங்களில் தலையிடலாம் என்றும், தங்களுடைய முறையீடுகளை அரசாங்கத்தினிடம் சொல்லிக் கொள்ளலாமென்றும், நான் எனது ஜமா அத்தார்களுக்கு உத்தரவுகொடுத்துவிட வேண்டிய நிர்பந்த நிலைமையிலிருக்கிறேன். முஸ்லிம்களிலுள்ள பிரசங்கிகள் நம்மைநெருக்கும்போது, அரசாங்கத்தின் உத்தியோகஸ்தர்கள் நம்மைக் கவனிக்கவில்லையானால், நாம் வேறு மனிதர்களிடம் கைகொடுக்க வேண்டியவர்களாகி விடுவோம். இதன்பேரில் முஸ்லிம்களோ அல்லது அரசாங்கமோ எங்களைக் குறைகூறுவதற்கு எவ்வித உரிமையுமில்லை. நீங்கள் சட்டவிரோதம் என்று கருதுகிற "நான்கோஆப்பரேஷன்", "பாய்காட்" முதலிய காரியங்களை விட்டுவிட்டு இதர காரியங்களில் எங்களுடன் ஒத்துழையுங்கள் என்று காங்கிரஸ் நம்முடன் ஒப்பந்தம் செய்து கொள்ள சந்தர்ப்பமேற்பட்டு, இதை நாங்கள் ஒப்புக்கொண்டு விடுவோமாயின், அரசாங்கம் நம்மைக் குறைகூறமுடியுமா? 56 ஆயிரம்

உயிர்களை நாம் எவ்வாறு ஆபத்துக்குள் போட முடியும்? என்றுகூறி முடித்தார்.

[அன்பர்காள்! காதியானிகளின் சூழ்ச்சிகளை இதிலிருந்து நன்கு தெரிந்துகொள்வீர்களாக.]

ஹஸ்ரத் இமாம் அஹ்மத்பின் ஹம்பல் (றஹ்.)

கீர்த்திபெற்று விளங்கிய ஹஸ்ரத் அபூஅப்துல் லாஹ் இமாம் அஹ்மத்பின் ஹம்பல்(ரஹ்.) அவர்கள், ஹிஜ்ரீ 165-ம்ஆண்டில், பக்தாத் நகரின் கண் திருஜனனமானார்கள். ஹஸ்ரத் அவர்கள் சிறுபிராய முதலே கூறிய அறிவாற்றல் படைத்தவர்களாயும் சற்குணசாலியாயும் சகலருடனும் இன்மொழிகள் பேசுபவர்களாயுமிருந்தார்கள்.

மகான் அவர்களது அருமை மாதா கர்ப்பவதியாக இருக்குங்காலை ஒரு நாளன்று, தனது அறையில் சூரிய உதயமேற்பட்டு, அதன் ஒளி பக்தாத் பட்டணம் முழுதிலும் வீசுவதுபோலும்அம்மாதுசிரோன்மணி சொர்ப்பனங் கண்டு திடுக்கிட்டவர்களாய் விளித்துக்கொண்டு இச்செய்தியை தன் அரும்பிதாவினிடம் தெரிவித்தார். இச்சுபச் செய்தியைச் செவியுற்ற அப்பெரியார், உன் வயிற்றில் ஓர் அரும் பொக்கிஷம் அமைந்திருக்கின்றது; அதன் பொருட்டால் இவ்வுலகு முழுதும் பிரயோசனமடையுமெனத் தெரிவித்தார்கள். சொற்ப நாளைக்குள் அச் சொர்ப்பனத்தின் தெரிசனத் தோற்றம் தக்க முறையில் வெளியாய்விட்டது.

கல்வி ஒழுக்கம்

ஹஸ்ரத் அவர்கள் ஏழாம் பிராயம் அடைந்தபோது, அவர்களது அரும்பிதாவாகிய ஹஸ்ரத் முஹம்மதிப்னுஹம்பல் அவர்கள் கல்வி கற்பிக்க ஆரம்பித்தார்கள். ஆரம்பத்தில் குர்ஆன் ஷரீபைக் கற்றுக்கொண்டு திருநபி (ஸல்.) அவர்களின் திவ்விய வாக்கியங்களைத் தெரிந்துகொள்ள ஆரம்பித்தார்கள். ஹஸ்ரத் அவர்கள் அழகிய அறிவாற்றலுடையவர்களாக இருந்ததால், 8-வது பிராயத்தில் குர்ஆன் ஷரீப் முழுதையும் மனனஞ் செய்து விட்டார்கள். 12-வது வயதில் ஹதீதுக்கலையில் தேர்ச்சி பெற்று 15-ம் பிராயத்தில் மார்க்கத் தீர்ப்பளிக்கும் மகானாய் விளங்கினார்கள்.

வெளித் தோற்றம்

ஹஸ்ரத் அவர்கள், வஸீகரத் தோற்றமுடையவர்களாயும், கண்விழி பருமனும் அகண்ட நெற்றியும் நடுத்தர உயரமும் சிவப்புக்கலந்த வெண்ணிற மேனியுடையவர்களாயும், அழகிய உயர்ந்த தொனியும் அளவற்ற சிந்தனை சக்தி ததும்பியவர்களாயும் விளங்கினார்கள்.

பிரத்தியேக விசேஷங்கள்

மகான் அவர்கள்பால் சில பிரத்தியேக விசேஷங்கள் காணப்பட்டதால், மற்ற உலமாக்களை விட இவர்கள் கியாதியுடையவர்களாய் விளங்கினார்கள். ஆகவே, பிரசங்கமாற்றுவதிலும் எழுத்துவன்மையிலும் ஒன்றுபோல் விளங்கினார்கள். இத்துடன் சகலருடனும் மரியாதையுடன் கலப்பற்ற மனத்தோடு வார்த்தையாடுபவர்களாயும், எவரையும் இலேசாகத் கேவலத் தோற்றங்கொண்டு நோக்காதவர்களாயுமிருந்தார்கள். மகான் அவர்களது சற்குணத்தைக் கண்டு சகலரும் உணர்ச்சிபெற்று தானே சரண் புக ஆரம்பித்து விடுவார்கள்.

திருதேரிசனை

"யான் எமது 16-வது பிராயத்தின்போது ஒருநாளன்று நமது வள்ளல் நாதர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களைச் சொர்ப்பனத்தில் கண்டேன். உடனே பெருமானார் (ஸல்.) அவர்கள் என்னை விழித்து அருமைக்குழந்தாய்! என அழைத்தபோது, யான் 'இதோ வருகிறேன்' எனக்கூறிக்கொண்டு போகவே, உமக்கு எதன் மீது விருப்பமிருக்கிறதென சத்தியத் தூதர் (ஸல்.) அவர்கள் வினவினார்கள். அதற்கு, 'இஸ்லாமிய சத்தியப் பிரசாரம் செய்து வெற்றி பெறவேண்டுமென்னும் அவா என் மனதில் குடி கொண்டிருப்பதாகத் தெரிவித்தேன். உடனே பெருமானார் (ஸல்.) அவர்கள் என்னை சமீபத்திலழைத்து என் வாயை

திறக்கும்படி செய்து, தங்களது உமிழ்நீரை என்வாயில் போட்டார்கள். உடனே என் அகக்கண் திறக்கப்பட்டு, என்னுடைய ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொருவரின் மனதிலும் தக்கவிதமாகப்பதிய ஆரம்பித்தது'' என, ஹஸ்ரத் இமாம் அஹ்மதிப்னு ஹம்பல் (ரஹ்.) அவர்கள் தங்களால் இயற்றப்பெற்றுள்ள 'மிஸ்பாஹுல் மஆரிப்' என்னும் கிரந்தத்தில் வரைந்திருக்கிறார்கள்.

வணக்கத்தின் சுவை

''ஹஜ்ரத் அவர்களுக்கு, அல்லாஹ்த ஆலாவை வணங்குவதின்மீது ஒருவாறான சுவை ஏற்பட்டிருந்தது. எனவே, நடு இரவிலேயே எழுந்து முக்கிய வேலைகளை முடித்துக்கொண்டு ஸ்நானஞ் செய்தபின் மிக்க பயபக்தியோடு 'தஹஜ்ஜுத்' தொழுகையை நிறைவேற்றுவார்கள். பின்னர் அல்லாஹ் தஆலாவை தியானஞ் செய்வதிலீடுபட்டிருந்து 'பஜ்ர்' தொழுகையை நிறைவேற்றுவார்கள். எங்காகிலும் வெளியூர் செல்ல வேண்டிநேர்ந்தால் இரவில் 200 ரக்கஅத்துத் தொழுவார்கள். அநேகமாக இஷாத் தொழுகைக்காகச் செய்யும் ஒளுவைக் கொண்டே 'பஜ்ர்' தொழுகையை நிறைவேற்றுவார்கள். இவ்வாறு ஹஸ்ரத் அவர்களுக்குத் தங்களது அந்தியகாலம் வரை வணக்கத்தின்மீது ஓர்விதசுவை ஏற்பட்டிருந்தது'' என, பக்காதின் கத்தீபாகிய ஹஸ்ரத் நுஃமானிப்னு அப்துல்லாஹ் அறிவிக்கின்றார்கள்.

கலீபா 'முஅதஸிம்' என்பார், குர்ஆன்ஷீப் படைக்கப்பட்டது என கூறிக்கொண்டு அந்த தமது கூற்றுக்கு ஒவ்வொரு ஆலிமிடமிருந்தும் ஆதாரமும் அனுசரணையும் தேடிக்கொண்டிருந்தார். இந்நிலைமையில் ஹஜ்ரத் அவர்களை தன் தர்பாருக்கு அழைத்து, அல்லாஹ்தஆலா சம்பந்தமாய் உங்கள் அபிப்பிராயம் யாதுவாகுமென வினவினார். அதற்கு ஹஸ்ரத் இமாம் அவர்கள் கூறியதாவது :—

'' அல்லாஹ் தனித்த ஏகன்; அவனுக்கு இணைதுணையே கிடையாது; அவன் பூர்வீகமாக ஆதிமுதலுள்ளவன்; இனிசதாவுமிருப்பவன்; அவன் வணங்கப்படுதற்குத் தகுதியுடையவனாகவுமிருக்கிறான்; அவன் யாவரளவிலும் தேவையற்றவனாகவும்; எல்லோரும் அவனிடம் தங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளக் கூடியவனாகவுமிருக்கிறான். எவ்வாறு அவனுடைய 'தாத்து' பூர்வீகமானதாயும் ஆரம்பமற்றதாயுமிருக்கின்றதோ அவ்வாறே அவனுடைய 'சிபாத்து'களும் பூர்வீகமானதாய் இருக்கின்றது. இவ்விரண்டைத் தவிரயுள்ள வஸ்த்துக்களெல்லாம் புதியனவாகும். அதாவது, இல்லாமையிலிருந்து உண்டென்கிறதளவில் வந்தவைகளாக இருக்கின்றன. ஆகவே, எவன் அல்லாஹ் தஆலாவின் வர்ணிப்பு படைக்கப்பட்டதென்று கூறுகின்றானோ அவன் பெரிய வழிகேடனும் சன்மார்க்க நெறி தவறியவனுமாகும். மேலும், எவன் குர்ஆன் படைக்கப்பட்டதென்று கூறுகின்றானோ அவன் பெரிய மடையனாகும்'' என்பதே.

இவ்வார்த்தைகளைச் செவியுற்ற கலீபா முஅதஸிம் கடுங்கோபத்திலாகி, ஓய், அஹ்மதிப்னு ஹம்பலே! நீர் என் தர்பாரிலிருக்கிறீர் என்பதை மறந்து விட்டீரோவென, கடுமொழிகளால் மிரட்ட ஆரம்பித்தார். அதுபொழுது ஹஜ்ரத் அவர்கள் மிக்க தைரியத்தோடு, ''ஆம், இன்ன இடத்திலிருக்கிறேன் என்பதையும், எதார்த்தம் சத்தியம் வழிகேடு இவைகளுக்கிடையே தக்க பரிகாரஞ் செய்து உண்மையாக தீர்ப்பளிக்கக்கூடிய பெரிய எஜமான் வேறொருவன் இருக்கின்றான் என்பதையும், நீர் திரேகத்திற்கு மட்டில் கஷ்டம் கொடுக்க முடியும்; அவனே திரேகம் ஆத்மா இவ்விரண்டிற்கும் எஜமானாக இருக்கின்றான் என்பதையும் யான் அறிவேன்'' எனக் கூறினார்கள்.

உடனே முஅதஸிம் கோபாவேசங்கொண்டு ஆத்திரமேலிட்டவராய் ஹஜ்ரத் அவர்களை நோக்கி, ''அஹ்மத்! நீர் என் அந்தஸ்த்தை கவனித்து வார்த்தையாடும்; இல்லாதுபோயின், இப்பொழுதே உமது வாணாள் முழுதும் ஒளிமங்கிப்போகுமாறுசெய்து விடும்படி நேரிடும்'' எனக் கூறினர்.

அதற்கு ஹஜ்ரத் அவர்கள், ''ஓ முஅதஸிமே! அல்லாஹ் தஆலாவுக்குப் பயப்படுவீராக!! இன்னும் மக்கள் அனைவரும் உமது ஆக்ஷியின் மீது வெறுப்புற்றிருக்கின்றார்களென்பதையும் அறிந்துகொள்வீராக. இந்நிலைமையில் உம்மை அநியாயக்காரனென அழைக்காது போனால் யான் பெரிய அநியாயக்காரனாய் விடுவேன். நீர் உம்முடைய தலைமைத் தனத்தின்மீது மயக்கங்கொண்டிருக்கின்றீரோ? நீர் மையித்துகளை அடக்கம் செய்யப்படும் கபரஸ்தானுக்குச் சென்று பார்ப்பீராகில், உம்மைவிட அதிக சுவண்டியோடு ஆக்ஷிபுரிந்த மாபெரும் கீர்த்திவான்களெல்லாம் துயில்புரிந்து கொண்டிருப்

பதையும், அவர்களுக்கு உலக சம்பந்தமான விருப்பங்களில் எதுவும் பங்கில்லாதுஅல்லாஹ் தஆலாவின் கற்பனை என்னும் ஓர் வஸ்துவானது அவர்களது வாணுள் என்னும் பிரகாசத்தை அடக்கி, அவர்களது கீர்த்தி பிரலாபத்தை முடிவுசெய்து வைத்திருப்பதையும் கண்டுகொள்வீர்'' எனத்தெரிவித்தார்கள்.

இவ்வாறு கூறிக்கொண்டிருக்கும் போது, ஹஜ்ரத் அவர்களைப் பிடித்துச் சிறைச்சாலையிலடைக்குமாறுமுஅதஸிம் தம்சிப்பந்திகளுக்குக் கட்டளையிட்டார். இக்கட்டளைக்கேற்ப ஹஜ்ரத் அவர்கள் சிறையிலடைக்கப்பட்டார்கள். மகான் அவர்களுக்கு அங்கு பற்பலவாருன கஷ்டங்கள் துன்பங்கள் கொடுக்கப்பட்டதாயினும், அவர்களது கருத்தில் யாதொரு வித்தியாசமான மாறுதலுமேற்படாது உண்மைச் சத்தியத்தைக் கடைபிடித் தொழுகுபவராகவே இருந்தார்கள்.

பிரசங்க வன்மை

ஹஜ்ரத் அவர்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் பக்தாத் பட்டணத்திலுள்ள பிரதான ஜாமிஆ மஸ்ஜிதுக்குச் சென்று சொற்பெருக்காற்றுவார்கள். தங்கள் பிரசங்கம் அர்த்த புஷ்டியுள்ளதாயும், மனக்கவர்ச்சியைக் கொடுக்கக் கூடியதாகவுமிருக்கும். மகான் அவர்கள் பள்ளிவாசலில் சொற்பெருக்காற்ற முற்படுவார்களாயின், வெளியிலுள்ள போக்குவரத்து ரஸ்தாக்களெல்லாம் தடைபட்டு, அங்கு கால்நடையாகவோ, வாகனங்களில் வீற்றோ செல்பவர்களெல்லாம் ஹஸ்ரத் அவர்களின் பிரசங்கத்தைக் கொண்டுப் பிரயோசனம்பெற்று, உபதேசம் முடியும்வரை அந்த இடத்திலேயே தங்கிவிடுவார்கள். அப்பிரசங்கமானது சமீபித்தவர் தொலைதூரத்திலிருப்பவர் முதலிய யாவருக்கும் ஒரேவிதமாக செவியில்படுவதாக இருந்தது. அநேக நேரங்களில் 10 ஆயிரம் மக்கள்வரை வந்துகூடிவிடுவதாகவுமிருந்தது. இதில் எந்த ஒரு நபருக்குக்கூட, பிரசங்கம் பிரயோசனமளிக்காது போவதில்லை. மேலும், பிரசங்கத்தைப்பெற்று பிரயோசனமடைவதற்காக அநேக யூதகிறிஸ்துவர்களும் சமூகமளிப்பார்கள். இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொண்டு சிறப்புற்று விளங்கியவர்களும் அவர்களில் அநேகருண்டு. எனவே, ஹஜ்ரத் அவர்களது இஸ்லாமியப் பிரசாரத்தின் பயனாக 11-ஆயிரம் எஹூதிகளும், 7-ஆயிரம் கிறிஸ்தவர்களும் தூய்மை பொருந்திய சன்மார்க்கமாகிய இஸ்லாத்தின் வட்டத்துக்குள் வந்துவிட்டார்களென ஹஜ்ரத் இமாம் சாலிஹ்பின் ஆமிர் (ரஹ்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

இதரர்களிடம் தேவையற்றிருத்தல்

ஹஜ்ரத் அவர்கள் ஒரு வஸ்துவை இதரர்களிடம் கேட்பதற்கு பிரியப்படாதவர்களாக இருந்ததால், எந்த சீமானிடமும் தங்களுக்குத் தேவையானவற்றைக் கேட்டுப் பெற்றுக் கொண்டதே கிடையாது. தாங்கள் தன்னந்தனியே துணிவியாபாரஞ் செய்து அதில் கிடைக்கும் இலாபத்தைக் கொண்டே சந்தோஷத்தோடு மனநிம்மதியாகக் காலங்கழித்துக் கொண்டிருந்தார்கள். இந்நிலைமையில், சிற்சில அமீர்கள் தங்களுக்குள்ள சொத்து சுவந்திரத்தின் ஒரு பாகத்தை சன்மானமளித்துவிடுவதாய்க் கேட்டுக்கொண்டும், ஹஜ்ரத் அவர்கள் அதனை அங்கீகரித்து, யேற்றுக் கொண்டார்களில்லை.

பொது வாழ்க்கை

மகான் அவர்கள், தயாள குணமுடையவர்களாயும், சற்குண சீலராயும் விளங்கியதால், ஏழைகள்மீது அனுதாபங்கொண்டு அன்னோரின் நலவு இடர்களில் பங்கெடுத்துக் கொள்பவர்களாயும், அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்து வைப்பவர்களாயுமிருந்தார்கள். அவர்கள் உலக மரியாதையைப் பொருட்படுத்தாது ஏழை சீமான் முதலிய யாவருடனும் ஒரேவிதமாக நடந்து கொள்பவர்களாயுமிருந்தார்கள்.

தங்களைவிட இதரர்களின் தேவைகளையே கவனிப்பவர்களாக இருந்ததால், அநேக நேரங்களில் தாங்கள் பசித்தவர்களாக இருக்கும் நிலைமையில், ஏழைமாணவர்களுக்குச் சாப்பாடு கொடுப்பார்கள். நண்பர்களில் யாராகிலும் சன்மானமளிப்பார்களாயின், அயல்பாகக்காரர்களில் ஏழைகளாயுள்ளவர்களுக்கும் மாணவர்களுக்கும் அதனைப் பங்கிட்டுக்கொடுத்துவிடுவார்கள். சாப்பாட்டிற்கு உட்காரும்போது அயல்பாகக்காரர்களில் ஏழையாகவுள்ளவரின் நிலைமையை விசாரித்து, அவர்களில் யாரும் பட்டினியாக இருப்பதாய்த் தெரிந்தால் தங்கள் சாப்பாட்டை அன்னவர்களுக்கு அனுப்பிவிட்டு தாங்கள் பசியோடிருந்து விடுவார்கள். தவிரவும், சமத்துவத்தைக் கொண்டாடுவதிலும் ஹஜ்ரத் அவர்கள் சிறந்து விளங்கினர்கள். எனவே, ஏழை மாணவர்களுடனும் சகோதிர வாஞ்சை

யுடன் நடந்துகொள்வார்கள். ஒருநாளன்று தலைவரொருவர் ஹஜ்ரத் அவர்களுக்கு விருந்தளித்தார். பல முக்கியஸ்தர்கள் அவ்விருந்துக் கழைக்கப்பட்டிருந்தனர். சாப்பாடு நேரமானவுடன்யாவரும் உட்கார்ந்தார்கள். அதுபொழுது பரிதாப நிலைமையையுடைய ஏழையாகிய ஓர் பகீர் அங்குவந்துவிட்டார். ஹஜ்ரத் அவர்கள் அவ்வகதியை அன்போடு அழைத்து தங்களுடன் உட்காரவைத்துக்கொண்டு, தங்கள் சாப்பாட்டுடன் அவரைக் கூட்டுறவாக்கிக் கொண்டார்கள்.

இதுவன்றி ஹஜ்ரத் அவர்கள் புரிந்துள்ள மார்க்க சமூகச்சேவைகள் அனந்தமாகும். இவ்வாறான மேன்மை பொருந்திய குணங்களோடு சிறப்புற்று விளங்கிய மகான் அவர்கள் ஹிஜ்ரீ 240-ம் ஆண்டு ரபீஉல் அவ்வல்மாதம் 15-ம் திகதி நோய்வாய்ப்பட்டு ரபீ உத்தானீ மீ 16-ம் திகதி இறைவனடி சேர்ந்தார்கள்.

இஸ்லாம், இதர மதங்களைவிட சிறப்புற்றிருப்பதேன்?

இதுகாலை உலகின்கண் காணப்படும் மதங்களைப் பின்பற்றி யொழுகுபவர் ஒவ்வொருவரும், தாங்கள் பின்பற்றி நடக்கும் மார்க்கத்தில் தான் ஈடேற்றத்திற்குறிய வழி யிருக்கிற தென்றும், தாங்கள் தான் சன்மார்க்கத்தைப் பின்பற்றி நடப்பவர்களென்றும், தங்களுக்கே முக்திபெறுவதற்குள்ள நேரான வழி கிட்டிவிட்டதென்றும் கருதிக்கொண்டிருக்கின்றனர். நாம் இதுகாலை அவர்கள் ஒவ்வொருவரின் விவாதங்களையும் பரிசீலனை செய்து பார்க்க முற்படுவோமாயின், ஏதாகிலு மொரு மார்க்கத்தைப் பின்பற்றி நடப்பவர் உண்மையைத் தெரிந்துகொள்ள அவரது மனசாக்ஷி இடங்கொடுக்க மாட்டாதென நமது ஹிருதயமே சாக்ஷியங் கூறுகின்றது. ஏனெனில், சிறு பிராய முதல் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கும் கல்வியும் அவரது உதிரங்களில் ஊடுருவித்திரியும் சக்தியும் அன்னவரை இவ்வாறான ஸ்திதியிலாக்கிவைத்திருக்கிறது. அவர் உண்மை சத்தியத்தைப் பின்பற்றி யொழுகவேண்டுமெனக் கருதிய போதிலும், அவர் தமது சுபாவத்திலேயே ஏற்பட்டுள்ள மனப்போக்கை எவ்வாறுமாற்றிக் கொள்ளமுடியும்? இவ்வாறே, ஒரு மதத்தை விட்டு மதமாறுதல் செய்பவன்கூட, அம்மதத்தைத் தழுவுங்கால் அதிலுள்ள நலவுகளையே கவனிக்கிறவனாகிவிடுகிறான். "மானிடன் ஒரு வஸ்துவின்மீது பிரீதி கொள்வதால், அவ்வஸ்த்துவைப்பற்றி தோஷங் கூறப்படுவதைச் செவியுறுவதினின்று அவனைச் செவிடனாகவும், அதிலுள்ள கெடுதிகளைப் பார்ப்பதைவிட்டு அவனைக் குருடனாகவும் செய்துவிடுகிறது" என்னும்முதியோர் வாக்குப் பிரகாரம், அவன் ஒரு மார்க்கத்தின் மீது பிரீதி கொண்டு, அதனைப் பின்பற்றியொழுகும் நிலைமையில் வேறு சத்திய சன்மார்க்கத்தைத் தன் பகுத்தறிவைக் கொண்டு எவ்வாறு உணர்ந்து கொள்ள முடியும்?

ஆனால், உலகத்திலுண்டான சகலமார்க்கங்களைவிட தமது மதம்தான் சத்தியமானதும் உண்மையுள்ளதுமான தென்று தைரியமாய்க் கூற முன்வருவோர், அதற்குத்தக்க ஆதாரங் காட்டவேண்டியதும், இதரர்களின் அறிவு ஏற்றுக்கொள்ளும்படியான விதத்தில் அந்த ஆதாரங்களை விளக்குவதும் அவசியமாகும். அவ்வாறின்றி, தாம் பின்பற்றியொழுகும் மார்க்கந் தான் உண்மையானதென, ஆதாரமற்றவிவாதம் புரிவது வீணானகாரியமேயாகும். ஆகவே, நாம் இதுகாலை இதரமதங்களைப்பற்றி யாதுங் கூறாது, இஸ்லாம் மதம் மேலான—உண்மை மதமாகுமென்பதற்கு, அதிலுள்ள விசேஷித்த பிரத்தியேக நலன்களை ஈங்கு கூறுவாம்:—

ரசூல்மார்களில் மேலானவர்

நம்முடைய ரசூல் மேலான பதவியையுடையவர்களாயும், நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் வேதம் வரிசை பொருந்தியதாகவும், நம்முடைய மார்க்கம் சகல மார்க்கங்களையும் விட மேலானதாகவு மிருப்பதால், நாம் உண்மையான சத்திய சன்மார்க்கத்தைப் பின்பற்றியவர்களென்பது நம்முடைய வாதமாகும். ஆனால், இஃது வெறும்வாதமாக இல்லாது, தக்கஆதாரங்

களையுடைய உண்மைதாவாவாகும். ஏனெனில், நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்கள், நபிமார்களுக்கெல்லாம் கடைசியானவர்களாகும்; ஹஸ்ரத் செய்யிதுனு ஆதலே (அலை.) அவர்களால் அஸ்திவார மிடப்பெற்ற நபித்துவத்தின் தொடர்பானது நம் பெருமானர் (ஸல்.) அவர்களைக் கொண்டே முற்றுபெற்றுவிட்டது. ஆகவே, கவனிப்பெல்லாம் முடிவுக்கே யாகுமாதலின், நபித்துவத்தின் வாயல் எவரைக் கொண்டு முடிவுபெற்து விட்டதோ அவர், அந்த நபிமார்கள் யாவரையும் விட மேலானவரென்பவற்கு இதர சாக்ஷியங்கள் தேவையன்று.

மேலான வேதம்

குர்ஆன் ஷரீபானது இதரவேதங்களைவிட மேலானதென்பதை விபரிக்க வேண்டிய அவசியமில்லை. "குர்ஆன் அல்லாவின் திருவேதமல்லவென்று கூறுவதில் நீங்கள் உண்மையாளர்களாக இருப்பீர்களேல், நீங்கள் உங்கள் உதவியாளரையும் சேர்த்துக்கொண்டு அதில் (குர்ஆனில்) உள்ள அத்தியாயம் போன்ற ஒரு அத்தியாயத்தை தயார்செய்து வாருங்கள் பார்க்கலாம்" என்னும் சேலனஞ் இன்றைக்கு 1300 வருடங்கட்குமுன் கொடுக்கப்பட்டிருப்பதுடன், இன்றுங்கூட அதனைப் பொய்யாக்கி வைப்பவர்களை விவாதத்திற்கு அழைக்கப்படுகிறது. மேலும் அத்துடன், முற்காலத்தில் அவ்வாறு கொண்டுவர இயலாது போனதேபோல், இதுகாலையும் கொண்டுவர முடியாத அவ்வளவு அபாரசக்தி வாய்ந்ததாக இருக்கிறது. ஆகவே, மேலே எடுத்துக்காட்டப்பட்டுள்ள இறைவனது திருவாக்கியமே குர்ஆன் ஷரீப் உண்மையான வேதமென்பதற்குப் போதிய அத்தாக்ஷியாக இருந்துவருகிறது.

மேலான மார்க்கம்

இஸ்லாம், மேலான மார்க்க மென்பதை எவரும் ஆக்ஷேபனை செய்யமுடியாது. ஏனெனில், இம்மார்க்கத்திலேற்பட்டுள்ள நிர்ணயங்களும் வணக்கஞ்செய்யும் முறையும், மானிடன் சீர்திருத்தம் பெற்றுய்வதற்காக ஏற்பட்டுள்ள மார்க்கங்களும், அவனது குணம் மேலோங்கி வளருவதற்கான பாட்டைகளும், சொல்லுக்குச் சரியாய் செய்முறைகள் அமைந்திருப்பதும், இஸ்லாம் மேலான் மார்க்க மென்பதற்கு போதிய காரணங்களாகும்.

மேலான உம்மத்து

இதுபொழுது நாம், உம்மத்துகளில் மேலானவர்களென்பதை ருசுப்பிக்க முற்பட்டு, அதற்காக அல்லாஹ்வின் திருவசனத்தை ஆதாரமாக எடுத்துக் கூறுவோமாக: அதாவது, "இதுவரை இவ்வுலகின்கண் தோன்றிச்சென்ற உம்மத்துகளைவிட நீங்கள் மேலானவர்களாகும்" என, அல்லாஹ்தஆலா அறிவித்திருக்கின்றான். ஆகவே, நம்மை மேலான உம்மத்தோர்களென, நாம் கூறிக்கொள்வதற்கு ஆதாரம், அல்லாஹ்தஆலா தனது திருமறையில் நம்மைப் புகழ்ந்து கூறியிருப்பதன்றி, நாமாகஏற்படுத்திக்கொண்டதன்று. இதுபொழுது முஸ்லிம்கள் மேலான உம்மத்தோர்கள் என்பதற்குள்ள விசேஷித்த பிரத்தியேக அம்ஸங்கள் ஏதாகிலு நம்மிலிருக்கிறதா? அதைக்கொண்டுதானு முஸ்லிம்கள் மேலான உம்மத்துகளென மதிக்கப்படுகின்றார்கள்? என்னும் கேள்வி பிறக்குமாயின் அதற்கு 'ஆம்' என்ற பதிலே கூறுவோம்.

உதாரணமாக, நாம் முற்காலத்திய நமது மூதாதையர்களான முஸ்லிம்களின் வாழ்க்கை முறையை, இதுபொழுது நம் கவனத்துக்குக் கொண்டு வருவோமாகில், இஸ்லாம் மார்க்கமானது தனது உயர்தர போதனையைக் கொண்டு, அன்னேரில் எவ்வாறான மாறுதலை ஏற்படுத்தியிருந்ததென்பதைத் தெரிந்துகொள்வோம். தண்ணீர் வரண்ட பசுமையற்ற வனாந்தரங்களில் காட்டுமிராண்டிகளேபோல் வாசஞ்செய்தவர்கள், இஸ்லாத்தின் பொருட்டால் உச்சஸ்தானத்தின் ஒய்யாரத்தைக் கடந்து உலகாளும் மன்னாதி மன்னர்களாயும், சகல நலன்களுக்கு எஜமானர்களாயு மாய்விட்டார்கள். எனவே, அவர்கள் மிகமிகத் தாழ்ந்தவர்களென மதிக்கப்பட்டுவந்ததால் அல்லாஹ்த்ஆலா அவர்களை மிகமிக உயர்ந்தவர்களாகச் செய்துவிட்டான். அன்னேர் இஸ்லாத்துக்கு முன் ஒட்டகத்தின் பாலையையும் மிருக மாமிசத்தையும் உணவாகக்கொண்டிருந்தனர். ஆனல் இஸ்லாத்துக்குப் பிறகோ உலகின் கண்ணுள்ள நானுவகையான பதார்த்தம் கனிவர்க்கங்களை அளிக்கப்பட்டதுடன் பலவாறான ஐசுவரியங்களுக்கும் எஜமானர்களாகி, உலகமக்களுக்கு தங்கள் கரங்களால் படி அளப்பவர்களாயுமாய் விட்டார்கள். அன்னேர் மார்க்க பக்தர்களாக மட்டும் விளங்காது மானிட கோடிககளின் மான மரியாதையைக் காப்பாற்றுவதில் தங்களது இன்னுயிர்

களைத் தத்தம் செய்கிறவர்களாகவுமிருந்தார்கள். மேலும், கல்வி பயிலுவதிலும் வியாபாரம் கைத்தொழில் முதலியவைகளைக் கற்றுக்கொள்வதிலும் அளவற்ற ஆர்வமுடையவர்களாகவும் சற்குண சத்தொழுக்கத்தின் முன் மாதிரியாகவும் திகழ்ந்தார்கள். முடிவாகக் கூறுமிடத்து, சற்குண ஒழுக்கவிஷயத்தில் புகழுக்குறிய அம்சங்கள் யாவும் அன்னோர்பால் மிளிர்ந்து காணப்பட்டு வந்தது. மேலும், மானிட வாழ்விற்கு பாதகம் விளைவிக்கத்தக்க வஸ்து எதுவோ அதைவிட்டு அவர்களது முந்தாணி தூய்மையுடையதாய் இலங்காநின்றது. இவ்வாறான உண்மை விஷயங்களைத் தெரிந்துகொண்டபின்னருங் கூட, இதனை யாரும் ஒப்புக்கொள்ளாதிருக்க முடியுமா? அல்லாஹ்த ஆலா அறிவிப்பனவைகளெல்லாம் எதார்த்தமானவைகளே என்னும் திருவசனத்திற்கேற்ப, அவனுடைய வார்த்தைகள் உண்மையாயிற்று; அவன் முஸ்லிம்களை நடத்தையிலும் சற்குண சத்தொழுக்கத்திலும் மேலான உயர்ந்த உம்மத்தவர்களாகச் செய்துவிட்டான்.

ஆனால், தற்காலையுள்ள நம் முஸ்லிம் சகோதரர்களின் நிலைமையை ஆழ்ந்து கவனித்துப் பார்ப்போமாகில், நாணத்தால் தலை குனிந்து வெட்கிக்கவேண்டிய நிலைமையிலிருக்கிறதென்னும் முடிவுக்கு நாம் வரவேண்டியதாக இருக்கிறது. ஏனெனில், முற்காலத்திய முஸ்லிம்கள் புகழுக்குறியவர்களாய்த் திகழ்ந்ததற்குள்ள அம்சங்கள் அன்னோரில் எவ்வளவு தூரம் காணப்பட்டதோ அவை யாவும் நம்மில் மாற்றமாக ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. சன்மார்க்கவழி நடந்து முக்தி பெறுவதற்குள்ள வழி இன்னதென அன்னோருக்கு எடுத்துக் காண்பிக்கப்பட்டபோது, அதனை அன்புடன் ஆதரித்து அமுல் நடத்தினர். நாமோ, அதற்கு முற்ற முற்ற மாற்றமான காரியங்களையே செய்ய முற்பட்டிருக்கிறோம். இதுபொழுதும் நாம் அம்மகான்களை முழுதும் பின்பற்றி யொழுகிவருவோமாகில், மேலான உயர்ந்த உம்மத்தோர்களிற் சேர்ந்து விடுவோமென்பது திண்ணம். எனவே, முஸ்லிம் சோதரர்களாகிய நாம் முன்னோர்களாகிய அம் மகான்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இஸ்லாத்தின் உண்மைத் தத்துவங்களைச் சிரமேற்கொண்டு நடப்போமாகில், மேலான உம்மத்தோர்களாய் விடுவதில் கிஞ்சிற்றும் சந்தேகமிலது.

ஆகவே, மேலே கூறப்பட்டுள்ள காரணங்களால் இஸ்லாம் மதம் இதர மதங்களைவிட சிறப்புற்றனவாய் இருக்கிறதென்பது வெள்ளிடை. முகம்மது நபி (ஸல்.) அவர்களின் உம்மத்தோர்களாகிய நம்மவருக்குக் கிடைத்திருக்கும் இப்பிரத்தியேகச் சிறப்பானது 'கியாமத்' நாள்வரை அப்படியே இருந்துகொண்டிருக்குமென்பது திண்ணம்.

செய்தித்திரள்

"காதியானிகள் காபிர்களே"

காதியானிகள் சம்மந்தமாய், சென்ற 10 வருடகாலமாக நடைபெற்று வந்த வழக்கில் பஹவல்பூர் ஜில்லா ஜட்ஜ் முடிவாகத் தமது தீர்ப்பை வெளியிட்டிருக்கிறார். இவ்வழக்கில் மிர்ஜாயீ (காதியானி)களும் முஸ்லிம்களும் கக்ஷிக்காரர்களாக இருந்தனர். இஸ்லாமிய சட்டப்படி விவாகஞ் செய்துகொண்ட தம்பதிகளிருவரில், கணவன் மிர்ஸாயீ (காதியானீ) மதத்தைத் தழுவிக்கொண்டதால், அவனது முஸ்லிம் மனைவியினுடைய விவாகப் பந்தத்துவம் சட்டப்படி முறிந்துவிடுமா அல்லவா? அதாவது, நிக்காஹ் பஸ்காகி விடுவா இல்லையா? என்பதுதான் இவ்வழக்கின் நோக்கம். அதாவது, ஆயிஷா என்ற முஸ்லிம் ஸ்திரீ, தன் கணவனை அப்துற் றஜாக் என்பவன் மிர்ஸாயீ (காதியானீ) மதத்தைத் தழுவிவிட்டதால் தன்னுடைய விவாக பந்தத்துவத்தை நீக்கிவிட வேண்டுமென்று நீதிஸ்தலத்தில் வழக்குத் தொடுத்தாள். இவ்வழக்கு சமஸ்தானத்தின் பிரதம சிவில் டிரிபூனல் வரை விசாரணைக்குப் போயிற்று. கடைசியாக மறுவிசாரணைக்காக ஜில்லா ஜட்ஜ் கோர்ட்டுக்கு மாற்றப்பட்டது. இவ்வழக்கில் முஸ்லிம்களின் சார்பில் பெரும் உலமாக்களும், காதியானிகள் பக்கல் பல தலைவர்களும் சாக்ஷியங் கூறுவதற்காக அழைக்கப்பட்டனர். இறுதி

யாக ஜட்ஜ் அவர்கள், விஷயத்தின் நுணுக்கத்தைக் கண்டுபிடித்து, எதார்த்தத்தை யுணர்ந்து முஸ்லிம்களுக்குச் சாதகமாக வழக்கில் தீர்ப்புக் கூறினார். அவர் அத்தீர்ப்பில் குறிப்பிட்டிருப்பதாவது :—

"மேன்மை பொருந்திய முஹம்மது ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் காத்தமுன்னபீ (இறுதி நபீ)யாக இருக்கிறார்கள்; மிர்ஸாயீ (காதியானீ)களின் ஆதாரம் திருகுர்ஆனுக்கு முற்ற முற்ற முரண்பாடானதாக இருக்கிறது; ஆதலால், இஸ்லாமிய சட்டப்படி இவ்விவாகம் பஸ்காகி விடுகிறது. ஏனெனில், மிர்ஸாயீ (காதியானீ)களின் மதம் முஸ்லிம்களின் மதத்துக்கு முற்றிலும் விரோதமானதாயும், இவ்விரண்டுக்கு மிடையில் உதயகிரிக்கும் அஸ்தகிரிக்குமுள்ள தூரவித்தியாச முள்ளதாயு மிருக்கிறது. ஆகவே "அப்துர்றஜாக் மிர்ஸாயீ (காதியானீ)மதத்தைத் தழுவிய அந்த க்ஷணத்திருந்தே காபிராக இருக்கிறார்" என்று நீதிபதி தமது தீர்ப்பில் குறிப்பிட்டு முடிவு கூறியிருக்கிறார். (அத்தீர்ப்பின் முழு விபரமும் கிடைத்தபின் அவைகளை விவரமாய்ப் பிரசுரிக்கப்படும்-ப. ர்)

துவேஷப் புத்தகப் பறிமுதல்

காதியானீ மதத்தலைவரான மிர்ஸாகுலாம் அஹ்மத் என்பார் உர்தூவில் பலவாறான புத்தகங்கள் எழுதி, அதில் முஸ்லிம்களை வீணே தூற்றியிருக்கிறார் என்பது நம் நேயர்கள் அறிந்தவையே. அப்பிரசுரங்களை ஏன் கவர்ன்மெண்டார் தடை செய்யலாகாது என்பதாக தாம் இந்திய சட்டசபையில் கேள்க்கப் போவதாய் ஜனாப் காலித் லத்திப் கௌபா சட்டசபை காரியதரிசிக்கு அறிவித்திருக்கிறார். அது வருமாறு :—

1. மிர்ஸாகுலாம் அஹ்மத் காதியானியின் நபித்துவத்தையும், அவரது புதல்வரான மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் தந்தைக்குக் கலீபாவாக ஏற்பட்டிருப்பதையும் ஒப்புக்கொள்ளாத சகல முஸ்லிம் ஆண்களை விபசார புத்திரர்களென்றும், அவர்களின் ஸ்திரீகளை விபசாரிகளென்றும் குலாம் அஹ்மதால் எழுதப்பட்ட காதியானீ புத்தகங்களின் விஷயத்தில் அரசாங்கம் கவனஞ் செலுத்தி இருக்கிறதா?

(2) இவ்விதமான பிரசாரத்தால் அரசர் பெருமானின் பிரஜைகளாயுள்ள சகல வகுப்பினருள்ளும் ஆத்திரமும் கோபாவேசமும் ஏற்பட்டிருக்கிறதென்பது அரசாங்கத்தாருக்குத் தெரியுமா?

(3) இப்பிரசுரங்களைத் தடுப்பதற்காக அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடிவு செய்திருக்கிறதா?

(4) அவ்வாறு நடவடிக்கை எடுத்துக்கொள்வதாயின், எவ்வாறான நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது?

N. B. இந்திய சட்டசபையில் இக்கேள்விக்குத் திகதி குறிப்பிடப்பட்டு, அதுபொழுது கவர்ன்மெண்டார் இக்கேள்விகட்கு என்னபதில் சொல்கின்றார்களென்பதை பின்னர் அறிவிப்போம்—ப-ர்)

ஜப்பானில் இஸ்லாத்தின் முன்னேற்றம்

ஜப்பானில் இஸ்லாத்தின் ஒளி, நாளுக்கு நாள் அதிவிமரிசையுடன் பரவிக்கொண்டு வருகிறதென்னும் சந்தோஷச் செய்தி தினே தினே நமக்கு எட்டிக் கொண்டே இருக்கின்றது. ஜப்பானிய கவர்ன்மெண்டானது இஸ்லாத்தைத் தழுவிக்கொள்வதற்கு எவ்விதமான தடையுஞ் செய்யாது பொது அனுமதி அளித்திருக்கின்றது. சமீபத்தில் அங்கு முஸ்லிம்களின்மாபெரும் மகாநாடு நடைபெற்றபோது, இஸ்லாமியதேசங்களின் பற்பலபாகங்களிலுமிருந்து ஏராளமான பிரதிநிதிகள் விஜயஞ்செய்து மகாநாட்டின் நடவடிக்கைகளில் கலந்துகொண்டதாகத் தெரிகிறது. நாளுக்கு நாள் முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போவதுடனே கவர்ன்மெண்டார் அன்னோருக்கு உபகாரஞ் சம்பளமும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். டோக்கியோ என்னும் பட்டணத்தில் இஸ்லாமிய புத்தகாலய மொன்று திறக்கப்பட்டும், அச்சுக்கூடம் ஏற்படுத்தப்பட்டு அதன் மூலம் குர்ஆன் ஷரீப் அச்சிடப்பட்டும் வருகிறது. சமீபத்தில் ஓர் அரபிக்கலாசாலை ஸ்தாபிதஞ் செய்ய வேண்டுமென்னும் ஆலோசனை நடைபெற்று வருவதாயும் தெரிகிறது. அரசகுடும்பத்துக்குச் சம்பந்தப்பட்டவர்களிற் சிலர், இஸ்லாம் மதத்தைக் கொண்டு சிறப்புற்றுத் திகழ்வது பாராட்டத்தக்கதாகும். அதி சமீப சில நாட்களாக ஓர் புரபஸர் குர்ஆன் ஷரீபின்மேன்மைகளைப்பற்றி துயர்படியாக சொற்பெருக்காற்றி

வருகின்ருர். அப்பிரசங்கங்கள் ஆகான வஸனி மூலம் ஜப்பான் முழுதும் பரவச்செய்யப்படுகின்றன. 50 லக்ஷம் எண் செலவு மதிப்பிடப்பட்டு, ஓர் பள்ளிவாயல் தயாரிக்கப்பட்டு வருகிறது. மிஸ்ர் பட்டணத்திலுள்ள 'ஜாமிஅ அஜ்ஹர்' கலாசாலையிலிருந்து ஓர் பிரசாரக் கோஷ்டி அங்கு சென்றிருக்கிறது. ஜப்பானியர் பின்பற்றியொழுகுவதற்குத் தகுந்த மார்க்கம் சத்திய இஸ்லாம்தான் என, அங்குள்ள ஜப்பானிய புரப்ஸர்களிலனேகர் அபிப்பிராயங்கூறி வருகின்றனர். மஞ்சூரியாவிலுள்ள கலாசாலையில் புரப்ஸராக இருக்கும் மிஸ்ர் வாசியான முஹம்மது ஹஸன் அவர்கள், ஜப்பான் கூடிய சீக்கிரம் இஸ்லாத்தைத் தழுவிவிடுமென்றும், ஆனால், ஜப்பான் பாஷையில் பிரசாரம் புரியக் கூடிய உலமாக்கள் கிடைப்பது அரிதாக இருப்பதே அதற்குத்தடையாக இருக்கிறதென்றும், இத்தடை நீங்குவதற்கு நாம் தக்கமுயற்சி எடுக்கவேண்டுமென்றும் கூறியிருக்கின்ருர்கள்.

இஸ்லாத்தின்மீது தூஷணை கூறுவதைத் தடுக்கும் மசோதா

ஹாஜீ சேட் அப்துல்லா ஹாரூன் அவர்கள் அடியிற் கண்ட தீர்மானத்தை இந்திய சட்ட சபைக்குக் கொண்டுவரப் போவதாக நோட்டீஸ் கொடுத்திருக்கிருர். அதாவது:—

"இஸ்லாத்தின்மீது குறைகூறியும், இஸ்லாமிய சட்டங்களை இழிவுபடுத்தியும் முஸ்லிம்களின் மனதைப் புண்படுத்துவதாக இருக்கிற எல்லாப் புத்தகங்களையும், அச்சிடுவதையும் அதனைப் பிரசுரிப்பதையும் தடுப்பதற்காக மாகாண அரசாங்கங்களுக்கு அதிகாரங் கொடுத்து, ஓர் அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்க வேண்டுமாக சபையோடு கூடிய கவர்னர் ஜெனரலை இச்சபை கேட்டுக்கொள்ளுகிறது. இஸ்லாத்தின் ஸ்தாபகரை இழிவுபடுத்தும் விதமான புத்தகங்களை அச்சிடுபவர்களையும் பிரசுரிப்பவர்களையும் குற்றவாளிகளென்று முடிவுசெய்யவேண்டுமென்று மாகாண கவர்ன்மெண்டுக்கு அறிவித்துவிட வேண்டுமென்றும், இதற்கெனப் பிரத்தியேகமான சட்டம் இயற்றப்படும்வரை இவ்வவசரச் சட்டம் அமுலில் இருந்து வரவேண்டும்" என்றும் அதில் குறிப்பிட்டிருக்கிருர்.

ஈதுல் அல்ஹா

துல்ஹஜ்ஜு மாதம் 10-ம்தேதிக்கு ஈதுல் அல்ஹா என்று பெயர். இது ஹிஜ்ரீ முதலாவதாண்டில் ஆரம்பமாயிற்று. "அய்யாம ஜாஹிலியத்" என்னும் பண்டைய காலத்தில் மதீனவாசிகள் ஒவ்வொரு ஆண்டிலும் இரண்டு தினங்களை ஏற்படுத்தி, அதனைப் பெருநாளாகக்கொண்டு சந்தோஷங் கொண்டாடி வந்தனர். எம்பெருமானர் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் மதீனமா நகருக்கு ஹிஜ்ரத்துச் செய்து வந்த காலை மக்களிடம், அவர்களின் க்ஷேமலாபங்களை விசாரித்தார்கள். அதுபொழுது "யாங்கள் இஸ்லாத்துக்குமுன் ஒவ்வொரு ஆண்டிலும் இரண்டு நாட்களைக் கொண்டாட்டத்திற்குரிய தினங்களாக ஏற்பாடு செய்திருந்தோம்" என அன்னேர் அறிவித்தனர். இதனைச் செவியுற்ற பெருமானர் (ஸல்.) அவர்கள், இது பொழுது உங்களுக்கு இதைவிட மேலான இரண்டு தினங்களை அல்லாஹ் தஆலா அளித்திருக்கிருனெனக் கூறி, அஃது ஈதுல்பித்ர், ஈதுல் அல்ஹா ஆகிய இவ்விருதினங்களுமாகுமெனத் தெரிவித்தார்கள். அதுமுதல் முஸ்லிம்களாகிய நாம் இவ்விரண்டு தினங்களையும் பெருநாளாகக் கொண்டாடி வருகிருேம்.

அன்று ஆற்றவேண்டிய பணிகள்:—

(1) ஈதுல்அல்ஹா வன்று அதிகாலையிலெழுந்து மற்ற இதர நாட்களைப் பார்க்கினும் அல்லாஹ் தஆலாவை அதிகமாகப் புகழ்வதுடன், நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள்மீது மிகுவமாக சலவாத்தும் ஓதவேண்டும். (2) வீடு வாயல் முதலிய யாவற்றையும் துப்புரவுசெய்து அலங்கரித்து வைக்கவேண்டும். (3) தொழுகைக்கு முன் ஸ்நானஞ்செய்து அதே ஒளுவைக் கொண்டு ஈதுத் தொழுகையை நிறைவேற்றி வைப்பது சுன்னத்து. (4) பல் துலக்க

வேண்டும். (5) புதிய உடுப்புகளையாவது, அல்லது தன்னிடமுள்ளதில் அழகானதும் துப்பரவானதுமாகிய உடுப்புகளையாவது அணிந்து கொள்ளல்வேண்டும். (4) தன்னால் இயன்றமட்டில் ஏழைகளுக்கு அன்ன, வஸ்திர தானஞ் செய்யவேண்டும். (7) வாசனை திரவியம் பூசிக் கொள்ளல்வேண்டும் (சென்டில் சாராயம் கலக்கப்பட்டிருப்பதால் அதனைப் பூசிக்கொள்ளலாகாது) (8) சுர்மா போட்டுக் கொள்ளவேண்டும். (9) அதிகாலையிலேயே தொழுகை நடைபெறுமிடத்துக்குச் செல்லவேண்டும். (10) தொழுகை நிறைவேற்றப் படுவதற்குமுன் யாதொன்றையும் புசியாதிருப்பது மேல் (11) தொழுது வந்தவுடன் குர்பானியின் மாமிசத்தைப் புசிப்பது உத்தமம். (12) தொழுகைக்காகக் கால்நடையாகச் செல்வதும், பாதையில் தக்பீர் சொல்லிக்கொண்டு போவதும் மேலாகும்.

தொழுகை நிறைவேற்றப்படுமிடத்துக்குச் சென்று இரண்டு ரக்கத்து ஜமாஅத்துடன் நிறைவேற்றப்படல் வேண்டும். அதன்பின் குத்பா ஓதுவது சுன்னத்து. முஸ்லிம்கள் ஒரே நேரத்தில் ஒன்றுகூடி, ஒரேவிதமான கோலத்தில் தொழுகையை நிறைவேற்றி வைப்பதானது, இஸ்லாத்தின் சிறந்த மகுத்துவத்தை வெளியிட்டுக் காண்பிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதனால், முஸ்லிம்கள் யாவரும் ஒன்றுபட்டு, ஏக ஐக்கியமாய் வாழ்வது கொண்டு அபரிமிதமான பிரயோஜனங்களிருக்கின்றது என்னும் படிப்பினை மக்களுக்கேற்படுகின்றது.

ஈதுல் அல்ஹாத் தொழுகையை அதிகாலையிலே நிறைவேற்றுவது மேலாகும். அதாவது, சூரியன் உதயமாகி சுமார் ஒருமணிக்குப் பின்னிருந்து பகல் 12 மணிவரை தொழுகை நேரம் ஏற்பட்டிருந்த போதிலும் முந்திய நேரத்திலேயே நிறைவேற்றப்படல் வேண்டும்.

தக்பீர்தஷ்ரீக்

துல்ஹஜ்ஜுமாதம் 9-ம் திகதியின் அதாவது, "அறபா" நாளின் சுப்ஹு தொழுகையிலிருந்து 13-ம் நாள் அஸர் தொழுகை முடியவுள்ள ஒவ்வொரு நேரத் தொழுகைக்குப் பின்னும்தக்பீர் சொல்லவேண்டும். இதன் கருத்தாவது, பெருநாளை உத்தேசித்து இத்தினங்களில் சந்தோஷத்திற்கறிகுறியாக தக்பீர் முழக்க மேற்படல் வேண்டுமென்பதேயாம். இதற்காகத் தான் ஈதுத் தொழுகைக்குச் செல்லும்போதும் வரும்போதும் தக்பீர் சொல்லவேண்டுமென மார்க்கமாக்கப்பட்டிருக்கின்றது. இதுவன்றி இந்நாட்களில் கடைவீதி முதலியவைகளில் ஜனங்கள் சாதாரணமாகத் தக்பீர் சொல்வார்களாயினும் அதையும் விலக்கக் கூடாதென சன்மார்க்கம் கட்டளை இடுகின்றது.

குர்பானீ

(ஹனபி மத்ஹப் பிரகாரம்)

சீமானாகிய அதாவது, குடியிருக்க வீடு முதலிய முக்கிய வஸ்துக்களிருப்பதுடன் கடனாளியாக இல்லாமலுள்ள ஒருவனிடம் $52\frac{1}{2}$ ரூபாய் பெருமான ரொக்கம் முதலிய சொத்துக்களிருக்குமாயின், அவன்மீது குர்பானீ வாஜிபாகிவிடுகின்றது. எவன் தம்மீது குர்பானீ வாஜிபாக இருக்கும் நிலைமையில், அக்கடமையை நிறைவேற்றவில்லையோ அவன் விஷயமாய் பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் கூறியிருப்பதை ஊன்றிகவனிப்போமாக. அதாவது, "சீமானாயுள்ள ஒருவன் குர்பானீ கொடுக்காம விருப்பானாகில் அவன் நம்முடைய மஸ்ஜிதுக்கு வரவேண்டாம்" என்பதே. எனவே, குர்பானீ தம்மீது கடமையாக இருக்கும் நிலைமையில் அதனை நிறைவேற்றாம விருப்பவர்கள் விஷயத்தில் பெருமானார் (ஸல்.) அவர்கள் எவ்வளவு கடும் வார்த்தையை உபயோகித்திருக்கின்றார்களென்பதை சிந்தையில் கொண்டுவருவோமாக. ஆகவே, குர்பானீ கொடுக்கக் கடமைப்பட்டுள்ளோர் அதனை நிறைவேற்றாவிடின் குற்றவாளியாவர். குர்பானீ செய்யப்படும் பிராணியின் உரோமங்களின் கணக்குப்படியும், உதிரச் சொட்டுகளின் கணக்குப் பிரகாரமும் குர்பானீ கொடுத்தவருக்கு மறுமையில் இறைவனால் நற்கூலியளிக்கப்படும். இஃது நம் சன்மார்க்கத்தின் தீர்ப்பாகும். குர்பானீ செய்யப்படும் பிராணி புஷ்டியுள்ளதாகவும், கொம்புள்ளதாயும், குற்றமற்றதாயுமிருக்கவேண்டும். ஆகவே, மெலிந்துபோனதும், கண் பார்வையற்றதும், காதில்பாதி அல்லது அதற்குமேல் அறுக்கப்பட்டதும், கொம்பு, பாதி அல்லது பாதிக்குமேல் உடைந்ததுமானவைகளை குர்பானீ செய்வது கூடாது. ஆனால் உடையடிக்கப்பட்ட கடா, மோழைக்கடா இவைகளைக் குர்பானீ கொடுக்கலாம்.

மாடு, பசு, எருமை, எருமைக்கடா இவைகள் இரண்டுவயதுக்குக் குறையாததாக இருக்கவேண்டும். வெள்ளாடு ஒரு வயதுக்குக் குறையாததாயும், செம்மறி தும்பை ஆடு 6 மாதத்

திற்குக் குறையாததாகவு மிருக்கவேண்டும். இவைகளன்றி வேறெந்தப் பிராணியையும் குர்பானீ கொடுக்கலாகாது.

தன்னுடைய கையினாலேயே குர்பானீ செய்யவேண்டும். வேறொருவரைச் செய்ய ஏவினால், குர்பானீ செய்யுமிடத்தில் அவன் கூட இருக்கவேண்டும். பசு, எருமை, எருமைக்கடா, ஒட்டகம் இவை ஒவ்வொன்றும் ஏழு குர்பானிக்குச்சமமாகும். ஆதலால், ஏழு பேர் சேர்ந்து ஒரு பசுவையோ, எருதையோ குர்பானீ கொடுக்கலாம். ஆனால் ஏழுபேரும் குர்பானீ கொடுப்பவராகவே இருக்கவேண்டும். இவ்வாறு பலர் சேர்ந்து கொடுக்கும் குர்பானியாக இருந்தால், அதன் மாமிசத்தை நிறுத்துப் பாகம் செய்துகொள்ளவேண்டும்; உத்தேசமாகச் செய்துக்கொள்ளலாகாது.

குர்பானியின் மாமிசத்தை மூன்று சம பாகமாகப் பிரித்து, ஒரு பாகத்தை ஏழைகளுக்கும் மிஸ்கீன்களுக்கும் கொடுத்துவிட்டு பாக்கியுள்ள இரண்டுபாகத்தை தானும் தன் குடும்பத்தினரும், தன் பந்துமித்திரர்களும் உபயோகித்துக் கொள்ளலாம்.

குர்பானீ செய்பவர் துல்ஹஜ்ஜு மாதம் பிறை பிறந்ததிலிருந்து குர்பானீ செய்யும் வரை தலைக்ஷவரம் செய்துகொள்ளாமலிருப்பது நலம். குர்பானீ கொடுக்க சக்தியற்றோர் அம்மாதம் பிறை பிறந்ததிலிருந்து ஈதுல் அல்ஹா பெருநாள் தொழுகை முடியும்வரை க்ஷவரம் செய்துகொள்ளாமலும் நகம் வெட்டிக் கொள்ளாமலும் இருந்தால் அவர்களுக்கும் தவாபு கிடைக்கும்.

ஏதேனும் தவிர்க்கமுடியாத காரணத்தால் துல்ஹஜ்ஜு மீ 10வ முதல் 12வக்குள் குர்பானீ கொடுக்க முடியவில்லையானால், அதன் கிரயத்தை சதக்கா செய்யவேண்டும். குர்பானிக்காகப் பிராணி நிறுத்தப்பட்டிருந்தால் அந்தப் பிராணியை விற்பனைசெய்து, அந்தத் தொகையைச் சதக்கா செய்துவிடவேண்டும்.

குர்பானித் தோல்களை ஏழைகளுக்குச் சொந்தமாக்கி விடவேண்டுமென்பது குர்பானீ நிறைவேறுவதற்கு முக்கிய நிபந்தனையாகும். ஆகவே, அந்தத்தோலை விற்றுத் தனக்குச் சொந்த உபயோகப்படுத்திக்கொள்ளக் கூடாது. இந்தப்பணத்தைக் கொண்டு மத்ரஸா கட்டிடச் செலவு, உஸ்தாது, பேஷ் இமாம் சம்பளச் செலவு, ஊர்பொதுவில் பல விஷயங்களுக்காகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பண்டுகள் முதலிய செலவுகளைச் செய்யலாகாது. ஆதலால், நம் நேயர்கள் இவ்விஷயத்தை கவனத்தில் வைப்பார்களாக.

(ஷாபிஈ மத்ஹப் பிரகாரம்)

ஹஜ்ஜுப் பெருநாள் இரவுபகலில் தனக்கும், தன் பராமரிப்பிலுள்ளவர்களுக்கும் தேவையுள்ள செலவுகளைவிட்டு அதிகமான ஐவேஜியுள்ளமுஸ்லிமான ஆக்கில் பாலிகானவர்கள்உலுஹிய்யாக் கொடுப்பது சுன்னத்து முஅக்கதா. மிருகங்களை அறுக்கும்போதோ, அல்லது அதற்கு முன்னதாகவோ உலுஹிய்யா என்று நிய்யத்துச் செய்வது ஷர்த்து. இந்த நிய்யத்துச்செய்வதற்கும், அறுப்பதற்கும்,புத்தி சுவாதீனமுள்ள வேறு ஒரு முஸ்லிமை தமக்குபதிலாக வக்கீலாய் நியமிக்கலாம். இந்த உலுஹிய்யா பிராணியின் மாமிசத்தில் கொஞ்சமாயினும் குறைந்தது ஒருபக்கீருக்காவது ஸதக்காக் கொடுப்பது வாஜிபு. ஆனால் மாமிசத்தைச் சமைத்துப் பக்குவப்படுத்திக் கொடுப்பது கூடாது. பிராணியின்தோலை ஸதக்காச்செய்வதுமேல். ஆனால் அதைத்தன் உபயோகத்தில் வைத்துக்கொள்ளவிரும்பினால், அதனால் செருப்பு முதலியன தைத்து உபயோகித்துக் கொள்ளலாம். உலுஹிய்யாக் கொடுக்கப்பட்ட பிராணியிலுள்ள எதையும், தோலையும் விற்பனை செய்வதும், அதை அறுப்பவர்களுக்குக் கூலியாகக் கொடுப்பதும், காபிர்களுக்குக் கொடுப்பதும் ஜாயிஸல்ல.

இஸ்லாமும் தேசியமும்

ஸ்பெயின் தேசத்தை ஜெயித்து வெற்றிக் கொடி நாட்டிய வாலிபத் தளகர்த்தரான ‘தாரிக்கே அஃஜம்’ அவர்கள், ஸ்பெயின்தேசத்தின் கரையில் இறங்கும்போது அவரிடம் சொற்ப சைனியங்களே இருந்தன. ஆனால் அவரின் எதிரில், மிகவும் விஸ்தீரணமான அந்நியரின்

தேசத்தைக் கைப்பற்றவேண்டிய பெரிய காரியம் முன்னின்றது. இந்நிலைமையில் தமது தாய் நாட்டை விட்டு ஆயிரக்கணக்கான மைல்கடந்து வந்திருப்பதும், அந்நியர்களை எதிர்த்து யுத்தம் செய்யவேண்டியதிருக்கிறது என்பதும், எதிரிகளின்படை பலம் இவ்வளவு தான் என்பது தெரியாதிருப்பதும், தமது போர் வீரர்களின் ஊக்கம் குன்றி ஒருவேளை அவர்கள் பின்வாங்கி ஓடத்தலைப்பட்டுப் போய்விடக் கூடும் என்பதும் அவரது எண்ணத்தில் தோன்றிற்று.

"எனவே, அவர்கள் உறுதிகொண்டால், அல்லாஹுவின் மீது தவக்கல் (என்னும் நம்பிக்கை) வைக்கட்டும்" என்ற ஆயத்தை ஓதிக்கொண்டு, தமது கப்பல்களுக்கு நெருப்பை வைத்து நாசப்படுத்தி விடும்படி உத்தரவுசெய்தார். அதுபொழுது "நாம் நமது தாய்நாட்டை விட்டு இவ்வளவு தூரத்திலிருக்கிறோமே; ஊர் திரும்புவதற்கு வேறு ஒருஉபாயமுமில்லையே" என்று பட்டாளத்தார் பகர்ந்தனர். அச்சமயம் இஸ்லாத்தின் உண்மைப் புதல்வரான "தாரிக்கே அஃஜம்" அவர்களின் நாவிலிருந்து வெளிப்பட்ட பதில் என்னவென்று நினைக்கிறீர்கள்? அவரைத் தேசாபிமானியல்லவென்று எவரேனும் கூற முடியுமா? சிறுபிள்ளைகளைக் கேட்டாலும் அவரைப் பக்கா தேசாபிமானி என்றே கூறுவர். அவர் கூறியபதில் நம் முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் கவனிக்கத்தக்கதாகும். அவர் கூறிய வார்த்தைகளின் உட்கருத்தை நம்மவர்கள் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும். அக்காலத்து முஸ்லிம்கள் எம்மாதிரி இருந்தார்கள்? இப்பொழுது நாம் எவ்வாறிருக்கிறோம் என்ற விஷயத்தைச் சிந்தித்துப் பார்ப்பார்களாக.

இஸ்லாத்தின் உண்மைப் புதல்வரான மகா தளகர்த்தர் "தாரிக்கே அஃஜம்" கூறிய பதில் யாது? அவர்கூறியதானது: தேசமா? யாருடைய தேசம்? தாய் நாட்டை விட்டுத் தூரத்திலிருக்கிறோமோ; ஒவ்வொரு நாடும் நமது நாடுதான்; அல்லாஹு தஆலாவால் சிருஷ்டிக்கப்பட்ட தேசம் முழுவதும் நம்முடையதுதான்; எல்லாதேசமும் அல்லாஹு தஆலாவால் சிருஷ்டிக்கப்பட்ட தேசமாகும். இன்னும் எந்த தேசம் அல்லாஹு தஆலாவால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறதோ அது நம்முடைய தேசமாகும்; இவ்வையகம் முழுவதும் முஸ்லிம்களின் தேசமாகும்" என்று பதில் கூறினார். உடனே, கப்பல்கள் நெருப்பாலழிக்கப்பட்டன; ஊர்திரும்புவதற்கான சாதனம் ஒழிக்கப்பட்டுவிட்டது. ஒன்று அந்நாட்டை ஜெயித்துத் தங்களது நாடாக அதை ஆக்கவேண்டும். அல்லது அவ்விடத்திலேயே இஸ்லாத்துக்காக உயிர்த்தியாகம் செய்து மண்ணில் மறையவேண்டும். இவ்விரண்டில் ஒன்றுதான் அதுபொழுது அவர்கள் முன்னிலையிலிருந்தது. ஆதலால், உயிரை வெறுத்து யுத்தம் புரிந்தனர்; ஒரு சொற்ப ஜனங்களை வைத்துக்கொண்டு அத்தேசத்தை ஜெயித்து வெற்றிக்கொடியை நாட்டினார்.

நாம் இவ்வாக்கியங்களிலுள்ள உட்கருத்துகளில் ஒன்றிரண்டை எடுத்துரைக்கு முன், தேசாபிமானம் வேறு, சமூகாபிமானம் வேறு என்று இரண்டையும் வெவ்வேறாகப் பிரிக்கும் கனவான்கள் நம்மீது தப்பர்த்தங் கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறோம். அவர்களுக்கு இவ் விந்திய நாட்டின்மீது எவ்வளவு அபிமானமும் பற்றுமிருக்கிறதோ அதில் கடுகளவும் குறைந்த அபிமானமும் பற்றும் நமக்குக் குறைந்ததில்லை என்பதை அறிவித்துக் கொள்கிறோம். இவர்கள் தங்களை முதலில் இந்தியர் என்றும் அப்பால் முஸ்லிம் என்றும் கருதுவதாகத் தங்கள் பிரசங்கங்களிற் கூறிக்கொள்கிறார்கள். இவர்கள் தங்கள் மனத்தில் தோன்றுவதைக் கூறிக்கொள்ளட்டும்; அதைப்பற்றி நமக்கு அக்கறை இல்லை. ஆனால், தங்களைப் போலவே பிறரும் கருதவேண்டுமென்று பிரசாரம் செய்வது தான் பிசகான காரியமாகும். இப்படிப்பட்ட பிரசாரம் செய்து ஏழை முஸ்லிம்களைப் படுகுழியில் ஆழ்த்த முயற்சிக்கும்போது, அதிலுள்ள தீமைகளை அவ்வேழை முஸ்லிம்களுக்கு எடுத்துக்கூறி, அப்படிப்பட்ட தீங்கான கொள்கையில் ஆழ்ந்து இஸ்லாத்தை இரண்டாந்தரமாக மதிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ள நமக்கும் உரிமையுண்டு. இப்படிப்பட்ட உரிமையை உத்தேசித்துத் தான் இதனைப்பற்றி எழுத நாம் முன்வந்தனம். இவ்வியாசத்தைப் பார்த்தால், இந்நாட்டிலுள்ள சுயநலங்கொண்ட வௌவால் பத்திரிகை நம்மீது சீறிவிழுகலாம். அஃது ஒருபக்கல் முஸ்லிம்கள்பால் அபிமானங் கொண்டதாகவும், இஸ்லாத்துக்கு உழைப்பதாகவும் கூறிக்கொள்ளும். அதே மூச்சில் இஸ்லாத்தையும் முஸ்லிம்களை

யும் இந்நாட்டில் அடக்கி ஒடுக்கிவைக்கப் பிரயத்தனம் செய்யும் கோஷ்டியினருக்காக வக்காலத்து வாங்கிக்கொண்டு, தேசாபிமானம் என்று கூறிக்கொள்ளும். அதற்கடுத்த நிமிஷத்தில் ஆரிய சமாஜிகளும், கிறிஸ்துவர்களும், சுயமரியாதை இயக்கக்காரர்களும் தம்முடைய இஸ்லாமிய சமூக ஊழியத்தைக் கண்டு பீதியடைந்து நடுங்குவதாகப் பறை சாற்றிக்கொள்ளும். இப்படிப்பட்ட.......பத்திரிகைக்கு எவ்விதக்கொள்கை இருக்கிறதென்பதை இக்காசினியோர் உணராமலில்லை. இருக்கட்டும்! இனி விஷயத்தைக் கவனிப்போம்.

முஸ்லிம் முஸ்லிம்தான். சகல விஷயத்திலும் முஸ்லிம்தான். அவன் செய்யும்ஒவ்வொரு காரியமும் முஸ்லிமாக இருந்துதான் செய்ய வேண்டும். அவன் முந்தியும் பிந்தியும் முஸ்லிம். அவன் சகலகாரியங்களையும் இஸ்லாத்துக்குப் பொருத்தமாக இருக்கிறதா என்று கவனிக்க வேண்டும். இதுதான் முஸ்லிம் என்று கூறிக்கொள்வோரின் முதல் லக்ஷியமாக இருக்கவேண்டும். ஹஜ்றத் அலீகர்ரமல்லாஹு அவர்கள் 'இவ்வுலகம் அழியக்கூடியது; இது சிலந்தி வலையைப்போல மிக அற்பமானது; அநித்தியமானது; ஆகவே, மனித! நீ, இவ்வுலகில் உயிர்வாழ்வதற்குப் போதியவளவு சாதனங்களைத் தேடிக்கொள்வதே போதுமானது; கொஞ்ச காலத்துக்குப்பின் இவ்வுலகில் இருக்கிற சகலமும் அழிந்துவிடும்; ஆகவே, வெறும் வீடான இவ்வுலகை நேசிக்காதே; எப்பொழுதும் அழிவுறாத நித்திய உலகில் உனக்கு வீட்டை உண்டாக்கிக்கொள்" என்று கூறி இருக்கிறார்கள். திருகுர்ஆன் இந்த உலகத்தை வீணானதென்றும் விளையாட்டானதென்றும் விளம்புகிறது. நம்மை இறைவன் சிருஷ்டித்ததே அவனை வணங்குவதற்கென்று திருமறை பகர்கிறது. இவ்வாறு நம்மை இஸ்லாம் ஒரு பக்கல் அழைக்கும்போது இந்தியாவிலுள்ள ஹிந்துக்கள் "நீங்கள் முதலில் இந்தியராகுங்கள்; அப்புறம் முஸ்லிம்களாக இருங்கள்" என்று மறு பக்கலில் அழைக்கிறார்கள். இதற்கு என்ன அர்த்தம்? தேசத்துடைய நன்மையை இஸ்லாத்தின் நன்மையைப் பார்க்கினும் முதன்மையாகக் கருதுங்கள் என்பதில்லையா? தொழுகைக்கு நேரமாகி விட்டது; பாங்கு சொல்லியாகி விட்டது; தொழுகை தவறிப்போய்விடும்போலிருக்கிறது. இப்படிப்பட்ட சமயத்தில் காங்கிரஸ் மகாநாட்டிலோ அல்லது அஸம்பிளியிலோ தேசத்தைப்பற்றிய முக்கிய பிரசினை விவாதிக்கப்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். இந்த சமயத்தில் ஹிந்துக்கள் சொல்லுவதுபோல் தொழுகையை அலக்ஷியம் செய்துவிட்டு தேசிய பிரசினையிலன்றோ நாம் கவனத்தைச் செலுத்தவேண்டும். போகட்டும், காங்கிரஸ் சபை "வந்தே மாதரம்" பாட்டுத்தான் தேசியப்பாட்டு; அதை யாவரும் படிக்கவேண்டும்; அதிற் சொல்லப்பட்டதை நம்பவேண்டும் என்று முடிவு செய்கிறது. இதன்படி முஸ்லிம்களாகிய நாமும் தேசியக் கொள்கைப்படி அதனைச் சொல்லக் கடமைப்பட்டுவிடுகிறோம். அவ்வாறு கூறுவதில் என்ன கருத்து இருக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டாமா? பாரதமாதாவே! நாம் உன்னை வணங்குகிறோம்" என்பது அதன் பொருளல்லவா? அவ்வாறு கூறுவது இஸ்லாத்தின் சட்டத்துக்கு முற்றிலும் விரோதமில்லையா? இந்தச் சமயங்களில் நாம் இஸ்லாத்தை கைதவற விட்டுவிடுவதா? என்பதை நம்மவர் கவனிக்க வேண்டும்.

இந்தக்கொள்கையுள்ள முஸ்லிம்கள் தேசாபிமானம், ஈமானின் ஒரு அம்சம் என்று வாதிக்கிறார்கள். உண்மைதான். ஈமானின் ஒரு அம்சத்தைக் காப்பாற்றுவதற்காக நாம் ஈமானையே அடியுடன் விட்டுவிடுவதா என்று வினவுகின்றோம். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் நமக்கு எதைப்போதித்தார்கள்? "ஹஜ்ஜதுல் விதாஉ"வின் போழ்து அவர்கள் கூறியதென்னவென்று கவனித்துப் பாருங்கள்? "அறபிதேசத்தாருக்கு அஜமி தேசத்தாரின் மீது விசேஷ அந்தஸ்து இல்லை; அஜமி தேசத்தாருக்கு அறபிதேசத்தாரைப் பார்க்கினும் விசேஷச் சிறப்பு இல்லை; நீங்களனைவரும் ஆதமுடைய மக்கள்; ஆதம் மண்ணினால் சிருஷ்டிக்கப்பட்டவர்" என்று கூறி இருக்கிறார்கள். எனவே, இக்காலத்திலுள்ளோர் தேசியம் என்று கூறுவது இந்த ஹதீதுக்கு நேர் முரணல்லவா? முஸ்லிம் என்று சொல்லிக்கொள்வோர் அனைவரும் தேசியம் என்று இப்பொழுது சொல்லிக்கொள்ளும் குறுகிய திருஷ்டியை விட்டு விடுபட்டு உலகத்திலுள்ள சகல மக்களையும் ஒன்றுபோலன்றோ கருத வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, "தாரிக்கே அஃஜம்" அவர்கள் கூறியதுபோல

நாம் அனைவரும் இவ்வுலகம் அனைத்தையும் ஒன்றுபோல் கருதி ஜனசமூகத்துக்கன்றோ ஊழியம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். எனவே, தேசாபிமானத்தைக் காட்டினும் சமூகாபிமானமாகிய இஸ்லாமபிமானமே சிறந்தது என்பது விளங்கவில்லையா? இக்காலத்திலுதித்த சமயசஞ்சீவிச் சுய நலமிகள் கூறுவதுபோல், முஸ்லிம்கள் தாங்கள் இஸ்லாமபிமானத்தைக் கைவிட்டு தேசாபிமானத்தைக் கைகொள்ளுவதானது, இஸ்லாத்தைக் கைவிடுவதற்கு ஒப்பாகுமென்பதை உணருவார்களாக. வமாஅலைனா இல்லல்பலாக்.

காதியானியத்தை ஒழிக்க காஜீ முஸ்தபா கமால்பாஷா ஜிஹாது செய்வாராம்?

இஸ்தம்பூலில் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்க ஸ்தாபனம்

லாகூரில் பிரசுரமாகும் "இஹ்ஸான்" என்ற தினசரிப் பத்திரிகைக்கு, அதன் துருக்கி நிருபர் ஒரு கடிதம் எழுதியுள்ளார். அக் கடிதத்தில் காதியானீ பித்னாவைப்பற்றிய முக்கிய விஷயம் வரையப்பட்டிருக்கிறது. அதன் சாராம்சம் வருமாறு:--

சென்ற ஜனவரி மீ 20உ இஸ்தம்பூல் ஜாமிஆ மஸ்ஜிதில் ஆயிரம் முஸ்லிம்களைக் கொண்ட பிரமாண்டமான மகாநாடொன்று நடைபெற்றது. இதற்கு 50 தலைவர்கள்வரை விஜயஞ் செய்திருந்தனர். ஜும்ஆத் தொழுகைக்குப் பின் உலமாக்களின் தலைவரான ஜனாப் ஹாபிஜ் நூர் அஹ்மது என்பவர் ரேடியோ மூலம் காதியானீ இயக்கத்தைப்பற்றிப் பிரசங்கம் புரிந்தார். அதில், அநேகம் தேசங்களில் இது காலைப் பலஜனங்களும் தோன்றிச்செய்துவரும் சிலகாரியங்கள் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் கண்ணியத்துக்குப் பங்கம் விளைவிப்பனவாக இருக்கின்றன; இந்தியாவில் வாழும் நம்முடைய இந்திய சகோதரர்களின் மத உணர்ச்சி புண்படுத்தப்படுகின்றன; இவ்வாறு புண்படுத்தும் கூட்டத்தாரில் மிர்ஜாயீ காதியானிகூட்டத்தார் முன்னணியிலிருக்கின்றனர். இவ்வகுப்பின் ஸ்தாபகரான மிர்ஜா குலாம் அஹ்மது காதியானீ என்பவர் திருகுர்ஆனிலுள்ள ஆயத்துகளையும்கூட மாற்றி விட்டார்; ஜிஹாது செய்வது கூடாது என்று அந்த ஆயத்தை மன்ஸூகாக்கி விட்டார். உலகத்திலுள்ள எல்லா முஸ்லிம்களையும் காபிர் என்று முடிவுசெய்து விட்டார்; இந்த ஜனங்கள் கேவலத்திலும் கேவலமான செய்கைகளையும் கூடச் செய்யப் பின்வாங்குவதில்லை; மிர்ஜா பஷீருத்தீன் மஹ்மூது என்பவர் உலகத்துக்கு ஆத்மார்த்தத் தலைவர் என்று தன்னைக் கூறிக்கொண்டிருக்கிறார்.

ஆகவே, துருக்கி தேசத்திலுள்ள உலமாக்கள் இந்த பித்னாவை ஒழிப்பதற்காக உயிராலும் பொருளாலும் ஜிஹாது செய்யும் விஷயத்தில் பின்வாங்கக்கூடாது. ஏனெனில், இக்கூட்டத்தார்தான் மகாயுத்தத்தின்போழ்து துருக்கியின் தோல்வியைப்பற்றி சந்தோஷங் கொண்டாடியவர்கள்; இன்னும், அறபஸ்தானிலிருந்து அறபிகளை வெளிப்படுத்தியதற்காக இந்திய அரசாங்கத்துக்கு வாழ்த்துக் கூறியவர்கள் எனக் குறிப்பிட்டார்கள். ரேடியோமூலம் இப்பிரசங்கத்தை செவியுற்ற காஜீ முஸ்தபா கமால் பாஷா அவர்கள் அங்கோராவிலிருந்து அதே ரேடியோ மூலம் இப்பிரசங்கத்துக்கு மறுமொழியாகப் பிரசங்கம் புரிந்தார். அதில் அவர் கூறியதாவது:—

துருக்கியின் விரோதிகள் 'இஸ்லாத்தின் போதனையைவிட்டு துருக்கியராகிய நாம் மாறிவிட்டதாக வெளிப்படுத்துகிறார்கள். ஆயினும், நாம் முஸ்லிம்களாகத் தானிருக்கிறோம். நமக்குத் தேசத்தை பிடித்துக்கொள்ள வேண்டுமென்ற ஆசை இல்லை. ஆனால், முஸ்லிம்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க வேண்டுமென்று கருதுகிறோம். ஜிஹாது செய்பவருக்கு இந்தியா தூரத்திலிருக்கிறது என்பது ஒரு பொருட்டல்ல. சமயம் வாய்ப்பின், இஸ்லாத்தின் கண்ணியத்தைக் காப்பதற்காக, அதன் மகிமையை நிலைநிறுத்துவதற்காக முஜாஹிதுகளின் முன்னணியில் சேர்ந்து கொள்வேன். வழிகெட்ட காதியானீ மிர்ஜாயிகளின் வகுப்பை

ஒழிப்பதற்காக நியாயமான சகல முறைகளை யும் செய்யுங்கள்! நான் உங்களது வெற்றிக்காக ஆசி கூறுகிறேன் என்பதே.

துருக்கிக் குடிஅரசுத் தலைவர் காஜீ முஸ்தபா கமால் பாஷா அவர்களின் பிரசங்கத்துக்குப் பின் கூட்டம் இனிது கலைந்தது. பின்னர் பிப்ரவரிமாதம் முதல்தேதியன்று இஸ்லாத் தின் பரிசுத்த உரிமைகளைக் காப்பதற்காக "ஹிபாஜத்துல் இஸ்லாம்" என்றபெயரால் ஓர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

குறிப்பு:—இது துருக்கி நிருபரின் கடிதத்தி லுள்ள சாராம்சமாகும். துருக்கியர் இந்தியா வுக்கு வருகிறது என்ற செய்திகள் வெறும் பேச்சு. ஆனல், காதியானிகளின் விஷமப் பிரசாரத்தைப்பற்றி இஸ்லாமிய நாடுகளில் எவ்வித உணர்ச்சி பரவுகிற தென்பதைத் தான் நாம் இங்கு கவனிக்க வேண்டும். திருகுர்ஆனின் ஆயத்துகளைத் திருத்தியும் மாற்றியும் புரட்டியும் கூறுபவர்களை எதிர்த்து ஜிஹாது செய்வதாக அந்நாட்டு முஸ்லிம்கள் கூறுகின்றனர். ஆனல் இந்நாட்டில் நாம் இதனைக் கண்டித்து எழுதினல், பொருமை யினல் எழுதுகிறோம் என்றும், நாம் குறுகிய புத்தியுள்ளவர்களென்றும், மூடக்கொள்கையி லிருக்கிறோம் என்றும் கூறிப் பொது ஜனங்களை ஏமாற்றிகொண்டு, கள்ள காதியானிகள் தங்க ளது வழிகெட்ட பிரசாரத்தைச் செய்கிறார்கள். துருக்கிக் குடியரசுத் தலைவர்களுக்கு இவர்கள் பால் என்னபொருமை ஏற்பட்டது என்பதைப் பொது ஜனங்கள் சற்று சிந்தித்துப் பார்ப்பார் களாயின், இவர்களது பிரசாரம் இஸ்லாத்துக்கு எவ்வளவுதூரம் முரண்பட்டது என்பது புல ஞகாமற் போகாது. (ப-ர்.)

முஸ்லிம்களும் வீண்செலவும்

மானிடன் செலவு செய்வது, ஒன்றிருக்கில் அது பிரயோசனமுடையதாகவோ அல் லது வீண் செலவாகவோ இருக்கிறது. பிரயோ சனமளிக்கும் செலவு செய்வதுகொண்டு தேகாரோக்கியம், ஐசுவரியப் பெருக்கு சந் துஷ்டி முதலியவைகள் கிட்டுகின்றன. வீண் செலவில் ஈடுபடுவது கொண்டு இவைகளை யெல்லாம் மெள்ளமெள்ள ஒவ்வொன்ருய் இழக்கும்படி நேரிடுகின்றது. மானிடன் ஏதா கிலுமொரு விஷயத்தில் ரூபாயைச் செலவிடு வதற்குமுன், இவ்விஷயத்தில் செலவிடுவதால் தனக்காகிலும் தன் குடும்பத் தினர்களுக்காகி லும் ஏதாவது இலாப நஷ்டங்கள் ஏற்படு கின்றதாவென்பதை தீர ஆலோசனைசெய்த பின்பே அச்செலவில் ஈடுபடுவதைப் பார்த் திருக்கிறீர்களா?

கோர்ட்டு விவகாரங்களில் ஐசுவரியங்களைச் செலவிடுவதால் இவன் அடையும் பயன் யாது? அதில் மானிடன் பெரும் பிரயாசையோடு அளவற்ற ஐசுவரியங்களைச் செலவிடுவதால், இதர மனிதன் தூக்கோ, அல்லது தண் டனையோ அடைகின்ருன். சிலகால் ஒரு ஊரார் அதிக்கிரமஞ் செய்வதுகொண்டு தண் டப்போலீஸ் ஏற்படுவதால், அதற்கான செலவு களை அக்கிராமவாசிகள் கொடுக்கும்படி நேரிடு கிறது. இவ்வாறே ஆடம்பர வாழ்க்கை, படா டோபம் முதலியவைகளில் மானிடர்களின் ஐசு வரியங்கள் அதிகமாய்ச் செலவிடப்பட்டு வரு வதால் இவைகளினல் அவனுக்கு நஷ்டமேற் படுவதைத் தவிர வேறு எவ்வாருன பிரயோ சனமு முண்டாகப்போகிறதில்லை. இதுவன்றி சிலர் மதுவருந்த முற்பட்டிருப்பதால், அத ஞல் திரேகக் கேடும் பொருள் நஷ்டமு மன்றி வேறு எவ்வாருன பிரயோசனமுமேற் படப்போவதில்லை. ஆகவே, மானிடன் எது வரை வீண்காரியங்களில் தனது ஐசுவரியத் தைச் செலவிடுவதை விட்டுத் தவிழ்ந்து கொள்ள மாட்டானே, அதுவரை மனேநிம்மதி ஐசுவரிய வாழ்க்கை முதலியவைகளை அடைய மாட்டான் என்பது திண்ணம். எனவே, சுக வாழ்க்கையையும் காருண்ய செல்வத்தையும் பெற்றுவாழ வேண்டுமெனக் கருதுவோர் நல வான—பிரயோசனமளிக்கும் காரியாதிகளில் செலவுசெய்ய முற்பட்டும், வீண் செலவுகளை விட்டு சதா தப்பித்தும் இருக்கவேண்டியது அத் தியாவசியமாகும். மானிடன் இதனை சிந்தையில்

கொண்டு கருமமாற்றி வருவானுயின், அவனது செல்வம் குறைந்துபோம் என்னும் பயமே அவனுக்கேற்படமாட்டாது; அவன் கடன் பளுவை சுமக்கவேண்டிய அவசியமுமிராது. மேலும் இவனுடைய அருமையான நேரங்கள் சண்டை சச்சரவுகளிலும் வீண்விவாதங்களிலும் செல்படியாகவுமாட்டாது. இதற்கு மாருய் மானிடன் செல்வத்தை வீண்விரயஞ் செய்வதிலீடுபட்டு, ரூபாயைப்பறக்க விடுவானுகில், அவனுக்கு நானுபக்கங்களிலும் கடன்வாங்கும்படியான நிர்ப்பந்த மேற்பட்டு விடுகிறது. கடனினுல் ஏற்படும் பிரயோசனம் யாவருக்கும் தெரிந்ததே. ஆகவே, மானிடன் வீண்செலவு செய்வதை விட்டுத் தப்பித்துக்கொள்வதால் பலவாருன கெடுதி துன்பம் மனுேசங்கடம் இவைகளேற்படாமல் சுகவாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கமுடியும். எனவே, நம் முஸ்லிம் நேயர்கள் வீண் செலவுகளை விட்டொழித்து சுகஜீவிகளாகவும், ஆரோக்கிய மனத்தினர்களாயும், கடன் பளுவின் சிக்கலிலகப்பட்டுழலாதவர்களாயும் திகழ்வார்களாக.

முஸ்லிம்களின் க்ஷீண நிலை

இந்திய முஸ்லிம்களின் க்ஷீண திசையைக் கண்ட எந்த உண்மையாளரும் இரத்தக் கண்ணீர் விடாதிருக்கமுடியாது. முஸ்லிம்கள் வீண் செலவுகளிலும் ஆடம்பர வாழ்க்கையிலும் ஈடுபட்ட பின்னர்தான் இக்க்ஷீண திசைக்கு படிப்படியாக வந்துகொண்டிருக்கின்ருர்களென்பதே நமது அபிப்பிராயமாகும். இப்பரிதாபகரமான நிலைமையிலிருந்து முஸ்லிம்களை நன்னிலைமைக்குக் கொண்டுவரவேண்டுமாயின், அன்னுேர் வீண் விரயம் செய்வதையும் அனுச்சார சடங்குகளை நிறைவேற்றுவதில் ஐசுவரியங்களை அள்ளிச் செலவிடுவதையும் விட்டொழிக்கவேண்டும். இவ்வாறின்றி மேலும் மேலும் நம் முஸ்லிம்கள் இதேவிதமாக இன்னும் சில தினங்களுக்குக் காலங்கழித்து வருவார்களாயின், கொஞ்சம் பாக்கியிருக்கும் கௌரவத்தையும் இழந்துவிடும்படி நேரிடும்

இதுபோழுது செய்யவேண்டியதேன்ன ?

முஸ்லிம் சோதிரர்காள்! எம்பெருமானுர் நபிய்யரீகம் (ஸல்.) அவர்கள் தங்கள் வாழ்நாளில் செய்துள்ள காரியங்கள் நம் கண்முன் ஒளிபோல் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. பெருமானுர் (ஸல்.) அவர்கள் நபியாக அனுப்பப்பட்டது முதல் அவர்களது கடைசி காலம் வரையில் செய்துள்ள காரியாதிகளை எவரும் பிரயோசனமற்றவைகளென்று கூற முடியுமா? முற்காலத்தில் இஸ்லாம் மேலோங்கி சிறப்புற்று விளங்கியதற்கு பெருமானுர் (ஸல்.) அவர்களது வாழ்க்கை முறையைப் பின்பற்றியது காரணமல்லவா?

பெருமானுர் (ஸல்.) அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றியொழுகி, தங்கள் வாழ்க்கை முறையை நடத்திவந்தவரை முஸ்லிம்கள் சரியான முறையில் முன்னேற்றமடைந்தே வந்தனர்; உலகம் அன்னுேருக்கு விஸ்தீரணமாக இருந்தது. ஆனுல் எதுபொழுது முஸ்லிம்கள் பெருமானுர் (ஸல்.) அவர்களது செய்முறைகளைப் பின்பற்றியொழுகுவதை கைவிட்டார்களோ அதுமுதல் க்ஷீண திசையே அடைந்து வருகின்ருர்கள்.

உதாரணமாக, இன்றைக்கு 100 வருடங்களுக்கு முன் நம்முஸ்லிம் சமூகத்தவரின் நிலைமை எவ்வாறிருந்ததோ அவ்வாறு இதுபொழுது இருக்கிறதாவென்பதை நோட்டமிட்டுப் பார்ப்போமாகில், நமக்கு உண்மை நிலைமை நன்கு புலனுய்ப் போய்விடும்.

இதர மதஸ்தர்களின் நிலைமையை நோட்டமிட்டுப் பார்ப்போமாகில், அவர்களின் வியாபாரமும் ஐசுவரியமும் கலாசாலைகளும் அவர்கள் அதிகாரஞ் செலுத்துவதும் நாளுக்குநாள் அபிவிர்த்தியடைந்து கொண்டேபோகிறது. இதற்குக் காரணம் அன்னுேர் கஷ்டப்பட்டு சம்பாதியஞ் செய்கின்ருர்கள்; நாமோ ஐசுவரியங்களை வீண் விரயஞ் செய்வதிலீடுபட்டு அனுச்சார காரியங்களிலும் அடாச்செயல்களிலும், வீணுன சடங்குகளை நிறைவேற்றுவதிலும் அபரிமிதமான ஐசுவரியங்களைச் செலவு செய்துகொண்டு சொற்பமாக கையிலுள்ளதையும் அதற்கு மேல் ஓர் அடிவைத்து அரும்பிரயாசையோடு முதியோர் சம்பாத்தியஞ் செய்து வைத்திருந்ததையும் செலவு செய்துவிட்டு பத்தாக்குறைக்கு கடன்பளுவை சிரமேற்கொண்டும் உட்கார்ந்து விழித்தவர்களாக இருப்பதேயாகும்.

ஏ முஸ்லிம் சோதிரர்காள்! எழுந்து முன் வாருங்கள்!! பெருமானுர் (ஸல்.) அவர்கள் தங்கள் வாழ்க்கை முறைகளை நடத்திவந்த முன்மாதிரியைக் கைகொள்ள முயற்சியுங்கள்!!! அவ்வாழ்க்கை முறைகளைப் பின்பற்றுவது

கொண்டுதான் இதுபொழுது நாம் ஜெயமடைவதற்குள்ள மார்க்க மேற்பட்டிருக்கிறது. இது பொழுது நாம் செய்யவேண்டியது காரியமும் அதுவேயாகும். மேலும் தற்காலே ஏற்பட்டுள்ள கஷ்டங்களிலிருந்து தப்பித்துக்கொள்ள சிக்கனமுறை தக்க ஔஷதமாகும். ஆகவே, மானிடன் அவனது சகல காரியாதிகளிலும் சிக்கனத்தை அனுஷ்டித்து வருவானுயின் அவன் சமயசஞ்சீவியைக் கைகொண்டவனுய் விடுகின்ருன். உலக நாகரீகம் மானிடர்களே ஆடம்பரம் படாடோபம் இவைகளின் முன்னணிக்குக்கொண்டு செல்ல முயற்சிக்கின்றது. பெருமானர் (ஸல்.) அவர்கள் விவாக முதலிய காரியாதிகளிலும் இதர சந்தோஷ துக்க காரியங்களிலும் சிக்கனத்துடனேயே காரியாதி நடாத்தி வந்திருக்கின்ருர்கள். ஆனல் பெருமானர் இஸ்லாத்தின் ஆரம்பகாலத்தில்தான் சிக்கனத்தை அனுஷ்டித்துவந்தார்களென கருதிவிடலாகாது. அவர்கள் மாபெரும் சக்கிரவர்த்தியே போன்று ஜெய பேரிகையுடன் இருந்த காலத்திலும்கூட சிக்கன வாழ்க்கையைத்தான் கைகொண்டிருந்தார்கள். மகான் அவர்களின் தோழர்களும் இவ்வரியமுறையைப் பின்பற்றியேதான் தங்கள் குடும்ப வாழ்க்கையை தக்க முறையில் நடத்திவந்திருக்கிருர்கள். அவர்கள் குடும்ப வாழ்க்கையில் சிக்கனத்தைக்கைக்கொண்டிருந்ததால்தான் இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்கும் பொதுநல சேவைகளுக்கும் தேவையானவைகளே தியாகஞ்செய்யப் பின்வாங்கினுர்களில்லே. அதனுலேயேதான் அவர்கள் காலத்தில் இஸ்லாம் தலே சிறந்து விளங்கிற்று. தற்காலத்திலோவெனின் நம்மவரின் நிலேமை தலேகீழாக இருக்கிறது. சாதாரணமாக இல்வாழ்க்கையை நடத்துவதில் பலவாறுன செலவுகள் ஏற்பட்டுவிடுவதோடு கல்யாணம் முதலிய விவாகச் சடங்குகளிலும் அபரிமிதமான திரவியங்களேச் செலவுசெய்து விடுகிறேம். ஐசுவரியம்படைத்த தனவந்தர்கள் செலவு செய்வதைப்பார்த்து சாமான்யரும் கடன்வாங்கி செலவு செய்து விட்டு, கடனின் ஹிம்ஸைக்கு ஆளாகவேண்டியிருக்கிறது. இவ்வாறுன செலவுகளில் நம்முஸ்லிம்கள் ஈடுபட்டுவிடுவதால் கல்வி விஷயங்களுக்காகச் செலவிட்டு, சிறுர்கட்கு கல்வி அபிவிருத்தி செய்யமுடியாது கைசேதமடையவேண்டி நேரிடுகிறது. சிறுர்கட்குக் கல்வி ஏற்பட்டுவிடுமாயின் ஒருவாறு அபரிமிதமான செலவுகள் தடைபடுவதற்கு அது தடையாகவுமிருக்கலாம்.

மேலும் நம்முஸ்லிம் நேயர்கள் புராதன நடைவுடை பாவனே முதலியவைகளே விடுத்து நவீன நாகரீகத்தில் மோகங்கொண்டிருப்பதும் வீட்சிக்கு ஓர் காரணமாகும். புராதன கல்வி ஆசார ஒழுங்குகளே அறவேவிடுத்து நவீன நாகரீகத்தை ஆதரிக்க முற்படுகின்றனர். முன்பின் யோசியாமலும் நன்மை தீமை இன்னதென நன்குணராமலும் பண்டைய நடையுடைபாவனேகளே முற்றும் ஒழித்து முன்னேற்றமடையப் பாடுபடுவதாய்க் கூறிக்கொள்ளுகின்றனர். வெட்க மின்மையைப் பரத்துகின்ற ஐரோப்பிய நவநாகரீகம் அவர்களுக்கு மிகப் பிரியமாய்ப் போய்விடுகிறது. முன்னேர்களின் பழக்க வழக்கங்களின் தொடர்பை முறித்துவிடுவதில் சற்றும் தயங்காதவர்களாகின்றனர். இஸ்லாமிய கல்வி ஆசாரம் இவைகளே இனி இல்லாவண்ணம் செய்துவிடுவதே பெரிய கெவர்தி என இன்னேர் கருதுகின்றனர். முன்னேரின் அபிப்பிராயங்களே அலக்ஷியஞ் செய்வதையே பெரும் முன்னேற்றமாகக் கருதுகின்றனர். சுருங்கக் கூறுமிடத்து புராதன நாகரீகத்தைத் துலேத்து நவநாகரீகத்தை வளர்ப்பதில்தான் முன்னேற்ற மார்க்க மிருக்கிறதென இன்னேர் கருதி வருகின்றனர். இன்னேரின் இக்கருத்து பிரயோசன மற்றதும் இன்னும் வழிகேட்டில் இழுத்துவிடக் கூடியதென்பதும் பற்பல சம்பவ நிகழ்ச்சிகளால் அன்னேர் தெரிந்துகொண்டிருந்துங் கூட, மேலும் மேலும் அதனேயே குரங்குப் பிடியாகப் பிடித்துக்கொண்டிருப்பது எவ்வளவு தூரம் புத்திசாலித்தன மென்பதை நண்பர்கள் உணரக்கடவர். ஆகவே, நாம் வீண் செலவுகளே விட்டொழித்து ஈடேற்றம் பெறுவதற்கு, பெருமானர். (ஸல்.) அவர்களினுடையவும், அவர்களின் அடிசுவற்றைப் பின்பற்றியதால் ஜெயசிலர்களாக விளங்கிய மகான்களினுடையவும் அமல்களே நம்முன் வைத்து, அதனேப்பின்பற்றியொழுகுவதே பிரதானமாகும். அல்லாஹ்த ஆலா நம் முஸ்லிம் நேயர்களே வீண் செலவு செய்வதி லீடுபடாதிருக்கும்படி செய்து அதன் காரணத்தால் கடன் பளுவையும் சுமக்காதிருக்க அருள்புரிவானுகவும். ஆமீன்.

சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்க அறிவிப்பு

சோதரீர் !

சென்னையம்பதியின்கண் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் உங்கள் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கம், சத்திய இஸ்லாத்திற்கு ஆற்றி வரும் தொண்டுகளை தாங்கள் நன்குணர்ந்தே இருக்கிறீர்கள். சத்திய இஸ்லாம் பலவகையிலும் தாக்கப்பட்டு வருகிறது. ஒரு பக்கல் கிறிஸ்தவர்கள் எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள்மீது வீணே அபவாதங்களைச் சுமத்துகின்றனர்; ஆரியர்கள் இஸ்லாத்தை நன்குணராது அதைப்பற்றி விபரீத முறையில் உண்மைக்கு மாருக என்னென்னவோ எழுதத் துணிந்து விடுகின்றனர். இவைகளுக்கெல்லாம் தக்க பரிகாரஞ் செய்யவேண்டியது நம்மவரின் கடமையாக இருந்துவருகிறது. மற்ருெரு பக்கல், நம்மிடையே ஒரு சிலர் தோன்றி வழிகெட்டதும் மறுக்கப்பட்டுப் போனதுமான காதியானிக் கொள்கைகளைத் தந்திரமாய்ப் பிரசாரம் புரிந்துவருகின்றனர். அதில் நம்மக்கள் சிக்கிக்கொள்ளாமலிருப்பான்வேண்டி, அக்கொள்கையின் கெடுதிகளையும் இஸ்லாத்தின் நற்போதனைகளையும் தக்க முறையில் எடுத்துக்கூறி பிரசாரஞ் செய்யவேண்டியதாயு மிருக்கிறது. இத்துறைகளில் நம் சங்கம் அரும் பிரயாசையோடு தீவிரப் பிரசாரஞ்செய்து வருகிறதென்பது உங்களுக்கெல்லாம் நன்கு தெரிந்து விஷயம். இன்னேக்கங்களைச் செவ்வனே நிறைவேற்றுவான் வேண்டியே "ஹிபாஜத்துல் இஸ்லாம் மாசிகை" நடத்தப்பட்டு வருகிறது. இதனை வாசிக்கும் மக்கள் மார்க்க பக்தியுடையவர்களாகவும், இஸ்லாத்தின் அரும்போதனைகளைத் தெரிந்து கொள்ளக் கூடியவர்களாகவும், காதியானிகளின் வலையில் சிக்காமல் அவர்களுக்குத் தக்க மறுப்புக் கொடுக்கின்றவர்களாயுமாய் விடுகின்றனர். இவ்வரும் அம்ஸங்கள் பொருந்திய மாசிகையை தாங்களெல்லீரும் வாங்கி வாசிப்பதுடன் தங்கள் நண்பர்களையும் சந்தாதாரர்களாகச் சேர்க்க முயற்சிப்பீர்களாக. இதுவே நீங்கள் இஸ்லாத்திற்குச் செய்யும் பேருபகாரமாகும். நமது சங்கத்தின் நோக்கங்களைப் பிரசாரம் புரிவதற்காக, ஜனப் மௌலானா மௌலவீ முஹம்மது மியான் சாஹிப், அவர்களை சங்கப் பிரதிநிதியாக தென் ஜில்லாக்களுக்கு அனுப்பியிருப்பதால், ஆங்காங்குள்ள நண்பர்கள் பிரசாரத்திற்கு வேண்டிய வசதிகளைச்செய்து, மௌலானாவின் அரும் உபந்நியாஸங்களைக் கேட்டு பயன் பெறுவதுடன் நூற்றுக் கணக்கில் மாசிகைக்குச் சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்குமாறும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

காரியதரிசிகள்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்.

208341
N35.6.256

காலண்டர்கள் வரவு

பே. த. நெய்னு முகம்மது கம்பேனி:—ரெங்கூன் பிரபல மருந்து வியாபாரியாகிய மெஸ்ஸர்ஸ். பெ. த. நெய்னுமுகம்மது கம்பெனியாரிடமிருந்து மிக்க அழகானதும் கண்களைக் கவரத்தக்கதுமாகிய காலண்டர் ஒன்று வரப்பெற்றோம். அதில் தினம் ஒருஷீட்கிழிக்கக் கூடியதேதி அதன்நடுவில் அமைக்கப்பெற்றதாகவும், இருபுறங்களிலும் தமிழ், பர்மா பாஷைகளில் தங்களிடமிருக்கும் வியாபாரச் சரக்குகளின் விசேஷமேன்மைகள் பொறிக்கப்பட்டனவாகவு மிருக்கிறது. அதன் நடுமத்தியில் பிரத்தியேகக் கலரில் துருக்கியர்களின் இராஜாங்கக் குறியாகிய கொடி பலவாறான புஷ்பங்களுக்குமேல் அமைக்கப்பட்டதாகவு மிருக்கிறது.

A. M. S. நைனும் சாஹிப் அண்டு கம்பேனி:—பினங் காலக்கடை, பிரபல்ய வியாபாரிகளாகிய மெஸ்ஸர்ஸ் அ. மு. சு. நெய்னும் சாயபு கம்பெனியாரிடமிருந்து அழகிய காலண்டர் ஒன்று வரப்பெற்றோம். அது மிக்க நேர்த்தியானதாயும் தினம் ஒருஷீட் கிழிக்கக்கூடியதில் இங்கிலீஷ், அறபி, தமிழ் இம்மூன்று தேதிகளும் ஒருங்கே அமையப்பெற்றனவாகவும் அந்த ஒவ்வொரு ஷீட்டிலும் முதியோர் வாக்கியங்கள் மொழிபனவாயும் தேதி அறிவிக்கும் ஷீட்டுகளுக்கு இருபுறங்களிலும் முஸ்லிம், ஹிந்து பண்டிகைகளும் கவர்ன்மெண்டு பாங்கி விடுமுறைகளும் பொறிக்கப்பட்டனவாயு மிருக்கிறது. மேலும் அவ்வட்டையின் நடுவில் அவர்களின் வியாபாரக் குறிகள் மிளிர்ந்தனவாயு மிருக்கிறது.

நூர்ஜஹான் அண்டு கம்பேனி:—கம்பளை பிரபல வியாபாரியும் எஸ்டேட் சப்ளையருமான மெஸ்ஸர்ஸ். நூர்ஜஹான் கம்பெனியாரிடமிருந்து அழகிய காலண்டர் ஒன்று வரப்பெற்றோம். அது தினம் ஒருஷீட் கிழிக்கக்கூடியதாயும் அட்டையில் வியாபாரச் சரக்குகளில் முக்கியமானவைகள் பொறிக்கப்பட்டதாயும் தந்தி அட்ரஸ், டெலிபோன் நம்பர் விளக்கப்பட்டதாயு மிருக்கிறது.

மதிப்புரை

யூனானி தமிழ் சித்தவைத்தியசாலை

மாயவரம் பெரிய தைக்கால் தெருவு பிரபல்ய ஹக்கீமும், டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பருமாகிய ஹக்கீம் ம. அ. ஷம்சுத்தீன் சாஹிப் அவர்களின் யூனானி தமிழ் சித்தவைத்தியசாலையிலிருந்து அனுபவம்வாய்ப்பெற்ற மருந்துகளின் விபரங்களடங்கிய கேட்லாக் ஒன்று வரப்பெற்றோம். அதில், அவ்யூனானி வைத்தியசாலையில் தயாரிக்கப்படும் பிரத்தியேக விசேஷ ஔஷதங்களின் பிரயோசனங்கள் தக்க முறையில் விளக்கிக் காட்டப்பட்டிருப்பதுடன் நோயாளிகள் மருந்தன்றி தாங்களே பிரயோசனமடையும்படியான 7 விஷயங்களும் தக்க முறையில் பொறிக்கப்பட்டிருக்கின்றது. (1) பெரியோர்களின் நான்குவகை வாக்கியங்கள் (2) தாதுபுஷ்டிக்கு உயர்வான பக்குவம் (3) முறுக்கான யௌவன பருவத்தில் தேகம் இளைத்துப் போவதற்குக் காரணம் (4) ஆறுதரணம் ஆற்றும் பச்சிலை (5) குழந்தைகளின் அபாயம்நீக்க உபாயம் (6) கண் திருஷ்டியின் விளக்கமும் அதற்குப் பரிகாரமும் (7) வாசனைகளை உபயோகிப்பதால் கிடைக்கும் நன்மைகள். தவிரவும் ஔஷதாலயத்தில் பலவாறான லேஹியதினுசுகளும், ஹல்வாக்களும், ரஸாயன வகைகளும், குளிகைகளும், மெழுகுவகைகளும், திராகங்களும், மாத்திரை தினிசுகளும், தைலம் வகை, எண்ணெய் தினிசுகளும், பஸ்பம்வகை, செந்தூர தினிசுகளும், ஆயில், ஷர்பத்துவகைகளும் தக்கவிதமான முறைகளோடு தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. நண்பர்கள் கேட்லாக்களைத் தருவித்து மருந்துகளை வாங்கி உபயோகித்து பயன்பெறுவார்களாக.

சந்தா நேயர்கட்கு!

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தாப் பணத்தை வருட ஆரம்பத்திலேயே கொடுத்து, அரும் மாசிகையை அன்போடு ஆதரிக்க வேண்டுமென்பது உங்களெல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இந்நிலைமையில் அநேக சந்தாதார்கள் சென்ற 1934-ம் ஆண்டுக்குரிய சந்தாப் பணத்தை இதுவரை அனுப்பிக் கொடுக்காமலே அசட்டையாக இருந்து வருகின்றனர். ஆகவே, அன்பர்கள் அன்போடு தங்கள் பழைய பாக்கிகளையும், நிகழும் புதிய வருடத்திற்குரிய சந்தா ரூபாயையும் தாமதமின்றி அனுப்பி வைப்பார்களென எதிர்பார்க்கிறோம். மேலும், சென்ற வருடத்திற்கு ஏற்கனவே சந்தா செலுத்தியிருப்பவர்கள், 1935-ம் ஆண்டுக்குள்ள சந்தா ரூபாயை முன் பணமாக அனுப்பி ஆதரவு புரிவார்களென எதிர்பார்க்கிறோம்.

நமது சந்தாதார்களில் சிங்கை வாசிகள்

ஜனாப் மு. முகம்மது ஷரீப் சாஹிப் அவர்கள்,

(439. நார்ட் பிரிட்ஜ் ரோடு) இடமும்

பினங் வாசிகள்

ஜனாப் N. K. முகம்மது கௌஸ் சாஹிப் அவர்கள்,

(117, சோலியா ஸ்ட்ரீட்) இடமும்

சிலோன் வாசிகள்

ஜனாப் A. M. K. ஆலிம் சாஹிப்,

(220, 2-ம் குறுக்குத் தெருவு) இடமும்

தங்கள் சந்தாக்களை செலுத்திவிடுமாறு கோருகிறோம்.

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G.T., Madras.

400
400
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 APR 1935
MADRAS

Regd. No. M. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

மலர் 6

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 4

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரீ 1353 துல்ஹஜ்ஜுமீ, 1935 ஏப்ரல்மீ

1. திருக்குர் ஆன் ... 121
2. அல்ஹதீது ... 124
3. துருக்கியிலும் ஹிபாஜத்துல் இஸ்லாம் ... 125
4. தொழுகை ... 128
5. பிரஞ்சுக்காரர்களின் பிரித்தாளுந் தந்திரம் 131
6. பாலைவனக் கிழவியின் பெருந்தன்மை ... 136
7. ஷஹீத் அன்வர் பாஷாவின் அரிய தொண்டுகள் .. 139
8. மானிடனில் எதிர்மாறான இருவகை அம்சங்கள் ... 143
9. முல்லாவும் காதியானியும் ... 146
10. தாத்தாரிகளிடம் இஸ்லாம் பரவிய வரலாறு 150
11. விஞ்ஞானம் ... 154
12. ஆசிரியர் குறிப்பு ... 157

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3 0 0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு...	,,	4 0 0
தனிப் பிரதி ...	,,	0 4 0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியற்கு உரிமையுண்டு.

மானேஜர்,

" ஹிபாஜத்துல் இஸ்லாம் " ஆபீஸ்,

43-A, போஸ்டாபீஸ் தெரு.

G. T., மதராஸ்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 APR 1935
MADRAS

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 6	ஹிஜ்ரி 1353 துல்ஹஜ்ஜு மீ 1935 ளு எப்ரல் மீ	இதழ் 4

திருக் குர்ஆன்

"நிச்சயமாக அல்லாஹ் விசுவாசிகளிடத்தில் அவர்களுடைய நப்ஸுகளையும் அவர்களுடைய பொருள்களையும் நிச்சயமாக அவர்களுக்குச் சுவர்க்கம் இருக்கிறது என்பதற்குப் பதிலாக விலைக்கு வாங்கிக்கொண்டான்."

மேலே கூறப்பட்டிருக்கும் தெய்வத்திருமறை வாக்கியத்தின் உட்கருத்தை நம்மவர் ஒவ்வொருவரும் சிந்தித்துப்பார்த்தல் அவசியமாகும். நமக்கு மறுஉலகில் சுவர்க்கத்தை அளிப்பதாக இறைவன் இத்திருமறையில்வாக்களித்துள்ளான். ஆனால், ஒருநிபந்தனையின்பேரில். அதாவது, நம்முடைய நப்ஸுகளுக்கும் பொருள்களுக்கும் பதிலாகத்தான் சுவர்க்கத்தை அளிப்பதாக வாக்களித்திருக்கிறான். எனவே, முஸ்லிம்களாகிய நாம், நமது நப்ஸுகளையும்பொருள்களையும் சுவர்க்கலோகத்துக்குப்பதிலாக இறைவனிடம் விற்பனைசெய்திருக்கிறோமாதலின் இந்தப்பொருள்களும், இந்த நப்ஸுகளும் நமக்குச் சொந்தமன்று. இறைவன் நம்மிடமிருந்து இவ்வாறு கிரயம் பெற்றிருப்பதால்தான் நம்மீது ஜக்காத் என்றும், ஸதக்கா என்றும், உஷ்ரு என்றும், கராஜ் என்றும் பலவித வரிகளை ஏற்படுத்தித் தன்னுடைய அடியார்களான ஏழைகளுக்கும், மிஸ்கீன்களுக்கும், வழிப்போக்கருக்கும், இதுபோன்ற இன்னுஞ் சிலருக்கும் அவைகளைக் கொடுக்கும்படியாய்த் தனது திருமறையில் கூறி இருக்கிறான். இது பொருள் சம்பந்தமாக இறைவனிட்ட கட்டளையாகும். இனி நப்ஸுகளைப்பற்றிக் கவனிப்போம்: நப்ஸு என்பது மூச்சு என்றும், உயிர் என்றும், உடலம் என்றும், இருதயம், நினைப்பு என்றும் பொருள்கொள்ளும். இதில் உடலைப் பொருத்தமட்டில் இறைவன் 5 நேரம் தொழவும், வருஷத்தில் ஒருமாதம் நோன்பு நோற்கவும் கட்டளையிட்டிருக்கிறான். ஆத்மா சம்மந்தப்பட்ட வரையில் சகல காரியத்திலும் 'நிய்யத்' இறைவனுக்காகவே இருக்கவேண்டும் என்றும் கட்டளையிட்டுள்ளான். இதனால்தான், இறைவன் உங்களுடைய வெளிக்கோலத்தைக் கவனிப்பதில்லை, உங்களுடைய இருதயத்தைத்தான் கவனிக்கிறான் என்று கூறியுள்ளான். ஆகவே, நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் நம்முடைய நினைப்பு, நம்முடைய எண்ணம், நம்

முடைய சித்தம் ஆகியவைகளும் அவ்வல்லோன் ஒருவனுக்காகவே செய்வதாக நிய்யத் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த அம்சங்களில் ஏதேனும் ஒன்றை நாம் அனுசரிக்க விட்டுவிடுவோமாயின் நம்முடைய வியாபாரம் அதாவது சுவர்க்கலோகத்தைக் கிரயம்பெற்றிருப்பதில் பாதகமேற்படுகிறது; நமது கிரியைகளுக்குத் தக்கவாறு மறு உலகப்பேற்றை அடைவதற்கான வழி இல்லாமற் போய்விடுகிறது. இன்னும் கொஞ்சம் ஆழ்ந்துநோக்குவோமாயின், சுவர்க்கத்திற்குப் பதிலாக நமது பொருள்களையும் நப்ஸுகளையும் நாம் இறைவனுக்கு விற்றுப்போட்டதால் நம்முடைய பொருள்கள், நப்ஸுகள் ஆகிய அனைத்தையும் அவ்வல்லோனுக்கே விட்டுவிடவேண்டும். இவ்விஷயத்தில் நமது பொருள்களனைத்தையும் தன்னுடைய கட்டளைப்படி செலவு செய்யுமாறு இறைவன் கூறுவானாயின், இன்னும், மக்கள் எக்காரியத்தையும் தங்களுக்கெனச் செய்யாமல் எல்லாம் தன்னுடைய உத்திரவின்படியே செய்யவேண்டுமெனக் கட்டளையிடுவானாயின் நாம் அவ்வண்ணமே செய்துவிடக்கடமைப்பட்டிருக்கிறோம். இவ்வுலகிலுள்ள மாந்தர்கள் ஒருவரிடத்தில் ஒருவர் சம்பளத்திற்கும், கூலிக்கும் அமர்ந்து தொண்டுபுரிவதியற்கையாக இருக்கிறது. இந்நிலைமையில் கூலிவேலை செய்பவர்கள் தங்களுடைய உடலத்தையோ, உயிரையோ, சித்தத்தையோ, பொருளையோ எஜமானர்களிடம் விற்றுவிடுவதில்லை; தங்களுக்குள்ள அவகாசநேரத்தில்குறிப்பிட்ட சிலமணி நேரங்களை அவ்எஜமானர்கள் ஏவும் பணியைச்செய்வதற்காக நாம் ஒதுக்கி வைத்து விடுகிறோம். அக்குறிப்பிட்ட நேரத்தில் அவ்வெஜமான் கூறிய பணியைச் செய்யாமலிருந்தாலும் அல்லது வேறு பணியைச் செய்தாலும் அவ் எஜமான் நமக்குக்கூலி கொடுக்கமாட்டார்; நம்மைக்கடிந்து கொள்வார்; நம்மைத் திட்டுவார் அல்லது நமது சம்பளத்திலொருபகுதியைப் பிடித்துக் கொள்வார். கிரயத்துக்கு வாங்காமல் சில மணி நேரம் வேலை செய்வதற்காக ஏற்படும் கூலியில் இம்மாதிரி உலகில் நடைபெறுமாயின் நமது உயிரையும், உடலையும், பொருளையும் முற்றிலும் கிரயம் வாங்கிக்கொண்டிருக்கிற இறைவன், அவைகளை நமக்கு மறுபடியும் இனமாக அளித்துச் சில நிமிஷங்கள் சிற்சில கிரியைகளைச் செய்யவேண்டுமென்றும், நமக்குள்ள பொருள்களில் ஒரு சிறிய பாகத்தை மட்டிலுமே தனக்காகச் செலவு செய்யும்படியும் கூறி இருக்கிறான். ஆகவே, இவ்வுலக எஜமானர்களுக்கு பயந்து அவர்கள் ஏவும் காரியங்களை மிக ஒழுங்காகச் செய்து இவ்வுலகத்தில் தோன்றிய எஜமானர்களிடம் நல்ல பிள்ளை என்று பெயர் வாங்க விரும்பும் நாம், எல்லோருக்கும் பெரிய எஜமானனான இறைவனிடம் நல்ல பெயர் வாங்க முயற்சிக்கலாகாதா? ஆனால், இற்றை நாளில், நம்மவரில் இப்பெரும் பொறுப்பை உணரும் சக்தி வெகுவாகக் குறைந்து விட்டது. அற்பக்கூலி கொடுக்கும் எஜமானர்களைத் திருப்தி படுத்துவதற்காக இறைவனின் கட்டளைகளை மறந்து விட்டு விடுவது ஒருபுறமிருக்க, இறைவனின் கட்டளைக்கு மாறாகவும் நடந்துகொள்ள முன்வருவது எவ்வளவு பேதமையாகும். இந்தச் சின்ன எஜமானர்கள் தங்களுக்குக்கூலிகொடுக்க மாட்டார்கள் என்று பயந்து இவ்வாறு செய்யும்போது, அந்தப்பெரிய எஜமான் தன் சொற்படி நடவாதவர்களிடம் தானளித்துள்ள பொருள்களையும் நப்ஸுகளையும் எடுத்துக் கொள்வானாயின் அப்பொழுது நாம் என் செய்தல் சாலும். இதனால்தான் இவ்வுலக எஜமானனின் கட்டளைக்காக இறைவனின் கட்டளையை மறந்து இருப்போர் இக்காசினியில் என்றும் தலைதூக்காமலிருந்து வருகின்றனர். நம்மவர் இதுகாலை பிறசமூகத்தாரைப் பார்க்கினும் அநேகம் விஷயங்களில்வீழ்ச்சியடைந்து போவதற்கு முக்கிய காரணம், நாம் இறைவனை அஞ்சாமல், அவனிட்ட கட்டளைகளை எடுத்து நடத்தாமல் அசட்டையாக இருந்து வருவதே யாகும். ஆனால் பிறசமூகத்தாரும் இறைவனின் கட்டளையை மீறித்தான் நடக்கிறார்கள், அவர்கள் மாத்திரம் முன்னேற்ற மடையவும் நாம் மாத்திரம் வீழ்ச்சியடையவும் வேண்டியதேன்? என்றவினா இவ்விடத்தில் இயற்கையாக உண்டாகுதல் கூடும். இறைவன் தனது திருமறையின் மூலம் விசுவாசிகளிடம் பேரம் செய்திருப்பதாகத்தான் கூறி இருக்கிறானே அன்றி, அவிசுவாசிகளான பிறமதத்தாரிடம் பேரம் செய்ததாகக்கூறவில்லை. தவிரவும், நாம் இறைவனுக்கு மாறாக நடப்பதானது நமக்கு உரிமையில்லாத ஒருபொருளை அபகரிப்பதாக இருக்கிறது. பிறசமூகத்தாரிடம் இறைவன் இவ்வாறான பேரம் செய்யவுமில்லை, அவர்களுக்கு மறுஉலக வாழ்வில் சுவர்க்கம் கொடுப்பதாகக் கூறவுமில்லை. அந்த சமூகத்தார் மறு உலக

விட்டுக்குப் பதிலாகத் தங்களுடைய பொருள்களையும் நப்ஸுகளையும் இறைவனுக்கு விற்கிரயம் செய்து விடவுமில்லை. ஆதலின், அவர்கள் இவ்வுலகில் செய்யும் காரியங்களுக்கு அவர்கள் உடனே தண்டிக்கப்பட வேண்டுமென்ற அவசியமுமின்று. ஆனால், நாம் இறைவனுக்குக் கிரயம் செய்து விட்ட பொருளை அக்கிரமமாக எடுத்துக்கொள்ள முயல்வதால் இறைவன் உடனுக்குடன் நமக்குச் சிலகஷ்டங்களை விட்டு, நமக்கு ஞாபகத்தை யுண்டுபண்ணி, எச்சரிக்கை செய்கிறான். ஆகவே, இவ்வெச்சரிக்கையை உணர்ந்து நாம் இறைவனின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அவனுக்குப்பொருத்தமான காரியங்களைச் செய்ய முற்படல் வேண்டும். நமது முன்னோர்கள் இவ்வுலகில் செல்வாக்காகவும், கண்ணியமாகவும் இருந்துவந்ததற்கு அவர்கள் இப்பெரும் பொறுப்பையுணர்ந்து இறைவனின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடந்ததே முக்கிய காரணமாகும். உதாரணமாக, குலபாயேராஷிதீன்களை எடுத்துக் கொள்வோம். இவர்களிடம் தேசவரும்படி யனைத்தும் கொண்டு வந்து கொட்டப்பட்டன. இக்காலத்தில் உள்ளதைப்போல் அக்காலத்தில் பொக்கிஷ மந்திரியும் பொருளாதார நிபுணரும் நியமிக்கப்படவில்லை. வருஷாந்திர பட்ஜட் கணக்குகள் ஏற்படுத்தப்பட்டு வரவு செலவுக்குத் திட்டம் போடவுமில்லை. வருஷத்தில் இத்தனை ரூபாய்தான் வரவு வரும் என்ற மதிப்புத்திட்டமும் அவர்களிட மிருக்கவில்லை. அவ்வாறிருந்தும் அரசாங்கத்துக்கு அவ்வப்போது கிடைக்கும் பொருள்களை திருகுர்ஆனில் கூறப்பட்ட சட்டப்பிரகாரம் உடனுக்குடன் செலவு செய்து வந்தார்கள். இக்காலத்தில் கவர்னர்களும், அரசர்களும் தங்களுக்கெனச் செய்துகொள்ளும் பல சௌகரியங்களைப்போல் அவர்கள் பிரத்தியேகமான எவ்விதச் சௌகரியமும் செய்து கொள்ளவில்லை. ஹஜ்றத் அபூபக்ர் ஸித்தீக் (றலி) அவர்கள் கலீபாவாக நியமிக்கப்பட்டபின் வழக்கம்போல் தங்களது வியாபாரக் காரியத்தைச் செய்யச் சென்றபோது, ஹஜ்றத் அலீ (றலி.) ஆகியவர்கள் அவ்வாறு செய்ய வேண்டாமென்று கூறினார்கள். அதற்கு அபூபக்ர் ஸித்தீக் (றலி) அவர்கள், நான் கிலாபத் காரியத்தையே இரவுபகலாகப் பார்த்துக் கொண்டு வேறு வேலை எதுவும் செய்யாதிருந்தால் என்குடும்ப சம்ரக்ஷணைக்காக நான் என்செய்வது என்றுகூறி தங்களது வர்த்தக அலுவலையும் கவனித்துவந்தார்கள். ஆயினும், ஹஜ்றத் அலீ (றலி). ஹஜ்றத் உமர் பாறூக் (றலி). ஹஜ்றத் உதுமான்கனீ (றலி). முதலிய பிரபல ஸஹாபிகள் ஒன்று கூடி ஆலோசனை செய்து, கிலாபத் பதவியை வகிப்பவர்கள் வியாபாரம் முதலிய சொந்தக் காரியார்த்தமாகத் தங்களுடைய கவனத்தைச் செலுத்தக்கூடாது என்றும், அவர்களுடைய குடும்பசம்ரக்ஷணைக்காக எத்தனை ரூபாய் தேவையோ அதற்குத் தகுந்த அளவு பைத்துல்மாலிலிருந்து எடுத்துக் கொள்ளலாமென்றும் தீர்மானித்ததுடன் ஹஜ்றத் அபூபக்ர் ஸத்தீக் (றலி.) அவர்கள் மாதந்தோறும் இத்தனை திர்ஹம்களைத் தங்களது குடும்பச்செலவுக்காக எடுத்துக் கொள்ளலாம் என்றும் முடிவுசெய்தனர்.

அக்காலத்தில் கலீபாவாக இருந்தவர்கள் தங்கள் குடும்பச்செலவுக்கு வேண்டிய அளவு மாத்திரம் பைத்துல்மாலிலிருந்து எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தனர். கலீபாவாகவுள்ளவர்கள் தங்களிடமிருந்த அரசாங்கப் பணத்தை அமானிதப் பணமெனமதித்து அதில் தங்களது செலவுகளை எடுத்துக்கொள்ள நினைக்காமல் தங்களது சொந்தத் தொழிலின் பேரிலேயே தங்கள் குடும்பத்தைச் சம்ரக்ஷணை செய்ய விரும்பியிருக்கிறார்கள். இக்காலத்தில் நம்மவரிடம் இத்தகைய உணர்ச்சி அணுப்பிரமாணமேனும் இருக்கிறதா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்! போகட்டும். இனி வலிமார்களின் கூட்டத்தாரை எடுத்துக்கொள்வோம்: ஹஜ்றத் இமாம் அபூ ஹனீபா (றஹ்) அவர்கள் 40 வருஷகாலம் இஷாத் தொழுகைக்குச் செய்த உலுவைக்கொண்டு பஜ்ருத் தொழுகையை நிறைவேற்றினார்கள் என்று சரித்திரங்கள் கூறுகின்றன. அதாவது 40 வருஷகாலம் இராப்பொழுதில் நித்திரைசெய்யாமல்இருந்து இறைவனை வணங்கிவந்தார்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்கிறோம். இக்காலத்தில் இரவு முழுவதும் விழிக்காவிடினும் அவ்விரவில் யாவரும் நித்திரை செய்யக்கூடிய நேரத்தில் ½ மணி நேரம் விழித்திருந்து ஆண்டவனை வணங்கும் மெய்யடியார்கள் இதுகாலை நம்மவரில் எத்தனை பேரிருக்கின்றனர்? இவ்வாறு ஒவ்வொரு விஷயத்தையும் நாம் விளக்கிக் கொண்டே செல்வோமாயின் இவ்வியாசம் நீண்டுவிடும் ஆதலின், இம்மட்டுடன் சுருக்கிக் கொண்டோம். ஆனால், மூமின்கள் என்று

அறபிப்பாஷையில் அழைக்கப்படும் விசுவாசிகள் ஒருவிஷயத்தை மறந்து விடக்கூடாது. அதாவது, அவர்கள் தங்களது பொருள்களேயும் நப்ஸுக்களேயும் இறைவனிடம் விற்றுவிட்டு அதற்குப் பதிலாக அவர்கள் சுவர்க்கத்தை வாங்கிக் கொண்டார்கள். ஆதலின், அவர்கள் செய்யும் ஒவ்வொருகாரியமும், நினைப்பும் அவ்வல்லோனின் கட்டளேப்படியே இருக்கவேண்டும். அவ்வாறு செய்தால்தான் அவர்கள் செய்த வியாபாரம் உண்மையான வியாபாரமாகும் என்பதை அறிந்து அதன்படி நடந்து கொள்வார்களாக.

அல் ஹதீது

சொந்தமான கிருபைக்கு பாத்தியஸ்தர்கள்

ஆறுகூட்டத்தார்களுக்கு கியாமத் (மறுமை) நாளில் அல்லாஹ் தஆலாவின் திருசமுகத்தில் கார்மானங்கிடைக்கும் (1) நீதத்தை விரும்பிய அதிகாரி (2) பேணுதலுடைய ஆலிம் (3) மறைவாக (சதக்கா) தர்மஞ்செய்பவன் (4) சதா அல்லாஹ் தஆலாவின் வணக்கத்தின் பக்கல் மனதைச் செலுத்திக்கொண்டிருப்பவன் (5, 6) அல்லாஹ் தஆலாவின் திருப்தியை நாடி ஒருவருக்கொருவர் சிநேகிதம் வைக்கும் இருவர்கள் என, நபிகள் பெருமானர் (ஸல்.) திருவாய்மலர்ந்தருளியதாக ஹஸ்ரத் அப்துல்லாஹுப்னு உமர் (ரலி.) அவர்களைத் தொட்டும் றிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. ஹஸ்ரத் ஷேக்அப்துஹூ அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், மானுஷயத்தன்மையை முதன்மையாகக் கொண்டு சத்தியத்தை நிலைநிருத்தி, அல்லாஹ் தஆலாவின் பொருத்தத்தைத் தேடுவதானது மிகமிக வீரியத்தனமாகுமென்றும், இதற்காகத் தான் சத்தியத்தை விரும்புகிறவர்களுக்கு அல்லாஹ் தஆலாவின் சொந்த கிருபை கிட்டுகிறதெனக் கூறப்பட்டிருக்கிறதென்றும் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, இதுபொழுது நாம் அல்லாஹ் தஆலாவின் சொந்தக் கிருபையை ஒரு பக்கத்திலும், ஏமாற்றம் சதிபோன்ற துர்கொள்கையை மற்றொரு பக்கலும் வைத்துப் பார்ப்போமாகில் சத்தியத்தைவிட மேலானது யாதொரு வஸ்துவுமே கிடையாதென நம்முடைய ஹிருதயமே சாக்ஷியங்கூறும். ஆகவே, இவ்வுலகின்கண் இடையிலேற்பட்டுள்ள பிரயோசனம் சுவண்டி முதலியவைகளை விட்டு, மறுமை வாழ்க்கையையும் அங்குள்ள இன்ப சுகங்களேயும் பெறுவதற்கு முயற்சித்து அதனை அடைவதற்குள்ள நற்கருமங்கள் புரிவதற்கு அல்லாஹ் தஆலா நம் யாவருக்கும் அருள் புரிவானுகவும்.

உண்மை மூமினை அறிந்துகொள்ளும் விதம்.

ஒருநாளன்று நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்கள், கூட்டத்தில் வீற்றிருக்கும் சஹாபிகளைநோக்கி சரியான மூமின் யாராகுமென, உங்களுக்குத் தெரியுமாவென வினவியதற்கு, அது விஷயத்தை அல்லாஹ்வும் அவனது ரசூலும் தான் நன்கறிவார்கள் என சஹாபாக்கள் தெரிவித்தார்கள். அதற்குப் பெருமானர் (ஸல்.) அவர்கள், சதாவும்—ஒவ்வொரு காரியத்திலும் தன் நாயனின் பொருத்தத்தை முன் வைத்து அதனைச் செய்பவன், ஒவ்வொரு நிமிஷத்திலும் சத்தியத்திற்கு உதவி புரிவதற்குத் தயாராக இருப்பவன் எனத்தெரிவித்தார்கள். ஆகவே, நபிபெருமானர் (ஸல்.) அவர்களின் இப்போதனையால் விஷயம் நமக்கு நன்கு வெளியாய்விட்டதால் நம்மில் இவ்வாறான அம்ஸம் இருக்கிறதா வென்பதை உற்றுணர்ந்து பார்ப்போமாக.

அனியாயம் செய்யப்படுவேனின் சாபத்தினின்று தப்பித்துக் கொள்ளுங்கள்

நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்கள் ஒரு நாளன்று அநீதிசெய்வது, வரம்புகடந்து நடப்பது இவைகளின் கெடுதியைப்பற்றி கூறுவதற்கிடையே, அநீதியானது மானிடனை நாசமாக்கி வருகிறதென்றும், அநீதி செய்யப்படுபவனின் சாபத்தினின்று தப்பித்துக்கொள்ளுங்களென்றும், அநீதி செய்யப்படுபவனின் முறையீட்டை அல்லாஹ் தஆலா கேட்டு உடனே பரிகாரஞ் செய்துவிடுகிறான் என்றும் கூறியிருக்கிறார்கள்.



துருக்கியிலும் ஹிபாஜத்துல் இஸ்லாம்

அல்லாஹு தஆலாவால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிற மதம் இஸ்லாம் தான் என்பது திருகுர்ஆனின் போதனையாகும். ஆதலின், உலகில் சன்மார்க்கம், சத்திய மார்க்கம், இயற்கை மார்க்கம் என்பது இஸ்லாமைத் தவிர வேறொன்றுமில்லை என்ற உண்மையை முஸ்லிம்களாகிய நாம் மாத்திரமின்றி பிறமதத்தாரும் இதுகாலை உணரத்தலைப்பட்டிருப்பதுடன் அதனை வாய்விட்டுக் கூறியும் வருகிறார்கள். இக்காரண உலகில் நல்லோர்களிருக்குமிடத்தில் சில பொல்லாதவரும், சன்மார்க்கத்துக்கெதிராகத் துன்மார்க்கமும், நன்மைக்குப் பதிலாக தீமையும், பாபமும் புண்ணியமும் ஆக ஒன்றுக்கொன்று நேர் முரணான ஜோடிகள் எங்கும், எவ்விஷயத்திலும் இருந்துவருகின்றன என்பது உண்மை. இவ்வுலகில் சுயநலமும், பொது நலமும் கலந்திருக்கிறதென்பது மெய். சுயநலங் கொண்டவர்கள் மேற்கண்ட நன்மை தீமைகளிரண்டில் தங்களுக்கு இஷ்டமானதைக் கடைப் பிடித்துக்கொண்டு, தங்களது சுயநலத்தைப் பெருக்கிக் கொள்ள முயற்சிக்கிறார்கள். பொதுநலமுள்ளவர்கள் எப்பொழுதும் நன்மையானவைகளையே கடைப் பிடிக்கின்றனர். இது உலகின் சர்வ சாதாரணமான விஷயமாகும். எனவே, இப்படிப்பட்ட தருணத்தில் இறைவன் மக்களுக்களித்துள்ள விலைமதிக்கமுடியாத அரும்பொருளான அறிவைக்கொண்டு நன்மையான காரியத்தையே கிரகித்தல் அவசியமாகும். இவ்வுணர்ச்சியையே நபிமார்களும் வலிமார்களும் பெரியார்களும் நமக்குப் போதித்துச் சென்றார்கள். சுயநலமிகள் தங்களது சுயநலத்தைப் பெருக்கும் பொருட்டு ஒரு நல்ல வழியில் பிரவேசிப்பார்களாயின் அதனால் மற்றவருக்கு எவ்விதத் தீங்கு மேற்படாது. ஆதலின் சுயநலமிகள் நல்ல காரியத்தில் ஈடுபடுவதை வெறுக்கத்தக்க காரியமாக எவரும் கருதமாட்டார்களாயினும், இன்னுஞ் சிறந்த முற்போக்கான காரியத்தைச் செய்யலாகாதா என்றே அவர்களைப்பற்றி பெரியோர் கருதுவார்களேயன்றி அவர்களைப்பற்றி அத்துணை ஆட்சேபனைகள் செய்யமாட்டார்கள். ஆனால், சுயநலமிகள் பொல்லாத காரியத்தைச் செய்ய முற்படும்போது அதைப் பார்த்துக்கொண்டு நல்லோர்கள் கைகட்டி இருக்கமாட்டார்கள். இப்படிச் சுயநலமிகள் தீயகாரியங்களிலீடுபடும்போதெல்லாம் நல்லோர்கள் அதனை எதிர்த்து ஒழிப்பது இவ்வுலகம் தோன்றிய காலமுதல் இயற்கையாக நடந்துவரும் ஒரு விஷயமாகவே இருந்து வருகிறது. சுயநலமிகள் தீயகாரியங்களில் பிரவேசித்தல் என்பது பலவகைப்படும். தேச, ராஜிய வியவகாரங்களில் ஈடுபடும்போது சதியாலோசனைகளும், அராஜகமும், யுத்தமும் கொடுங்கோலாட்சியும் ஏற்படுகிறது. இப்படிப்பட்டவைகள் ராஜீயபிரசினைகளாகக் கருதப்படுகின்றன. வியாபாரம், வர்த்தகம், தொழில் முதலியவைகளில் பிர

வேசிக்கும்போது மோசஞ் செய்தல், பித்தலாட்டஞ் செய்தல், வஞ்சித்தல், ஏமாற்றுதல் முதலிய குற்றங்களைச் செய்கின்றனர். இன்னுஞ் சிலர் தங்களுக்குள்ள விசேஷச் சக்தியால் மதவிஷயங்களில் தலையிட்டு துன்மார்க்கத்துக்கு அதிக ஆக்கங்கொடுத்து அதனை வியாபிக்கச்செய்கின்றனர். இப்படி இவர்கள் செய்ய முற்படுவதில் தங்களது சுய நலத்தை அடைவதற்கு இரண்டு வழிகளுள. ஒன்று துன்மார்க்கக் கொள்கையைமட்டிலும் சன்மார்க்கமாக எடுத்துக்காட்டி சன்மார்க்கக் கொள்கையை மறைமுகமாகத் தாக்குதல். மற்றொன்று சன்மார்க்கக் கொள்கைகளில் பல குற்றங் குறைகளைக்கூறி அநேக ஆக்ஷேபனைகளைக் கிளப்பி அவைகளிலுள்ள நன்மையானவைகளை மறைத்து துன்மார்க்கத்துக்கு மறைமுகமாக ஆக்கங் கொடுப்பது. இப்படிப்பட்ட விஷமிகள் தங்களது நோக்கம் சித்திபெற பற்பல விதமான பெயர்களைச் சூட்டிக்கொண்டு இக்குவலயத்தைப் பாழ்படுத்தி வருகிறார்கள். இவ்வாறான சுயநலங்கொண்ட சாரார் நமது நாட்டில் தலையெடுத்துச் சன்மார்க்கப் பிரசாரகர்களென்றபோர்வையைப் போர்த்திக்கொண்டு துன்மார்க்கத்துக்கு ஆக்கங் கொடுத்து வருவதைக் கண்ணுற்ற நமது பெரியார்கள் சென்னையில் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" என்ற பெயரால் ஒரு சங்கத்தை நிறுவித்து, துஷ்டர்களின் துன்மார்க்கப் பிரசாரத்தை ஒடுக்கிச் சன்மார்க்கத்துக்கு ஆக்கங்கொடுக்க முன்வந்துழைத்தனர். இன்னும் உழைத்து வருகின்றனர். இன்ஷா அல்லாஹ் இனியும் உழைத்து வருவார்கள்.

இது நமது சுயநலமிகளுக்கு பெருங் கஷ்டமாகவும் நஷ்டமாகவும் இருக்குமல்லவா? ஆகவே, இதனை அவர்கள்தங்களாலியன்றவரை தூற்றுவது சகஜமல்லவா? இவ்வியல்பினுக்கேற்க இந்நாட்டிலுள்ள சுயநலங்கொண்டோர், சன்மார்க்கத்தின் பெயரால் துன்மார்க்கத்தை ஆக்கப்படுத்த முற்பட்டோர் நமது ஹிபாஜத்துல் இஸ்லாத்தையும், நமது பொதுநல ஊழியப் பெரியார்களையும் இழிமொழிகளாலும், வசை மொழிகளாலும் தங்களாலியன்றவரை ஏசியும் பேசியும் தூற்றியும் பார்த்தனர். இன்னமும் தூற்றி வருகின்றனர். இத்தோரணையில் நமது சங்கத்துக்கு "ஹிபாஜத்துல் இஸ்லாம்" என்று பெயர் வைத்ததைப் பற்றியுங்கூட ஆக்ஷேபனைகளைக் கிளப்பி, இது அறபிச் சட்டடத்துக்கு ஒத்ததாக இல்லை என்றுங் கூடகூறினர். இவர்கள்இப்படி கூறியதானது, நமது பெரியார்களுக்குக் கல்வியில் அதிக பாண்டித்துவம் கிடையாது என்றும், தங்களுக்குத்தான் அதிகம் பாண்டித்துவமிருக்கிறது என்றும் பொதுஜனங்களுக்கு அறிவித்துத் தங்களது சுயநலப் பிரசாரத் துன்மார்க்க வேட்டைதான் சன்மார்க்கமென்று காட்டிக்கொள்வதற்கேயாம். ஆயினும், "சத்தியமே ஜயம்" என்ற முதுமொழி பொய்யாகுமா? அவர்களுடைய அசத்தியப் பிரசாரம் அறிஞர்களுக்குக் கொஞ்சங் கொஞ்சமாக வெளிப்பட்டது. மக்களின் அகக்கண் திறந்தது. நல்லோர் பலர் நமது சங்கத்தை ஆதரித்துப் பலங் கொடுக்க முன்வந்தனர். ஆகவே, இப்பொழுது சில நாட்களாக இச்சுயநலக் கூட்டத்தார் தங்களது சுயநல வேட்டைத் திட்டத்தை வேறு பக்கல் மாற்றிக் கொண்டதாகத் தெரிகிறது. ஆயினும், முற்றிலும் அவர்கள் இத்துறையைவிட்டு நீங்கிவிட்டார்கள் என்று இப்பொழுது கூறிவிடுவதற்கில்லை. இறைவனின் குத்ரத்தைப் பாருங்கள்! நமது நாட்டுக்கு வெகு தூரத்துக்கப்பாலுள்ள துருக்கி தேசத்தில், அதிலும், பல நூற்றாண்டுகளாக நமதுகலீபாக்கள் வாழ்ந்துவந்த நகரில்—அதன் வெற்றியைக் குறித்து நபிகள் திலகம் (ஸல்.) அவர்களால் முன் அறிக்கை செய்யப்பட்ட பட்டணத்தில்—

இஸ்லாமிய உலகுக்கு வெகு காலமாக முக்கிய கௌரவம் அளித்து வந்த இடமாகிய கான்ஸ்தாந்திநோபிளில் அங்குள்ள பேரறிஞர் ஒன்றுகூடி "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தை நிறுவி இருக்கிருர்கள். ஆறு வருடங்களுக்கு முன் நமது பெரியார்கள் எந்த நோக்கத்தை முதன்மையாகக் கொண்டு இந்தப் பெயரை ஏற்படுத்தினர்களோ அதே கொள்கையையே முதன்மையாகக் கொண்டு, நமது சங்கத்துக்கு நாமிட்ட அதே பெயரை அவர்களும் தங்களது சங்கத்துக்கு இட்டிருக்கிருர்கள். ஆனல், நாம் இம்மாதிரிப் பெயர் வைத்திருப்பதை அவர்கள் அறியவுமில்லை. அவர்கள் இம்மாதிரிப்பெயர் வைப்பார்களென்று நாம் கருதியதுமில்லை, தற்செயலாக இருபெயரும் இருகொள்கையும் ஒன்ருகஅமைந்துவிட்டன. இந்தச் சம்பவம் நமது நாட்டிஉள்ள சுயநலங்கொண்ட துன்மார்க்கப் பிரசாரத்தின் கூற்றை அடியுடன் மறுத்து, நமதுமுயற்சிக்கு அதிக ஆதிக்கத்தைத்தரக் கூடியதாக இருக்கிறது. (அல்ஹம்துலில்லாஹ்) தவிரவும், துருக்கி அரசாங்கத்துத் தலைவரான காஜீமுஸ்தபா கமால்பாஷா அவர்கள் அந்நாட்டிஉள்ள மார்க்க அறிஞர்களுக்கு அதிக உற்சாகமும் ஆதரவுமளித்து, இவ்வாருக சன்மார்க்கப் பிரசாரம் புரிய உதவிசெய்யவும் முன் வந்திருக்கிருர் என்ற செய்தி நமக்கு ஒரு மாதத்துக்குமுன் கிடைத்தது. இப்பொழுது அதே காஜீமுஸ்தபா கமால்பாஷா அவர்கள் உலகிஉள்ள சுயேச்சை வாய்ந்த முஸ்லிம் மன்னர்களின் கமிட்டி ஒன்றையமைத்து, புண்யக்ஷேத்திரங்களையும் மத பாதுகாப்பையும் கவனிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. இறைவன் இவர்களுக்கு இவ்வரும் பெரும் நோக்கத்தில் வெற்றி யளிப்பானக.

இதிலிருந்து நமது நாட்டு அறிஞர்கள் அன்று 6 வருஷங்களுக்குமுன் எடுத்துக்கொண்ட பிரயாசையும், நோக்கமும் உலகிலெங்குமுள்ள அறிஞர்களும், சன்மார்க்கர்களும் எடுத்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ள காரியமேயன்றி வேறில்லை என்பது இப்பொழுது வெளியாகிறது. ஆதலால், சன்மார்க்கர்களாகிய நம்மவர், நமது பெரியார்கள் செய்து வரும் இச்சன்மார்க்க ஊழியத்தில் இன்னும் அதிகமான அக்கரையும் சிரத்தையும் காட்டி, அவர்களுக்கு உற்சாகத்தை அளிப்பதுடன், அவர்கள் ஏற்படுத்திய ஸ்தாபனமாகிய நம் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தைப்பலப்படுத்த முன் வருமாறு வேண்டுகிருேம். இச்சங்கத்துக்குப் பல முறையாலும் உதவிசெய்ய வழியுண்டாயினும், இச்சங்கத்தாரால் நடத்தப்படும் அரிய சஞ்சிகையாகிய நமது "ஹிபாஜத்துல் இஸ்லா"மை யாவரும் வாங்கிப் படித்துப்பார்த்து இதை அதிகமாக மக்களிடை பரவும்படி செய்வது சிறந்த உதவியாகும். எனெனில், நமது சங்கத்தாரின் நோக்கமும், முயற்சிகளும் இச்சஞ்சிகை மூலமே நாட்டில் பரவவேண்டியதாக இருப்பதால், இச்சஞ்சிகை நாட்டில் எவ்வளவுக்குப் பரவுகிறதோ அவ்வளவுக்கு சன்மார்க்கக்கொள்கைகள் வியாபித்து நிற்கும். ஆதலின் வாசகநேயர்களும், பொதுநலப்பிரியர்களும், சன்மார்க்கர்களும் இச்சஞ்சிகையை ஆதரித்து வாங்கிப் படித்துப் பயன் பெறுவதுடன், தங்கள் நண்பர்களையும் இதற்குச் சந்தாதாரர்களாகச் சேரும்படி செய்து இப்புண்ய காரியத்தில் பங்கெடுத்துக்கொள்ளும்படி வேண்டுகின்ருேம்.

சிலோன் சந்தா நேயர்கட்கு!

அன்பர்கள் தங்கள் சந்தாக்களை மணியாடர் மூலமாகவாவது, அல்லது ஜனப் A. M. K. ஆலிம் சாஹிப் (220, 2-ம் குறுக்குத் தெருவு, கொளும்பு) அவர்கள் மூலமாவது அனுப்பிவைக்குமாறு வேண்டுகிருேம்.

தொழுகை

நிச்சயமாகத் தொழுகையானது மானக்கேடானவைகளையும் வெறுக்கத்தக்கதையும் விலக்கும்.

சோதரீர்! தொழுகையை நாம் யாவரும் தொழுது வருகிறோம். முஸ்லிமாக வுள்ளவர் எவரும் தொழுகையை பர்லல்ல வென்று கூறமாட்டார். தொழுகவேண்டிய தில்லை என்றியம்பவும் மாட்டார். ஒருவரை ஒருவர் தொழும்படி ஏவுவர். குழந்தைகளைப் பெரியோர்கள் பார்க்கும்போதெல்லாம் தொழும்படியே தாக்கீது செய்வர். ஒவ்வொரு இடத்திலும், தாய், தந்தை, தமையன் முதலிய யாவரும் தங்கள் சிறுவர்களைத் தொழும்படியே ஏவுவர். இதல்லாமல் ஊரி லுள்ள பெரியார்கள் யாவரையும் தொழும்படி ஏவுகிறார்கள். நமது இந்தியநாட்டின் எல்லைப் புற மாகாணத்தில் தொழுகைக்கென்றே பிரத் தியேகமான வாலண்டியர்களும், தொண்டர் களும், ஊழியர்களும் ஏற்படுத்தப்பட்டிருக் கிறார்கள். அவர்கள் தினசரி அதிகாலையில், கடும்பனியையும் பாராமல் நித்திரையிலிருப்ப வர்களை எழுப்பித் தொழுகைக்கு வரும்படி யாக அழைக்கிறார்கள். தினசரி நாம் ஐந்து வேளை தவறாமல் தொழுகிறோம். ஒவ்வொரு மஸ்ஜிதிலும் உலமாக்கள் தொழுகையைப் பற்றி அதிகமாக உபதேசஞ் செய்கிறார்கள். ஆனால், தொழுகைபால் இன்ன பயன் விளையும் என்று இறைவன் தனது வேதத்தில் கூறி யிருக்கிற பயன் நமக்குக் கிடைத்திருக்கிறதா? என்பதை சற்று நிதானித்துப்பார்ப்போமாக. தொழுகையினாலேற்படும் எண்ணத் தொலை யாத பயன்களையும் நன்மைகளையும் பெரியார் கள் நமக்கு எத்தனை முறையோ எடுத்துக் கூறி இருக்கிறார்கள். நாமும் பிறமதத்தாரிடம் தொழுகையினாலேற்படும் பயன்களை வாய் கூசாது கூறியும் வருகிறோம். கைகூசாது பத் திரிகையில் எழுதியும் வருகிறோம். அவ்வாறு கூறியும் எழுதியும் வருகிற நமக்குத்தான், இறை வன் திருகுர்ஆனில் தொழுகையினாலேற்படக் கூடிய பயன்களைப்பற்றிக் கூறியிருக்கிற பயன் கள் ஏற்பட்டிருக்கின்றனவா? என்று சிந்தித் துப் பார்ப்போமாக. இந்தக் கேள்விக்கு நூற் றுக்குத் தொண்ணூறுபேர் இல்லையென்றே கூறு வர். சிற்சிலருக்கு இந்தப்பயன் ஏற்பட்டிருக்க லாம். ஆனால், பெரும்பாலருக்கு இற்றைநாளில் இல்லை என்று சொல்வதில் நாம் யாருக்கும் அஞ்சவேண்டியதின்று.

பின்னை, அல்லாஹுதஆலாவின் சொல் பொய்யாகுமா? அவனது வாக்குக்கு மாறு நடக்குமா? திருகுர்ஆன் பொய்யா என்ற சந் தேகம் நமக்கு வேண்டாம். திருகுர்ஆன் பொய்யல்ல, மெய்யேயாகும். நாயனின்வாக்கு நிச்சயமாக நிறைவேறும். அது தவறமாட் டாது. அவ்வாறெனில் நம்மிடம் தொழுகை யின் பலன் எங்கே? இதற்குநாம் சுருக்கமாகப் பதில் கூற விரும்புகிறோம். நாம் தொழுகும் தொழுகையில் முற்காலத்துப் பெரியார்களின் தொழுகைகளிலிருந்த பூணிப்பும், பற்றும், பய பக்தியும் இல்லை என்பதுதான் இதற்குப்பதில். முற்காலத்திலிருந்தவர்கள் நாயனைத் தொழும் விஷயத்தில் காட்டிவந்த பயபக்தியும், பூணிப் பும், பணிவும் இக்காலத்தில் அத்திபூத்தது போல் எவரேனும் ஒருவர் இருவரிடத்தில் இருக்குமோ என்னவோ. ஆனால் பெரும்பால ரிடம் இருக்கவில்லை என்று துணிந்து கூறலாம். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது துணைவர் களான ஸஹாபிகள் ஜும்ஆத் தொழுகைக்காக அன்றைய இரவிலிருந்தே மஸ்ஜிது நபவியில் ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு கூடிவிடுவார் கள் என்றும், தொழுகை முடிந்தபின்னர் அசர் தொழுகை நேரம் வரும்வரை மஸ்ஜிதிலேயே தங்கி இருந்து அப்புறம்தான் செல்வார்கள்என் றும், சிலர் மஃரிபுத் தொழுகையை முடித்துக் கொண்டுதான் வீடு திரும்புவார்களென்றும் நாம் படித்திருக்கிறோம்.

இம்மாதிரியான பூணிப்பும், பக்தியும், பணி வும் இக்காலத்தில் நாம் காண்பிக்க இயலவில்லை யென்றால், குறைந்தபக்ஷம் ஜும்ஆத் தொழு கையின் நேரம் வருகிறது என்பதை அறிவிக் கும் பாங்கு சொன்ன உடனேயாவது மஸ் ஜிதுக்கு வரக்கூடாதா? இக்காலத்திலுள்ள மஸ்ஜிதுகளிற் சில இடங்களிற்போய்ப் பார்த் தால் இமாம்குத்பா ஓதும்போதும், குத்பாஓதி

முடிந்து தொழுகைக்குத் தக்பீர் கட்டும்போ துங் கூடச் சிலர் உளுச்செய்துகொண்டிருப் பதைக் காணலாம். பின்னர் தொழுகை முடிந்த வுடன் சிலர் சுன்னத்து கூடத்தொழாமல் மஸ் ஜிதை விட்டு வெளியிற் செல்லுவர். இவர் களுக்கு 'எட்டு முஸல்லி' என்று கூறுவது பொருந்தும். தொழுவதற்காக மஸ்ஜிதுக்கு வந்தபின் 5-6 நிமிஷங்கள் மஸ்ஜிதிலேயே தங்கிஇருந்து ஏதேனும் "அவ்ராது" களை ஓதக் கூடாதா? சுன்னத்து, நபில் தொழுகை போன்ற வணக்கங்களைப் புரியலாகாதா? என் பதுதான் இப்பொழுது நாம்கவனிக்கவேண்டிய முக்கிய விஷயமாகும். முற்காலத்திலுள்ளவர் கள் காட்டுமிராண்டிகளாகவும் உலக நாகரீகம் தெரியாத அறிவாராய்ச்சி யற்றவர்களாகவும் தொழிலில்லாதவர்களாயு மிருந்தனராதலின் சதா என்னேரமும் பள்ளிவாயலையே கட்டி யழுதனர்; அதுபோல் இக்காலத்தில் நாமும் செய்வோமாயின் நமதுகதி என்னவாகும்; நாம் தொழில் பார்க்கவேண்டாமா? நாம் வர்த்த கத்தைக் கவனிக்கவேண்டாமா? என்று சிலர் கூறவும் கூடும். முற்காலத்திலுள்ளவர்கள் அவ் வாறிருந்ததால் உலகில் சிறுமையடைந்திருந் தார்களா? அல்லது பெருமையடைந்திருந்தார் களா? இக்காலத்திலுள்ளவர்கள் தொழில் முறையை ஜரூராகப் பார்ப்பதுகொண்டு மற் றெல்லாச் சமூகத்தாரைப் பார்க்கினும் மேம் பட்டுவிட்டார்களா? முன்னேற்றமடைந்துவிட் டார்களா? என்பதை அவர்கள் கவனித்துப் பார்த்தால், அவர்கள் கூறுவதற்குத்தக்கவிடை தானகவே கிடைக்கும். முற்காலத்திலுள்ள நம்மவர் உலகாதிபதிகளாகவும், தலைவர்களாக வும், ஆளுஞ் ஜாதியினராகவும் திகழ்ந்தார்கள் என்பதும், இக்காலத்திலுள்ள நம்மவரில் பெரும்பான்மையினர் ஆளப்படும் ஜாதியா ராகவும் பிறருக்கு அடிமைப்பட்டவராகவும் இருப்பது மாத்திரமின்றி, அடிமைப்பட்ட இதர சமூகத்தாரைப் பார்க்கினும் பின்ன டைந்தவர்களாகவும், பிற்போக்கான ஜாதியாக வும் மற்றவரால் கருதப்பட்டும் வருகிறார்கள். இதற்குக் காரணம் அக்காலத்திலுள்ளவர் களுக்கு மார்க்க பக்தி அதிகமாக இருந்ததால், நமது அத்தியாமசியமான காரியங்களாகிய சாப்பாடு, நித்திரைபோன்ற காரியங்களை நாம் இப்பொழுது எவ்வளவு ஜாக்கிரதையாகச் செய்கிறோமோ அதைப் பார்க்கினும் பன் மடங்கு அதிகமாக அவர்கள் றஹ்மான் ஏற் படுத்திய முக்கிய கடமைகளான தொழுகை முதலியவைகளைக் காலா காலத்தில் நிறை வேற்றுவதில் செலுத்தி வந்தார்கள். தொழு கைக்காக அவர்கள் நித்திரையையோ, சாப் பாட்டையோ பெரிதாக மதிக்கமாட்டார்கள். நித்திரையில் பங்கம் வந்துவிட்டால் அதனால் எவ்வித நஷ்டமுமில்லை. ஆனால், தொழுகை யில் மாத்திரம் பங்கம் வருதல் கூடாது என் பதைப் பெரிதாக மதித்தனர். இதற்கு அதிக மாக உதாரணங் கூறவேண்டியதில்லை.

நபிகள் நாயகம் (ஸல்). அவர்களும் ஸஹாபி களும் மக்கமாநகரை ஹிஜ்றத்துச் செய்து மதீனமாநகரம் புகுந்தது என்? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்! மக்காவில் உணவுப்பஞ் சம் ஏற்பட்டுப் பஞ்சம் பிழைப்பதற்காகவா அவர்கள் மதீனமா நகரம் சென்றார்கள்? அல் லது மக்காவிலுள்ள வியாபார வசதிகளைப் பார்க்கினும் அதிகமாக மதீனாவில் வியாபார வசதிகள் இருக்கின்றன, வியாபாரம் செய்து அதிகமான பொருள்திரட்டலாம் என்பதற் காகவா சென்றார்கள்? அல்லது தங்களுடைய பந்துக்களும், மித்திரர்களும், இனத்தார்களும் மதீனாவில் அதிகம் இருக்கிறார்கள் என்று அங்கு சென்றார்களா? அன்று, அன்று. மக்கா புரியில் இவ்வசதிகளெல்லாம் அவர்களுக்குக் குறைவற இருந்தன; பந்துக்களும் அன்பர்க ளும் ஏராளமாக இருந்தனர் ஆயினும, நிம்மதி யாக நாயனைத் தொழுவதற்கு மட்டிலும் அங்கு இடங்கிடைக்கவில்லை. நாயனை தொழுவதற்கு வேண்டிய உரிமைகளை மக்காவாசிகள் முஸ்லிம் களுக்கு அளிக்கமறுத்து விட்டனர். நாயனை வணங்குவதற்கு உரிமையளிக்கப் படாவிடில் உங்களது பந்தத்துவமும், உங்களது சினேகத் துவமும் எங்களுக்குத் தேவை இல்லை என்பது முஸ்லிம்களின் நோக்கம். நாயனை நிம்மதியா கத் தொழவேண்டும்; இதற்கான வசதி கிடைத் தால் போதும் என்ற ஒரே எண்ணத்தின் பேரில் ஸஹாபிகள் தங்கள் மனைவி மக்களையும், பெண்டு பிள்ளைகளையும், உற்றார் உறவினரை யும், சொத்துச் சுகத்தையும் துறந்து வீடு வாசலைவிட்டு, உடுத்திய உடையுடன் வெளி யேறினர். தங்களுக்குத் தொழுவதற்கான வசதி இருக்கும்பொருட்டு மதீனாபுரி வந்தனர்.

மதீனாவிலுள்ளவர்கள் மக்கா வாசிகளுக்கு இடங்கொடுத்து, தொழுவதற்கு வேண்டிய சகல சந்தர்ப்பங்களையும் அவர்களுக்கு அளித் தனர். மக்காவாசிகள் வியாபாரவர்க்கத்தின

ராக இருந்ததால் தங்களுடைய நாணயத்தைக் கொண்டு மதீனுபுரியைச் சிறந்த வியாபார ஸ்தலமாக ஆக்கினர். "ஆண்டவனைப் பணிவோருக்கு அனைத்தும்பணியும்" என்றபடி மதீனுவிலுள்ள மற்றைய ஜனங்களும் இவர்களைக் கொண்டாடி, இவர்களது தலைமைத்தனத்தை ஏற்றுக்கொண்டு, இவர்களதுசொற்கேட்டு நடந்தனர். அக்கம்பக்கத்திலுள்ளவர்களும் அவ்வாறே செய்தனர். சில வருஷங்களுக்குப் பின் மக்காவாசிகளும் இவர்களுக்குக் கீழ்ப்படிந்து பரிசுத்த கஃபாவின் சாவியை இவர்களிடம் ஒப்புவிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மக்காவில் குறைஷியர்களால் எதிர்க்கப்பட்டு, பல விதத்தாலும் தொந்தரை கொடுக்கப்பட்டும் இருந்த காலத்தில் தொழுகையை ஒரு க்ஷணப் பொழுதேனும் பிந்தவிடாமல் நிறைவேற்றி வந்தார்கள். ஸஹாபிகளும் தங்களுக்கேற்பட்ட சொல்லொணுக் கஷ்டங்களையும் சகித்துக் கொண்டு தொழுகையை விட்டனரல்லர். ஹஜ்றத் ஜைது ரலியல்லாஹு அவர்களை மக்கத்துக் குறைஷியர்கள் ஏமாற்றிப் பிடித்துவந்து தூக்கில் போடப்போன போது அவர்களிடம் உமக்கு என்ன வேண்டுமென்று கேட்டகாலை, இரண்டு ரக்கஅத்துத் தொழுதுகொள்ளச் சந்தர்ப்பம் வேண்டுமென்று வேண்டினர்கள். தூக்குமேடைக்குச் செல்லும்போது கூட முற்காலத்து முஸ்லிம்கள் தொழுகையைத் தான் பெரிதென மதித்து அதனை நிறைவேற்றிக் கொள்ளவே சந்தர்ப்பம் எடுத்துக்கொண்டிருக்கிறர்கள். இதற்குக் காரணம் அவர்களுக்குத் தொழுகையில் ஏற்படும் இன்பம் வேறெதிலு மேற்படாதிருந்ததேயாம். இவர்கள் தொழுகையை மிகுந்த பயபக்தியுடன் நிறைவேற்றி வந்தனர். தொழுகையைத் தவிர வேறெதுவும் அவர்களது மனக்கவலையை மாற்றக் கூடிய அருஞ் சஞ்சீவியாக இருக்கவில்லை. இந்தத் தொழுகையின் பரக்கத்தால் முற்காலத்திலிருந்தவர்களின் துற்குணங்கள், துர்நடத்தைகளெல்லாம் நீங்கி மாசற்ற பெரியார்களாக இருந்தார்கள்.

"உமது ரப்பை நீநேரில் பார்ப்பதுபோல் வணங்குவதுதான் இஹ்ஸான். அவனை நீ பார்க்காவிடினும் அவன் உன்னைப் பார்க்கிருன்" என்று நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய ஹதீதைக் கடைப்பிடித்து அவர்கள் வணக்கம் புரிந்து வந்தார்கள். இதனுல் இறைவன் தனது மறையில் கூறியுள்ள விஷயங்களெல்லாம் அவர்களுக்கு நிகழ்ந்தன. இக்காலத்திலுள்ளோர் தொழுகிருர்கள்; அவர்களது தொழுகையைத் "தொழுகை இல்லை" என்று யாம் கூறத்தயாரில்லை. இவர்கள் பர்லு வாஜிபு சுன்னத்து முதலியவைகளை நிறைவேற்றி விடுகின்றனர். இதனுல் இவர்கள்மீதேற்பட்டகடமை நிறைவேறிவிடுகிறது. ஆயினும், இவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறுபேர்களின் தொழுகையில் பயபக்தி என்ற முக்கிய அம்சம் இல்லாதிருப்பதால் இவர்கள் தொழுகையில் அடைய இருக்கும் இதர பலன்களை அடைய முடியாத நிலைமையிலேயே இருக்கிருர்கள் என்ற விஷயத்தை வருத்தத்துடன் தெரிவிக்க வேண்டியதாக இருக்கிறது. தொழுகைக்கு பர்லு வாஜிபு சுன்னத்து, முஸ்தஹப்பு போன்ற காரியங்கள் அவயவங்களைப் போலிருக்கின்றன. பயபக்தி என்ற விஷயம் உயிரைப்போலிருக்கிறது. ஆகவே, பயபக்தியின்றித் தொழுவதானது உயிரற்ற உடலத்துக்கு ஒப்பாக இருக்கிறது. எனவே, இதுவரை நாம் தொழுத தொழுகையில் மேல்மிச்சமாக அடையவேண்டிய பயனை நாம் அடையத்தக்கவிதமாகத் தொழுகத் தவறிவிட்டாலும், இனிமேலேனும் அப்படிப்பட்ட பயனை அடையத்தக்க முறையில் தொழவேண்டும் என்பதுதான் இவ்வியாசத்தின் கருத்தாகும். இவ்வாறு நாம் இறைவனை வணங்க முற்படுவோமாயின், முற்காலத்தில் நம்மவர் அனுபவித்த இம்மை மறுமை பேறுகளை நாமும் அடைவோம் என்பதிற் சந்தேகமில்லை. இறைவன் நம்மனைவருக்கும் அப்படிப்பட்ட வணக்கம் புரிய நல்லுதவிசெய்வானுக. ஆமீன்.

பினங் சந்தா நேயர்கட்கு !

அபிமானிகளாகிய நமது சந்தா நேயர்கள் தாமதியாது தங்கள் சந்தா பாக்கிகளை அவ்விடம் ஜனுப் N. K. முஹம்மது கௌஸ் சாஹிப் (117 பினங் ஸ்டீட்) இடம் செலுத்திவிடுமாறு வேண்டுகிறேரும்.

பிரஞ்சுக்காரர்களின் பிரித்தாளும் தந்திரம்

ரீப் தேசத் தலைவர் காஜீ அமீர் அப்துல் கரீம் அவர்களையும் ரீப் தேசத்தையும், அவரது சமூகத்தாரையும் நம்மவர் நன்கறிவர். ஆதலின், அவர்களை நாம் அறிமுகப்படுத்தி வைக்கவேண்டியதின்று. ஆனல், அத்தேசத்தார் ஏன் ஸ்பானியர்களுடனும், பிரஞ்சுக்காரர்களுடனும் யுத்தம் செய்தனர்; ஐரோப்பியர் நாடு பிடிக்கும் நோக்கத்தில் அவர்கள் கையாளும் உபாயம் என்ன வென்பதை இவ்வியாசம் விளக்கவல்லதாக இருப்பதால் நம்மவர் ஊன்றிக் கவனித்து "மாற்றானுக்கிடங் கோடேல்" என்ற முதுமொழியைக் கடைப்பிடிக்குமாறு வேண்டிக் கோள்கிறேம். (ப. ர்.)

ஆப்பிரிக்கா கண்டத்தின் வடமேற்குப் பாகத்துக்கு "மஃரிபே அக்ஸா" என்றும், மஃரிபுதேசம் என்றும், மொரோக்கோ தேசம் என்றும் பெயர். அத்தேசத்தில் 'பர்பரி' வகுப்பு முஸ்லிம்களும், அசல் அறபி வம்சத்து முஸ்லிம்களும் வசிக்கிறார்கள். தங்களுடைய சுயநலத்தை நாடி ஐரோப்பாவிலிருந்து சமீப காலங்களில் அங்கு சென்று குடியேறி இருக்கும் ஐரோப்பிய கிறிஸ்துவர்களைச் சேர்க்காமல் அங்குள்ள புராதனக் குடிகளை மட்டிலும் கணித்துப் பார்ப்போமாயின், அத்தேசத்தில் சில ஆயிரம் யூதர்களைத்தவிர எஞ்சியுள்ளவர்களனைவரும் முஸ்லிம்களேயாவார்கள். இத்தேசத்தார் பர்பரி பாஷையைத் தாய் பாஷையாகக் கொண்டவர்கள். இவர்களனைவரும் முஸ்லிம்களாக இருப்பதால் இவர்களின் கல்விப் பாஷை அறபியாகும். ஆகவே, இங்குள்ளோர் அறபியும், பர்பரியும் பேசுபவர்களாவார்கள். புராதன காலத்திலேயே இங்கு இஸ்லாம் மதம் பரவிவிட்டதால் இங்குள்ள கல்வி பயிற்சி, நூல்வளர்ச்சி அனைத்தும் 13 நூற்றாண்டுகளாக அறபியிலேயே நடைபெற்று வருகிறது. இங்குள்ள பர்பரியர்கள் யுத்தப் பிரியர்களாகவும், வீரர்களாகவும் இருந்துவருவதால், முஸ்லிம்களின் எழுச்சியின்முன் ஈரான், உரோம ஏகாதிபத்தியங்கள் சுமார் பத்து வருஷ காலம் எதிர்த்து நின்று அப்பால் அடங்கி விட்டன. ஆயினும், இத்தேசத்தார் இவர்களுக்கெல்லாம் பிந்திக் கடைசியில்தான் முஸ்லிம்களுக்குக் கீழ்ப்படிந்தனர். இங்கு இஸ்லாம் பரவி, இத்தேசத்தார் இஸ்லாத்தைத் தழுவிய பின், இங்கு வேறெந்த மதமும் சென்ற 13 நூற்றாண்டுகளாகப் பரவுவதற்கிட மேற்படவே இல்லை. அவ்வாறு பரவ இத்தேசத்தார் இடங் கொடுக்கவுமில்லை. இத்தேசத்தி லுள்ளவர்களனைவரும் 'மாலிக்'மத்ஹபைத் தழுவிய சுன்னத்துவ ஜமாஅத்தார்களே யாவர்.

இத்தேசத்தில் புராதன காலத்திலேயே இஸ்லாம் மதம் பரவி, கலப்பற்ற இஸ்லாமாகவே இருந்து வருவதால், மிகமிகப் பூர்வீகமான ஸ்தாபனங்கள் இன்றும் அந்நாட்டில் இருந்து வருகின்றன. பூர்வீக காலத்தில் கட்டப்பட்ட ஜாமிஆ மஸ்ஜிது இன்னமும் அந்நாட்டில் இருக்கிறது. ஆயிரம் வருஷங்களுக்கு முன்னர் "பாஸ்" (Fex) என்ற நகரில் மஸ்ஜிதுடன் கட்டப்பட்ட 'க்ர்ரூபீன்' என்ற மத்ரஸா இன்னும் கல்வி என்னும் அறிவமுதை அந்நாட்டாருக்கு அளித்து வருகிறது. அங்குள்ள குத்துபுகானு (புத்தகாலயம்-லைப்ரரி) பூராதன காலத்தில் இயற்றப்பட்ட அநேகம் அரிய பெரிய கிரந்தங்களின் கையேட்டுப் பிரதிகளை இன்னமும் பேணிக்காப்பாற்றிக் கொண்டிருக்கிறது.

சென்ற நூற்றாண்டின் இறுதிவரை இத்தேசத்தில் முஸ்லிம் அல்லாதாரின் ஆதிக்கம் ஏற்படுவதற்கு எள்ளத்தனையுமிட மேற்படவில்லை. ஆனல், நவீனயுத்தக் கருவிகளும், வெடி மருந்துகளும், பீரங்கிகளும், நவீன ஆராய்ச்சி உயிர்க்கொல்லிகளும் அவர்களுக்கு நல்ல பழக்கத்திலில்லாததால் இஸ்லாமிய உலகத்தின் பல தேசங்களும் ஐரோப்பியருக்கு ஒன்றன்பின் ஒன்றாக இரையாகி வந்தது

போல் இத்தேசமும் ஐரோப்பியரின் நாடாளும் ஆசைக்கு இரையாகவேண்டியதாக ஏற்பட்டது. பிரஞ்சுக்காரர்கள், பிரிட்டிஷார், இத்தாலியர், ஜெர்மானியர், ஸ்பானியர், ஐரோப்பிய வல்லரசுகள் இஸ்லாமிய உலகைச் சேர்ந்த வடமேற்கு ஆப்பிரிக்காவைப் பங்கு போட்டுக்கொள்வதில் ஒருவரைவிட ஒருவர் முந்திக்கொண்டுவந்தனர்.

ஆகவே, வல்லரசுகள் தங்களுக்குள் இத்தேசங்கள் சுலபமாக வயப்பட வேண்டுமென்பதற்காகத் தங்களுக்குள் இரகசிய ஒப்பந்தங்கள் செய்துகொண்டு, ஆப்பிரிக்கா சம்பந்தப்பட்டவரை எகிப்தை பிரிட்டனும், திருப்போலியை இத்தாலியும், மஃரிபு தேசத்தை பிரான்சும் ஸ்பெயினும் வசப்படுத்திக்கொள்வதற்கான ஏற்பாடு செய்துகொள்ளப்பட்டது. இவ்வுடன்படிக்கையின்படி இவ்வரசாங்கங்கள் அற்பகாரணங்களைப் புகலாகக்கொண்டு பெரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு இப்பிரதேசங்களைத் தங்கள் வசப்படுத்திக்கொண்டன. ஆனால் இவ்வரசாங்கங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பாகம் சமபாகமாக இல்லாமல் அவரவர் சக்திக்குத் தகுந்தவாறு கூடவும் குறையவுமாகப் பங்கேற்பட்டது. மஃரிபு தேசத்தைப் பொறுத்தவரை ஸ்பானியருக்கு ஒரு பங்கு என்றால், பிரஞ்சுக்காரருக்குப் பத்துப் பங்கு என்றவிகிதாச்சாரப்படி அத்தேசம் பங்கு வைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, அற்ப சொற்ப காரணங்களுக்காக அவ்வல்லரசுகள் மொரோக்கோவிலுள்ள முஸ்லிம் சுல்தானுக்கு விரோதமாக யுத்தக் கப்பல்களையும் பீரங்கிப்படைகளையும் அனுப்பி பிரஞ்சுக்காரர்களுக்கும், ஸ்பானியர்களுக்கும் கீழ்ப்பட்டு அத்தேசத்தை அவர் ஆட்சிபுரியவேண்டியவாறு நிர்ப்பந்திக்கப்பட்டார். இத்தேசம் இரண்டு அரசாங்கங்களுக்கிடையில் பாகமாக இருப்பதால் பிரஞ்சுக்காரர்கள் இத்தேசத்தின் ஆட்சிமுறையை இரண்டாக வகுத்து மொரோக்கோ சுல்தான் அவர்களே நேர்முகமாக ஆட்சிபுரியும் பாகம் என்றும், சுல்தான் அவர்களின் பிரதிநிதியாகிய கலீபா என்பவர் ஆட்சிபுரியும் பாகம் என்றும் இத்தேசத்தை இரண்டாகப் பிரித்து, சுல்தானின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்தில் தங்கள் ஆதிக்கத்தையும், கலீபாவின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்தில் ஸ்பானியர்களின் ஆதிக்கத்தையும் ஏற்படுத்திக்கொண்டனர். இதற்கிடையில் தஞ்சா என்ற நகரைச் சுற்றி ஒரு பிரதேசத்தை ஏற்படுத்தி அதைச் சர்வ தேசங்களுக்கும் பொதுவான பிரதேசமாக ஏற்படுத்திக்கொண்டனர். இதனால் இப்பொதுப் பிரதேசத்தில் பிரிட்டிஷாருக்கும், இத்தாலியருக்கும் செல்வாக்கு இருந்து வருகிறது.

இவர்கள் தங்களுக்குள் இரகசிய ஒப்பந்தங்கள் செய்து நாட்டைப் பங்குபோட்டு, அத்தேச அரசரை நிர்ப்பந்தப்படுத்தித் தங்களது அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளும்படி செய்துகொண்டார்களாயினும், அத்தேசத்து ஜனங்களை அவர்கள் இன்னமும் தங்கள் செல்வாக்குள் உட்படுத்திக்கொள்ளவில்லை. ஆகவே, இவ்வல்லரசுகள் தங்கள் பாகத்துக்குட்பட்ட பிரதேசத்து ஜனங்களிடை செல்வாக்கை ஏற்படுத்தி அவர்களைத் தங்களுக்குக் கீழ்ப்படுத்துக்கொள்ளவேண்டிய அலுவல் அவ்வல்லரசுகளுக்குத் தனித்தனி வேலையாக அமைந்தது. அதிர்ஷ்ட வசமாக பிரஞ்சுக்காரர்களின் பாகத்துக்கு வந்த மஃரிப்தேசத்தில் அறபி வம்சத்தார் பெரும்பாலராகவும், நவநாகரீகமும், கல்வியுமுள்ளவர்களாகவும் இருந்தமையால் இவர்களைத் தங்கள் வசப்படுத்திக் கொள்வதில் பிரஞ்சுக்காரர்களுக்கு அத்துணை சிரமமேற்படவில்லை.

ஸ்பானியரின் பாகத்துக்கு வந்த பிரதேசத்தில் பர்பரி வம்சத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பான்மையினராக இருக்கிறார்கள். இவர்கள் அறபிகளைப்போல் நவ நாகரீகத்தை அறிந்துகொள்ளாமலிருந்ததாலும், இயற்கையிலேயே முரட்டு சுபாவமும், யுத்தப்பிரியமும் உள்ளவர்களாக இருந்ததாலும் இவர்களை வசப்படுத்தும் காரியம் ஸ்பானியருக்குச் சிரமமாகவே இருந்தது. இவ்விதமாக ஸ்பானியருடைய பாகமாகிய ரீப் பிரதேசத்தில் ஸ்பானியர்களை ஆக்ஷேபனை செய்து அவர்களுக்கடங்காமலிருக்கும் ஒரு கூட்டம் தோன்றிவிட்டது. இக்கூட்டத்தாருக்கும் ஸ்பானியருக்கும் சுமார் 15-20 வருஷகாலமாகச் சிறு சிறு சச்சரவுகள் நடைபெற்றுக் கொண்டே இருந்தன. பிறகு மகாயுத்தம் ஆரம்பமாயிற்று. ஐரோப்பிய அரசாங்கங்களின் கவனம் முழுவதும் அந்த யுத்தத்தில் சென்றிருந்ததால் மஃரிபு தேசத்தார்மீது தொந்தரையுண்டுபண்ண இவ்வரசாங்கங்களுக்குச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. மகாயுத்தம் முடிவடைந்த தருவாயில் ரீப் தேசத்தைச் சேர்ந்த பிரபல முஸ்லிம் தலைவரான

முஹம்மதுப்னு அப்துல் கரீம் என்பவர் ஸ்பெயின் தேசத்தாருக்கு விரோதமாக யுத்தம் தொடுக்கவேண்டிய சந்தற்பமேற்பட்டது. இவர் ஸ்பானிய ராணுவத்தில் சேர்ந்து உத்தியோகம் வகித்து யுத்தப்பயிற்சி பெற்று, பின்னர் ஸ்பானியர்கள்பால் கோபமடைந்து அதை விட்டு வெளியேறியவராதலால், ஸ்பானியரைத் தம்முடைய தேசத்தை விட்டு வெளியேற்றி விடவேண்டுமென்னும் வைராக்கியங் கொண்டு, இதுவரை ஸ்பானியரை ஆக்ஷேபித்து அவர்களுடன் சிறு சிறு சச்சரவுகளைச் செய்துவந்த பர்பரிக் கூட்டத்தாருடன் சேர்ந்துகொண்டார். ஆகவே, சிறு சச்சரவாக இருந்த வியவகாரம் முறைப்படியான யுத்தமாக மாறிவிட்டது.

ஸ்பானிஷ் ரீப் யுத்தம்

இறைவன் பல நூற்றுண்டுக்கொருமுறை ஒரு நாட்டைப் புனருத்தாரணம் செய்வதற்காக விசேஷ சக்தியளித்துச் சிருஷ்டிக்கும் சில முக்கிய பெரியார்களில் காஜீ முஹம்மதுப்னு அப்துல்கரீமும் ஒருவராவர். இறைவனளித்த இவ்விசேஷத்திறமையின் மூலம் அவர் சகல யுத்தக் கருவிகளுமுள்ள ஸ்பெயின் அரசாங்கத்தை மிக வீரதீர பராக்கிரமத்துடன் எதிர்த்து யுத்தஞ்செய்து வெற்றிக்கு மேல் வெற்றியடைந்து கொண்டே இருந்தார். இதனுல், ரீப் பிரதேசத்திலுள்ள இச்சிறு கூட்டத்தாருக்கு அங்கு செல்வாக்கு நாளுக்கு நாள் பரவ ஆரம்பித்து, அப்பிரதேசத்தில் நூற்றுக்குத் தொண்ணூறுபேர் காஜீ முஹம்மதுப்னு அப்துல் கரீமுக்குக் கீழ்ப்படிபவர்களாகிவிட்டனர். இவரால் ஸ்பெயினியருக்கு ஆயிரக்கணக்கான உயிர் நஷ்டமும் லக்ஷக்கணக்கான பொருள் நஷ்டமுமேற்பட்டது. இந்த யுத்தத்தால் ஸ்பெயின் தேசத்துக்குள்ளும் குழப்பமும் கிளர்ச்சியும் ஏற்பட்டுவிட்டது. ஸ்பெயின் தேசத்துப் பிரதம மந்திரியாரும் பார்லிமெண்ட் சபை அங்கத்தினரின் கூக்குரலுக்கு இசைந்து "இனி அத்தேசத்தில் யுத்தம் செய்வதன் மூலம் அதிகமான உயிர்களையும், பொருளையும் சேதப்படுத்திக் கொள்வதாக உத்தேசமில்லை" என்று அறிக்கையிட்டு விட்டார். ஆகவே, இத்தேசத்தின் சுதந்திரத்தை இதர தேசங்களும் அங்கிகரித்துக்கொள்ளும் நிலைமை ஏற்பட்டிருந்தது.

ஆனுல் துர் அதிர்ஷ்டவசமாக காஜீ முஹத்மதிப்னு அப்துல்கரீமின் போர்வீரர்கள் பிரஞ்சுக்காரரின் பாகத்திலிருந்த பிரதேசத்துக் குள்ளும் பிரவேசித்து அங்கும் கலகம் உண்டாக்கிவிட்டனர். காஜீ அமீர் அப்துல் கரீமின் சைனியங்கள் ஏன் இவ்வாறு பிரவேசித்தன? என்ற விபரம் இன்னும் மர்மமாகவே இருக்கிறது. இதைப்பற்றி மொரொக்கோ வாசிகளின் அபிப்பிராயம் என்னவென்பதை நேயர்கள் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஸ்பானியர்களின் பாகத்தில் பிரிந்த பிரதேசத்தில் ஏற்பட்ட இந்த யுத்தத்தில் ஸ்பானியர்கள் தோல்வியுற்ருல் முஸ்லிம்களுக்கு ஐரோப்பியர்கள்பால் ஏற்பட்டுள்ள மதிப்பும் பயமும் குறைந்துவிடும் ஆதலால், ஸ்பானியர்களுக்குத் தோல்வி ஏற்படாமல் காப்பது ஐரோப்பிய அரசாங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் இன்றியமையாத காரியமாக இருந்தது. அத்தேசத்துக்குப் பக்கத்திலுள்ள பிரதேசங்களில் பிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கம் இருந்து வந்ததால், ஸ்பானியர்களுக்கு அடுத்தபடியாக முஸ்லிம்களால் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியவர்கள் பிரஞ்சுக்காரர்களாகவே இருந்தார்கள். ஆதலால், ஐரோப்பிய வல்லரசுகள் ஸ்பானிய—ரீப் யுத்தத்தில் பொதுவாக சிரத்தையும் கவனமும் செலுத்தி வந்தாலும், பிரஞ்சுக்காரர்கள் தங்களது அந்தஸ்தை நிலைநிறுத்திக்கொள்வதற்காக இந்த யுத்தத்தில் விசேஷ கவனம்செலுத்தி வந்தனர். எனவே அன்னேர் ஸ்பானியர்களுக்கு உதவிபுரிவதற்கும் இந்த யுத்தத்தில் சம்பந்தப்பட்டு மொரோக்கோ வாசிகளை நசுக்கவும் துடித்துக் கொண்டிருந்தனர். ஆனுல், அகாரணமாக இதில் நேருக்குநேராகப் பகிரங்கமாகச் சம்பந்தப்பட்டால் உலகத்திலுள்ள ஏனைய அரசாங்கங்களின் அவமதிப்புக்கும், முஸ்லிம்களின் கோபத்துக்கும் ஆளாக வேண்டுமே என்ற எண்ணத்தால் இதில் நேர்முகமாகச் சம்பந்தப்படவில்லை. ஆயினும், அவ்வாறு தலையிடுவதற்கான ஒரு அற்பகாரணமேனும் உண்டாகமாட்டாதா என்று காத்துக்கொண்டிருந்தனர். ஆதலால், சில ஒற்றர்கள் காஜீ முஹம்மதுப்னு அப்துல் கரீமின் தளகர்த்தரிலுள்ள சிலருக்கு துராலோசனை சொல்லிக்கொடுத்தனர். அதாவது, ரீப்பிரதேசத்தை விட்டு ஸ்பானியரை விடுவித்தவுடன் பிரஞ்சுகாரர்களின் ஆதிக்கத்தின் கீழிருக்கிற மொரோக்கோவின் இதர பாகங்களையும் பிரஞ்சுக்காரர்களை விட்டு விடுவித்துவிடுங்கள்; இதை அவசரமாகச்

செய்து முடித்துவிட வேண்டும்; மொரோக்கோவும், ரீப் பிரதேசமும் வெவ்வேறு தேசமல்ல, இரண்டும் ஒன்றுதான்; மகாயுத்தத்தில் ஜெர்மானியரால் பிரஞ்சுக்காரர்கள் அதிகம் அடிபட்டிருக்கிறார்கள். ஆதலால், அவர்கள் இப்பொழுது யுத்தம் செய்யும் நிலைமையில்லை; இது சமயம் சொற்ப முயற்சிசெய்தால் அப்பிரதேசத்தையும் விடுவித்துக் கொள்ளலாம்; கால தாமத மேற்பட்டால் பிரஞ்சுக்காரர்களிடமிருந்து அப் பிரதேசத்தை விடுவிக்க முடியாது; பிரஞ்சுக்காரர்களால் உங்களது சுயேச்சைக்கும் ஆபத்து நேரிடக் கூடும் என்று துர்ப்புத்தி போதித்தனர்.

ஆகவே, காஜீ முஹம்மதுப்னு அப்துல் கரீமின் திருப்தியும் அனுமதியுமின்றியே பிரஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான பகுதியில் ரீப் முஸ்லிம்கள் பிரவேசித்து அங்குள்ள கபீலாக்களையும் தூண்டிவிட்டுக் கலகம் செய்தனர். யுத்தம் செய்யக் காத்துக்கொண்டிருந்த பிரான்சுக்கு இது நல்லதருணமாயிற்று. உடனே உணவுப்பொருள்கள், யுத்தக்கருவிகள் முதலியன ரீப் முஸ்லிம்களுக்குக் கிடைக்காவண்ணம் தடை செய்துவிட்டு நான்கு புறமுமாக யுத்தம் தொடுத்தனர். ஒருவருக்கு எவ்வளவு தான் பராக்கிரமமும், திறமையுமிருந்தாலும் பட்டினியும் பசியுமாக எத்தனை நாள் தானிருக்கமுடியும்? ஆகவே, இறுதியாக காஜீ முஹம்மதுப்னு அப்துல் கரீம் பிரஞ்சுக்காரர்களிடம் சரணமடையவேண்டிய தேற்பட்டது.

பிரஞ்சுக்காரர்களின் பிரித்தாளும் தந்திரம்

இந்தயுத்தத்துக்குப் பிறகு ஸ்பெயினும் பிரான்சும் கூடியவரை மொரோக்கோ தேசத்தில் ஆட்சிபுரியும்விஷயத்தில் ஒரு ஐக்கியத்தின்படி நடந்துகொள்ளவேண்டும் என்று உடன்படிக்கை செய்து கொண்டிருக்கின்றன. இனிமேல் இந்நாட்டில் இம்மாதிரியாக குழப்பம் உண்டாகுவதற்கு இடமேற் படக் கூடாதென்பது இவ்வுடன்படிக்கையின் நோக்கம். இத்தேசத்திலுள்ளவர்கள் மதம், பாஷை முதலிய சகல விஷயத்திலும் ஒன்றாக இருப்பதால் இவர்களைப் பிரித்தாளுவதற்கான உபாயம் என்னவென்பதைக் கண்டுபிடித்து "பர்பரி" பிரசினையைப் புதிதாக உண்டாக்கி இருக்கிறார்கள். இப்பிரசினையைப் புகலாகக் கொண்டு அடியிற் கண்டவாறு பொதுஜனங்களிடம் பிரசாரம் நடைபெறுகிறது.

1. அறபிகள் உங்கள் தேசத்துக்கு வந்து குடியேறியவர்கள்; உங்களுக்கு அந்நியர்கள்; உங்களுடைய ஆயிரக்கணக்கான சகோதரர்களின் ரத்தத்தைச் சிந்தி இத்தேசத்தில் தங்களது ஆதிக்கத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் அறபி வம்சத்தாருக்கு அடங்கி இருக்கக்கூடாது. நீங்கள் உலகிலுள்ள வீரச்சமுகத்தினர். அறபிகள் உங்களை அற்பமாக மதிக்கிறார்கள். இந்நிலைமையில் நீங்கள் அவர்களை நேசிக்கிறீர்களா?

2. உங்களது தாய்பாஷை பர்பரி. அறபிப் பாஷை அந்நிய தேசப்பாஷை. அந்தப் பாஷையில் உங்களுக்கு என்ன சிரத்தை? கௌரவம், சுயமதிப்பு, தன்னம்பிக்கை ஆகிய விஷயங்களைக் கவனித்தாலும் நீங்கள் உங்களது தாய்பாஷையை அபிவிருத்திசெய்ய வேண்டியதிருக்கிறது. ஆகவேஅறபிப் பாஷையுடன் சம்பந்தம் வைத்துகொள்ளாதீர்கள். தற்போது இக்காலத்திலுள்ள அவசியத்தைக் கவனிக்கின் நீங்கள் நாகரீகமடைந்த ஒரு பாஷையைக் கற்றுக் கொள்வது அவசியமாக இருக்கிறது. ஆதலால், நீங்கள் பிரஞ்சு அல்லது ஸ்பானிய பாஷைகளைக் கற்றுக்கொள்ளலாம். அறபிப் பாஷை உங்கள் உணர்ச்சியை அடிமைப்படுத்தியதற்கு அறிகுறியான பாஷையாகும். இனியும் நீங்கள் பர்பரி பாஷையைப் பார்க்கினும் அறபிப் பாஷையைச் சிலாக்கியமெனக் கொள்கிறீர்களோ?

3. நீங்கள் பர்பரி வகுப்பினர். உங்களுக்குத் தனிப்பழக்க வழக்க மிருக்கிறது. உங்கள் நாட்டுக்கு அந்நியர்களான அறபிகளின் பழக்கமும் வழக்கமும் வேறு. அவர்களது பழக்க வழக்கம் உங்களுக்கு எவ்வாறு பொருத்தமாக இருக்கும்? உங்களுடைய பர்பரிச் சட்டங்களையும் வழக்கங்களையும் நீங்கள் புதுப்பித்து அதைக் காப்பாற்றுங்கள்.

அறபிப் பாஷைக்கு அனுதரவு

இவ்வபிப்பிராயத்தை மக்களிடம் கட்டுப்பாடாகப் பிரசாரம் செய்யப்படுகிறது. அத்துடன் அறபிப் பாஷைக்கிருக்கிற செல்வாக்கைக் குறைப்பதற்காக வேறு பலகாரியங்களும் செய்யப்படுகின்றன.

1. பர்பரி ஜனங்கள் வாழும் பிரதேசங்களிலுள்ள அரசாங்கப் பாடசாலைகளில் அறபிப் பாஷை போதிக்கப்படுவதில்லை. பர்பரிபாஷை

யும், பிரஞ்சுப் பாஷையும் போதிக்கப்படுகின்றன.

2. தேசியப் பள்ளிக்கூடங்களில் திருகுர்ஆன் போதிக்கப்படுகிறது. திருகுர்ஆனின் மூலம் அறபிப் பாஷையை அபிவிருத்திசெய்வதற்கான பிரசாரம் நடைபெறுவதால் தேசியப் பள்ளிக்கூடங்களெல்லாம் அரசாங்க உத்திரவுப்படி நிறுத்தப்பட்டு விட்டன.

3. சிவில் கிரிமினல் விஷயங்களுக்காக பிரஞ்சுச்சட்டங்கள் அமலிலிருக்கின்றன. இனி ஆசாரங்களை நடாத்துவதற்காக அதாவது விவாகம், பாகப்பிரிவினை ஆகியவைகளைக் கவனிப்பதற்காக பெரிய கிராமங்களிலும், பெரிய கபீலாக்களிலும் காஜிமார்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் இஸ்லாமிய ஷரீஅத்தின்படி இவ்விவகாரங்களில் முடிவு செய்கின்றனர். அத்துடன் காஜிமார்களின் கோர்ட்டுக்குச் செல்வதற்குப் பதிலாக இதர சிவில் கோர்ட்டுகளுக்குப் போகவிரும்புவோர் பிரஞ்சுக் காரர்களின் சிவில் சட்டப்படியும் விவகாரங்களைத் தீர்த்துக்கொள்ள வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தவிரவும், காஜிமார்களது கோர்ட்டு மிகக்குறைவாகவும், பிரஞ்சு சிவில் கோர்ட்டுகள் மிக அதிகமாகவுமிருக்கின்றன. ஒரு காஜியார் ஸ்தானம் காலியாகிவிட்டால் அப்புறம் அந்த ஸ்தானத்துக்குப் புதிய காஜியை நியமிப்பதில்லை. இதனால், காஜிகளின் கோர்ட்டுகள் வரவரக் குறைந்து வருகின்றன. ஜனங்கள் தங்களது வியவகாரங்களைத் தீர்த்துக்கொள்ள காஜிகோர்ட்டுக்குச் செல்ல அதிகச் சிரமமேற்பட்டு வருகிறதுடன் பிரஞ்சுச் சட்டப்படி வியவகாரங்களை முடிவுசெய்துகொள்ள அதிக வசதிகளுமிருக்கின்றன.

4. இவ் விஷயத்தைப்பற்றி முறையீடு செய்து கொள்வதற்காக மொரோக்கோ சுல்தான் அவர்களைப் பேட்டிகண்டு பேசவும், அவரிடம் தூது செல்லவும் ஏற்பாடு செய்தால் ராஜீய குற்றம் செய்வதாகப் புகல்கூறி அத்தூதுவக் கூட்டத்து அங்கத்தினர்கள் சிறைக்கூடத்துக்கு அனுப்பப்பட்டு விடுகிறார்கள்.

5. பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் அதிகக் கட்டுத்திட்ட மேற்படுத்தப்பட்டிருக்கிறது. அற்பசொற்ப காரணங்களுக்காக அவைகள் நிறுத்தி விடப்படுகின்றன. மோரோக்கோவிலுள்ள ஸ்பானிய பிரஞ்சுப் பகுதிகள் மோரோக்கோ சுல்தான் ஒருவருடைய ஆட்சியின் கீழ்தானுள்ளன. இத்தேசத்து ஜனங்கள் ஒரே வகுப்பினராகவு மிருக்கின்றனர். அவ்வாறிருந்தும், அவர்களுக்கிடையில் பிரிவினையை வளர்ப்பதற்காக ஸ்பானியப் பகுதியிலுள்ள பத்திரிகை பிரஞ்சுப்பகுதிக்கும், பிரஞ்சுப்பகுதியிலுள்ள பத்திரிகை ஸ்பானியபகுதிக்கும் செல்லக்கூடாது என்று தடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் ஒரு பகுதியிலுள்ள ஜனங்கள் இன்னொரு பகுதியில் பிரயாணம் செய்யக்கூடாது என்றும் சட்டமியற்றி இருக்கிறார்கள்.

தேசிய இயக்கம்

இத்தேசத்தைப்பற்றி அறிவிக்கும் செய்திகள் பத்திரிகைகளில் அதிகமில்லாததாலும், உண்மைச் சமாச்சாரங்கள் வெளியாகுவதற்கான வசதிகள் மிகக்குறைவாக இருப்பதாலும் இப்பிரதேசத்தில் அமைதியும் சமாதானமுமிருப்பதாகவும், இத்தேசத்தார் பிரஞ்சு ஸ்பானிய ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டதாகவும் வெளியுலகத்தார் கருத இடமிருக்கிறது. ஆனால், இன்னமும் இப்பிரதேசத்தின் சில இடங்களில் இவ்வரசாங்கத்துக்குப் பகிரங்க எதிர்ப்பும் இருந்து கொண்டிருக்கிறது. இங்கு ஒரு கூட்டத்தார் ஐரோப்பியரைப் பெரிதென மதித்து அவர்களுக்கு அடங்கிப் போவதுதான் நல்லது என்று மதிக்கிறார்கள். ஆனால், இங்குள்ள வாலிபர்கள் இம்மாதிரி ஐரோப்பியரை மேலாகக் கருதுவதே தங்களை அற்பமாக மதித்துக்கொள்வதாக இருக்கிறது என்றும், கீழ்நாட்டினர் பலர் மேனாட்டினரைக் தோற்கடித்திருக்கின்றனர் என்றும் கூறித் தங்கள் தேசத்தில் தேசிய இயக்கத்தை வளர்த்து வருகிறார்கள்.

இதர முஸ்லிம் தேசங்களின் சமாச்சாரங்களைத் தெரிந்து கொள்ளவும், அத்தேசத்தாருடன் நட்புக்கொள்ளவும் மொரோக்கோ முஸ்லிம்கள் அதிக ஆர்வங்கொள்கின்றார்கள். இங்கு "அஸ்ஸலாம்" என்று ஒரு பத்திரிகை வெளியாகின்றது. இதில் இந்தியா, எகிப்து முதலிய நாட்டுச் செய்திகள் அதிகம் பிரசுரிக்கப்படுகின்றன. அலீகார் சர்வகலாசாலையில் ஆசிரியராக இருந்த இஹ்ஸான் ஸாமி ஹக்கீ என்பவர் இந்தியாவின் நிலைமையையும், இந்தியாவின் மதங்களையும்பற்றியும் எழுதும் வியாசங்கள் இப்பத்திரிகையில் அதிகம் பிரசுரமாகின்றன.

பாலைவனக் கிழவியின் பெருந்தன்மை

முஸ்லிம்கள் எவ்வாறிருந்தனர்? அவர்கள் எவ்வாறிருக்க வேண்டும்? அவர்களது அந்தஸ்தென்ன? இஸ்லாத்தின் உரிமை, இஸ்லாத்தின் அந்தஸ்து முதலியவைகள் யாது? என்னும் பல கேள்விகளுக்கு நாம் ஒரு அன்ஸாரிக் கிழவியின் அருங்குண விசேஷத்தைக் கூறுவதன் மூலம் பதிலளிக்க விரும்புகிறோம். இக்கதை வெறும் கட்டுக்கதையல்லாது ஸஹாபிகளின் காலத்தில் பிரத்தியக்ஷமாக நடைபெற்ற ஒரு காரியமாகும். இக்காரியத்திலிருந்து நம்மவர் கற்றுக்கொள்ளவேண்டிய அநேகம் பாடங்களுண்டு. ஆதலின், வாசகநேயர்கள் இதைக் கதையென்று கருதி, விட்டு விடாமல் இதிலுள்ள விசேஷ அம்சத்தைத் தங்களிடமும் உற்பத்தி செய்துகொள்ள முயல்வார்களாக.

ஹஜ்றத் அப்துல்லாஹிப்னு அப்பாஸ் (ரலி.) அவர்கள் திமிஷ்கு நகரிலிருந்து ஸபர் புறப்பட்டார்கள். இடையில் ஒரு தங்குமிடத்தில் (மன்ஜிலில்) தாமதிக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. அந்த இடத்தில் உணவுக்கு வேண்டிய வசதிகளெதுவும் இருக்கவில்லையாதலால் தம்முடன் வந்தவர்களில் ஒருவரிடம் "நீங்கள், இந்தப் பாலைவனத்தில் எவரேனும் இடையர்கள் அகப்படுகிறார்களாவென்று பார்த்து யாரேனும் அகப்பட்டால் அவர்களிடம் சாப்பாடு வாங்கி வாருங்கள்" என்று கூறி அனுப்பினார்கள்.

ஹஜ்றத் இப்னுப் அப்பாஸ் (ரலி.) அவர்களின் பிரதிநிதியான அத்துணைவர் இரு வேலைக்காரர்களைத் தம்முடன் அழைத்துக் கொண்டு அவ்வனாந்தரத்தின் பலஇடங்களிலும் சுற்றிப்பார்த்துஎவரேனும் மனுஷாள் அகப்படமாட்டார்களா என்று கவனித்தார். அவ்வனாந்தரமெங்கும் மனித சஞ்சார மிருப்பதாகவே தோன்றவில்லையாதலால், உணவுப் பதார்த்தமெதுவும் அகப்படுவதற்கு எவ்வித வழியுமில்லையே என்ற ஏக்கங்கொண்டு திரும்பும் சமயத்தில், வெகுதூரத்தில் ஒரு குடிசை தென்பட்டது. உடனே இம் மூவரும் அக்குடிசையின் அண்டையில் சென்று பார்க்கும்போது அங்கு ஒரு வயோதிக ஸ்திரீ இருப்பதைக் கண்டு அவரிடம் சென்று "அம்மா! நாங்கள் பரதேசிகள்; தங்களிடம் உணவுப் பதார்த்தமேதேனு மிருக்கிறதா?" என்று வேண்டினர்.

அவ்வயோதிக ஸ்திரீ "இல்லை! விற்பனை செய்வதற்கான உணவுப் பதார்த்தம் என்னிடமில்லை. ஆனால், எனக்கும் என் மக்களுக்குமாக என்னிடம் சொற்ப உணவு இருப்பது மெய்" என்று கூறினள்.

அதற்கு அவர்கள் "உமது மக்கள் எங்கே இருக்கிறார்கள்" என்று வினவினர்.

அவ்வயோதிகஸ்திரீ:—"அவர்கள் எனது கால்நடைகளை மேய்ப்பதற்காகச் சென்றிருக்கின்றனர். இது அவர்கள் வரும் சமயம்தான், வந்து விடுவார்கள்" என்றனள்.

அம்மூவரும்:—"அவர்களுக்கென நீங்கள் என்ன உணவு சித்தம்செய்து வைத்திருக்கிறீர்கள்?" என்று வினவினர்.

வயோதிக ஸ்திரீ:—"ஒரு ரொட்டி வைத்திருக்கின்றேன்" என்றனள்.

அம்மூவரும்:—அதில் பாதியை எங்களுக்குத் தரமாட்டீர்களா?"

வயோதிக ஸ்திரீ:—இல்லை! முழு ரொட்டியையும் வாங்கிக் கொள்ளுங்கள்.

அம்மூவரும்:—பாதி ஏன் கொடுக்கக்கூடாது, முழுவதையும் கொடுக்கச் சம்மதிப்பதற்கு என்ன காரணம்? அன்றியும் தங்களிடம் இதைத் தவிர வேறு ரொட்டி இல்லையே."

வயோதிக ஸ்திரீ:—பாதி கொடுப்பதால் என் அந்தஸ்துக் குறைகிறது. முழுவதையும் கொடுப்பதால் என் அந்தஸ்து அதிகப்படுகிறது. ஆதலின் நான் குறைவான வேலை ஏன் செய்யவேண்டும்? அதிகப்படுகிற வேலையை நான் செய்யக் கூடாதா?" என்றனள்.

இவர்களுக்கு உணவு மிகவும் அவசியமாக இருந்ததால், அந்த முழுரொட்டியையும் வாங்கிக்கொண்டு ஹஜ்ரத் அப்துல்லா ஹிப்னு அப்பாஸ் (ரலி.) அவர்களிடம் வந்து ரொட்டியை

யும் கொடுத்து நடந்த செய்திகளனைத்தையும் சரிவரக் கூறினார்கள். இதைக் கேட்டதும் ஹஜ்ரத் அவர்கள் அம்மூவரையும் நோக்கி "இப்பொழுதே அவ்வயோதிக ஸ்திரீயின் குடிசைக்குத் திரும்பச் சென்று அக்கிழவியை என்னிடம் அழைத்து வாருங்கள்" என்று கட்டளை யிட்டார்கள். இம்மூவரும் மறுபடியும் அக்குடிசைக்குவந்து "அம்மா! எங்கள் எஜமானர் உங்களை அழைக்கிறார்" என்றனர்.

வயோதிக ஸ்திரீ :—உங்கள் எஜமானர் யார்?

அம்மூவரும் :—அப்துல்லா ஹிப்னு அப்பாஸ் (றலி.) அவர்கள் எங்கள் எஜமானர்.

அவ்வயோதிகஸ்திரீ :—இந்தப் பெயரைநான் கேள்விப்பட்டதில்லையே.

அம்மூவரும் :— அப்துல் முத்தலிபுடைய பிள்ளை அப்பாஸ் (ரலி.) அவர்களின் புதல்வர்; நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் சிறிய தந்தையின் மகனார்.

வயோதிக ஸ்திரீ :—அல்லாஹு தஆலாவின் மீது பிரமாணமாக, இது மிகப் பெரும் பாக்கியம். என்னுடைய இனத்தார் இவர்களுக்கு அன்ஸாரிகளாவார்கள்.

அம்மூவரும் :—மெய்தான்.

வயோதிக ஸ்திரீ :—அவருக்கு என்னிடத்தில் என்னவேலை?

அம்மூவரும் :—உமது பெருந்தன்மையான நடத்தைக்காக உமக்குப் பரிசளிக்க விரும்புகிறார்.

வயோதிக ஸ்திரீ :—இறைவன் மீதாணையாக நான் செய்த காரியம் உங்களுக்கு உபகாரமாகத் தோன்றுமாயின்..........அதற்காக நான் எவ்விதப் பிரதி பிரயோஜனத்தையும் வாங்கிக் கொள்ளமாட்டேன். இவ்வித உதவி செய்வது மனிதராகப் பிறந்தவர்கள் கடமையாகும்.

அம்மூவரும்:— எங்கள்எஜமானர் உங்களைப் பார்க்கவும் உங்களிடம் சம்பாஷிக்கவும் விரும்புகிறார்.

வயோதிக ஸ்திரீ :—வருகிறேன். யானும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது பந்துவான இம்மாதிரி பெரியார்களைப் பார்க்க இஷ்டப்படுகிறேன்.

பின்னர், அவ்வயோதிக ஸ்திரீ அம்மூவருடனும் ஹஜ்ரத் அப்துல்லா ஹிப்னு அப்பாஸ் (ரலி.) அவர்கள் இருக்குமிடம் வந்தார்கள். ஹஜ்ரத் அப்துல்லா ஹிப்னு அப்பாஸ் (ரலி.) அவர்கள் அவ்வயோதிக ஸ்திரீயை வரவேற்று உங்களது வரவு சந்தோஷகரமானதாக இருக்கட்டும். நீங்கள் சௌக்கியமாக இருக்கிறீர்களா என்று உபசார வார்த்தைகளால் அவர்களது க்ஷேமலாபத்தை விசாரித்தார்கள்.

அவ்வயோதிக ஸ்திரீ :—இவ்வுலகில் எனக்குக் கிடைக்கப்பெறாத எந்தச் சந்தோஷமும் இனி எஞ்சி இருக்கவில்லை. ஆனால், நான் இப்பொழுது கிடைத்ததைக் கொண்டு திருப்தியடையும் நிலைமையில் இருக்கிறேன்; பந்துக்களைப் பரிபாலித்து வருகிறேன்; அந்தியிலும் சந்தியிலும் ஆண்டவனை அடையவேண்டுமென்ற ஆவலுடன் மரணத்தை எதிர்பார்த்த வண்ணமிருந்து வருகிறேன்.

ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி.) அவர்கள்.—இரக்கமுள்ள தாயே! தாங்கள் ரொட்டி முழுவதையும் எங்களுக்குக் கொடுத்துவிட்டீர்கள். உங்களது புதல்வர்கள் கால்நடைகளை மேய்த்துக் களைப்புடனும் பசியுடனும் உங்களிடம் திரும்பவரும்போது அவர்களின் பசியைத் தணிப்பதற்கு நீங்கள் என்ன வைத்திருக்கிறீர்கள்?

அவ்வயோதிக ஸ்திரீ :—"யானோ இரவு பகலாகப் பட்டினியாயிருந்து வருகிறேன். எவரேனும் பெரியார்கள் வந்தால் அவர்களுக்கு உணவளித்துவிட்டு என் மக்களுக்குப் பெருந்தன்மை என்ற அந்தஸ்தை அளிக்கவேண்டுமென்றிருக்கிறேன்" என்ற கருத்தமைந்த ஒரு செய்யுளைக் கூறினள்.

ஹஜ்ரத் இப்னு அப்பாஸ்(ரலி.) அவர்களுக்கு அவ்வயோதிக ஸ்திரீ கூறிய வாக்கியங்கள் சந்தோஷத்தையளித்தன. உடனே தமது வேலைக்காரரைநோக்கி "நீங்கள் இவரது குடிசைக்குச் சென்று, இவரது புதல்வர்களை அழைத்து வாருங்கள்" என்று கட்டளையிட்டார்கள். அவ்வயோதிகஸ்திரீயும் தமது மக்களின் அங்க அடையாளங்களைக் கூறினள். அவ்வேலைக்காரர்கள் அக்குடிசைக்குச்சென்று அவ்வயோதிக ஸ்திரீயின் மக்களைக்கண்டு அவர்களின் தாயார் அறிவித்த செய்தியைக் கூறி ஹஜ்ரத் அப்துல்லா ஹிப்னு அப்பாஸ் (ரலி.) அவர்களிருக்குமிடத்துக்கு வரும்படி அழைத்தார்கள். மேய்ப்பாளர்களான அம்மூவரும் ஹஜ்ரத்

இப்னு அப்பாஸ் (ரலி.) அவர்களின் ஏவலாள ருடன் ஹஜ்ரத் அவர்களைப் பார்ப்பதற்காக வந்தார்கள்.

ஹஜ்றத் இப்னு அப்பாஸ் (ரலி.) அவர்கள் அம்மூவரையும் வரவேற்று உபசரித்து "உங்களுக்கு ஏதேனும் ஒருகாரியம் செய்யவேண்டும்: உங்களுக்கு நான் விரும்புகிற உபகாரத்தைச் செய்யவேண்டும் என்பதற்காகவே யான் உங்களையும், உங்கள் மாதாவையும் என்னிடம் அழைத்தேன்" என்று கூறினார்கள்.

அதற்கு அம்மேய்ப்பர்கள் "இவ்வாறு ஒருவருடைய காரியத்துக்கு மற்றவர் உதவுவதானது, உபகாரம்செய்யும்படி ஒருவரை ஒருவர் கேட்டுக்கொண்டால்தான் ஒருவருக்கு மற்றவர் உபகாரம் செய்வது வழக்கம். அல்லது ஒருவருக்கு ஒருகாரியத்தில் உதவி செய்திருந்தால் அதற்குப் பிரதிபலனாக மற்றவர் உபகாரம் செய்யும் வழக்கமுண்டு. அவ்வாறான உதவி எதையும் நாங்கள் உங்களுக்குச் செய்துவிடவில்லை. தாங்களே முதலில் எங்களுக்கு உபகாரம் செய்யவிரும்புகிறீர்கள். இது உங்களது உதாரகுணமாகும். இதற்காக நாங்கள் நன்றி செலுத்துகிறோம்" என்று பதில் கூறினர்.

ஹஜ்ரத் அப்துல்லா ஹிப்னு அப்பாஸ் (ரலி.) அவர்கள் 'வனாந்தரத்தில் வாசஞ் செய்யும் அந்நால்வருக்கும் 7 ஆயிரம் வெள்ளிக்காசுகளையும் பத்து ஒட்டகைகளையும் நன்கொடையாக அளித்தார்கள். அப்பொழுது, அவ்வயோதிக ஸ்திரீ தமது மைந்தர்களை நோக்கி "மக்காள்! நீங்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கொரு கவி கூறுங்கள்" என்று கட்டளையிட்டனள். அவர்கள் மூவரும் முறையே பின்வரும் கருத்துகளமைந்த மூன்று கவிகளைக் கூறினர்.

மூத்தவர்:—உங்களுடைய சொல் உண்மை என்பதையும், உங்களது கிரியை உண்மையை அஸ்திபாரமாகக் கொண்டதென்பதையும், நீங்கள் நல்லெண்ணமே கொண்டவர்களென்பதையும் பற்றி நான் உங்களுக்கு சாட்சியங் கூறுகிறேன்.

இரண்டாமவர்:—கேட்பதற்கு முன் கொடையளித்தல் பெருந்தர்மமும், உயரிய செய்கையுமாகும்.

மூன்றுமவர்:—மக்களுக்குத் தலைவராகவும், அவர்களுக்காக முன்னுக்கு நிற்பவர்களாகவுமுள்ள பெரியார்கள்தான் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறார்கள்.

கடைசியாக அவ்வயோதிக ஸ்திரீ:—தர்மகுணம் படைத்த பெரியோய்! தாங்கள் நீடூழி வாழ்வீராக! தாங்கள் க்ஷேமமாக இருப்பீராக!! உமக்கு துன்பம் நெருங்காதிருக்கட்டும்!!! என்ற கருத்துகளைச் செய்யுளாகக் கூறினள்.

பின்னர், ஹஜ்றத் அப்துல்லா ஹிப்னு அப்பாஸ் (ரலி.) அவர்கள் அந்நால்வரையும் அனுப்பிவிட்டார்கள். இது நமது முன்னோர்களின் தன்மையாக இருந்தது. இதுதான் உண்மை முஸ்லிம்களின் லக்ஷணம். நம்மில் இந்த இலக்ஷணங்கள் அமைந்திருக்கும் வரை நாம் உலகத் தலைவர்களாயிருந்தோம். நம்மில் இந்த இலக்ஷணங்கள் இப்போது வெகுவாகக் குறைந்துவிட்டன. நம்முடைய தலைமைப் பதவி நீங்கி நாம் பிறரை நமக்குத் தலைவராக ஏற்படுத்திக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. ஆகவே மேலே கூறிய இந்நிகழ்ச்சிகளிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களனந்தமுண்டு. இதை செந்நாப்புலவர் "என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு" என்ற குறளால் விளக்கியுள்ளார். இப்படிப்பட்ட தன்மை நம் அனைவரிடத்திலும் அடியுடன் இல்லை என்று கூறுவதாக எவரும் வருந்தற்க. நம்மிற் பலரிடம் இத்தன்மை அடியுடன் இல்லை என்னலாம். சிலரிடம் இத்தன்மை ஓரளவு இருக்கத்தான் செய்கிறது. ஆகவே, இத்தன்மை நம் யாவரிடமும் பூரணமாக இருக்கவேண்டுமென்பது தான் நமது பேரவாவாகும். இறைவன் நம்மவருக்கு அந்த முதற் காலத்தவரின் தன்மைகளும் நடக்கைகளும் உண்டாக்குவதற்காக 'தௌபீக்' செய்தருள்வானாக. ஆமீன்.

சிங்கை சந்தா நேயர்கட்கு!

அன்புடைய அபிமானிகள் தங்கள் சந்தா பாக்கிகளையும், நிகழ்பெறும் ஆண்டுக்குள்ள சந்தாவையும் அவ்விடத்திய நமது ஏஜண்டு ஜனாப் மு. முஹம்மது ஷரீப் (439 A நார்த்பிரிட்ஜ் ரோடு) அவர்களிடம் செலுத்திவிடுமாறு வேண்டுகிறோம்.

ஷஹீத் அன்வர்பாஷாவின் அரிய தொண்டுகள்

(ஜமால் பாஷாவின் ஞாபகக் குறிப்பு)

(சென்ற மாதத்தொடர்.)

சலோனிக்காவிலுள்ள பல்கேரியப் படைகளையும் கிரேக்கப்படைகளையும் அடக்குவதற்காக காஜீஅன்வர்பாஷா அவர்களை சுல்தான் அப்துல் ஹமீதுகான் (மர்ஹூம்) அவர்கள் நியமித்தார்கள். அன்பர் பாஷாவின் வீரப்பிரதாபங்களும் ரூபலாவண்யமும் அக்காலத்திலேயே நாடெங்கும் பரவி இருந்தது. கலகக்காரர்களின் கூட்டத்தை அவர்பின்றொடர்ந்து செல்வாராயின் அக்கூட்டத்தாரின் ஆணிவேரைப் பிடுங்கி எரியும்வரை திரும்பிவரமாட்டார். காடுகளிலும், வனாந்திரங்களிலும், இருண்ட நிசிகளிலும், மலைகளிலும், மடுக்களிலும் கொஞ்சமும் அஞ்சாமல் கலகக்காரர்களைத் தன்னந்தனியாகப் பின்றொடர்ந்து செல்வார். தம்முடைய சொந்தச் சௌகரியங்களைக் கவனித்துக்கொள்ளவும் மாட்டார். தம்முடைய ஜீவியத்தை லக்ஷியம் செய்யவும் மாட்டார்.

கலகக்காரர்களனைவரும் அன்வர்பாஷாவின் பெயரைக்கேட்ட மாத்திரத்தில் நடுங்குவார்கள்; இன்றுவரை இவ்வளவு சுறுசுறுப்பும் முயற்சியுமுள்ள எந்தத் துருக்கியினிடமும் போர் செய்ய வேண்டிய சந்தர்ப்பம் வாய்க்கவில்லை என்று கூறுவர். ஆகவே, அன்வர்பாஷா கலகக்காரர்களைப் பிடித்துக் கலகத்தை அடக்குவதற்கென்று ஒரு ஊருக்குச் செல்வாராயின், கலகக்காரர்கள் அந்தப் பிரதேசத்தையே காலி செய்துவிட்டு ஓடிவிடுவர். அங்கு அமைதியும் சமாதானமும் ஏற்பட்டுவிடும்.

பல்கேரியப் பட்டாளத்து ஜாக்கோப் என்ற ஆபீஸர் ஒருவர் துருக்கியர்களை அதிகம் இம்சித்து வந்தார். அவன் துருக்கியர்களைத் தமது நாட்டைவிட்டு வெளியேற்றாமல் விடுவதில்லை என்று பிரமாணமும் செய்திருந்தான். இப்பல்கேரிய ராணுவ ஆபீஸர் அதிக பலம் பொருந்தியவன். இவனால் முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்கள் கியாமத்து நாள் வந்துவிட்டதா என்று கலக்கமுற்றிருந்தது. இவன் குழந்தைகளையும் கூடக்கொன்று விடுவான். ஸ்திரீகளைக் கற்பழித்து விடுவான். எனவே, துருக்கி அரசாங்கம் இவனால் சங்கடத்துக் குட்படுத்தப்பட்டிருந்தது. ஆகவேஇவனைப் பிடித்து அடக்குவதற்காகஅநேகம் முறை பட்டாளங்கள்அனுப்பப்பட்டன ஆனால் இவன் அகப்படவே இல்லை.

ஒருநாள் அன்வர்பாஷா ஒரு கிராமத்தில் பல்கேரிய நிலச்சுவான்தார் ஒருவர் வீட்டில் உட்கார்ந்துகொண்டிருந்தார். அந்த பல்கேரிய நிலச்சுவான்தார் துருக்கி அரசாங்கத்தின் மீது அதிகபற்றும் அபிமானமுமுள்ளவரென்றும், ஜாக்கோப் முதலிய கலகக்காரர்களை அதிகம் வெறுப்பதாகவும் அன்வர்பாஷாவிடம் கூறி இருந்தார். அன்வர்பாஷா அவருடைய கட்டிலில் சாய்ந்துகொண்டிருந்தபோது தம்முடைய துப்பாக்கியைத் தமது படுக்கைக்குக் கிழில் வைத்திருந்தார். அவ்வீட்டுக்குச் சொந்தக்காரரான பல்கேரிய நிலச்சுவான்தாரின் எட்டு வயதுப்புதல்வன் தம்முடைய துப்பாக்கியைக் கூர்ந்து பார்த்துக்கொண்டிருப்பதை அன்வர் பாஷா உணர்ந்துகொண்டார்.

உடனே, அன்வர்பாஷா அப்பையனுடன் பேசத் தொடங்கினார். ஆரம்பத்தில் வேறு பல பேச்சுக்களை அப்பையனிடம் பேசி, அவனைச் சிநேகம் செய்துகொண்டு தம்முடைய அசல் பேச்சை ஆரம்பித்து "இதோ பார்? என்னுடைய துப்பாக்கி எவ்வளவு நல்லதாக இருக்கிறது; ஜாக்கோபுக்கு இம்மாதிரி துப்பாக்கி எங்கிருந்து கிடைக்கப் போகிறது?" என்று கூறினார்.

பையன், தன்னுடைய பெற்றோர்கள் ஜாக்கோபைப் பற்றிப் புகழ்ந்து பேசிக் கொள்வதை இதற்கு முன் கேட்டிருந்தபடியால், "ஜாக்கோபுடைய துப்பாக்கி இதைப் பார்க்கினும் ரொம்ப நல்ல துப்பாக்கி" என்று கூறினான்.

அன்வர் பாஷா விஷயத்தை உணர்ந்துகொண்டார். தமது நோக்கம் சித்தியாவதற்கான காலம் வந்துவிட்டது என்பதை உணர்ந்து

கொண்டு அப்பையனுடன் சம்பாஷணை செய்யவும் தர்க்கம் செய்யவும் ஆரம்பித்துப் பையனுக்கு ரோஷம் வரும்படிச் செய்தார். பையனுக்குக் கோபமும் ஆத்திரமும் உண்டாயிற்று. அன்வர் பாஷா சிரித்துக்கொண்டு "ஜாக்கோப் துப்பாக்கி இதைப்பார்க்கினும் நல்லதாக இருந்தால் அதை எடுத்துக்கொண்டு வந்து இந்தத் துப்பாக்கியுடன் ஒப்பிட்டுப் பார்த்து யாருடைய துப்பாக்கி நன்ருக இருக்கிறது என்பதைக் காண்பி. அப்பொழுது நாங்களும் அதைத் தெரிந்து சொள்கிருேம்" என்று கூறினர்.

பையன் உடனே எழுந்து, தலைவாசல்வரை வந்தான். உடனே, திடீரென நின்றுவிட்டான். அதுபொழுது ஜாக்கோபை துருக்கியர்கள் தேடிக்கொண்டிருக்கின்றனர் என்பது அவனுடைய ஞாபகத்தில் வந்துவிட்டது. ஜாகோப் வீட்டை விட்டு வெளியேறி வந்தால் பேராபத்து வந்துவிடும் என்பதை யுணர்ந்த பையனுக்கு நடுக்கமும்பயமும் தோன்றிவிட்டது. உடனே "ஜாக்கோப் இங்கேஇல்லை" என்று குழம்பிக்கொண்டே கூறினன்.

ஆனல், அப்பையனின் முகமே அவன் பொய் சொல்கிருன் என்பதை அறிவித்துக் கொண்டிருந்தது. அன்வர் பாஷா அப்பையனை வெகுவாக ஏமாற்றியும் அதட்டியும் கேட்டுப் பார்த்தார். ஆயினும் பையன் "ஜாக்கோப் இங்கில்லை" என்றே கூறிக்கொண்டிருந்தான். ஆனல் அந்த வீட்டில் தான் ஜாக்கோப் ஒளித்துக் கொண்டிருக்கிருன் என்பதை அன்வர் பாஷா நன்கு உணர்ந்துகொண்டாராதலின், உடனே, தமது சிப்பாய்களுக்குச் சப்தங் கொடுத்து அழைத்து வீட்டை முற்றுகையிட்டுக் கொண்டார். பின்னர் வீட்டிற்குளுள்ள ஒவ்வொரு இடத்திலும் சோதனை செய்ய ஆரம்பிக்கப்பட்டது. வீடுமுழுவதும் சோதனை போட்டாகி விட்டது; ஜாக்கோபைக் காணவில்லை. அவன் இருக்கிருன் என்பதற்குள்ள அறிகுறியைக் கூடக் காணேம். அன்வர் பாஷா அந்தப்பையனையும் தம்முடன் வைத்துக்கொண்டே சோதனையிட்டார். கடைசியாக அவ்வீட்டினுள் ஒரு அறைதான் பாக்கியாக இருந்தது. அதில் உமிமூட்டை நிறைந்திருந்தது. இந்த அறைக்கு வந்தவுடன் பையனின் மூஞ்சி மஞ்சள் நிறமாக மாறிவிட்டது. இந்த அறைக்குள்தான் ஜாக்கோப் இருக்கிருன் என்பதைப் பையனின் முகக்குறியால் அன்வர் பாஷா நன்கு உணர்ந்துகொண்டார். அன்வர் தன் சிப்பாய்களை நோக்கி "இந்த அறையைக் கொளுத்தி விடுங்கள்" என்று சப்தமிட்டுக் கூறினர். ஆனல், அன்வர் பாஷா பயங்காட்டுவதற்காகத் தான் இம்மாதிரி கூறினர். உண்மையிலேயே அந்த வீட்டைக் கொளுத்திவிடவேண்டு மென்பது அவரது நோக்கமல்ல. இவ்விஷயம் பையனுக்குத் தெரியாதாகையால் "வேண்டாம்! வேண்டாம்! இந்த அறையைக் கொளுத்தி விடாதீர்கள்" என்று கூறினன் பையன். பையனின் இந்தப்பதில் ஜாக்கோப் அங்கிருக்கிருன் என்ற இரகசியத்தை அம்பலபடுத்திவிடவே, உடனே உமிமூட்டைகள் வெளியிலெடுக்கப் பட்டது. மூட்டைகளுக்குக் கீழில் உள்வீடு இருப்பது வெளியாயிற்று. உடனேஉள்வீட்டுக்குள் துருக்கிச்சிப்பாய்கள் இறங்கினர். அங்கு ஜாக்கோபும், அவனுடன் கலகத்தலைவர்களில்பத்து பேரும் இருந்தனர். துருக்கி சிப்பாய்களை அக்கலகத்தலைவர்கள் தாக்கினர். துருக்கியரும் சண்டைபோட்டனர். இச்சண்டையில் ஜாக்கோப் செத்தான். அவனுடைய துணைவர்களை அன்வர் அரஸ்ட் செய்தார்.

அன்வர் பாஷாவின் மார்க்க பக்தி

சலோனிகாவிலுள்ள ரஷிய ஸ்தானிகர் நடனசபை ஒன்றைக் கூட்டினர். அதற்கு ஸ்தலத்திலுள்ள துருக்கி ஆபீஸர்களை எல்லாம் அழைத்திருந்தார். இதுபோல் அன்வர் பாஷாவுக்கும் அழைப்புக் கிடைத்தது. எல்லா உத்தியோகஸ்தர்களும் நடனசபைக்குச் சென்றனர். நடனமாடியவர்களில் பிரஞ்சுக் கட்டழகியும் ஒருத்தி. அச்சபைக்கு வந்திருந்தவர்களின் திருஷ்டி முழுவதும் அக்கட்டழகியின் மீதே இருந்தது. அவளின் ரூபலாவண்யத்தைப் பார்த்து யாவரும் பரவசமடைந்திருந்தனர். இவள் தம்மை ஒருமுறையேனும் கடைக்கண்ணல் பார்த்து விடமாட்டாளா என்று ஒவ்வொருவரும் ஏங்கி இருந்தனர். ஆனல், அப் பரங்கி நாட்டியப் பெண் இவர்களைக் கொஞ்சமும் லக்ஷியஞ் செய்யவில்லை. கடைசியாக பரி உருவமெடுத்த இப்பிரஞ்சு மாது அன்வர் பாஷாவினண்டையில் சென்றனள். அவரைப் பார்த்து மெய்ம்மறச்தனள். பின்னர், அவள் சலோனிக்காவிலுள்ள துருக்கி கவர்னரிடம் 'அன்வர் பாஷாவைச் சந்திக்கவேண்டுமென்று தாம் விரும்புவதாகத் தெரிவித்துக்கொண்டனள். கவர்னர் அன்வர்

பாஷாவை அழைத்து அவளுடன் அறிமுகப் படுத்திவைத்தார். அவள் தமது வீட்டுக்கு வரவேண்டுமென்று அன்வர் பாஷாவை அழைத்தாள். இருவருக்குமிடையில் நேசமும் உண்டாகிவிட்டது. இக்கட்டழகி அவளுடைய வலையில் தம்மைச் சிக்கவைக்க விரும்புகின்றனள் என்பதைஅன்வர் உணர்ந்துகொண்டார். பின்னர், அவள் தன்னை மணந்துகொள்ளும்படி அன்வர் பாஷாவைக் கேட்டுக்கொண்டாள். உடனே அன்வர்பாஷா மறுத்துக்கூறியதுடன் அன்றிலிருந்து அவளுடைய சிநேகத்தையும் விட்டுவிட்டார். இஸ்லாமிய உலகம் முழுவதும் சுயேச்சை யடையவேண்டுமென்று பிரீதிகொண்டிருந்த அவருடைய இருதயம் ஒரு பரங்கி ஸ்திரீயின் அழகைக்கண்டு மயங்குவது எங்ஙனம் நடைபெறும்?

துருக்கிப் புரட்சி

அன்வர் பாஷா துருக்கி ஐக்கிய முன்னேற்றச் சங்கத்தில் சேர்ந்து அதில் விசேஷச் சிரத்தை காண்பித்துவந்தார். இச்சங்கத்தாரின் நடவடிக்கைகளையும் நோக்கத்தையும் பற்றி சுல்தான் அப்துல் ஹமீது கான் அவர்களுக்கும் தகவல் எட்டிற்று. உதுமான் பாஷா, ஷம்ஸுத்தீன் பாஷா, இப்ராஹீம் பாஷா, ஹில்மீ பாஷா, நாஜிம்பே ஆகியவர்களின் மீது சுல்தானுக்கு அதிகம் நம்பிக்கை இருந்தது. நாஜிம்பே அன்வர் பாஷாவின் சகோதரியை மணந்தவராதலால் அன்வர் பாஷா நாஜிம்பேயின்பால் தமக்குள்ள அபிமானத்தின் காரணமாக இந்தச் சங்கத்தின் புரட்சிக்கொள்கையைப்பற்றிக் கூறி அவரைத் தம் வயப்படுத்த முயன்றார். ஆனால், நாஜிம்பே அன்வர் பாஷாவை ஏமாற்றக் கருதித் தமக்குப் புரட்சி இயக்கத்தில் அனுதாபமிருப்பதாகக்கூறிப் புரட்சிச் சங்கமான ஐக்கிய முன்னேற்றச் சங்கத்தில் அங்கத்தினராகவும் சேர்ந்துகொண்டார். நாஜிம்பே, சதிக்குள் சதி செய்யும் இம்முறையால்புரட்சிகோஷ்டியினரின் சில இரகசியங்களை யறிந்துகொண்டதுடன் அதிலுள்ள முக்கிய அங்கத்தினர்கள் யார் யார் என்பதையுங் கூடத்தெரிந்து சுல்தான் அப்துல் ஹமீது கானுக்கு விபரமாகக் கூறவாரம்பித்தார். சுல்தான் அவர்கள் அக்கோஷ்டியில் சேர்ந்தவர்களைக் சிறுகச் சிறுகப்பிடித்துக் கடலில் மூழ்கடித்துக்கொண்டு வந்தார். ஆனால், அன்வர் பாஷா பிடிபட இருக்கிற சமயத்தில் விஷயம் வெளியாகிவிட்டது. அன்வர் பாஷாவின் சகோதரி தமது கணவன் செய்யும் சதிக்குள் சதியான காரியத்தை அன்வர்பாஷாவிடம் கூறி உடனே சலோனிக்காவை விட்டு வெளியேறிப்போய் விடவேண்டுமென்றும், இல்லையேல் அரசாங்கத்தார் கைதிசெய்துவிடுவார்கள் என்றும் புத்திமதி கூறி, அன்வர் பாஷாவின் உயிரைக் காப்பதற்கான முயற்சி செய்தனள்.

உடனே அன்வர் பாஷா தமது துணைவர்களுக்கு இருக்கிற நிலைமையை விவரித்துக் கூறி, இந்த க்ஷணத்திலேயே புரட்சிக் கலகத்தை ஆரம்பித்துவிடவேண்டும்; இல்லையேல் நாம் அனைவரும் கைதி செய்யப்படுவோம் என்றும், நம்முடைய எல்லா ஏற்பாடும் வீணாகிவிடுமென்றும் கூறினர். எனவே, இன்றைய தினமே புரட்சிக் கலகத்தை ஆரம்பித்துவிடவேண்டும்; சுல்தான் அவர்களுக்குப் பூரண ஆதரவை அளிப்பவரான ஷம்ஸுத்தீன் பாஷாவைக் கொன்றுவிடவேண்டும்; சிறந்த சேனாதிபதியும் உபயோகமுள்ளவருமான உதுமான் பாஷாவைக் கொல்லாமல் கைதி செய்துவிடவேண்டும்; ஹில்மீபாஷாவை அன்வர் பாஷா கண்டு பேசிக் கலந்தபின் அவரைக் கொலை செய்வதா அல்லது கைதி செய்வதா என்ற விஷயத்தை முடிவு செய்துகொள்ளலாம்'' என்று தீர்மானஞ் செய்யப்பட்டது.

இம்முடிவுசெய்தவுடன்அன்வர் பாஷாஹில்மீ பாஷாவின் இல்லஞ் சென்று பெரும் அபாயம் நிகழும் போலிருக்கிறது; ஐக்கிய முன்னேற்றச் சங்கம் சுல்தான் அவர்களுக்கு எதிராக இல்லை; சுல்தான் அவர்களின் மூடமந்திரிமார்களை நீக்கிவிடவேண்டுமென்றுதான் விரும்புகிறது; சுல்தான் அவர்களை அரசுரிமையிலிருந்து அகற்ற வேண்டுமென்பது அச்சங்கத்தின் நோக்கமன்று; ஐக்கிய ஒன்றுமைச் சங்கம் புரட்சிக் கலகத்தில் வெற்றி பெற்றால் தங்களை முதல் மந்திரியாக ஆக்கிவிடும்; இதற்காகத் தாங்கள் அந்தச் சங்கத்துக்கு உதவிபுரிய வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

ஹில்மீ பாஷா புரட்சிச் சமாச்சாரத்தைக் கேட்டவுடன் நடுக்கங்கொண்டுவிட்டார். நடுங்கிக்கொண்டே நான் செய்யக் கூடியது ஒன்றுமில்லை; நீங்கள் வெற்றி பெறவேண்டுமென்று துஆச் செய்கிறேன்; உங்கள் கலகத்தை நான் நேருக்கு நேராக எதிர்க்கமாட்டேன்; உங்களுடை சங்கம் அதிகப் பலம் பொருந்திய சங்கமாக இருப்பதால் அதை எதிர்ப்பதில் பிரயோ

ஜன மில்லை யென்றும், சுல்தான் அவர்கள் பால் சங்கத்துக்கு துவேஷமில்லை என்றும் தக்க சமயத்தில் சுல்தான் அவர்களுக்கு அறிவிக்க முடியும் என்றும் வாக்களித்தார்.

அன்வர் பாஷாவின் வீரதீரம்

இவ்வாக்குறுதியை வாங்கிக் கொண்டு கடைசிமுறையாகச் சகோதிரியைப் பார்க்க நாஜிம்பே வீட்டுக்கு அன்வர் பாஷா வந்தார். அங்கு நாஜிம்பேயும் இருந்தார். அன்வர் பாஷாவைக் கண்டவுடன் அவரது சகோதரி சமிக்ஞையாகப் போலீஸ் படை ஒளிந்திருப்பதை அறிவித்து விட்டார். உடனே அன்வர் பாஷா நாஜிம்பேயைப் பிஸ்தோலால் சுட்டுக் காயப்படுத்தி வீழ்த்தினார். உடனே போலீஸ் பட்டாளம் பகிரங்கமாக விட்டை முற்றுகை போட்டது. போலீசாரில் ஒருவரைச் சுட்டுக்கொன்றார். மற்றொருவரைக் காயப்படுத்தி வீழ்த்தினார். மூன்றாவது போலீஸ்காரனை இரண்டு உதை விடுத்து வீட்டை விட்டுத் தாராளமாகத் தப்பி வெளியேறினார். ஒரு நிமிஷத்தைக் கூட வீணாக்காமல் உடனே கலகத்தை ஆரம்பித்து விடவேண்டுமென்று சங்கத்தின் எல்லா கிளை ஸ்தாபனங்களுக்கும் தகவல் அறிவித்து விட்டார். மூட மந்திரிமார்களை உடனே நீக்கிவிட்டு 24 மணிநேரத்துக்குள் பார்லிமெண்டரி ஆட்சி முறையை ஏற்படுத்தவேண்டுமென்று ஏராளமான கையொப்பமிட்டுச் சுல்தானுக்குத் தந்தி கொடுக்க ஏற்பாடு செய்தார். பின்னர், உடனே சலோக்காவிலிருந்து அன்வர் பாஷா மலாஸ் என்ற ஊருக்குச் சென்று பிரசித்தி பெற்ற தளகர்த்தரும் உபயோகமானவருமான உதுமான் பாஷாவைக் கைதிசெய்தார். ஷம்ஸூத்தீன் பாஷாவைக் கொலை செய்து விட்டதாகத் தகவலும் கிடைத்தது.

புரட்சி ஏற்பட்ட இச்சமாச்சாரம் சுல்தானுக்கு எட்டியவுடன் ஸ்மர்னாவிலுள்ள சைனியங்களை உடனே சலோனிக்காவுக்கு அனுப்பிக் கலகக்காரர்களை அடக்கி விடவேண்டுமென்று உத்தரவு செய்தார். ஆனால், ஸ்மர்னாவிலுள்ள ஐக்கிய முன்னேற்றக் கிளைச் சங்கத்தார் துருக்கிச் சைனியங்களில் ஒவ்வொருவருக்கும் ஒரு சிக்ரட் பெட்டி இனாமாகக் கொடுத்தார்கள். அந்தப் பெட்டிக்குள் ஒரு விளம்பரமும் வைக்கப்பட்டிருந்தது. "அன்வர் பாஷா சுல்தான் அவர்கள்பால் அதிகப்பற்றும் ராஜ பக்தியுமுள்ளவர்; மூடமந்திரிமார்களைத்தான் அவர்களுடைய பதவிகளிலிருந்து நீக்க விரும்புகிறார்" என்று அவ்விளம்பரங்களில் குறிப்பிட்டிருந்தது. ஸ்மர்னாவின் பட்டாளங்கள் சலோனிக்காவுக்குச் செல்வதற்கு முன்னரே ஐக்கிய முன்னேற்றச் சங்கத்தாரால் உண்மையை உணர்ந்திருந்தார்களாதலால், சலோனிக்காவில் கலகக்காரர்களை எதிர்த்து யுத்தம் செய்ய மறுத்துவிட்டனர். இந்தச் சந்தர்ப்பத்தில் ஹில்மீபாஷா தமது வாக்குறுதியின்படி சுல்தான் அவர்களுக்கு "புரட்சிக் கலகம் ஐரோப்பியப் பிரதேசம் முழுவதும் பரவிவிட்டது; ஐக்கிய முன்னேற்றச் சங்கம் அதிகப் பலம் பொருந்தியதாக இருக்கிறது; உதுமான் பாஷா கலகக்காரர்களால் கைதி செய்யப்பட்டிருக்கிறார்; ஷும்ஸுத்தின் பாஷா கொல்லப்பட்டுவிட்டார்; நாஜிம்பே காயமடைந்து ஆஸ்பத்திரியில் கிடக்கிறார் ஆதலால் ஐக்கிய முன்னேற்றச் சங்கத்தை இந்நிலைமையில் எதிர்ப்பது பிரயோஜனமில்லாத காரியமாகும்" என்று தந்தியின் மூலம் அறிவித்தார்.

சுல்தான் அப்துல் ஹமீதுகான் இச்செய்திகளை அறிந்தவுடன் பயந்து பார்லிமெண்டரி அரசியல் திட்டமுறையை ஏற்படுத்திக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு விட்டார். எனவே, இந்தப் புரட்சியில் அன்வர்பே அதிகம் கீர்த்தி பெற்றாராதலின், ஜனங்களது அபிமானத்தைப் பெற்று விட்டார். துருக்கியர் அனைவரும் அவரை "ஹீரோ" (வீரர்) என்று கொண்டாடினர். ஆகவே, ஐக்கிய முன்னேற்றச் சங்கம் அன்வர் பாஷாவுக்கு ராணுவத்தில் உயர்பதவியளிக்க வேண்டுமென்று சுல்தான் அவர்களை வற்புறுத்திற்று. இதன்பேரில் அவர் மேஜர் பதவிக்கு உயர்த்தப்பட்டார். சுல்தான் அப்துல் ஹமீதுகான் மிகவும் தந்திரசாலியாகையால், இப்புரட்சி நிகழ்ந்த ஒரு வருஷகாலத்துக்குள் எல்லா உலமாக்களையும் தன் வசப்படுத்திக் கொண்டுமார்க்கத்துக்கு ஆபத்து வருவதாகக் கூறிஐக்கிய முன்னேற்றச்சங்கத்துக்கு விரோதமாக அவர்களிடமிருந்து மார்க்கத் தீர்ப்புவாங்கிக்கொண்டார். உடனே தமது சைனியத்திலுள்ள வாலிபத் தளகர்த்தர்களை எல்லாம் கொன்று விடும்படி தமது சிப்பாய்களுக்கு உத்திரவிட்டார். சிப்பாய்களும் முன்பின் யோகிக்காமல் அநேகம் வாலிப தளகர்த்தர்களைக் கொன்றுவிட்டனர்; பார்லிமெண்ட் சபையை முற்றுகை போட்டு நீதி இலாக்கா மந்திரியைக் குண்டுக்கு இரையாக்கி விட்டனர்.

சுல்தான் சைனியங்களின் தோல்வி

நான் அன்வர் பாஷாவுடன் சேர்ந்து சுல்தான் அவர்களின் அரண்மனையை முற்றுகையிடும் சைனியங்களில் இருந்தேன். அதுபொழுது சுல்தானின் பிரத்தியேகப் பட்டாளத்தின் ஒரு பகுதியினர் பட்டத்து இளவரசர் முஹம்மது ரஷாதுடைய மாளிகையை முற்றுகையிட்டுக் கொண்டிருந்தனர். இவர்கள் இளவரசரைக் கொன்று விடுவார்களோ என்ற சந்தேகம் அன்வர் பாஷாவுக்குத் தோன்றிற்று. உடனே, அவர் என்னை அழைத்து சுல்தான் அவர்களின் பிரத்தியேகப் பட்டாளத்தாரைவிட்டு இளவரசர் முஹம்மது ரஷாதின் மாளிகையைப் பாதுகாக்கும்படி கட்டளையிட்டார். அல்லாஹு தஆலா எனக்கு வெற்றியளித்தான். நான் சுல்தான் அவர்களின் பிரத்தியேகப் பட்டாளத்தைச்சூழ்ந்துகொண்டு அவர்களைத் தாக்கி அவர்களைப் பணியச்செய்து ஆயுதங்களனைத்தையும் பறிமுதல் செய்து, அவர்களை நிராயுதபாணிகளாக்கினேன். அன்வர் என்னுடைய இந்த ஊழியத்தைப் பார்த்து மிகச் சந்தோஷமடைந்தவராய் "நீர் படிப்பு முடிந்தவுடன் என்னிடம் வரவேண்டும்; உம்முடைய இவ்வூழியத்துக்குத் தக்க கைமாறை அப்பொழுது நான் செய்வேன்" என்று கூறினர். (ஜமால்பே என்று ஸ்கூலில் வாசித்துக் கொண்டிருந்த இவர், அன்வர் பாஷாவின் உதவியால் ஜெனரல் பதவிக்கு உயர்த்தப்பட்டதுடன் "பாஷா" என்ற பட்டமும் பெற்றிருந்தார். மகாயுத்த காலத்தில் ஏஷியா மைனரிலுள்ள மேற்கரங்கத்துப் பட்டாளத்துக்குப் பிரமத தளகர்த்தராகவும் ஆக்கப்பட்டார்)

மானிடனில் எதிர்மாருன இருவகை அம்சங்கள்

மௌலவி E. M. S. கமால் எழுதியது

தெய்வ சிருஷ்டிக்களில் பலவேறு குணம் படைத்த பொருட்கள் காணப்படுகின்றன. அவற்றுள் மனுவருக்கமும் ஒன்ருகும். பொதுவாய் அது யாவற்றிலும், மிக மிக மேலான பெருமைக்குறிய வர்க்கமென்பது கவனிக்கற்பாலது. வேதமும் இதை விளக்காமலில்லை.

இதர ஜீவராசிகளெல்லாம், ஆண்டவனை உணரும் ஆற்றலற்ற தென்பது ஒரு பக்கவிருக்க, அவற்றில் சிலவை பிறஜீவன்களை, அனுவிஷமாய் அடித்து வதைச்செய்வதையே தனக்கு ஆனந்தமாய் காணக் கூடியதாயும், அகங்காரம் அகந்தை கர்வமும் கொண்ட ஐவாய் மிருகங்களாயும், மற்றுஞ்சிலதுபிறருக்கு அபகாரமுமில்லை, உபகாரமுமில்லாது ஒதுங்கி வாழக்கூடிய சாந்தப் பிருணிகளாயும், சுமையெடுத்தல், பண்ணயடித்தல், ஏரு உழுதல், வண்டி இழுத்தல் போன்ற ஒரு சில பிரயோஜனம் தரத்தக்கப் பிறவிகளாயும் இன்னும் பல கோடி குணங்கொண்ட ஜீவக்கும்பல்கள், இந்த பறந்த பூமியில் உயிர்வாழக் காண்கிறோம். இவ்விலங்குகளெல்லாம் தெய்வத் தன்மையை உணர்வனவாயில்லை. மேலும் அவைகட்கு எவ்வித விலக்குமில்லை. வயிறுபுடைக்க பிடித்தடித்து தின்பதும் கவலையின்றி, உறங்குவதும், தாய் தங்கையென்ற வித்தியாசங்கூடப் பாராது புணர்ந்து தன்காமத்தைத் தீர்த்துக் கொள்வதும், இன்னும் தனது மனோபீஷ்டம் எதுவாயிருப்பினும் அதை பூர்த்தி பண்ணிக்கொள்ள தனது முழுபலத்தையும் பிரயோகம் பண்ணிக்காட்டும் முறட்டுப் பிருணிகளாயுமிருக்கின்றன. இதைவிட அதிகமாய் ஒன்றையும் அவைகளிடம் எதிர்பார்ப்பதற்கில்லை.

ஆனல் இவைகட்கு நேர்மாருன வருக்கத்தார் தேவர் (மலக்கு) களாகும். தெய்வ வணக்கத்தில் இவர்கட்கு ஓர் தனிப்பெருமையுண்டு. ஒருக்கணமும் இவர்கள் தன்கடவுளுக்கு மாறு செய்வதேயில்லை. அவரவர்கட் கிடப்பட்ட கட்டளையை நிவறவேற்றி வைப்பதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருப்பார்கள். சதா ஆண்டகைக்கு சாட்டாங்கம் பண்ணிக் கொண்டிருப்பதையே சன்மத் தொழிலாய்க் கொண்டவர்கள். அவர்கட்கு அதில்தான் ஆனந்தம். உண்பதும் உறங்குவதும் ஆண் பெண்

ஆசையும் அவர்களின் இயர்க்கையில் அமைக்கப் பட்டவைகளாயில்லையாதலின், அவர்கள், ஆண்டகையையே சதா வணங்கி வருவதற்கான நல்ல சந்தர்ப்பத்தை அடையப்பெற்றவசாயினர்.

எனவே, பிரஸ்தாப மனுஷ வருக்கத்தின் கதியை நோக்கின், அது மிக்க பரிதாபகரமான அதோகதியாய்த் தான் காணப்படாநின்றது. ஏனெனின், ஏறுக்குமாருன ஒருவகை இயற்கைகளினூடே அகப்பட்டு இருதலைக்கொள்ளி எறும்பேபோல் அவதிப்படக்கூடியவனுகிருன். தவளையும் எலியும் தோழமைப் போட்டு கயிற்ருல் தங்களை பிணைத்துக்கொண்டதேபோல் தான், இவன் கதை காணப்படுகிறது. ஒரு பக்கம் மிருக குணம் தண்ணீர் குட்டைக்கிழுக்கிறது. மற்றொரு பக்கம் தேவகுணம் கறைக்கிழுக்கிறது. இது அவனுக்கென்று ஏற்படுத்தப்பட்ட பரீக்ஷார்த்தமாகும்.

ஆனல் எந்த ஜீவன்கட்கும், தேவர்கட்குங் கூட அளிக்கப்படாத சொர்க்கானந்தத்தை அனுபவிப்பவன் இவனே. அதேபோல் எந்த பிருணிகட்குமில்லாத நரக அவஸ்தையை அடைபவனும், இவனுகவேதான் இருக்கிருன். ஏனெனில், தேவர்களின் அறிவாற்றலும், தெய்வத்தையறியும் தன்மையும், வந்தனை வழிபாடு செய்யும் திறனும் இவனில் உண்டு. அதேபோல் மிருகங்களின் குணக்கேடான மனே எழுச்சிக்கு வயப்பட்டவனுயு மிருக்கிருன். தின்னவும், உண்ணவும், உறங்கவும் பிறரை ஹிம்சிக்கவும், ஆண் பெண் காமத்தில் கட்டுண்டு கிடப்பதுமான இருவகைமாருன இயற்கையினூடே இவனது வாழ்க்கையை வெகு ஜாக்கிரதையாய் மிதமாய்க் கொண்டு சமாளிக்கவேண்டியவனு யிருக்கிருன். இந்த தரும சங்கடத்தில் மாட்டிக்கொண்டிருக்கும் மனுவருக்கத்தைப்பற்றி, வேதவாக்கின் ஒரு சில இடங்களில் மிகமிகப் போற்றிப்புகழ்ந்தும் வேறு சில இடங்களில் தூற்றி இகழ்ந்தும், கூறப்பட்டிருப்பதை அனந்தங்காணலாம். திருமறையில் சிலர் போற்றப்படுவானேன்? சிலர் தூற்றப்படுவானேன்? என்பதை எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையில் எமது கருத்தாகும்.

சோதரீர்! ஆண் தத்துவமற்ற அலியொருவன் விபசாரத்தை முற்றிலும் விலக்கிவிட்டான். பரமாதரை கண்ணெடுத்தும் பார்ப்பதில்லையென்பதால் அவனுக்கு ஓர் பெருமையை ஏற்படுத்திவிடுவதற்கில்லை. அதேபோல் வாய்ப்பேசவியலாத ஊமையொருவன் எவரிடமும் வம்பளப்பதில்லையென்பதிலிருந்து அவனை சாது (சூபி) என்று சொல்வதற்கில்லை. இன்னும் வயிற்றுக்கஞ்சிக்கு வகையற்றவன், தான் பிட்சை இரக்கும்போது தன், தந்தங்கள் பதினரையும் திறந்து காட்டி மிக பணிந்து குனிந்து கும்பிடுபோடுவதால் அவனை மிக சாந்த சற்குண சீலன் என, சிலாகித்துக் கொள்வதில்லை. இது சம்பந்தமாய் புல்புலெஷீராஸ், ஸஃதீ பெரியாரின் ஓர் கவியை கவனியுங்கள். ஸகர்தன் பராஸான் தவாஜுஃநி கோஸ்த், கதாகர்தவாஜுஃகுனத்கூயே ஊஸ்த், புஜபல பராக்கிரம சாலிகளிடமிருந்து (காணப்படும்) பணிவு (தான்) போற்றுதற்குரியதாகும். (அஃதின்றி) பிச்சைக்காரன் பணிவானுயின், அதுதான் அவனது இயற்கையாயிற்றே, என்கிருர்.

கையாலாகாத அல்லது கைகால் இல்லாத முடவனெருவன் யாரிடமும் மல்லுக்கு நிற்பதில்லையென்பதால், அவனுக்கு அதனல் ஓர் மகாத்மியம் ஏற்பட்டுவிடுமா?

எனவே, சர்வசம்பத்தும் திடகாத்திரியமும், வீறுகொண்ட காமமும் உடைய கட்டுமஸ்தான காளை பிராயத்தான் பரஸ்திரீ கமனத்தில் பிரவேசியாது திரஸ்கரித்திருப்பானுயின் அவன்தான் போற்றுதர்க்குரிய புண்ணியவானுவான். நாக்கு வன்மையும் பேசுந்திரனும் பெற்றிருக்கும் ஒருவன், வீண் விதண்டாவாதங்களில் விழாமலும் வம்பளக்காமலும், வீண் கருமங்களை விட்டும் மௌனவிரதங் கொள்வானுயின் அவன்தான் உண்மையில் சாதுச் சீலனுகும்.

பணச்செருக்கும், திரேகத்திமிரும், பலமும், பலாட்டியமும், மண்டை நிறைந்த மமதையும், கர்வமும் குடிகொண்ட ஒருவன், ஜனங்களிடம் தன்மையாயும் பணிவாயும் நடந்துகொள்வானுயின் அவனைத்தான் உலகம் போற்ற முன்வருகிறது.

தண்டிக்க சக்தியிருந்து கோபத்தை யடக்கிக் கொள்பவரைத்தான் பொருமையாளரென்பார்கள். அஃதின்றி முதலாளியின் மீது வேலைக்காரனுக்கு ஏற்படும் காரத்தை பிரயோகிக்க போக்கின்றி பொருமையா யிருப்பானுயின் அவனைப் பெருமைப்படுத்துபவர் எவருமிலர். சக்தியிருந்து சாந்தமா யிருக்கிருனு? வென்பதுதான் மீண்டும் நினைவில் கொள்ள வேண்டிய விஷயமாகும்.

எனவே, அமரர்கட்கு மனுஷவருக்கத்தாருக் குள்ளதேபோல் எதிர்மாறுன மிருககுண மொன்றும் அவர்கள் இயற்கையில் அமைக்கப் பட்டில்லையாதவின், தீக்கருமங்களில் அன்னேர் தலையிடாது தப்பிக் கொள்கின்றனர். அதனுல் அவர்கட்கு ஒரு விசேட உயர்வை திர்மானித்து விடமுடியாது. மிருக குணத்தையும் ஒன்று கூட்டி அவர்களை பிண்டம் பிடிக்கப் பட்டிருப் பின் அப்பொழுது அவர்களின் வண்டவாள மும் மட்டைக்கு இரண்டு கீத்தென்று விளங் கிப் போயிருக்கும்.

சதா துஷ்கிருத்தியங்களைத் தூண்டிக்கொண் டிருக்கும் மிருக குணத்தோடு சேர்த்து சமைத்து சிருட்டிக்கப்பட்டிருக்கும் மனித வருக்கம், போதா குறைக்கு, சருக்கி விழுந்த சிசுவுக்கு அரிவாள்மணையாம் ஆதாரம் என் பது போல், இராக்ஷச பிரகஸ்பதியான இப்லீ ஸுவின் திருவிளையாடலுக்கும் ஆளாக்கப்பட் டிருக்கும் இவ்விபரீத தருமசங்கட நிலமையில் துர்கிருத்தியங்களை தூரத்தள்ளி சத்காரியங் களை சிரமேற்கொள்ளுமாயின், கண்டிப்பாய் அவர்கள் போற்றுதற்குரிய பிரிவினர்தான் யென்பதில் எங்ஙனம் ஐயுரமுடியும்? இன்னு ரைப்பற்றித் தான் ஆண்டகை தன் வேதவாக் கில் அளாவளாவி புகழ்ந்து கூறுகிருன்.

மற்றுஞ் சிலர் தூற்றப்படுவானேன்? மனி தரில் மிருக குணம் மட்டு மின்றி கொள்ளத் தக்கது இன்னது, தள்ளத்தக்கது இன்னது என்று பகுத்தறியும் ஆற்றல் அருளப்பெற் றுங்கூட அறவே தேவ குணத்தைத் தள்ளி விட்டு முற்றிலும் மிருக குணத்தில் கட்டுண்டு, ஆண்டகைக்கு வந்தனை வழிபாடு செய்யா மல், தொழுகையுமில்லை, நோன்புமில்லை, துகைவரியு (ஜக்காத்து) மில்லை, தெய்வாலய கிரியையு (ஹஜ்ஜு) மில்லை, சுருங்கச் சொன் ஞல் இஸ்லாமிய அனுஷ்டானம் ஒன்றுமே யில்லாது, துருக்கர் குலத்தில் பிறந்துவிட்ட தோஷத்தால் முஸ்லிம்களின் வேஷத்தைப் பூண்டு அஃதோடு தன்கடன் கழிந்து விட்ட தாய் கனவு கண்டவையும் குண்டர்கள், மனித ஜன்மமெடுத்ததால் இலாபமென்ன? அவனுல் உலகிற்கு ஒருவகை இலாபமுமில்லாது, அவன் உயிர் வாழ்ந்திருப்பதைவிட செத்துக்கெட்டுப் போவதே சிலாக்கியமென, மக்கள் நினைக்கு மளவுக்கு, பிறருக்கு ஹிம்சையை உண்டு பண் ணியும், சதா பாபச்செயலில் புரண்டும், குடி கொலைகளவு சூது விபசாரம் போன்ற பஞ்சமா பாதகங்களைபுரிந்தும், நூற்றுக்கு தொண்ணூற் றென்பது வீதம் சரீரம் நிறைந்த பொய்யும் பித்தலாட்டமும், போக்கிலித்தனமும், காலித் தனமும், கள்ளம் கபடு வஞ்சகம் இச்சகம் பொருமை குரோதம் மமதை அகந்தை அகங் காரம் இன்னு மிதுபோன்ற கேவலமான ஜந் துக்களுக்குரித்தான குணங்களத்தனையும் நித் தியபத்தியமாய் கையாண்டுவரும் இந்நரவம்மி சத்தாருக்கு, தன் மனேஎழுச்சியை அடக்கி, மனதை நல்வழி திருப்பி, போனபோக்கில் போய் படுகுழியில் விழாமல், தன்னை பாது காத்துக்கொள்ள போதிய அறிவிருந்தும் அதை துருப்பிடிக்க விட்டுவிடில், அவர்கள் மிருகங் கள்தானென்ன? அதனினும் கடையவராய் கணிக்கப்படுவதில் என்ன ஆச்சரியமிருக்கக் கூடும்?

இவர்களைப்பற்றித்தான் ஆண்டவன் தன்வே தத்தில், அவர்கட்கு ஹிருதயங்களுண்டும் அவை களைக் கோண்டு பகுத்தறிய மாட்டார்கள், அவர் களுக்கு செவிகளுண்டும் அவைகளைக்கோண்டு செவியுரமாட்டார்கள். அவர்களுக்கு நேத்தி ரங்களுண்டும் அவைகளைக்கோண்டு நோக்க மாட்டார்கள், அவர்கள் கால்நடைகளைப்போன் றவர்களேன்ன (அதனினும்) அவர்கள் கேடு கெட்டவர்கள்! (அவர்கள் அடையவேண்டிய அந்தஸ்தை விட்டும்) ஏமாந்தவர்களாகும். என் கிருன்.

கண்ணிருந்தும் குருடனைப்போலிருப்பதும், காதிருந்தும் செவிடர்களா யிருப்பதும், ஹிரு தயமிருந்தும் தாதுவருக்கமே போலிருப்பதும் மிகமிக வெட்கக்கேடேயாகும்.

ஏ, "அஷ்ரபுல் மக்லூகாத்," என்னும் அரு மைப் பெயர்வகித்தநேயர்காள்! மலக்குகளிலும் மேன்மை யடையும் வழியைப்பற்றி கௌரவ மடைய ஓடிவாருங்கள்.

இல்லையேல், இறுதிநாளில் நாம் சிங்கில் பை கூட மதிக்கப்படமாட்டோம் என்பது ஞாபக மிருக்கட்டும்.

எல்லாம் வல்ல இறைவன் யாம் அடைய வேண்டிய அந்தஸ்துக்கு சந்தர்ப்பமும் சௌகரி யமும் செய்து தருவானுக. இந்த எமது வேண்டுகோளை ஏற்றுக்கொள்வானுக.

முல்லாவும் காதியானியும்

(சென்ற பிப்ரவரியின் தொடர்)

முல்லாஜீ :—அந்தோ ! என்னுண்டவா !! பின்னர் கூறும் என் கண்ணே !!! என் முழியே.

காதியானீ:-நாங்கள் ஏசுநாதரிடமிருந்துவிறட்டப்பட்டபின் மா - துயரடைந்து நொந்த மனத்தோடு அச்சுடுநீராற்றுக் கரையோரமாக தள்ளாடித் தள்ளாடி நடந்துவந்து கொண்டிருக்கும் போது, ஜெயிலைவிட்டும் தப்பியோடிய கைதிகளை போலீஸ்காரர்கள் தேடிவருவதுபோல், இருமலக்குகள் அங்குமிங்கும் பார்த்தவர்களாய்வந்து கொண்டிருந்தனர்.

அவர்கள் எங்களைக் கண்டபோது, தங்கள் "மலக்குப் பாஷை"யில் ஏதோ பேசிக் கொண்டு, எங்களை நோக்கி வேகமாய் வந்தார்கள். அவ்வாறு நடந்து எங்களுக்கு மிக்க சமீபமாக வந்திட்டபோது, அவர்களை நோக்குங்கால் அம்மலக்குகளின் இருவிழிகளும் சிவந்து தகதகவென அக்கினிப் பொறிகள் பறந்து கொண்டிருந்தன. அவர்கள் கரங்களிலிருந்த "மஃஷர் தடியால்" எங்கள் தலைமீது பெரிய அடியொன்று போட்டு, ஏ ! காவன்னுப் பயல்களா!! நீங்கள் எங்கு ஓடி ஒழிந்து கொண்டீர்கள் !!! காதியானியர் கூட்டத்தில் இரு காதியானிகள் குறைவுபடுகிறதாகவும், அவர்களை எப்படியாவது தேடி, கொண்டு வந்து சேர்க்கும் வேலை எங்களிடம் சாட்டப்பட்டிருப்பதால், நாங்கள் இம்மஃஷர் முழுதும் ஒரேதேடாகத் தேடிவருகிறோமே, நீங்களிருவரும் எங்கு ஒழிந்து கொண்டீர்கள். மீரட் மௌலானு தென்னுடு வந்தபோது காதியானிகள் ஓடி ஒளிந்தது போல், இங்குமா நீங்கள் ஓடி ஒளிந்து கொண்டீர்கள் என, எங்களுக்குத் தெரிந்த பாஷையில் அவர்கள் ஏசிப் பேசி, மிக்க சினத்துடன் எங்கள் இருகரங்களையும் பிடித்துக்கொண்டு, போலீஸ்காரர்கள் இழுத்துச் செல்லுமாப் போல், அவர்கள் எங்களை இழுத்துச் சென்றனர்.

(இவ்வாறு வெகு பரிதாபத்தோடு காதியானியர் தமது கனவைக் கூறி வரும்போது, இடையில் ராவுத்தர் குறிக்கிட்டு)

ராவுத்தர்:—மாட்சிமை மிக்க முல்லாஜீ அவர்களே ! "ஹிஸ்ஹோலினஸ்" என்னும் பட்டாதார மகானே !! கனவுகண்ட காதியானீ இதோ இருந்து தமது பரிதாபக் கனவைக் கூறி வரும்போது, தம்மையும் தாடிசம்கார முல்லா வியாச தாரையும் மலக்குகள் வந்து பிடித்துக்கொண்டபோது, மீரட் மௌலானு விஜயந் தந்த சமயம் தென்னுட்டின் காதியானிகளெல்லாம் ஒளிந்துகொண்ட சம்பவத்தையும், மலக்குகள் கூறியதாகச் சொன்னுரே என்னு ஹஜ்ரத்! அஃது உண்மையாகயிருக்குமா? அவ்விஷயம் மலக்குகளுக்கு எப்படித் தெரிந்தது, என்பதை அநேக விஷயங்களுக்கு "ஷரஹ்" செய்துவந்ததுபோல், இது விஷயத்திற்கும் "ஷரஹ்" செய்யுமாறு முல்லாஜியவர்களிடம் கோருகின்றேன்.

முல்லாஜீ :—ஸுப்ஹானல்லாஹ்! தெய்வாதீனமாக இடையில் ஓர் நல்ல விஷயமும் வந்துவிட்டது. ஆகவே,கனவு சம்பாஷணையை சற்று நிறுத்திவிட்டு, இவ் விஷயமாய்கொஞ்சம் சம்பாஷிப்போம். எல்லா ஜனங்களும் கவனமாகச் செவியுறல் வேண்டும்.

"சில மாதங்களுக்கு முன் வடதேசத்தின் "மீரட்"மா நகரத்திலிருந்து தென்னுட்டிற்கு விஜயந்தந்திருந்த மௌலானு "ஸித்தீக்கீ" அவர்கள் சென்னையில் 15 தினங்களும், நமது நாட்டுச் சுற்றுப்பிரயாணத்தில் 10 தினங்களும் ஆக 25 தினங்கள் வரை தங்கி, இருந்து 15 அரியபெரிய பிரசங்கங்கள் செய்தும், காதியானியத்தையும் அதன் மூலகுருவின் விஷயங்களையும், அம்மதக்கொள்கைகளின் தீங்கையும், ஜனங்களுக்கு நன்கு எடுத்துக்கூறி, பறைசாற்றியும் வந்தபோது "கொக்குக்கூட்டத்தில் ராஜாளி விழுந்தது" போல, காதியானிகளெல்லாம் திகிலடைந்திருந்தனர்.

அச்சமயத்தில் நமது நாட்டிலுள்ள காணு காவன்னுக்களெல்லாம், பர்தாக்களைப் போட்டு மூடிக்கொண்டு, வீட்டின் சமையலறையை விட்டும் வெளிக்கிழம்பாது கதவுகளை வொஞ்

சரித்துக்கொண்டு தங்கள் குடில்களுக்குள்ளேயே பதுங்கி இருந்துவந்தனர். காவன்னுக்களெல்லாம் கெலி அடிக்கப்பட்டவர்களாய் ஷெ 25 தினங்களில் அவர்கள், நிலைப்படியைத் தாண்டி எவரும் வெளியில் வந்தார்களில்லை ராவுத்தரே!

பின்னர் மீரட் மௌலானா அவர்கள் சில தினங்கள்வரை கொழும்பிலும் அரிய பிரசங்கங்கள் செய்துவிட்டு, ஆப்ரிக்கா தேசம் செல்ல, நாடி கப்பலேறிய பின்னரே, தென்னாட்டிலும் கொழும்பிலுமுள்ள காதியானிகளின் தலைகளெல்லாம் மெள்ள மெள்ள தெருக்களில் நடமாடகாணப்பட்டன. மீரட் மௌலானா அவர்கள் பெம்பாயிலிருந்து ரயிலேறியது முதல் ஆப்ரிக்கா தேசத்திற்கு கப்பலேறும் வரை மௌலானா சம்பந்தமாக மூச்சும் விடாது, மூச்சுவிட்டால் அபாயங்கள் சம்பவிக்குமென பதுங்கிக்கொண்டிருந்த ஒரு காவன்னு ப........ வானது

மீரட் மௌலானா யாத்திரை செய்யுங் கப்பலானது நடுக்கடலில் ஓடிக்கொண்டிருக்கும் போது மெள்ள, தமது தலையைத் தூக்கி, 'ஹிஸ்புல்லாக் கோஷ்டியினர்'' ஓர் அன்னியச் சரக்கைப் போட்டுத் தானே ஆட்டினார்கள் என, ஓர் பெரிய ஏச்சொன்று வசிக்கொண்டு வெளியில் வந்தது.

ஆனால் ஷெ காவன்னுப் பத்திரிகையின் மூல குருவும், தமது குருவின் கொள்கையும், அன்னியச் சரக்கேதான் என்றும், அத்தீய அன்னிய சரக்கைக் கொண்டுவந்து தென்னாட்டில், தான் பிரசாரஞ்செய்து ஷெ விதேசிச் சரக்கை விற்றுக்கொண்டு திரிவதோடு தானும், தமது மதமும், தமது பிரசாரமும், தமது குருநாதரும், தான் காப்பியடிப்பதும் எல்லாம் அன்னியச் சரக்குகளாகவே இருப்பதோடு, தமது உஜூதும் அன்னிய சரக்கின் காரணமே நிலைப்பட்டிருக்கிறதென்பதையும், தான் கண்விழித்து நோக்காது, '' மீரட் மௌலானா '' வை மட்டிலும் அன்னியச் சரக்கென்றும் அவர் இந்நாட்டைச் சுற்றித் திரிந்தாரென்றும், ஷெ காதியானீ ப.........க்கு எழுத மனம்வந்தது ரொம்ப விசித்திரமாகவும், விநோதமாகவும், பார்க்கப்பட்டது. ஆனால் மீரட் மௌலானா அவர்கள் வந்த சமயம், காவன்னுக்கள் ஒளித்திருந்த விஷயத்தை மஃஷர் மலக்குகள் எவ்வாறு தெரிந்து கொண்டார்களென்பதற்கு லேசான பதிலுண்டு. அதாவது, இந்த லோகத்தின் மலக்குகள் ஆகாயத்தந்திக் கம்பிகள் மூலமாய் மஃஷரின் 'வைர்லெஸ்' ஆபீஸிற்கு இங்கு நடக்கும் ஒவ்வொரு செய்திகளையும் அறிவித்து விடுகின்றனர். அதனால் அங்குள்ள மலக்குகளெல்லாம் உலகின் செய்திகள் யாவற்றையும் நன்கு தெரிந்து கொள்கின்றார்கள். ஆகவே, மலக்குகளால் இணைக்கப்பட்டிருக்கும் ஷெ ஆகாயத்தந்தி மூலமே இச்சமாசாரத்தையும் மஃஷர் மலக்குகள் தெரிந்திருப்பார்கள்.''

ராவுத்தர் :—(புதுமையும் கோபமுங் கொண்டு) உலகப் பிரசித்திபெற்ற பல கலா வல்லுனரும் இஸ்லாமிய சத்தியப் பிரசார சாந்தரும் அபார ஞானம் படைத்த ஆசானும், சிங்கப் பிரசங்கியும், துணையற்ற தனிப்பெரும் மிஷனரியுமான மீரட் மௌலானா அவர்களையா நமது நாட்டுக் கானா காவன்னா பத்திரிகை அன்னியச் சரக்கெனக் கூறியது? ஆச்சரியம்! அந்த அன்னியச் சரக்கு வந்து காதியானியத்தை மறுத்து, நமது நாட்டில் இரவு பகலாக சாங்கோபாங்கப் பிரசங்கங்கள் செய்த போது, இந்த சுத்த சுதேசிச் சரக்கு ஏன் வந்து தர்க்கிக்கக்கூடாது ஹஜ்ரேத்!

முல்லாஜீ :—அப்படி ஷெ காதியானிச் சரக்கு வந்து தர்க்கிக்க முன்வந்தால், காதியானிச் சரக்கின் ஸ்டாக் இவ்வளவுதான் என, தென்னாட்டு முஸ்லிம்களுக்கு நன்குதெரிந்து விடுமென்ற பீதியினாலேயே அஃது தர்க்கிக்க முன் வரவில்லை.

ராவுத்தர் :—முல்லாஜியே! தாங்கள் உண்மை சொன்னீர்கள். இவ்வாறு இவர்கள் சம்பாஷித்துக்கொண்டிருக்கும் இடத்தில் இவர்களின் சம்பாஷணைகளைக் கேட்பதற்காக ஏராளமான ஜனங்கள் வந்து குழுமிக்கொண்டனர். அவ்வாறு குழுமியோர்களில் ''ஹிஸ்புல்லாஹ்'' ஒருவருமிருந்தார். அவர் இடையில் குறுக்கிட்டு, தாம் சற்று பேச முல்லாஜியிடம் உத்தரவு வாங்கிக்கொண்டு,

ஹிஸ்புல்லாஹ் :—ராவுத்தரே! ஷெ மீரட் மௌலானா வந்திருந்தபோது, எங்கள் சபையிலிருந்து நமது காவன்னா சாயபை சாலஞ்சுக்கும் அழைக்கப்பட்டிருந்தது; அவர்கள் இல்லத்தைவிட்டும் வெளியில் கிளம்புவதே கூடாதென, தீர்மானித்திருந்தபோது தர்க்கிக்க எங்ஙனம் வருவார்கள். எனவே அவர்கள் மூச்சும் விட்டார்களில்லை.

முல்லாஜீ :—(பெரிய சப்தமாய்) நமது நாட்டு காவன்னுக்களே நீங்கள் சாதாரணமாக மதிக்கவேண்டாம். அவர்கள் மீரட் மௌலானவையும், அவர்களின் விஷயத்தையும், தென்னட்டு காதியானி குருவின், குருநாதரை ஷெ மௌலான அவர்கள் கொழும்பு, சிங்கை, ரெங்கூன் முதலிய ஊர்களில் துறத்தி துறத்திச் சென்றதையும், நமது மௌலானவின் கல்வித்திறமையும், வாக்கு வன்மையையும் நன்கு தெரிந்திருக்கின்றார்கள். அதனுலேயே மௌலான அவர்கள் இங்கு வந்து ஆப்பிரிக்காவிற்கு கப்பலேறும் வரை ஷெ யார்கள் வெளியில் வராது பதுங்கிக்கொண்டே இருந்தனர்.

"பேச்சு பேச்சென்று பெரும்பூனே வந்தக்கால் கீச்சு கீச்சென்னுமாங் கிளி."

காதியானீ :—இந்த விஷயத்தை இதோடு முடித்து விட்டு தயை கூர்ந்து எமது மீதிக் கனவையுங் கேட்பீர்களாக

முல்லாஜீ :—நல்லது. கனவைக் கூறும்.

காதியானீ :—எங்கள் இருபேர்களேயும் மலக்குகள் பிடித்து இழுத்துக் கொண்டு ஓர் கூட்டத்தாருடன் சேர்த்தனர். அக்கூட்டத்தினர் மிக ஆபாச உருவமுடையவர்களாகவும், வெகு அலங்கோலத்தோடு அலறி அழுதவர்களாயும் காணப்பட்டனர். அக்கூட்டத்தினரில் வளர்ந்த உயரமான ஓர் மனிதர், விசன முகத்தையுடையவராயும், பெரிய திடுக்கம் பிடித்தவராயும் உழண்ட உள்ளத்தவராயும் நிம்மதியற்று, அக்கூட்டத்தினடுவில் நின்று கொண்டிருந்தார். ஷெ வளர்ந்த மனிதரை யாரென முகத்தை உற்றுப் பார்த்தபோது அவரே எங்கள் மதத்தின் ஸ்தாபகரும் பிரதம குல குருவாயும் இருக்கக் கண்டோம். உடனே நாங்களிருவரும், அவரின் பாதங்களில் விழுந்து எங்களே மன்ருடி ரட்சிக்கவேண்டிமென, கோரிக் கொண்டிருக்குஞ் சமயம், மலக்குகளின் பெரிய கூட்டமொன்று வந்து, கைதிகளே சிறை கூடம் விறட்டிச்செல்வது போன்று, எங்கள் கூட்டத்தோரை பவர்க்கத்தின் புரம், விறட்ட ஆரம்பித்தார்கள், அச்சமயம் நானும் என் ஆப்த ஆர்வலருமட்டிலும் ஒரே ஓட்டமாக ஓடிப்போய் மஃஷரின் சுடு வியர்வை நீர், நதியில் பாய்ந்து நீந்த ஆரம்பித்தோம்.

முல்லாஜீ .—வே! காதியானீ!! மஃஷர் மலக்குகளிடத்திலுமா—வே, உங்கள் காதியானீ ஏமாற்றத்தை கையாடி இருக்கின்றீர்கள். சபாஷ்! பலே பேஷ்!!

காதியானீ :—ஹ ஜ் ரே த்! பவர்க்கத்து அதாபிற்கு, மஹ்ஷர் சுடு வியர்வையின் சூடானது சுவர்க்கத்து சுகம்போல் இருக்குமென, நினைத்துக் கொண்டுதான் நாங்கள் அவ்வாற்றில் குதித்தோம்

முல்லாஜீ :—அப்பால்.

காதியானீ :—எங்கள் பிரதம குருவையும், எங்கள் வர்க்கத்தினரையும் ஏகமாக மலக்குகள் திரட்டிக் கொண்டு பாதாள லோகத்திற்குச் சென்று விட்டனர். நானும் தாடி சம்கார வியாசதார சகாவுமாக ஷெ சுடு நீராற்றில் பல நாட்கள் வரை நீந்திக்கொண்டு மற்ருெரு கரையை அடைந்தோம்.

ஹஜ்ரேத்! இத்துணை பயங்கர நிகழ்ச்சிகளிலும், நாங்கள் ஒட்டவைத்திருந்த இமிடேஷன் தாடிகளானது எங்கள் முகத்தை விட்டும் அகலாமலிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். ஷெ கரையை யாங்கள் அடைந்து மேட்டிற்குச் சென்று பார்த்தக்கால் அங்கு, எல்லோரும், பிரகாச வதனத்தராய், நேர்த்தியான தாடியோடும் நீண்ட ஜுப்பாவை அணிந்தவர்களாய், நேர்த்தியான ககனநாட்டுப் பரிகளின்மீது ஏறிக்கொண்டு, கோட்டையைப் பிடித்த சைனியங்களிருக்கும் உற்சாகம் போன்று, அதி உற்சாகிகளாய் தங்கள் தலைவரின் உத்தரவை எதிர்பார்த்து நிற்போர்கள் போலும் காணப்பட்டனர்.

அப் பெருந்திரளான கூட்டத்தினரைச் சூழ்ந்து எண்ணற்ற மலக்கின் கோஷ்டியினர், காவல்புரிந்து நின்றுகொண்டு மிருந்தனர். நாங்கள் மஃஷரிலேயே சிலகாலம் கஷ்டப்படவும், மலக்குகளிடம் அடிபடவுமாக இருந்ததால், மலக்குகளின் பாஷையைப் பேச நாங்கள் கற்றுக்கொண்டு விட்டோம். அதன் உதவியால் ஷெ நற்பாக்கியக் கூட்டத்தினேரை காவல் புரிந்து நின்ற மலக்குகளிடம் இக்கூட்டத்தினரான பாக்கியவான்கள் யார்? இவர்கள் எங்கே போகத் தயாராக நிற்கின்றூர்கள் என, மெள்ளக் கேட்டபோது, அம்மலக்குகளில் ஒருவர், எமது இருசெவிகளேயும் பிடித்துக் கொண்டு, இப்பாக்கியக்கூட்டத்தினர் முஹம்மது நபியின் (ஸல்.) உயர்தர உம்மத்துகளாவார். இவர்கள் உங்களேப் போன்று, விதண்டாவாதக் குண

டோதரர்களாயில்லாது, குர்ஆன், ஹதீது, கியாஸ், இஜ்மாஃபடி நடந்துவந்த இஸ்லாமிய ஹிஸ்புல்லாக்களென்றும், இவர்களின் வெகு தூரத்தின் முன்னணியில் நின்று கொண்டிருக்கும் நபிகள்திலகம் முஹம்மது (ஸல்.) ஸர்தார் அவர்களைப் பின்தொடர்ந்து, இப்பவோ, பின்னேயோ என, காற்றைப்போல் பறக்கும் தெய்வலோக இப்பரிகளின் மீது ஆரோகணித்து சுவர்க்க லோகம் புகுதப் போகின்றார்கள் எனக்கூறி விட்டு, அவர் பிடித்திருக்கும் எமது இரு செவிகளையும் நன்கு திறுக்கொண்டு, நீர் காதியானியாகாமலிருந்தால் இக்கூட்டத்தினரோடு சேர்ந்து நீரும் ஒன்றாய்ச் சுவர்க்கம் புகுதலாமே? நீர் கெட்டுப்போனீரே என, வெகுசுலபமாக எமது இரு செவிகளையும் திருகி, முறுக்கி, வேறே அவைகளை எடுத்து ஷை சுடு நீராற்றில் போட்டுவிட்டார் ஹஜ்ரேத்!

முல்லாஜீ:—என் வே! காதியானீ, நீர் எங்கள் நபிகள் நாயகத்தையாவது அக்கூட்டத்தில் கண்ணாரக் கண்ட பாக்கியமாவது பெற்றீரா?

காதியானீ :—ஹஜ்ரேத்! நாயகமவர்கள் ஸ்தூலத்தோடு மிஃராஜிற்குச் சென்றதை அபூஜஹ்ல் ஆட்சேபித்து விதிண்டாவாதங்கள் புரிந்ததை விட எத்தனையோ மடங்கு அதிகமாக நானும் எங்கள் குழாத்தினரும் திருநபி (ஸல்.) அவர்களின் மா-வசன திருக்காட்சியை, நபிகளுக்கு ஸ்தூலத்துடன் நிகழ் பெறவில்லையென, மறுத்துக் கூறியிருந்த மூதேவியான இப்பாவிக்கு, அந்நபி நாதரின் திருத்தெரிசினை எங்ஙனம் கிடைக்கப்போகின்றது ஹஜ்ரேத்! மேலும், அம்மஃஷரின் மலக்குகளனைவரும், மனுக் கூட்டத்தினர், ஜின் குழாத்தினர், ஆடு மாடு முதலிய விலங்கினங்களும், பொதுவாய் ஜீவனைக் கொண்டு சலனமுறும் பொருள்களெல்லாம் எங்களை ஒடுக்கப்பட்ட காவன்னகளென நன்கு தெரிந்து கொண்டிருந்தனர். அந்தோ! எங்கள் துர்லபத்தை யாரிடங் கூறுவோம், எங்களுக்கு இவ்விதத் தலைவிதியும் ஏற்படலாமா!! என, பிரலாபித்து மூர்ச்சித்தான்.

முல்லாஜீ :—(மூர்ச்சித்திருந்த காதியானீ முகத்தில் ஸலவாத்துச் சொல்லி ஊதிவிட்டு) என்னு வே! உமது கனவு ரொம்ப நீண்ட கனவாக யிருக்கின்றதே!! நீர் ஒரு மாதம்வரை ஒரே தூக்கமாகத் தூங்கியாவே கனவு கண்டீர்?

காதியானீ.—ஹஜ்ரேத்! கனவுதான் நீண்டதே யன்றி, யான் நீண்டு தூங்கவில்லை (எனக் கூறிவிட்டு, கனவை ஆரம்பிக்குமுன்) இடையில் ஓர் விஷயம் ஞாபகத்தில் வருகிறது அதை வினவ அனுமதியளித்தால் கேட்கின்றேன்.

முல்லாஜீ :—நல்லது, கேளும்.

காதியானீ :— ஹஜ்ரேத்! இனி எம்மைத் தாங்கள் தயை கூர்ந்து காதியானீ, காதிரானீ என விளிக்காதீர்கள். இதோ குழுமியிருக்கும் ஜனத்திரளில் இவ்வாறு கூறுவதால் எமக்கு ரொம்ப நாணம் ஜனிக்கின்றது எனவே, இனி தாங்கள் இவ்வடியேனை சீர்திருத்தகாரனெனக் கூப்பிடவேண்டுமென மிகமிகக் கோரிக்கொள்கிறேன்.

முல்லாஜீ: — வாரும் வே! இப்பத்தான் வழிக்கு வருகின்றீரோ, வாரும்!! ஓர் விருத்தாந்தஞ் சொல்கிறேன், கேளும்!!!

அதாவது, சலனமிட்டுக் கொண்டிருக்கும் இஜ்ஜகத்தின்கண் குறுகிய நோக்கங்கொண்ட காதியானியத் தானது முளைத்து, தலை எடுத்த போது, இஸ்லாமிய உலகோர் அவர்களை இஸ்லாமிய வட்டத்தை விட்டும் நீக்கி, நேர்வழி தவறிய கூட்டத்தோரென ஒதுக்க ஆரம்பித்த காலத்து, ஷை காதியானி மதத்தின் இரண்டாங்கிளையின் சாமர்த்திய எத்தர்கள் சிலர், தாங்கள் காதியானிகள் அல்லரென்றும், புதிய சீர்திருத்தக்காரர்களென்றும், தாங்கள் ஷை காதியானியத்தின் தோஷத்தை விட்டும் நிரபராதிகளெனவும் இஸ்லாமிய உலகோருக்குக் காட்ட முன்வந்தனர்.

இதற்கு ஷை யார்கள் எத்தகையோரென எமது சொந்த ஹோதாவில் எவ்வித பதிலும் சொல்ல நான் விரும்பவில்லை. (தொடரும்)

சந்தா நேயர்கட்கு!

மார்க்க சமூக பக்திபூண்டொழுகும் நமது சந்தாதார்களாகிய அபிமானிகள், நடைபெறும் வருடத்திற்குள்ள தங்கள் சாந்தாக்களை தாமதியாது உடனே அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம்.

தாத்தாரிகளிடம் இஸ்லாம் பரவிய வரலாறு

(சென்றமீ 92-ம் பக்கத்தொடர்)

நாம் ஏற்கனவே கூறிய இளவரசரான துக்லக்தைமூர்கான் அதுபோது ஆக்ஸூ என்ற ஊரில் வேட்டையாடும் நோக்கமாக வந்து இருந்தார். ஷெய்கு ஜமாலுத்தீன் அவர்கள் இவ்வூருக்கு வரும்போது அவ்விளவரசர் வேட்டையாடிக்கொண்டிருந்தார். எல்லா ஜனங்களும் வேட்டையாடுவதில் கலந்துகொள்ள வேண்டும் என்று இளவரசர் கட்டளையிட்டதால், அவ்வூரிலுள்ள யாவரும் இளவரசருடன் வேட்டையாடுவதில் கலந்துகொண்டிருந்தனர். ஆனால், ஹிஜ்ரத் செய்துவரும் இவ்விருபெரியோர்களுக்கும் இளவரசரின் இவ்வுத்தரவு தெரியாததால், இவர்கள் ஜனங்களைவிட்டு அப்புறம் தனியே ஒதுங்கி இருந்தார்கள்.

இவர்கள் இவ்வாறு ஒதுங்கி இருப்பதை இளவரசர் கண்டு கோபமடைந்து, இவ்விருவரையும் பிடித்துத் தம்மிடம் கொண்டு வரும்படி தம் பணியாளருக்குக் கட்டளையிட்டார். அம்முரடர்கள் இவ்விரு பெரியார்களையும் தங்களது புஜபல பராக்கிரமத்தால் பிடித்துத் தள்ளிக் கொண்டுவந்து சேர்த்தனர். இளவரசர் அவ்விரு பெரியார்களையும் நோக்கித் தமது கட்டளைப்படி, வேட்டையாடுவதில் சேர்ந்து கொள்ளாமலிருந்ததற்குக் காரணமென்னவென்று விசாரித்தார். அதற்கு ஷெய்கு அவர்கள் "நாங்கள் அந்நிய தேசத்தார் ; பரதேசிகள் ; இளவரசரின் கட்டளை எங்களுக்குத்தெரியாது. ஆதலால், நாங்கள் வேட்டையில் கலந்து கொள்ளவில்லை; விஷயமறியாமல் செய்த இந்தக் காரியம் குற்றமாகாது. எனவே, நாங்கள் குற்றமற்றவர்கள்" என்று கூறினர். ஷெய்கு அவர்களுடைய இந்த சமாதான வார்த்தைகள் நேர்மையானவையாக இருந்ததால், துக்லக் தைமூர்கான் அவர்களை சிக்ஷிக்காது விடுதலை செய்தனன். ஆயினும், கோபம் மாத்திரம் தணியவில்லை. மறுபடியும் ஷெய்கு அவர்களிடம் தன்னுடைய வேட்டை நாயைச் சுட்டிக்காட்டி "இந்த நாய் மேலானதா? அல்லது நீர் மேலானவரா?" என்று வினவினன். அப்பொழுது அந்நாய், வேட்டையாடப்பட்ட பன்றியின் இறைச்சியைத் தின்றுகொண்டிருந்தது. உடனே ஷெய்கு அவர்கள் அக்கேள்விக்கு உத்தரமாக "ஈமான் என்ற ஒரு வஸ்து என்னிருதயத்தில் இருக்குமாயின், நான் அந்த நாயைப் பார்க்கினும் சிறந்தவனுவேன். ஆனால், அவ்வஸ்து என்னிடமில்லையாயின் இந்த நாய் என்னைப் பார்க்கினும் எத்தனையோ ஆயிரம் மடங்குசிறந்தது" என்றுகூறினார்கள்.

இவ்வாக்கியங்கள் ஷெய்கு அவர்களிடமிருந்து எவ்வித உணர்ச்சியுடன் வெளிப்பட்டனவென்பதை இறைவன் தானறிவான். கல்போன்ற மனமுள்ள அவ்விளங் கோமகன் மெழுகுபோல் உருகிவிட்டானுகையால், இப்பெரியார்களைத் தம்முடைய அசுவங்களின் மீதேற்றி மிகவும் கண்ணியமாகவும் மரியாதையாகவும்தமது கூடாரத்துக்கு அழைத்துவரும்படித்தமது உத்தியோகஸ்தருக்குக் கட்டளையிட்டு வேட்டையாடாமல் தமது கூடாரத்துக்குச்சென்று விட்டனன்.

ஷெய்கு ஜமாலுத்தீன் (ரஹ்.) அவர்கள் துக்லக் தைமூரின் கூடாரத்துக்கு வந்து சேர்ந்தது முதல் அவ்விளங்கோமகன் தனிமையில் இருந்து சம்பாஷிக்கலாயினன். அப்பொழுது நாயைப் பார்க்கினும் சிறந்தவனுக மனிதன் இருக்கிறுன் என்று நிர்ணயிப்பதற்குத் தாங்கள் குறிப்பிட்ட அம்சம் யாது? அதை எனக்கு விளக்கிக் கூறவேண்டுமென்று கேட்டுக்கொண்டனன். அதற்கு ஷெய்கு அவர்கள், அது இஸ்லாம் என்று கூறி, இஸ்லாத்தின் கொள்கைகளையும் அதன் முக்கிய அனுஷ்டான கிரியைகளையும், அவைகளமைக்கப்பட்ட இரகசியங்களையும் மனதிற் படியுமாறு தெளிவாக எடுத்துக் கூறினார்கள். இதைக் கேட்ட இளவரசர் தாங்கள் கூறியதன் உண்மையை நான் மனதார ஒப்புக்கொள்கிறேன் ; ஆயினும், என்னுடைய அதிகாரம் தற்போதய நிலைமையில் மிகக் குறைவாக இருப்பதால் இனி யான் காக்கான் சிம்மாசனத்தமர்ந்த பின்

என்னிடம் வருவீர்களாயின் யான் இஸ்லாம் மதம் தழுவச் சித்தமாக இருப்பேன்; தாங்கள் அவசியம் வரவேண்டுமென்று வேண்டிக் கொண்டனன்.

இந்தச் சம்பாஷணை நடைபெற்ற சில நாட்களுக்குப்பின் ஷெய்கு அவர்கள், மலையின் உச்சியில் ஒரு விளக்கைப் பிடித்துக்கொண்டு நிற்பதுபோலும், அவ்விளக்கின் பிரகாசமானது அந்தப் பிராந்தியம் முழுவதும் பிரகாசிப்பது போலும் சொற்பனங் கண்டார்கள். மறுநாட் காலையில் தமது அருமைப் புதல்வர் அர்ஷதுத்தீன் என்பவரை அழைத்துத் தாம் கண்ட சொற்பனத்தைக்கூறி, "புதல்வ! யான் எண்ணெவற்றிய விளக்கைப்போலாகிக்கொண்டு வருகிறேன்; இவ்வுலக வாழ்வு என்றைக்கு முடியுமோ யானறிகிலன்; இது பொய்யான வாழ்க்கை; இதை நம்பவொண்ணாது. ஆனால், துக்லக் தைமூர் அரசபட்டம் அடைந்தபின் இஸ்லாத்தைத் தழுவுவதாகக் கூறிஇருக்கிறார்; அதுசமயம் யான் இவ்வுலகில் இல்லையென்றால் நீர் அவருக்கு இவ்வாக்குறுதியை ஞாபகமூட்ட வேண்டும். அவர் உமது கையில் இஸ்லாத்தைத் தழுவுவது ஆச்சரியமன்று. ஆதலால் உமது மூலம் கீழ்நாடு முழுவதும் இஸ்லாம்என்றஞான ஒளியினால்பிரகாசிப்பதை இறைவன் அன்னாளிலேயேஎழுதி இருத்தல் கூடும்" என்று வஸிய்யத்துச் செய்துவிட்டு, ஷெய்கு அவர்கள் மறு உலகயாத்திரைக்கான வழியை எதிர்பார்த்துக் கொண்டே காலங்கழிக்கலானார்கள். பின்னர், கொஞ்சகாலத்துக்குள் இவ்வுலக வாழ்க்கையை ஷெய்கு அவர்கள் முடித்துக்கொண்டார்கள்.

கி. பி. 1347-ம் வருஷத்தில் அரசாங்கத்திலுள்ள அமீர்கள் யாவரும் ஒன்று கூடி துக்லக் தைமூருக்குப் பட்டங்கட்டி விடவேண்டுமென்று ஏகமனதாக முடிவுசெய்து மிக்க ஆடம்பரத்துடன் சிம்மாசனமேற்றினர். அது முதல் அவர் நீதிநெறி முறை தவறாது அரசு செலுத்திவரலானார். துக்லக் தைமூருக்குப் பட்டங்கட்டிப் பாராண்டு புரியும் சமாச்சாரம் மௌலானா அர்ஷதுத்தீன் (றஹ்.) அவர்களுக்குத் தெரிந்தவுடன் கொஞ்சமும் தாமதியாமல் தலை நகரை நோக்கிப் புறப்பட்டார். இப்பெரியார் உலகத்துறவியாகவும் கையிற் பணமில்லாத ஒரு பகீராகவும் இருந்தாராதலின், இப்படிப்பட்டவர் அரசரிடம் எங்ஙனம் போய்ச் சேரமுடியும்? ஆகவே, வாசல் காவற்காரர்களும் மற்றவர்களும் மௌலானா அவர்களை அரசரிடம் செல்வதற்குப் பெருந்தடையா யிருந்தார்கள். எனவே, நேருக்குநேர் நியாயமான முறையில் அரசரிடம் செல்வதற்கு எவ்வித வழியுமிருக்கவில்லை. ஆயினும், மௌலானா அவர்கள் தங்களது நோக்கத்தில் உறுதியாக இருந்தார்களாதலின், பலபேர்களையும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டும் நடைபெறாத சமாச்சாரம் ஒரு தக்பீர்முழக்கத்தினால் கைகூடிற்று. அதாவது, மௌலானா அவர்கள் தினசரி அதிகாலையில் அரசருடைய கூடாரத்துக்குப் பக்கத்திற் சென்று உரத்த சப்தமாக 'அதான்' சொல்வதை வழக்கமாக ஏற்படுத்திக்கொண்டார்கள். மௌலானா அவர்கள் உரத்த சப்தமுள்ளவர்களாதலால் சிங்கத்தின் கர்ஜனையைப்போல் அந்தப்பிராந்தியம் முழுவதும் ஓசையிடுவது வழக்கமாகும்.

ஒருநாள் காலையில் அரசன் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தனன். மௌலானா அவர்களின் சிங்கக் கர்ஜனையை ஒத்த 'அதான்' சொல்லுகையானது அவனைதிடுக்கிட்டு முழிக்கும்படித் தட்டிஎழுப்பிற்று. அரசனுக்கு நித்திரை பங்கமேற்பட்டதால் கோபமேற்பட்டுத் தன் பணியாளரிடம் "நம்முடைய கண்ணியத்துக்குக் குறைவாகத் தினசரி நடந்துகொண்டிருக்கிற அந்தபோக்கிரியைப் பிடித்துஎன்முன்கொண்டு வாருங்கள்; அவ்விஷமி தினந்தோறும் அதிகாலையில் இவ்வாறு கூச்சலிட்டுத் தொந்தரை செய்துகொண்டிருக்கின்றனன், என்று கட்டளையிட்டான்.

மௌலானா அர்ஷதுத்தீன் (றஹ்.) அவர்கள் 'அதான்' சொல்லி முடிவதற்குள் மொகல் குண்டர்கள் வந்து அவரைப் புடைத்து அரசரிடம் இழுத்துச் சென்றனர். காக்கான் துக்லக் தைமூர் இவரைப் பார்த்தவுடன் அதிகக் கோபமடைந்து, 'நீர்யார்? தினசரி விடியற்காலத்தில் எமது கூடாரத்துக்குப் பக்கத்தில் வந்து கூச்சலிடுகிறீர்? என்னை நித்திரை செய்ய விடுகிறீரல்லீர்' என்று அதட்டிக்கேட்டனன். அதற்கு மௌலானா அவர்கள், "யான் ஒருபெரியாரின் புதல்வன்; நீர் ஒரு சமயம் அப்பெரியாரிடம் இஸ்லாம்மதத்தை தழுவுவதாகவாக்களித்திருக்கிறீர்; எனது தந்தையார் இவ்வுலக வாழ்வினை இனிது நிறைவேற்றிக் கொண்டனர்; ஆயினும், அவர் தமது அந்திய காலத்தில் என்னைத் தம்மருகிலழைத்து, நீர் வாக்களித்திருக்கிற விபரத்தைக்கூறி, நீர் அரசுரிமை அடைந்த

பின் உம்மிடம் வந்து அவ் வாக்குறுதியை நினைப்பூட்ட வேண்டுமென்று எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்'' என்று கூறினர்.

காக்கான் துக்லக்தைமூருக்கு அவ்வாக்குறுதி நினைவிருந்தது. உடனே தனது படுக்கையை விட்டெழுந்து தமது ஆசனத்தில் வந்தமர்ந்து, மௌலானா அவர்களை தமதண்டையில் அமரும்படி மிக மரியாதையுடன் வேண்டிக் கொண்டதுடன் "தாங்கள் வந்ததை நான் மனதார வரவேற்கிறேன்; நான் சிம்மாசனமேறிய காலமுதல் உங்களது வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்; இப்பொழுதோ தாங்கள் வந்துவிட்டீர்கள்; இனி நான் என்ன செய்ய வேண்டுமென்பதை எனக்கறிவியுங்கள்'' என்று கூறினன். உடனே அவ்வேந்தனை ஸ்நானம் செய்வித்து, "கலிமா ஷஹாதத்'' சொல்லிக்கொடுத்து, இஸ்லாத்தில் சேர்த்ததுடன், "முகலிஸ்தான் இனி இஸ்லாத்தின் ஞான பொக்கிஷத்தை அடைந்துவிட்டது'' என்று மௌலானா அவர்கள் கூறினார்கள்.

பின்னர்முகலாய தேசமெங்கும் இஸ்லாம் மதத்தைப் பரவச்செய்வதற்கான வழியாதென இருவரும் கூடி யோசித்தனர். தேசம் முழுவதையும் ஏககாலத்தில் மதமாற்றஞ்செய்வதில், நாட்டில் குழப்பமேற்பட ஹேதுவுண்டு ஆகவே செல்வாக்குள்ள அமீர்களை ஒவ்வொருவராகத் தனிமையில் அழைத்து அவர்களிடம் இஷா அத்துச் செய்யவேண்டும் என்று முடிவுசெய்தனர். மறுநாட்காலையில் அமீர் பிலாஜீ அவர்களின் சகோதரரான அமீர்துலேக் என்பவர் காக்கான் துக்லக் தைமூரைப் பேட்டிகாண வந்தார். ஹஜ்ரத் மௌலானா அர்ஷதுத்தீன் (ரஹ்.) அவர்களும் பக்கத்திலிருந்தார்கள். இப்புது மனிதரை இன்னர் என்று அவர் தெரிந்துகொள்ளாததால், அவர்மீது அமீர்துலேக் ஜாடையாகப் பார்ப்பதை யுணர்ந்த காக்கான் துக்லக்தைமூர் மௌலானவை அறிமுகம் செய்துவைத்தார். அப்பொழுது அரசர், இப்பெரியாரின் ஞானுபதேசத்தால் யான் பல தெய்வ வணக்கத்தைக் கைவிட்டு ஒரே தெய்வத்தையே வணங்க வேண்டுமென்ற கொள்கையை அங்கீகரித்து இஸ்லாம் மதத்தைத்தழுவிவிட்டேன்; நீங்கள் பல தெய்வவணக்கத்தைக் கைவிட்டு இஸ்லாம் மதத்தைத்தழுவி, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் தொண்டர்களின் கூட்டத்தில் சேர்ந்து கொண்டால் எவ்வளவு நன்ருக இருக்கும் என்று தமது அபிப்பிராயத்தை அறிவித்தார்.

அமீர்துலேக் இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் கண்களில் நீர் ததும்ப அழுதார். சொற்ப நேரத்துக்குப் பின் 'அரசே! யான் இஞ்ஞான சூரியனின் கிரணங்களை இதற்கு முன்னரே அடைந்துளன்; மூன்று வருடங்களுக்கு முன்பிருந்து யான் முஸ்லிமாகத்தானிருக்கிறேன்; நான் காஷ்கரிலிருக்கும் பல முஸ்லிம் பெரியார்களைச் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது; வழிதவறி இருந்த எனக்கு முக்திக்கான பாட்டையை அவர்கள் காண்பித்திருக்கின்றனர்; அந்தக் காலம் முதல் இன்றுவரை யான் முஸ்லிமாகத்தானிருந்து வருகிறேன்; தங்கள்பால் எனக்குள்ள பயத்தின் காரணமாக நான் என்னுடைய கொள்கையைப் பகிரங்கமாகக் கூற முடியாதவனுக இருந்தேன்; இல்லையேல் இதற்கு முன்னரே யான் என்னை முஸ்லிம் என்று பகிரங்கமாகக் கூறி இருப்பேன்'' என்று கூறினர். இதைக் கேட்டவுடன் காக்கான் துக்லக் தைமூர்கான் சந்தோஷத்தின் மேலீட்டால் அமீர்துலேக்கை ஆலிங்கனம் செய்து முதலெடுப்பிலேயே இறைவன் இஷாஅத்தே இஸ்லாம் வேலைக்கு மிகவும் செல்வாக்குள்ள தலைவரைத் தமது வலது கையாகக் கொடுத்தற்காக இறைவனுக்கு நன்றி செலுத்தினர்.

இம்மாதிரி முகலிஸ்தானிலுள்ள எல்லா அமீர்களையும் காக்கான் துக்லக் தைமூர்கான் தனித்தனியே கண்டு பேசி இஷாஅத்தே இஸ்லாம் பிரசாரம் செய்து தலைவர்களனைவரையும் முஸ்லிமாக ஆக்கிவிட்டார். ஆனல், அமீர் ஜர்ராஸ் என்ற ஒரு தலைவர் மாத்திரம் மௌலானா அர்ஷதுத்தீன் (ரஹ்.) அவர்களின் இஸ்லாமிய அழைப்பை ரத்துச் செய்துவிட்டார். ஆயினும், அரசரிடம் அவருக்குள்ள செல்வாக்கின் காரணமாகக் கண்ணியமான முறையில் மறுதளித்தார். அதாவது, மௌலானா அவர்கள், என்னுடைய சமஸ்தானத்து மல்வீரனை ஸாதுக்னி என்பவனுடன் மல்யுத்தம் செய்து ஜெயிப்பாராயின், அவரதுசொற்கேட்டு இஸ்லாத்தைத் தழுவுவன். இதல்லாமல் அவர் ஆயிரம் விதமான யுக்திப் பிரமாணங்களைக் கூறிடினும் அவைகளை யான் ஒப்புக்கொள்ளேன் என்று கூறினர். இவருடைய இந்த நிபந்தனையை அரசரும் இதர அமீர்களும் ஏற்றுக்கொள்ள இஷ்டப்படவில்லை. மௌலானா அவர்கள் மல்யுத்தத்தில் வெற்றி பெருவிடில் அதனல் இஸ்லாம் மதம் பொய்யாகி விடுமாத

லால் இது புத்திசாலித்தனமான நிபந்தனை யாகாது ஆகவே இதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறினார்கள்.

இவ்விதமான சம்பாஷணை நடந்து கொண்டிருந்தபோது மௌலானா அவர்கள் குறுக்கிட்டு, இந்த நிபந்தனையை ஒப்புக்கொள்கிறேன்; அது எனக்குச் சம்மதம் என்றுகூறி வாக்கு வாதம் செய்வதை நிறுத்தினார்கள். மௌலானா அவர்கள் இவ்வாறு கூறியதைக்கேட்ட அமீர் ஜர்ராஷ் நகைத்து, என்னுடைய பயில்வானை இன்னார் என்று நீர் அறிந்து கொள்ளாமல் கூறுகிறீர் போலிருக்கிறது. இரண்டு வருஷம் கழிந்த ஒட்டகைக் குட்டியை அவன்சுலபமாகக் கையில் தூக்கிக்கொண்டு செல்வது அவனுடைய இடது கையின் வேலையாகும். அவனுடைய உயரம் கூட, பொதுவாக எல்லா மனிதர்களைப் பார்க்கினும் ஒரு அடி அதிகமாகவே இருக்கிறது. இன்றுவரை ஒருவரும் அவனைத் தோற்கடித்ததில்லை என்று கூறினர். அதற்கு மௌலானா அவர்கள், "இந்த முகலிஸ்தானில் குப்று ஒழிந்து, இஸ்லாம் என்ற ஞான ஒளி பரவவேண்டுமென்பது இறைவனின் நாட்டமாக இருப்பின், எனக்கு அவனைத் தோற்கடிக்கத்தகுந்த பலத்தையும் வல்லமையையும் அவ்விறைவன் அளிப்பான்; நான் அவனைத் தோற்கடித்து வாகைமாலை சூடுவேன்" என்று மட்டிலும் பதிற் கூறினார்கள்.

காக்கான் துக்லக் தைமூருக்கும், அமீர்களுக்கும் மௌலானா அவர்கள்ஒப்புக்கொண்ட இம்மல்யுத்தம் திருப்தியளிக்கவில்லை. ஆயினும், மௌலானா அவர்கள் இதில் தைரியமாகக் கூறிவிட்டதால், அவர்கள் இதைத் தடை செய்யாது இருந்து விட்டனர். காக்கானுடைய கூடாரத்துக்குப் பக்கத்திலுள்ள சமமான ஒரு வெளியில் குஸ்தி செய்வதற்காக கோதா வெட்டி ஒழுங்கு செய்யப்பட்டு, குஸ்தி செய்வதற்காக ஒரு தேதியும் குறிப்பிடப்பட்டது. இவ்வாச்சரியமான மல்யுத்தம் நடைபெறும் சமாச்சாரம் அப்பிராந்தியம் முழுவதும் பறை யறைவிக்கப்பட்டதால், இந்தக் குஸ்தியைப் பார்ப்பதற்காக ஆயிரக்கணக்கான ஜனங்கள் வெளியிடங்களிலிருந்து கூட்டங் கூட்டமாக வந்து சேர்ந்தனர். குறித்த நேரத்தில் ஜோடிகளிருவரும் கோதாவிலிறங்கினர். ஜனங்கள் யாவருடைய கண்களும் பயில்வான்களின் பக்கல் நோக்கிய வண்ணமாகவே இருந்தன. அந்த மைதானத்தில் எள் விழ இடமில்லாமல் அவ்வளவு பிரமாண்டமான கூட்டம் கூடி இருந்தது.

மிகவும் உயரமுள்ள பயில்வானான ஸாதுக்னி பகா என்ற அம்மனிதன் தனது புஜபல பராக்கிரமத்தில் இறுமாப்புக் கொண்டு மிக ஆடம்பரமாகத் துள்ளிக்குதித்துத் தனது மல்யுத்த வித்தைகளையும் செய்து கொண்டு கோதாவின் ஒரு பக்கலில் இறங்கினன். காபிரான ஜனங்கள் யாவரும், தங்களது வீரப்பயில்வான் ஒரே பிடியில் மௌலானாவைக் கால்வேறு கைவேறாகக் கிழித்தெறிந்து விடுவான் என நினைத்துக் கொண்டு பேராசையுடன் உற்றுநோக்கிய வண்ணமிருந்தனர். மறுபக்கல் சத்தியத்துக்காகத் தலைவணங்கிய பெரியார் அர்ஷதுத்தின், அல்லாஹ்வின் சன்மார்க்கத்துக்காக மல்யுத்தம் செய்யும் நோக்கங்கொண்டு மெலிந்த உடலுடன் கோதாவிலிறங்கினர். முஸ்லிம்கள், மௌலானா அவர்களின் மெலிந்த திரேகத்தையும், குஸ்திப் பழக்க மின்மையையும் கண்டு சந்தேகக் கண்ணுடன் குழம்பிய மனத்தவராக நின்றுகொண்டிருந்தனர். ஆயினும், இருவீரர்களும் ஒருவரை ஒருவர் நெருங்கிவந்து கைகொடுத்தவுடன் கைபர் வீரரின் காக்ஷி இங்கு யாவருக்கும் புதுப்பித்துக் காட்டப்பட்டது. அதாவது, ஹஜ்ரத்அலீ (றலி.) அவர்களும், மர்ஹப் என்ற பயில்வானும் மல்யுத்தம் செய்தகால், ஹஸ்ரத் அவர்கள் ஆயிரம்பேர்களை ஏககாலத்தில் வென்ற காக்ஷியின் நமூனா யாவருடைய கண்களிலும் தென்பட்டது. அல்லாஹு தஆலா தனது மதத்தின் கண்ணியத்தைக் காக்கும் பெருமை தான் என்னே! மௌலானா அவர்கள் குனிந்து ஒரு வட்ட மிட்டு ஒரேபிடியில் அப்பெரும் பயில்வானைக் கரணம்போட்டுக் கீழே விழும்படி புறட்டி யடித்தார்கள். அவன் செத்த பிணம் போல் பூமியின்மீது மல்லாந்து விழுந்தனன். முஸ்லிம்கள் யாவரும் சந்தோஷமேலீட்டால் அல்லாஹு அக்பர் என்ற தக்பீர் முழக்கத்துடன் ஆரவாரம் செய்ததானது, வானைப்பிளந்து செல்வதாக இருந்தது. எனவே, அங்கு வந்திருந்த காபிர்களனைவரும் மௌலானா அவர்களின் குஸ்தியின் அற்புதத்தை மெச்சி இறைவனுக்குத் தலைசாய்த்தனர்.

அன்றைய தினத்தில் மட்டும் ஒரு 1,50,000 பேர் கலிமா ஷஹாதத்துச் சொல்லி இஸ்லாத்தின் வட்டத்தினுட் சேர்ந்தனர்.

எனவே, ஜமாலுத்தீன் அப்கானீ (றஹ்.) அவர்கள் அன்று கண்ட சொற்பனம் அவரது அருமைப்புதல்வர் மௌலானா அர்ஷதுத்தீன் (றஹ்.) அவர்கள்மூலம் மெய்யாயிற்று. எனவே, அன்று முதல் துருக்கிஸ்தானில் இஸ்லாம்மதம் வெகு துரிதமாகப் பரவி தேசம் முழுவதையும் தனக்குக் கீழ்ப்படுத்திக் கொண்டது. அன்று பரவிய இஸ்லாம் இன்றும் அத்தேசத்தில் நின்றிலங்கிக் கொண்டிருக்கிறது. அங்கு தோன்றிய ஜனங்கள் தாம் இந்தியா, அப்கனிஸ்தானம், பாரசீகம் முதலிய தேசங்களை எல்லாம் ஜெயித்து இஸ்லாத்தின் கண்ணியத்தையும் கீர்த்தியையம் இவ்வுலகில் நிலைநிறுத்த அரும் பாடுபட்டிருக்கிறார்கள். நமது இந்திய நாட்டில் ஏற்பட்ட இஸ்லாமிய ஆட்சியின் பெரும் பாகம் அந்நாட்டு மக்களின் ஆட்சியேயாகும்.

விஞ்ஞானம்

இன்றைக்கு 50 வருஷங்களுக்குப்பின்

இற்றைக்கு 40 அல்லது 50 வருஷங்களுக்குப்பின் இவ்வுலகத்தின் நிலைமை எவ்வாறிருக்கும்? இப்பொழுது நாமிருந்து கொண்டிருக்கும் இவ்வுலகம் அப்பொழுது எவ்விதமான உலகமாக இருக்கும் என்ற கேள்வி விஞ்ஞான சாஸ்திரிகளுக்குள் உண்டாகி இருக்கிறது. இவ்வினவுக்குப் பதில் கூறுவது அவ்வளவு கஷ்டமல்ல. சென்ற 40—50 வருஷங்களுக்கு முன் இவ்வுலகமிருந்த நிலைமையையும், இப்பொழுது இவ்வுலகிலேற்பட்டுள்ளமாறுதல்களையும், இதற்குள் மனிதரின் அறிவுவளர்ச்சியும் நாகரீக முன்னேற்றமும் விரைந்து செல்லும் போக்கையும் நாம் சிந்தித்துப் பார்ப்பதுடன், தற்போதுள்ள உலகின் போக்குடன் ஒப்பிட்டுப் பார்ப்போமாயின், 40 அல்லது 50 வருஷங்களுக்குப்பின் இவ்வுலகம் எந்நிலைமையிலிருக்கும் என்று யூகித்துக் கொள்வது ஒரு பெருஞ்சிரமமான காரியமன்று.

இன்று நாம் மின்சார ஒளியைப்பற்றி பெருமை கொண்டாடுகிறோம். ஆயினும், நமக்கு அதனால் இப்பொழுது 100க்கு 5 விகிதம்தான் லாபம் கிடைக்கிறது. அதாவது, 100 பவுன் அதற்காகச் செலவு செய்வோமாயின் அதனால் 5 பவுன்களைத்தான் நன்மையாக அடைகிறோம். பாக்கியுள்ள 95 பவுன் விருதாவாகி விடுகிறது. ஆனால், வருகிற 1984-ல் நூற்றுக்கு நூறு பங்கு லாபம் கிடைக்கவில்லை என்றாலும், நூற்றுக்குப் பத்து விகிதமேனும் நமக்கு அப்பொழுது லாபம் கிடைக்கத்தான் செய்யும். இதனால், நமது சுகத்துக்கும் சௌகரியத்துக்கும் தக்க வசதிகளேற்பட்டு விடும். உலகில் வேலைகள் எவ்வளவுக்கு துரிதமாக நடைபெறுகிறதோ அவ்வளவுக்கு மக்கள் தங்களுடைய காலத்தின் அருமையை உணர்ந்துகொள்வர்; தங்களுடைய அலுவல்களை வெகுதுரிதத்தில் முடித்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புவர்.

இனி என்ன நடைபெறும்?

இக்காலத்தில் மூடுபனி, மழை புயல் முதலியவைகளின் காரணமாக நம்முடைய நேரங்களில் அநேக பாகம் வீணாகக் கழிந்து விடுகிறது. ஆனால், 40-50 வருஷங்களுக்குப்பின் அவ்வாறு வீணாகாது. விஞ்ஞான சாஸ்திரத்தின் உதவியால், மூடுபனியை ஒழித்துவிடலாம். காலநிலையின்மீது நமக்குப் பூரணமான ஆதிக்க மேற்பட்டுவிடும். குறித்த நேரத்தில் மழை பொழியும். குறித்த நேரத்தில் வெய்யலுண்டாகும். குறித்த நேரத்தில்தான் குளிர் உண்டாகும். இயற்கை இத்திட்டதிற்கு மாறு செய்தாலும், இம்மாற்றத்தால் எவ்வித இடஞ்சலும் ஏற்படாதவாறு மனிதன் தன்னுடைய காரியத்தை நிர்வகித்துக்கொள்வான். நூதமாய்ப் பேசும் கருவிகள், மிகவும் துரிதமாகச் செல்லும் வண்டிகள் உண்டாகிவிடும். பட்டிணங்கள் நூற்றுக் கணக்கான சதுரமைலில் விஸ்தீரண முள்ளதாகிவிடும். கிராமங்கள் என்ற பெயர் கூட எடுபட்டுவிடும். கிராமங்களிலுள்ள சுத்தக்காற்று, கிராமங்களிலுள்ள பழவர்க்கங்கள், கிராமங்களிலுள்ள சௌகரியங்கள், கிராமங்களிலுள்ள

சுத்தமானஜலம் ஆகியவைகளெல்லாம் நகரத்திலுண்டாகிவிடும். நகரங்களில் இப்பொழுதிருக்கிற கஷ்டங்கள் இனி இருக்காது. ஒவ்வொருவருக்கும் தனித்தனி வீடுஇருக்கும். ஒவ்வொரு வீட்டுக்கு மிடையில் பூந்தோட்டமிருக்கும். சினிமா, நாடகம், தொழிற்சாலைகள், ரயில்வே ஸ்டேஷன்கள் ஆகியவைகள் தனித்தனி இடத்தில்இருக்கமாட்டா ? நகரங்களின் மத்தியில் ஆங்காங்கு ஆகாயவிமானங்களிறங்குவதற்கான திறந்த மைதானங்களிருக்கும். ஆகாய விமானங்கள் துவிச் சக்கிரவண்டிகளைப்போல் எங்கும் பரவி, யாவரும் சுலபமாக உபயோகிக்கத் தக்கதாகிவிடும். டெலிபோனுக்கு அவசியமே இருக்காது. ஒவ்வொருவருடைய ஜோபியிலும் ரேடியோ கருவி இருக்கும். நடக்கும்போதும், உட்காரும்போதும், ஒவ்வொரு சமயத்திலும் எல்லா இடத்திலும் எல்லாருடனும் பேசிக் கொள்வதற்கான சௌகரியமேற்பட்டுவிடும். சம்பாஷணை செய்வதற்கு டெலிபோன் உபயோகிக்கப்படாமல் தமாஷ் பார்ப்பதற்காக அவைகள் உபயோகிக்கப்படும்.

நூதனக் கருவிகள்

பூமிக்குள் ரயில் பாதைத் தொடர்கள் அதிகரித்துவிடும். கடலுக்குள்ளும் மனிதன் சுகமாகப் பிரயாணம் செய்வதற்குத் தகுந்தவாறு சமுத்திரத்தின் அடியிலும்கூடப் பாதைகள் போடப்பட்டு விடும். காலையில் எழுந்தவுடன் உலகத்திலுள்ள சகலகாரியங்களையும் ரேடியோ மூலமாக மனிதர்கள் கேட்டுத் தெரிந்துகொள்வர். சமாச்சாரப் பத்திரிகைகள் படிக்க வேண்டிய அவசியமிருக்காது. பத்திரிகை படிப்பவர்களே இல்லாதிருப்பர் என்றுங் கூறலாம். சமாச்சாரப் பத்திரிகைகளுக்குப் பதிலாக கிராப்போனைப்போல் சமாச்சாரங்களைக் கூறும்படியான ஒருவகைக் கருவிகள் உண்டாகிவிடும். இன்னும் இருபது வருஷங்கள் வரை பத்திரிகைத் தொழில் இருந்து வருவது கஷ்டம். எந்த மனிதனும் ராஜீய வாழ்க்கை, சமுதாய வாழ்க்கை ஆகியவைகளைவிட்டு ஒதுங்கி இருக்க முடியாது. இவ்வாழ்க்கையில் ஈடுபடும்படி ஒவ்வொருவரும் நிர்ப்பந்தப் படுத்தப்பட்டவர்களாகி விடுவார்கள். வருங்காலத்தில் மனிதருக்குக் கெட்டியான வஸ்திரத்துக்குத் தேவை இருக்காது. ஒவ்வொருவரும் மிருதுவான துணிகளையே அணிவர். பனிகால மேற்படும் போது மின்சாரசக்தியைக் கொண்டு கதகதப்பு உண்டாக்கிக் கொள்ள முடியும். சமையல் செய்வதால் பல மணிநேரத்தை வீணாகக் கழிவதை மனிதன் சகித்துக் கொண்டிருக்க மாட்டான். சாப்பிடுவதிலும் பல நிமிஷங்கள் செலவாகுவதை அவன் சகிக்கமாட்டான். சாப்பாட்டுக்குப் பதிலாக வேறெதையும் ஹோட்டல்களில் உற்பத்தியாகும்படிச் செய்து, ஹோட்டல்களிலிருந்தே அவைகளை வரவழைத்து அருந்திக் கொள்வர். ஆதலால், வீடுகளில் சமையல் செய்வது அடியுடன் நின்றுவிடும்.

ஸ்திரீகள் முன்னேற்றம்

ஸ்திரீகளின் அந்தஸ்து மிகவும் முன்னேற்றமடைந்துவிடும். சகல காரியத்திலும் ஸ்திரீகள் ஆடவர்களுடன் சமஅந்தஸ்து உள்ளவர்களாக ஆகிவிடுவர். குழந்தை பிறப்பதற்கு முன்னரே கற்பத்திலுள்ள சிசு ஆணா பெண்ணா என்தை அறிய பிரயத்தஞ்செய்யப்படும். ஸ்திரீகளுக்கு வீட்டு வேலைகளிலிருந்து விடுதலை கிடைத்துவிடும். இதர காரியங்களில் முன்னேறுவதற்காக அதிக சிரத்தை கொள்ள அவர்களுக்குச் சாவகாசம் கிடைக்கும். ஸ்திரீகளுக்கு இன்னும் பல சௌகரியங்கள் ஏற்பட்டுவிடும்.

இவையாவும் நடைபெறும். ஆனால், மனிதன் விஞ்ஞான சாஸ்திரத்தை முன்னேற்றத்துக்கு கொண்டுவந்து, தற்போது அவனுடைய அழிவுக்குக் காரணமாக இருக்கிற இவ்விஞ்ஞான ஆராய்ச்சிகளை அவனுடைய முன்னேற்றத்துக் காரணமானதாக ஆக்கிக்கொள்வான்.

மனிதன் தூங்காதிருப்பானா?

ஐரோப்பா, அமெரிக்காவிலுள்ள நிபுணர்கள் நித்திரையைக் குறைப்பதற்கான முயற்சியில் ஒரு காலமாக ஈடுபட்டிருக்கிறார்கள். நித்திரையின் காரணமாக திரேகத்திற்கு ஒரு விதமான சுகம் உண்டாகிறது என்பது வெளிப்படை. மூளைக்கும், ஸ்தூலத்துக்கும் ஏற்பட்டுள்ள களைப்பை நீக்குவதற்கு நித்திரையில்லாமல் முடியாது என்பது தெரிந்த விஷயம். ஆயினும், மனிதனின் வாணாளின் ஒரு பகுதி நித்திரையினால் விருதாவாகக் கழிந்து விடுகிறது என்பதிற் சந்தேகமில்லை. தினசரி 7 அல்லது 8 மணி நேரத்தில் தன்னுடைய அலுவல்களனைத்தையும் விட்டுவிட்டு நித்திரை செய்யும்படி மனிதன் நிர்ப்பந்திக்கப் பட்டவனாக இருக்கிறான்.

சில பெரிய மனிதர்கள் தங்களுடைய நித்திரை காலத்தைக் குறைத்துக்கொண்டு அலுவல் பார்த்ததுதான் அவர்களை அவ்வுயரிய பதவிக்குக் கொண்டுவந்ததற்குப் பெரும் காரணமாக இருக்கிறது. இவர்கள் தினசரி மூன்று அல்லது நான்குமணி நேரம்தான் நித்திரை செய்வார்கள் என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். நெப்போலியன் போனபார்ட் உலகத்திலுள்ள சிறந்த தளகர்த்தர் என்று உலகம் ஒப்புக்கொண்டிருக்கிறது. அவர் தேசங்களை மிகத் திறமையுடன் கைப்பற்றும் வீரம் பராக்கிரமம் உலகமறிந்த உண்மை. யுத்த காலங்களில் யுத்த சம்பந்தமான ஆலோசனையில் ஈடுபட்டுஎத்தனையோ இரவுகளைத் தூங்காமல் கழித்திருக்கிறார். யுத்தம் இல்லாமல் சமாதானமாக இருக்கும் காலங்களில் நாலைந்து மணிநேரம்தான் அவர் தினசரி நித்திரை செய்வார். அமெரிக்காவிலுள்ள அடிசன், நூதனக் கருவிகளைக் கண்டு பிடிப்பதில் பெயர் பெற்றவர். இவ்விஷயத்தில் இவருக்குள்ள திறமை யாவரும் அறிவர். அவர் இரவுபகல் இருபத்து நான்கு மணி நேரத்தில் மூன்றுமணி நேரம்தான் தூங்குவார். இருபத்தோருமணி நேரம் தன்னுடைய ஆராய்ச்சியில் கழிப்பார். இது போலவே ஔரங்கசீப் சக்கிரவர்த்தி, பெரடரிக் தி கிரேட், கான்ட், ஷேலர் ஆகியவர்கள் மூன்று நான்கு மணிநேரம்தான் தினசரி நித்திரை செய்பவர்களாக இருந்தனர். இதற்கு மேல் அதிகமாக அவர்கள் தூங்கியதாகத் தெரியவில்லை.

இன்று, மேனாடானது இறந்தகாலத்தைப் பார்க்கினும் அதிகமாக அறிவாற்றலை உபயோகித்துக் கொண்டிருக்கிறது. தினசரி ஆறுமணி நேரம் மட்டிலும் தூங்குவதற்காக ஏற்படுத்திவிட்டுப் பாக்கி பதினெட்டு மணி நேரத்தை முழிப்பில் கழிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், இதனால் மனித சுகத்துக்கு எவ்வித இடைஞ்சலும் வரலாகாதென்றும்முயலுகிறது. இதற்காக, நித்திரையில் அந்தரங்க சக்தியாது? நித்திரையுண்டாகுவதால் திரேகத்தின் களை தீருவதற்கான காரணம் யாது? என்பதைக் கண்டுபிடிப்பதில்தான் இன்னம் அவர்களுக்குச் சிரமமேற்பட்டுக் கொண்டிருக்கிறது. இவ்விஷயம் அவர்கள் புத்தியில் இன்னும் எட்டவில்லை. ஆனால் நித்திரை செய்யும்போது மனிதனின் தலை கனமற்றதாகவும், உடலம் அதிகக் கனமுள்ளதாகவும் இருப்பதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இதனால், தலையின் பக்கல் ரத்த ஓட்டம் குறைவுபடுகிறது என்பது வெளியாகின்றது. ஆனால், இதைமட்டும் கண்டுபிடித்துவிடுவதால் இந்தச் சிக்கலான விஷயம் எவ்வாறு வெளிப்படமுடியும்? அவ்வாறிருந்தும், மேனாட்டார் இவ்விஷயத்தில் தங்களுடைய ஆராய்ச்சியைவிடாமல் செய்தே வருகிறார்கள்.

கில்ட்ஸ்மென் என்ற பிரபல டாக்டர் ஒருவர், இருவரை 115 மணிநேரம் தொடர்ச்சியாக நித்திரை செய்யவிடாமல் வைத்திருந்து, அவ்விருவரின் ரத்த ஓட்டத்தையும், இயற்கைச் சூட்டையும் பரிசோதனை செய்துபார்த்து, அவைகளில் எவ்விதமாறுபாடும் ஏற்படவில்லை என்று அவர் கூறுகிறார். நித்திரை மனிதருக்கு அவ்வளவு அத்தியாவசியமான காரியமல்லவென்பதுதான் ஷை டாக்டரின் அபிப்பிராயம். மனிதன் வேலைசெய்து களைத்துவிடுவானாயின் அவனுடைய அவயவங்கள் தானாக நித்திரை செய்து விடுகிறது. இதனால்தான், நோயுற்ற மனிதர்கள் மிகக் குறைவாக நித்திரை செய்கிறார்கள் என்று அந்த டாக்டர் கூறுகிறார்.

மூளையில் ஒருவிதமான ரசாயன மாறுபாடு உண்டாகுவதற்குத்தான் நித்திரை என்று பெயர் சொல்லப்படுவதாகவும், இம் மாறுபாடு ஒரு விதமான மின்சார சக்தியினால் உண்டாகிறதென்றும், ஆதலால், செயற்கை மின்சார சக்தியால் மூளையில் அந்தமாறுபாட்டை யுற்பத்தி செய்து விட்டால் நித்திரைக்கு அவசியமே இருக்காது என்றும் டாக்டர் மேயரஸ் என்பவரும், டாக்டர் கிரேல் என்பவரும் கூறுகிறார்கள். புரோபஸர் ஆர்தர் காட்டன் என்பவர் இந்த விதியை முதன்மையாகக் கொண்டு, இதற்காக ஒரு கருவி தயார் செய்திருக்கிறார். இது மூளையில் மின்சார சக்தியைப் பிரயோகித்து நித்திரை வராமற் செய்து விடுகிறது. பகல் முழுதும் கஷ்டப்பட்டு வேலை செய்த மனிதரின் தலையில் இந்தக் கருவியின் ஒரு கம்பியைச் சுத்தியும் மற்றொரு கம்பியை அவருடைய தலையில் ஒட்டிக்கொண்டிருக்கும்படியும் செய்யப்படுகிறது. பிறகு பட்டனை அமுத்திப் பதினைந்து நிமிஷநேரம் அவருடைய தலையில் மின்சாரசக்தி விடப்படுகிறது. இதற்குப் பிறகு அம்மனிதர் 24 மணி நேரம்வரை நித்திரையின் அவசியத்தை உணருவதே இல்லை. தினசரி இந்தக் கருவியை உபயோகித்தால், இதனால் மூளைக்கு ஏதேனும்

கெடுதியுண்டாகுமா என்ற ஆராய்ச்சி இன்னும் பாக்கியாக இருக்கிறது. இந்த ஆராய்ச்சி வெற்றியடைந்து, இக்கருவி உபயோகிக்கப் பட ஆரம்பமாகி விட்டால், மனிதவாழ்க்கையில் ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டுவிடும் என்பதிற் சந்தேகமில்லை.

ஆசிரியர் குறிப்பு

அரசாங்கப் பள்ளிக்கூடங்களில் மார்க்கல்வி

முஸ்லிம்களுக்கு மார்க்கக் கல்விதான் பிரதானம் என்பதும், உலகில் முஸ்லிம்களுக்கும் மற்றைய சமூகத்தாருக்கும் இடையில் உள்ள வித்தியாசம் இஸ்லாமியக் கொள்கையும் இஸ்லாமிய நடையுமே யாகுமாதலால், இஸ்லாம் மார்க்கத்தைப்பற்றிய கல்விகளை தங்கள் சிறுர்களுக்குப் போதிப்பதை முஸ்லிம்கள் முதன்மையாகக் கருதுகிறுர்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். நமது நாட்டில் இஸ்லாமிய அரசாங்கமிருந்த காலத்தில், அரசாங்கத்தாரால் நடத்தப்பட்ட ஸ்கூல்கள், கல்விச்சாலைகள் முதலியவைகளில் இஸ்லாமியக் கல்விகள் போதிக்கப்பட்டு வந்ததால், முஸ்லிம்கள் ஏராளமாக அப்பாடசாலைகளிற் சென்று கல்வி பயின்று வந்தனர். ஆனுல், துரதிர்ஷ்டவசமாக இப்பொழுது நமது நாட்டில் இஸ்லாமிய அரசாங்கமில்லாததால் மார்க்கக் கல்விக்கு அரசாங்க ஆதரவு ஏற்படுவதற்கில்லாமலிருந்தது. இதனுல், முஸ்லிம் மாணவர்கள் தனிப்பட்ட பிரைவேட் மத்ரசாக்களில் கல்வி கற்கச் செல்லவேண்டி யிருந்ததால், அரசாங்கத்துப்பள்ளிகூடங்களுக்கு அதிகமாகச் செல்வதற்கில்லை. தவிரவும், மார்க்கக்கல்வி பிரதானமாக இருப்பதால் அரசாங்கப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் மேல் வகுப்புகளில் சேராமல் இடையில் படிப்பை ஒரளவில் நிறுத்திவிட்டு மார்க்கக்கல்வி பயிலுவதிலீடுபட்டு, அப்பால் படிப்பையே நிறுத்தி விடுகிறுர்கள். இவ்வித காரியங்களால் நமது முஸ்லிம் சமூகத்தில் பொதுக்கல்வி அதிகம் பரவ ஹேதுவில்லாம லிருந்தது. இக்குறையை நமது காருண்ய கவர்ன்மெண்டார் கவனித்து, இதற்கு யாது பரிகாரம் செய்ய வேண்டும் என்பதை உணர்ந்து அறிவிக்கும்படி ஒரு கமிட்டி ஏற்படுத்தினர். அக்கமிட்டியார் அரசாங்கப் பள்ளிக்கூடங்களில் மார்க்கக் கல்வியும் போதிக்க ஏற்பாடு செய்வது இக்குறையை வெகு தூரத்துக்குப் பரிகாரம் செய்யுமென்று அரசாங்கத்தாருக்கு அறிவித்தனர். அரசாங்கத்தாரும் இதனை ஏற்றுக்கொண்டு அதற்குப் பரிகாரம் செய்ய முன் வந்தனர். ஆயினும், பிரசமூகத்தாரின் சிலரது முயற்சியின் பயனுக இது உடனே அமல் நடத்த முடியாமற் போய் விட்டது. ஆயினும், இதுபோது அரசாங்கத்தார் மார்க்சக்கல்வியைப் போதிப்பதற்காக இவ்வருஷத்தைய பட்ஜட்டில் திட்டம் போட்டிருப்பதைப்பார்த்துச் சந்தோஷப்படுகிறேம். ஆயினும், ஒரு விஷயத்தை இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகிறேம். மார்க்கக் கல்வி போதிக்க வசதி ஏற்படுத்துவதாகக்கூறி மார்க்க விஷயத்தில்தக்க பாண்டித்துவமும், திறமையுமில்லாதவர்களைச் சொற்பகூலிக்கு அமர்த்திச் சில நிமிஷநேரங்கள் மாத்திரம் போதிக்க ஏற்பாடு செய்வதில் உத்தேச பலன் ஒன்றும் விளையாது. மார்க்கக் கல்வியைப் போதிப்பதற்காகத் தக்க திறமையும் தகுதியும் வாய்ந்த மார்க்க அறிஞர்கள் நியமிக்கப்படுகிறுர்களா? மார்க்கக்கல்வி மாணவர்களிடம் எவ்வாறு பரவுகிறது? என்பனபோன்ற விஷயங்களைக் கவனித்து, மார்க்கக் கல்வியில் மாணவர்களுக்கு நல்ல தேர்ச்சி ஏற்படுவதற்கான வழியையும் செய்ய அரசாங்கத்தார் முயற்சி செய்தல்வேண்டும் என்பதை அறிவித்துக் கொள்கிறேம். இது சம்பந்தமாக ஆங்காங்குள்ள மார்க்க பக்தர்களும் சன்மார்க்கர்களும் அதிக அக்கரை செலுத்தி, அரசாங்கத்துக்கு இதில் சிரத்தை ஏற்படுமாறு செய்வதுடன், ஸ்தலங்களிலுள்ள ஸ்கூல்களில் மார்க்கக்கல்வி போதிக்கப்படும் போக்கையும் கவனித்துக் கொள்ளல்வேண்டும். ஏனெனில், நமது நாட்டில் ஆங்காங்கு சிலச் சில நாத்திகப் பேர்வழிகளும், காதியானிவாடையுடைய கூட்டத்தாரும் இருப்பதால், இவர்கள்

சூழ்ச்சிசெய்து, பள்ளிமாணவர்களின் உபாத்தியாயர்களாக அமர்ந்து நமது இளஞ்சிரார்களின் மாசற்ற இருதயத்தில் வழிகெட்ட கொள்கையை உற்பத்தி செய்து விடாமற் கவனித்துக்கொள்வது பெற்றோர்களின் கடமையாகும். ஸகூல் தலைமை உபாத்தியாயர்களும் மார்க்கக்கல்விக்கு உபாத்தியாயர்களை நியமிக்கும்போது, தங்கள் மாணவர்களின் பெற்றோர்களையும் தலைவர்களையும் கலந்து தக்கவரை—சன்மார்க்கப்பற்றுள்ள வரை உபாத்தியாயராக நியமிப்பார்களாக. அரசாங்க உத்தியோகஸ்தர்களும் பள்ளிக்கூடத்தலைமை உபாத்தியாயர்களும் பெரும்பாலும் முஸ்லிம் அல்லாதாராக இருப்பதால், அவர்கள் சட்டையும் குல்லாயும் உள்ள ஒருவரைப் பிடித்து அந்த ஸ்தானத்தில் நியமித்து விடக்கூடும். காதியானிகளிலும், நாத்தீகர்களிலும் சட்டையும் குல்லாயும் வைத்து, முஸ்லிம் வேடம் பூண்டவர்களுக்குப் பஞ்சமில்லை. ஆதலால், நிருவாகிகள் மதப்பற்றுள்ள முஸ்லிம்கள் யார் என்பதை சரியாக உணர்ந்து கொள்ள முடியாமல், காதியானிவாடையுடையவர்களையும், நாத்தீகர்களையும் முஸ்லிம் என மதித்து, நியமனம் செய்துவிடல் முடியும். ஆதலின், இவ்விஷயத்தில் முஸ்லிம் தலைவர்களும் பெற்றோர்களும் ஜாக்கிரதையாக இருக்கும்படி அறிவித்துக்கொள்வதுடன் முஸ்லிம் மாணவர்களுக்கு மார்க்கக்கல்வி போதிக்க முஸ்லிம் வேடம்பூண்ட காதியானிக்கொள்கையுடையவர்களையோ நாத்தீகர்களையோ நியமிக்காது மார்க்க பக்தியுள்ள முஸ்லிம் அறிஞர்களையே நியமிக்குமாறு அரசாங்கத்தாரை கேட்டுக்கொள்கிறோம்.

அரைச் சம்பளச் சலுகை:—முஸ்லிம்கள் பெரும்பாலும் ஏழைகளாகவும், கல்வியில் முன்னேற்றமில்லாதவர்களாகவும் இருப்பதை யுத்தேசித்து அரசாங்கத்தார் முஸ்லிம்களுக்கு அரைச்சம்பளச் சலுகை காட்டி அவர்களின் படிப்புக்கு ஆதரவு புரிந்துவந்தார்கள். அரசாங்கப் பாடசாலைகளில் மார்க்கக் கல்வி வசதி ஏற்படுத்துவதை உத்தேசித்துச் சென்ற வருஷத்தில் நமது சென்னை மாகாண அரசாங்கத்தார் அரைச் சம்பள சலுகையை எடுத்துவிட உத்தரவு செய்தனர். முஸ்லிம்கள் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டதற்கேற்ப, அரசாங்கத்தார் அவ்வுத்தரவை ஒருவருஷகாலத்துக்கு நிறுத்தி வைத்திருந்தார்கள். இப்பொழுது சென்னைச் சட்டசபை வரவு செலவு திட்டவிவாதத்தின் போழ்து இவ்வுத்தரவை ரத்துச் செய்து, முஸ்லிம் மாணவர்களுக்கு வழக்கம்போல் அரைச் சம்பளச் சலுகை காட்டவேண்டுமென்று முடிவு செய்திருப்பதாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சட்டசபையில் கூறி இருப்பதைக்கண்டு நாம் சந்தோஷ மடைகின்றோம். ஒருமுறை போட்ட உத்தரவை மாற்றுவதில்லை என்ற கர்வம் எங்கே வந்து குறுக்கிட்டு, முஸ்லிம்களின் நலம் பாதிக்கப்பட்டு விடுகிறதோ என்ற கவலை இந்நாட்டிலுள்ள பலருக்கும் இருந்து வந்தது. இப்பொழுது அரசாங்கத்தார் முஸ்லிம் சமுகத்தைப் பொருத்தவரை அத்தகைய காரியத்தைச் செய்யாமல், ஏழை முஸ்லிம்களுக்கு வழக்கமாகக் கிடைத்து வந்த சலுகையை இன்னும் கிடைக்கும்படி செய்ய முன் வந்ததற்கு அரசாங்கத்தைப் பாராட்டுகிறோம்.

நமது நன்றி உரித்தாகுக:—

நம் சங்க சபீர்களில் மௌலானா மௌலவி முஹம்மது மியான் சாஹிப் அவர்கள் சென்ற சில மாதங்களாய் தஞ்சை ஜில்லாவில் சுற்றுப் பிரயாணஞ்செய்து வருகிறார்களென்பது நேயர்கள் அறிந்தவையே. அவர்கள் சென்ற—செல்லும் ஊர்களிலெல்லாம் நம் அபிமானிகளாகிய சகோதரர்கள் மார்க்க உபன்னியாசத்திற்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுத்து, சபீர்களுக்கு அவர்களது சேவையில் ஊக்கங் காட்டி ஆக்கமளித்து வருகின்றார்கள். நமது அருமமாசிகை சகலமக்களிடமும் உலவிப் பரவிவருவதற்கான கைங்கரியத்தைக்கை கொண்டும்வருகின்றனர். நம்மாசிகைதேசத்தில் பறவுவதுகொண்டு சன்மார்க்கம், சமாதானம், சாந்தம்முதலியன சீர்பெற்று விளங்குமென்பதிலையமில்லை. எனவே, நம் அரும் பத்திரிகையை வாசிப்பவர்கள் காதியானிய்யத்து முதலிய கொள்ளை நோய்க்கி இறையாக மாட்டார்கள். ஈதென்ன? அவ்வாறு இறையாகி வழி தவறியிருப்போரையும் நேர்வழிக்குக் கொண்டு வரும் நிபுணர்களாகவுமாய் விடுகின்றனர். இத்தியாதி ஆவசியங்களையும் தஞ்சைஜில்லாவிலுள்ள நமது சோதிரர்கள் உணர்ந்து, அரும் மாசிகையின் முற்னேற்றத்தைக் கருதி புரிந்துள்ள உபகாரத்தை உண்ணி அவர்கள் யாவர்களையும் நாம் வாழ்த்துவதோடு இச்சேவையில் அதிக பங்கெடுத்துக்கொண்ட கனவான்களைக் குறித்து ஈங்கு நன்றி செலுத்தாமலிருக்க முடியவில்லை.

திட்டச்சேரி. மார்க்காபிமானிகளான ஜமா அத்தார்களும், அவ்வூர் நிருவாக சபைத் தலைவரான ஆலீஜனாப். கு. மு. முஹம்மது இஸ்மாயீல் அவர்களும், ஆலீஜனாப் அல்ஹாஜ் M. முகம்மது நூருத்தீன் அவர்களும் சபீர்களுக்குச் செய்த உபகாரமும் மாசிகையின் அபிவிர்த்தியைக் கோரிப் புரிந்துள்ள சேவையும் மறக்கற்பாலதன்று.

நாகூர். சபீர்களை வரவேற்று தக்கமுறையில் உதவிபுரிந்த அவ்விடத்திய நண்பர்களான அபிமானிகளையும் குறிப்பாய், நாகூர் தர்கா டிரஸ்டிகளையும், ஜனாப்களான டவுன் காஜீ மௌலானா மௌலவீ சு. சுல்தான் கலீபா சாஹிப், மௌலானா மௌலவீ அஹ்மது இப்ருஹீம் காதிரிய்யுஷ்ஷத்தாரீ காதிமுஷ் ஷரீஆ, மு. அ. முஹம்மது இபுருஹீம் மரைக்காயர், கௌதிய்யா நிருவாகிகள், ஷை பைத்து சபா காரியஸ்தர் முதலிய கனவான்களையும் நாம் மிகமிகப் பாராட்டுகின்றோம். அல்லாஹ்த ஆலா இன்னோரின் இந்நன் முயற்சிக்கு மேலான நற்பதவி அளிப்பானாகவும்.

ஜனாப் செய்யித் அதாவுல்லாஹ் ஷாஹ் புகாரீ அவர்கள்

சமீப காலத்தில் காதியான் எனும் ஊரில் ஜம்இய்யத்துல் அஹ்ரார் சபையின் மாபெரும் மஹா நாடு நடந்தேரியதும், அதற்கு எழுபதுனாயிரம் முஸ்லிம்கள் சமுகம் கொடுத்ததும், அதில் முக்கியமான பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதும், அதுமுதல் இச்சபையார் வழிகெட்ட காதியானியத்தை ஒழிப்பதற்கு அபார முயற்சியெடுத்து வருவதும் நேயர்களறிந்ததே.

இதனால் காதியானிகள் அதிக கவலையுற்றிருந்தனர். அரசாங்கத்தினர், பிரஸ்தாப மஹாநாட்டுத் தலைவரான அமீருஷ்ஷரீஅத் ஸய்யித் அதாவுல்லாஹ் ஷாஹ்புகாரீ அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்திருக்கின்றனர். ஷாஸாஹிப் அன்று செய்த பிரசங்கத்தில் காதியானிகளை அளவுகடந்து தாக்கியிருப்பதாக குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றார்கள். பிராஸிகூஷன் தரப்பில் பல காதியானிகள் விசாரிக்கப்பட்டனர். அவர்கள் யாவரும் மிர்ஸாசாஹிபை ஓர் நபியென விசுவாசிப்பதாக சாட்சியம் பகர்ந்தனர்.

ஷாசாஹிபின் தரப்பில் சாக்ஷிகள் விசாரிக்கப்பட்டுவருகின்றனர். எழுபது சாக்ஷிகள் வரை விசாரிக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. இதின் மூலம் மிர்ஸாயிகளின் வண்டவாளம் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்படுவதோடு அவைகளை உலக மஹாஜனங்களும் அறிந்து கொள்ள ஹேது உண்டாய்விட்டது.

இதில் ஒருவிசேஷம் என்னவெனின், இம்மாய மதத்தை ஸ்தாபித்தவரின் கனிஷ்ட புதல்வரும் அவரின் தற்கால கலீபாவுமான மிர்ஸா பஷீருத்தீன் என்பவரும் விசாரிக்கப்படுகிறார். இந்த வழக்கு குர்தாஸ்பூரில் இதற்கென நியமிக்கப்பட்டிருக்கும் நீதிபதியிடம் நடைபெறுகிறது. ஷாஸாஹிப் இவரையும் சாக்ஷி ஜாப்தாவில் சேர்த்து கொடுத்திருந்தார்கள். இவ்வழக்கில், தான் சாக்ஷியாக கூட்டில் ஏறக்கூடாதென்று அளவிலா பிரயத்தனப்பட்டாராம். ஒன்றும் பலிதமாகாமல் பப்ளிக்கோர்ட்டிலேயே வந்து நின்று சாக்ஷியும் பகரவேண்டுமென்று தீர்மானமாயிற்று. தங்களுடைய முரீதீன்கள் யாவரும் அங்குவந்து குமியவேண்டுமென்று வேண்டினார். இவர்களின் பத்திரிகையான "அல்பஸ்லு" இதைப்பற்றி கொட்டை எழுத்துக்களில் அறிக்கையிட்டிருக்கிறது. கலீபாசாஹிப் முரீதுகளுடன் ஸ்பெஷல் வண்டியில் வர முடிவுகட்டியுள்ளாராம். இவர் நீதிமன்றத்தில் இதுதான் முதற்தடவையாக ஆஜராகிறார். விசாரணை முடிவடைந்தபின் அதன் முக்கியாம்சங்களை வெளியிடப்படும்.

காதியானியத்து தோன்றி பலவருடங்களாகிறது. மிர்ஸா (அலைஹிமாஅலைஹி) வுடைய காலத்திலேயே அவருடன் பலரும் மல்லாடி வெற்றி பெற்றனர். அதுபோழ்தும், பின்னரும் இதுசம்மந்தமாக மட்டிலடங்காத நூல்கள் எழுதப்பட்டன. உலமாக்களும், எம்பெருமானின் பக்தகோடிகளில் பலரும் இப்பொல்லா இயக்கத்தை எதிர்த்து வேலைசெய்து வருகின்றனர். வடநாட்டிலுள்ள பற்பல அஞ்சுமன்களும், சங்கங்களும் வேலையைச்செய்து வருகின்றன. ஆனால் இந்த நோக்கத்தை முக்கியமாகக் கொண்டுள்ள அஞ்சுமன்கள் இதுவரை ஏற்படவில்லை. இக்குறையையும் நிவர்த்திப்பான் வேண்டி, ஜம்இய்யத்துல் அஹ்ரார் சபை இந்நன்னோக்கத்தை சிரமேற்கொண்டு வேலை செய்யத் துவங்கியிருக்கிறது. பிரசுர வேலையோடு அது பிரசார வேலையும் மும்முரமாய்ச் செய்து வர முடிவும் செய்துளது. வல்ல பெரிய நாயன் கிருபையால் இக்கொள்ளை நோய் இருந்தவிடம் தெரியாமல் பறந்து போய்விடும் என்பதில் ஐயமில்லை.

இம்மாதிரியான தேவை நம் தென்னட்டிற்கு பலவருட முன்னரே ஏற்பட்டது. நபி பெருமானின் பக்தகோடிகள் ஒன்று சேர்ந்து ஐந்து வருடங்களுக்கு முன்னரே உங்கள் ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தை நிருவினர். ஷை தீயகொள்கை இவண் பரவவிடாமற் தடுப்பதற்கு இச்சங்கம் அரும் பிரயாசைப்பட்டு வெற்றிபெற்றுவிட்டது.]

இத் தீயகொள்கை இஸ்லாத்தை அடியோடு கவிழ்த்து ஓர் புதிய மதத்தை உற்பத்தி செய்யக் கூடியதாகயிருக்கிறது. இந்நூற்றாண்டில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட சோதனையில் இது முதல்தரமான கெடுதியாகும். மார்க்கபக்தியற்றவர்களுக்கு இத்தீயகொள்கை ஓர் நல்ல வழியாகத் தோன்றுகின்றது. பேருக்கு சன்மார்க்கன் என்று வைத்துக்கொண்டு துன்மார்க்கம் நடத்த தோதாயிருக்கிறது. இக்காதியானி குழாத்தினர் ஏதோ உலகத்தில் இஷாயத்துச் செய்கிறார்கள் என்று நினைத்து ஒருசிலரை இத்தீய வழியில் சிக்கவைக்க இச்சிக்கின்றனர். இதுபொழுது இத்தீயவழியின் தீங்கு அந்நிய நாடுகளுக்கும் தெரிந்துபோய்விட்டது. மிஸ்ரு தேசாதிகாரிகளும் துருக்கி தேசத்து உலமாக்களும், சர்வாதிகாரியான காஜீ முஸ்தபா கமால் பாஷா அவர்களும் இத்தீய கொள்கையை அகற்ற முயற்சியெடுத்திருக்கின்றனர். வல்ல பெரிய நாயனின் கிருபையால் இத்தீயகொள்கைக்கு சாவுமணி அடித்தாய்விட்டது என்பதில் ஐயமில்லை.

நபிபெருமான் இறுதி நபி என்பது திருக்குர்ஆனின் வஹிரங்க போதனையாகும். இதனை ஒப்புக்கொண்ட உம்மத்துகள் யாவரும் காதியானிச் கொள்கையை துலைக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

காயல்பட்டணம் முஸ்லிம் ஸ்கூல் மாணவர்களும், ஹஜ்ஜுப் பெருநாள் கோண்டாட்டமும்

காயல்பட்டணம், முஸ்லிம் வாசிகளுக்கும் மற்றும் இதர வகுப்பார்களுக்கும் ஓர் அறிவிப்பு.

சகல புகழும் புகழ்ச்சியும், அல்லாஹ்வுக்காக இருக்கும், பின்பு சலவாத்தென்னும் கருணையும் சலாமென்னும் ஈடேற்றமும் ஸர்தாரே ஆலம் ஸாலாரே அன்பியா எம்பெருமானார் முஹம்மது முஸ்தபா ரசூல் (ஸல்.) அவர்கள் மீதிலும் அவர்களின் கிளைஞர் தோழர்கள்மீதிலும் நல்லடியார்கள் மீதிலும் உண்டாவதாக.

முக்கிய அறிவிப்பது யாதெனில், சிறப்புத் தங்கிய ஈதுல்அல்ஹா, ஹஜ்ஜுப் பெருநாள் 16-3-35 சனிக்கிழமை தினம், காயல்பட்டணம் மேன்மை தங்கிய மகாஜன சபையின் ஆதரவில், கொழும்பு கார்கோ போட் கம்பெனி புரொப்ரைட்டராகிய, ஜனப் ம. கு. அகமது அசன் அவர்களை மானேஜராக கொண்ட முஸ்லிம் எலிமெண்டரி ஸ்கூல் மாணவர்களாலும் ஷை ஸ்கூல் மானேஜர், ஷை ஸ்கூல் ஹெட்மாஸ்டர் திருவாளர் எஸ். சொர்ணம் பிள்ளை, அரபி மாஸ்டர் ஜனப் மவுலவி மௌலுதவி சாகிபு, இன்னும் ஷை சபையையும் ஷை கலாசாலையையும் ஆதரிக்கும் கனதனவான்களின் நன்முயற்சியாலும் 16-3-35 சனிக்கிழமை மாலை 4-30 மணிக்கு காயல்பட்டணம் கடற்கரை மைதானத்தில் மாபெருங் கூட்டம் கூட்டப்பட்டு, மூன்று தினங்களாக ஷை ஸ்கூல் மாணவர்கள், நானாவித பாஷைகளிலும் சொற்பொழிவாற்றினார்கள். இன்னும் ஷை மாணவர்கள், இந்த சொற்ப காலமாகிய இரண்டு வருடங்களில் திறமையாக கற்ற பலவித சம்பாஷணைகளையும், தேக அப்பியாசங்களையும் குழுமி இருக்கும் ஜனங்களின் முன்னிலையில் சகலரும் ஆனந்திக்குமாறு, அதி விமரிசையாய் நடத்திக் காண்பித்தார்கள். நமது ஊராகிய காயல்பட்டணத்தில் மாணவர்கள் பிக்ஹு உடைய சட்டதிட்டங்களை அறியவும், ஏவல் விலக்கல்களை அறிந்து, அதன்படி நடந்துகொள்ளவும், இல்மால் எதிர்பார்க்கப்படுகிறது அமலாக இருக்கவேண்டும் என்ற முறையை அனுசரித்த ஸ்கூல், இந்த முஸ்லிம் எலிமெண்டரி ஸ்கூல் ஒன்றே என்றது, இதை கண்ணுற்ற கனவான்கள் யாவர்களுக்கும் நன்றாய்—உண்மையாய் தெரிந்த விஷயமே. இதற்குக் காரணம், ஸ்கூல் மானேஜர் அவர்களின் விடா நன்முயற்சியாலும் ஷை ஸ்கூல் ஹெட்மாஸ்டர் அவர்களின் திறமையைக் கொண்ட தண்டிப்பு ஊக்கத்தினலும் நாளுக்குநாள் மாணவர்கள் அதிகமாகி, பாடசாலை விடாமுயற்சியுடன் நடைபெற்றுவருவதேயாம். ஆண்டவன் இக்கலாசாலை மேலுக்குமேல் நீடூழிகாலம் தழைத்தோங்க நல்லருள் பாலிப்பானாக.

குறிப்பு :—வீண்காலம் போக்காது, நுங்களின் மாணவர்களை கல்வி கற்றுக்கொள்ள முஸ்லிம் எலிமெண்டரி ஸ்கூலுக்கு அனுப்புவீர்களென்று நம்புகின்றேன். வஸ்ஸலாம்.

வே. மு. கி. த. செய்கு சுலையுமான் லெப்பை.

சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்க அறிவிப்பு

சோதரீர்!

சென்னையம்பதியின்கண் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் உங்கள் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கம், சத்திய இஸ்லாத்திற்கு ஆற்றி வரும் தொண்டுகளை தாங்கள் நன்குணர்ந்தே இருக்கிறீர்கள். சத்திய இஸ்லாம் பலவகையிலும் தாக்கப்பட்டு வருகிறது. ஒரு பக்கல் கிறிஸ்தவர்கள் எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள்மீது வீணே அபவாதங்களைச் சுமத்துகின்றனர்; ஆரியர்கள் இஸ்லாத்தை நன்குணராது அதைப்பற்றி விபரீத ..றையில் உண்மைக்கு மாறாக என்னென்னவோ எழுதத் துணிந்து விடுகின்றனர். இவைகளுக்கெல்லாம் தக்க பரிகாரஞ் செய்யவேண்டியது நம்மவரின் கடமையாக இருந்துவருகிறது. மற்றொரு பக்கல், நம்மிடையே ஒரு சிலர் தோன்றி வழிகெட்டதும் மறுக்கப்பட்டுப் போனதுமான காதியானிக் கொள்கைகளைத் தந்திரமாய்ப் பிரசாரம் புரிந்துவருகின்றனர். அதில் நம்மக்கள் சிக்கிக்கொள்ளாமலிருப்பான்வேண்டி, அக்கொள்கையின் கெடுதிகளையும் இஸ்லாத்தின் நற்போதனைகளையும் தக்க முறையில் எடுத்துக்கூறி பிரசாரஞ் செய்யவேண்டியதாயு மிருக்கிறது. இத்துறைகளில் நம் சங்கம் அரும் பிரயாசையோடு தீவிரப் பிரசாரஞ்செய்து வருகிறதென்பது உங்களுக்கெல்லாம் நன்கு தெரிந்த விஷயம். இன்னோக்கங்களைச் செவ்வனே நிறைவேற்றுவான் வேண்டியே "ஹிபாஜத்துல் இஸ்லாம் மாசிகை" நடத்தப்பட்டு வருகிறது. இதனை வாசிக்கும் மக்கள் மார்க்க பக்தியுடையவர்களாகவும், இஸ்லாத்தின் அரும்போதனைகளைத் தெரிந்து கொள்ளக் கூடியவர்களாகவும், காதியானிகளின் வலையில் சிக்காமல் அவர்களுக்குத் தக்க மறுப்புக் கொடுக்கின்றவர்களாயுமாய் விடுகின்றனர். இவ் வரும் அம்ஸங்கள் பொருந்திய மாசிகையை தாங்களெல்லீரும் வாங்கி ..சிப்பதுடன் தங்கள் நண்பர்களையும் சந்தாதாரர்களாகச் சேர்க்க முயற் ..ரீர்களாக. இதுவே நீங்கள் இஸ்லாத்திற்குச் செய்யும் பேருபகாரமா ... எனவே நமது சங்கத்தின் நோக்கங்களைப் பிரசாரம் புரிவதற்காக, ..ப்களான மௌலானா மௌலவீ முஹம்மது மியான் சாஹிப், மௌலானா மௌலவி முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் இவ்விருவர்களையும் சங்கப் பிரதிநிதிகளாக தென் ஜில்லாக்களுக்கு அனுப்பியிருப்பதால், ஆங்காங்குள்ள நண்பர்கள் பிரசாரத்திற்கு வேண்டிய வசதிகளைச்செய்து, மௌலானாக்களின் அரும் உபந்நியாஸங்களைக் கேட்டு பயன் பெறுவதுடன் நூற்றுக்கணக்கில் மாசிகைக்குச் சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்குமாறும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

காரியதரிசிகள்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்.

சந்தா நேயர்கட்கு!

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தாப் பணத்தை வருட ஆரம்பத்திலேயே கொடுத்து, அரும் மாசிகையை அன்போடு ஆதரிக்க வேண்டுமென்பது உங்களெல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இந்நிலைமையில் அநேக சந்தாதார்கள் சென்ற 1934-ம் ஆண்டுக்குரிய சந்தாப் பணத்தை இதுவரை அனுப்பிக் கொடுக்காமலே அசட்டையாக இருந்து வருகின்றனர். ஆகவே, அன்பர்கள் அன்போடு தங்கள் பழைய பாக்கிகளையும் நிகழும் புதிய வருடத்திற்குரிய சந்தா ரூபாயையும் தாமதமின்றி அனுப்பி வைப்பார்களென எதிர்பார்க்கிறோம். மேலும், சென்ற வருடத்திற்கு ஏற்கனவே சந்தா செலுத்தியிருப்பவர்கள், 1935-ம் ஆண்டுக்குள்ள சந்தா ரூபாயை முன் பணமாக அனுப்பி ஆதரவு புரிவார்களென எதிர்பார்க்கிறோம்.

நமது சந்தாதார்களில் சிங்கை வாசிகள்

ஜனாப் மு. முகம்மது ஷரீப் சாஹிப் அவர்கள்,

(439, நார்ட் பிரிட்ஜ் ரோடு) இட

பினாங் வாசிகள்

ஜனாப் N. K. முகம்மது கௌஸ் சாஹிப் அவர்கள்

(117, சோலியா ஸ்ட்ரீட்) இடமும்

சிலோன் வாசிகள்

ஜனாப் A. M. K. ஆலிம் சாஹிப்,

(220, 2-ம் குறுக்குத் தெருவு) இடமும்

தங்கள் சந்தாக்களை செலுத்திவிடுமாறு கோருகிறோம்

தமிழ்நாடு ... நூலகம் ... சென்னை-600 008

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Sahe Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G.T., Madras.